சஸ்பென்ஸ்

பி.வி.ஆர்.

கங்கை புத்தக நிலையம்

செண்ட்ரல்

பி.வி.ஆர்.

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை-600 017

கங்கை, முதற் பதிப்பு : மே 2000

விலை : ரூ 50-00

Title : CENTRAL
Author : P. V. R.
Subject : Novel
Language : Tamil
Edition : Gangai First Edition May 2000
Pages : iv+320=324
Price : 50-00
Published by : GANGAI PUTHAKA NILAYAM
13, Deenadayalu Street,
Thyagaraya Nagar, Chennai-600 017.

நேரு அச்சகம், 57, அம்மையப்பன் தெரு, சென்னை-14.

முகவுரை

சரியாக முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் 'கல்கி' ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரன் அவர்களிடம் என் எண்ணத்தை வெளியிட்டேன். ''சென்ட்ரல் ரெயில் நிலையத்தை நிலைக்களனாகக் கொண்டு ஒரு நாவலா?'' என்று கேட்ட அவர், ''உடனேயே கதைச் சுருக்கத்தைத் தாருங்கள், பரிசீலிக்கிறேன்'' என்றார். ஏற்கனவே கதைச் சுருக்கத்தை எழுதி வைத்திருந்ததால் அவரால் உடனேயே பரிசீலனை செய்து அங்கீகாரமும் அளிக்க முடிந்தது. 'சென்ட்ரல்' என்ற தலைப்பில் தொடர் நாவலும் வெளியாகியது.

1970ஆம் ஆண்டு நான் கண்ட சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கும் இன்று நான் பார்க்கும் நிலையத்துக்கும் அதிக வித்தியாசங்கள் இல்லையென்றாலும் ரெயில்களின் எண்ணிக்கைகளும், விசேஷ துரித ரெயில்களும் அவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் நவீன வசதிகளும் மிகவும் பெருகி விட்டன. ஜனப்பெருக்கம் காரணமாக பிரயாணிகளின் எண்ணிக்கையும் பன்மடங்காக அதிகரித்துள்ளது.

இவ்வளவெல்லாம் இருந்தபோதிலும் ஓர் உண்மை இன்றும் மாறாமலே இருந்து வருகிறது. அதுதான் மனிதனின் குணாதிசயம். ரெயில்வே அதிகாரிகளின் நல்ல குணங்களும், சிலரிடையே காணப்படும் அலட்சியப் போக்கும் மாறவில்லை. சுமை தூக்கும் போர்ட்டர்களின் நல்ல சுபாவமும் அடாவடித்தனமும் மறையவில்லை. அவர்கள் இழுத்துவரும் ட்ராலிகள் எழுப்பும் ஓசை குறையவில்லை. ஓட்டல்களில் தங்கினால் பணம் சிலவாகுமே என்று, பிளாட்பாரங்களிலேயே சில நாட்களோ வாரங்களோ தங்கும் மனிதர்கள் இன்றும் காணப்படுகிறார்கள்.

நான் அன்று எழுதிய நாவலில் வரும் கதாபாத்திரங்கள் அனைவரையுமே இன்றும் நாம் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் பார்க்கலாம்.

இன்று புதுடில்லி செல்லும் ராஜஸ்தானி எக்ஸ்பிரஸ் இருக்கலாம், மைசூர் செல்லும் ஷதாப்தி எக்ஸ்பிரஸ் இருக்கலாம், இரண்டு தட்டு மூன்று தட்டு ஏஸி பெட்டிகள் இருக்கலாம், சில ரெயில்களில் முதல் வகுப்புப் பெட்டிகளே இல்லாமலிருக்கலாம். ஆனால் பிரயாணிகள் எல்லோருமே மனித வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். ஆதிநாள் முதல் மாறாமலே இருப்பது மனித இயல்பு ஒன்றுதான். காதலும் கருணையும். ஆத்திரமும், திருட்டும், எரிச்சலும், பொறாமையும் மனித வர்க்கத்தின் இயல்புகள்.

இன்றும் அன்றுபோல் இந்த நாவல், காலம் கடந்து நிற்காமல், உங்களை ரசிக்க வைக்குமேயானால் அதற்கு நான் பொறுப்பு அல்ல. மனித சமூகம்தான் பொறுப்பு.

இதற்கு மேலும் முன்னுரையை நீட்டுவது அழகல்ல.

'சென்ட்ரல்' நாவலை இன்னும் ஒரு பதிப்பாகக் கொண்டுவந்து என்னைப் பெருமைப்படுத்தும் நெடு நாளைய நண்பர் மற்றும் போஷகராக விளங்கும் வானதி திரு. திருநாவுக்கரசுவுக்கும், எப்போதும் சிரித்தமுகத்துடன் என்னை வரவேற்கும் அவருடைய புதல்வர் திரு. ராமு வுக்கும் என் அன்பும் பணிவும் மிக்க நன்றி.

வாசகர்களாகிய உங்களை கேட்டுக்கொள்ளுவது ஒன்றுதான். ஏற்கனவே படித்தவர்கள் மீண்டும் படியுங்கள். 1970-ஆம் ஆண்டுக்கு சில ஆண்டுகள் முன்பாகவோ, பல ஆண்டுகள் பின்பாகவோ பிறந்தவர்கள் ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் படியுங்கள்.

''சுபஸ்ரீ''
12, 4-ஆவது பிரதான சாலை,
பெசன்ட் நகர், சென்னை-600090

பி.வி. ராமகிருஷ்ணன்
(பி.வி.ஆர்.)

சென்ட்ரல்

1

மங்களா ஒரு சொப்பனம் கண்டாள்; சின்னஞ் சிறிய சம்பவமே ஆனாலும் அது ஒரு நீண்ட கதைபோல் பிரமை தட்டியது.

வழக்கத்துக்கு ஒரு மணி நேரம் முன்பாகவே ரயில் ஒன்று வருகிறது. அதில் அவளும் ரேணுகாவும் ஏறிக்கொள்ளு கிறார்கள். உடனே புறப்பட்டு அசுரகதியில் கொஞ்ச தூரம் ஓடி, 'தடார்' என்ற சத்தத்தோடு நிற்கிறது. எட்டிப் பார்க்கிறாள். சின்னஞ்சிறு ஸ்டேஷனில் யாருமே இல்லை. இருவரும் இறங்குகிறார்கள். பார்க்கிறார்கள். என்ஜினையும் காணோம், ஸ்டேஷன் மாஸ்டர், ரயில் கார்டு முதலானவர்களையும் காணோம். ரேணு சிரிக் கிறாள். மங்களாவுக்கும் சேர்ந்து சிரிக்க வேண்டும்போல் இருக்கிறது. ஆனால் சிரிப்பு வரவில்லை.

மங்களா விழித்துக்கொண்டாள். தலைமாட்டில் இருந்த அலாரம் அடித்து ஓய்ந்திருந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டே எழுந்தாள். காப்பியைக் குடித்தபிறகும் ருசி நாவில் மணப்பதுபோல், கனவின் பயங்கரமான இனிமை அவளுடைய மனத்தில் ஒரு ருசியாக மணத்துக் கொண்டிருந்தது. அவள் தினம் தினம் ஏதாவது ஒரு கனவு கண்டுகொண்டிருக்கிறாள். விதம் விதமான கனவுகள். வாழ்க்கைக்கு ஒட்டாத, அதனுடன் சம்பந்தப்பட முடி யாத கனவுகள்.

எழுந்திருந்து விளக்கைப் போட்ட அவள், அலாரம் கடிகாரத்தில் மணியைப் பார்த்தாள். நாலேமுக்கால். அப்பாவின் அறையிலிருந்து எடுத்து வைத்திருந்த கடிகாரத்தை மீண்டும் அவருடைய அறையிலேயே உடனடியாக வைத்தாக வேண்டும். இல்லாவிடில் அவருக்கு, எதையோ பறிகொடுத்துவிட்ட ஆத்திரம் உண்டாகும் யார் கண்ணில் படுகிறார்களோ அவர்கள்மீது அவர் எரிந்து விழுவார். சாதாரணமாக அம்மாதான் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுவாள்.

அலாரம் கடிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியேறினாள் மங்களா. அவளுடைய கட்டிலுக்குச் சற்றுத் தள்ளி, அனு ஒரு சோபா—படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்தாள். என்னதான் எல்லாரும் மங்களாவை அழகி என்று வர்ணித்தாலும், அனுவின் உதட்டழகும், கண்ணின் வசீகரமும், கண்ணைக் கவ்வும் மூக்கின் வளைவும் தனக்கு இல்லையே என்று அவளுக்கு அங்கலாய்ப்பு, ஓரு கேவலாக உள்ளத்தில் எழும். ஆனால் அடுத்தகணமே இருபத்திரண்டு வயதான அவள் பத்து வயதுப் பெண்ணான அனுவைப் பார்த்து—அதுவும் தங்கையைப் பார்த்து— குறைப்பட்டுக் கொள்வது தப்பு என்று அவளுக்கே தோன்றும். தப்பு என்று தெரிந்தும் அவள் கேவல் என்னவோ நிற்கவேயில்லை. இந்த எண்ணம் அடிக்கடி அவளுள் எழுந்து வதைப்பதால்தானோ என்னவோ, அனுமீது அவளுக்கு ஓர் அலாதிப் பிரியம் வளர்ந்துகொண்டே இருந்தது.

அவளுடைய ஆறாவது அறையை விட்டு ஐந்தாவது அறைக்கு வந்தாள். சங்கரும் விசுவும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். தன் அறை விளக்கின் வெளிச்சத்தில், விசு படுக்கையை விட்டு விலகித் தலையணையையும் மறந்து தூங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. மங்களா தன்னுள்ளேயே சிரித்துக்கொண்டாள். விசுவை அந்தக் கோலத்தில்

பார்க்கும்போதெல்லாம், மூன்று வருடங்களுக்கு முன்னால் குடும்பம் முழுதும் பெங்களூருக்குப் போனபோது, ரயிலில் அவன் தன் 'பர்த்'திலிருந்து நழுவிக் கூடைமேல் விழுந்து, அதன் பின்னும் விழித்துக்கொள்ளாமல் தூங்கிக்கொண்டிருந்தது நினைவுக்கு வரும். இப்போதும் வந்த அந்த நினைவோடு, அசையாமல் அழகாக உறங்கிக்கொண்டிருக்கும் சங்கரை ஓரக்கண்ணால் கவனித்துவிட்டு மேலே வேகமாக நடந்தாள்.

நாலாவது அறையில் மேஜை நாற்காலிகளே இருந்தன.

மூன்றாவது அறையில் நுழைவதற்கு முன்னே குறட்டை ஒலி கேட்டது. அப்பாவுக்குக் குறட்டை கொஞ்சம் அதிகம் தான். அதற்குக் காரணம் அவருடைய ஸ்தூலமான சரீரம் தான் என்று எப்போதோ எண்ணின எண்ணம் இன்னும் அவளுடைய மனத்தில் அழுந்தியிருந்தது. அப்பாவின் குறட்டையைக் கேட்கையில் அவளையும் மீறி ஒருவித அருவருப்பு உண்டாகும். ஆனால் அடுத்த விநாடியே அவள் மானசீகமாக அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தன் மனத்தைச் சுத்தப்படுத்திக் கொள்வாள்.

அப்பா ஒரு பெரிய ஆலமரம். மூர்த்தியிலிருந்து சுஜா வரை எல்லோரும் அவருடைய கிளைகள். இத்தனை கிளைகளையும் அவர் எப்படி எப்படிக் கஷ்டப்பட்டு வளர்த்து, ஆளாக்கி உலகத்தில் நடமாட வைத்திருக்கிறார்! சாதாரண ஸ்டேஷன் மாஸ்டராக, தண்ணீர் இல்லாத, டாக்டர், மின்சாரம் போன்ற வசதிகள் இல்லாத வனாந்திர ஸ்டேஷன்களில் உழைத்து உழைத்து முன்னேறி இருக்கிறார். அவருடைய வெள்ளைப் பாண்ட்டையும் கோட்டையும் அவரே துவைத்து இஸ்திரி போட்டுக்கொண்ட நாட்கள் அவளுடைய நினைவில் என்றுமே மறையாத நாட்கள். வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, குழந்தைகளைப் படிக்க வைத்த பெற்றோர்களை அவள் கதைகளில் மட்டும் படிக்கவில்லை. அநுபவத்திலேயே பார்த்திருக்

கிறாள். ஆனால் இந்த அப்பாவுக்கு எந்தப் பிள்ளையும் பெண்ணும் எதையும் திருப்பிச் செய்யமாட்டார்கள் என்று மங்களாவுக்குத் தோன்றியது. அவள், தான் சம்பாதிக்கும் இருநூற்று எழுபது ரூபாயில் பெரும் பகுதியை வீட்டுச் செலவுக்குத்தான் கொடுக்கிறாள். இருந்தும், அவளுடைய மனச்சாட்சி உறுத்திக்கொண்டுதான் இருக்கிறது சம்பளம் முழுதும் அவரிடம் கொடுத்துவிட்டு, அதன்பின் அல்லவா தனக்கு வேண்டியதை அவரிடமிருந்து பெற்றுக்கொண் டிருக்க வேண்டும்?

இந்த விஷயத்தில் அப்பாவும் சரி, அம்மாவும் சரி கொடுத்து வைக்காதவர்கள்தான். 'ஓகோ' என்று இருபத் திரண்டு வயதிலேயே ஒரு பெரிய பாங்கியில் அதிகாரியாகச் சேர்ந்த அண்ணா மூர்த்தி, பம்பாயில் இருந்தபோதும் சரி, கல்கத்தாவில் இருந்தபோதும் சரி, ஒரு ரூபாய் அப்பாவுக்கு என்று அனுப்பவில்லை. தரையைப் பார்க்காமலே நடந்த அவனுக்கு இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு பெரிய இடத் தில் கலியாணமாயிற்று. அந்தச் சமயத்தில்தான் பயிற்சி முடிந்து சென்னைக்கு மாற்றலாகி வந்திருந்தான். என்ன மாயமோ, மகிமையோ கலியாணமான மறு மாதமே மனைவி ஊரான பெங்களூருக்கே வேலை மாற்றம் உண்டா கியது. ஸ்டேஷன் சூப்பிரண்டென்டான அப்பாவுடன், நரை விழுந்த அம்மாவுடன், கூடப் பிறந்த பத்துப் பேருடன் தன் தாம்பத்தியத்தை ஆரம்பிக்கவே அவனுக்குப் பிடிக்க வில்லை. அவன் தனியாகப் போன சில மாதங்களுக்குப் பிறகுதான், அவனுடைய மாமனார் முயற்சி செய்து வேலை மாற்றம் வாங்கிக் கொடுத்தார் என்ற விஷயம் வெளியே வந்தது. அம்மா 'நறுக் நறுக்'கென்று நாலு வார்த்தைகள் எழுதிப் போட்டாள் அவனுக்கு. ஆனால் அப்பா மௌனமாகவே இருந்தார். ஸ்டேஷன் மாஸ்டர், ஸ்டேஷன் சூப்பிரண்டென்ட் பதவியில் அவர் ஆயிரமாயிரம் பேர்களைப் பார்த்திருக்கிறார். விதம் விதமான குண மாற்றங்களை அநுபவரீதியில் கண்டிருக்கிறார். அவர்

பிள்ளையை மறந்தார்; அவ்வளவுதான். மறதியை யாரா வது ஞாபகப்படுத்தினால்கூட, அவர் வாய் திறந்து இரண்டு வார்த்தைகள் குறையாக, குற்றமாகப் பேசமாட்டார்.

மூர்த்திதான் அப்படிப் போனான் என்றால் மோகனா வது சென்னையிலேயே கிடைத்த வேலையை ஏற்றுக் கொண்டு வீட்டோடு இருந்து குடும்பத்துக்கு ஓர் ஆதரவாக இருந்திருக்கக் கூடாதா? இருபது வயதில் அவன் முதல் மாணவனாக 'ராங்க்' எடுத்து, ரஸாயனப் பொறி இயல் துறையில் தேறியதும், பிறர் கண்ணுக்கு அப்பா பெருமை யில் பூரித்ததுதான் தெரிந்தது. ஆனால் உண்மையில் அவருடைய மனம் பெருமையிலா பூரித்தது? அவமானத்தில் அவர் நொந்துபோனது யாருக்குத் தெரியும்?

ஒரு பெரிய கம்பெனியில், அப்பாவே யாரோ சில பெரிய மனிதர்களைப் பிடித்து எடுத்த எடுப்பில் எண்ணூறு ரூபாய் சம்பளத்தில் சென்னையிலேயே ஒரு வேலை வாங்கிக் கொடுத்தார். இந்த வயதில், இப்படிப்பட்ட படிப்பு படித்த தான், அப்பா வாங்குகிற சம்பளத்தைவிட அதிகம் வாங்கு கிறோம் என்ற எண்ணம் மோகனின் மனத்தில் விழுந்ததோ என்னமோ! அல்லது அவனுடன் கூடப் பிறந்த அகம் பாவமும் கர்வமும் ஆட்டி வைத்தனவோ, வீட்டில் அவன் ஒழுங்காகவே இருக்கவில்லை. ஸ்டேஷனில் ஒரு போர்ட்டர் மீதுகூட அதிகாரத்தைச் சுடுசொற்களால் காட்டத் தெரி யாத அப்பாவின்மீதே, அவன் அதிகாரம் செலுத்த முயன்றான்.

ஆனால் நல்லவேளையாக, சீக்கிரத்திலேயே அந்த ரணத்திலிருந்து அப்பாவுக்கு விடுதலை கிடைத்தது; பிள்ளை, தொழிற்சாலையிலும் அத்துமீறின அதிகாரத் தைப் பிரயோகிக்கிறான் என்று தெரிய வந்தது. அதன்பின் ஒருநாள் காதும் காதும் வைத்தாற்போல் சீட்டும் கிழிந்தது.

எந்தப் பெரிய மனிதருடைய சிபாரிசில் வேலை கிடைத்ததோ அவரே, அப்பாவுக்கு ஃபோனில் தம் வருத்தத்தைத் தெரிவித்தார்.

அதற்குப் பின் மோகன் பஞ்சாப்புக்குச் சென்றதும், அங்கேயிருந்து அமெரிக்காவுக்குச் சென்றதும் தனிக்கதை. மொத்தத்தில், தலை எடுத்த இரண்டு பிள்ளைகளினாலும் அப்பாவுக்குச் சுகமில்லை; ஆனால் இந்தச் சுகக் குறைவை அப்பா என்றுமே ஒரு சோகமாகவோ, ஏமாற்றமாகவோ காட்டிக்கொண்டதில்லை. அவருடைய இந்தத் தயாளமே மங்களாவின் மனத்தில் கண்ணீரை வரவழைக்கும். இப்பேர்ப்பட்ட அப்பா குறட்டை விட்டால் என்ன, இருக்க வேண்டிய இடத்தில் அலாரம் இல்லாமல் இருப்பதைக் கண்டு ஆத்திரப்பட்டால் என்ன? ஒரு தவறுமில்லை. அப்பா அவளைப் பொறுத்தவரையில் ஒரு மகான்தான்!

மூன்றாவது அறையில் அப்பாவின் தலைமாட்டில் மேஜையின் மேல் அலாரம் கடிகாரத்தை வைத்துவிட்டு, மங்களா பல்தேய்க்கச் சென்றாள். பம்பாய் மெயில் ஐந்தே காலுக்கு வரவேண்டும். ரேணுகா இப்போது எப்படி இருக்கிறாள் என்ற கேள்வி அவளுள் எழுந்தது. முந்தின இரவு படுப்பதற்குமுன் அவளைப்பற்றி இதே கேள்வி தோன்றி, அதன்பின் அவளை நினைத்தே உறங்க ஆரம்பித்திருக்கிறாள். அதனால்தானோ என்னவோ, சொப்பனத்திலும் அவள் வந்தாள்

பல் தேய்த்த கையுடன் முகத்தைச் சோப்பால் கழுவிக் கொண்டாள். சந்தன சோப்பின் மணம் அவளுடைய மனத்தில் என்றுமே ஒருவித கிளுகிளுப்பை உண்டுபண்ணும். இன்று அதைத் தேய்த்துக் கொள்ளுகையில், ஒரு கண்ணில் சிறிது பட்டுவிட்டது: ஜில்லென்ற தண்ணீரை மொண்டு மொண்டு கழுவியும், சோப்பின் எரிச்சல் நின்றுவிடவில்லை. துவாலையினால் முகத்தைத் துடைத்துவிட்டு, கண்ணை நன்றாகக் கசக்கிக்கொண்டாள்.

கண்ணாடிக்குமுன் நின்று தலையை வாரிக்கொண்ட போது, இடது கண், சோப்பின் சக்தியை அதிகமாகவே எடுத்துக் காட்டுவதுபோலச் சிவந்திருந்தது. இப்போது மங்களா அதை லட்சியம் செய்யவில்லை. ரயில் வர இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருக்கின்றன என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி நின்றது.

அவளுடைய ஒல்லியான, அவ்வளவாகச் சதைப்பற்று இல்லாத, பொன்னிற உடலுக்கு ரத்தச் சிவப்பு நைலக்ஸ் எடுப்பாக இருப்பதை அவளே உணர்ந்தாள். சிகப்புச் சாந்து, சிவப்பு உதட்டுச் சாயம் முதலான அலங்காரங்கள் முடிந்தபின், மீண்டும் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். இடது கண்ணின் செம்மையும் புடவையின் நிறத்தோடு ஒட்டிப் பாங்காகத்தான் இருக்கிறது என்று எண்ணியது அவள் மனம்.

செருப்பை எடுத்துக்கொள்ள அவள் வராந்தாவுக்கு இரண்டாவது அறை வழியாகச் சென்றாள். அறையை அடைத்துக் குழந்தைகள் படுத்துக்கொண்டிருந்தார்கள்.

அம்மாவைப் பார்த்ததுமே, எழுப்பலாமா என்று தன்னையே கேட்டுக்கொண்டாள் மங்களா. ஆனால் அவள் ஒரு முடிவுக்கு வருவதற்குமுன் அம்மாவே எழுந்துவிட்டாள்.

''அம்மா! நான் போய் வருகிறேன்.''

''உம்!'' என்றாள் அம்மா.

சுஜா, ராதா, பாபு, கலியாணம், ரவி எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைப் பார்த்த போது, மங்களாவுக்குக் குருவாயூர் போகிற வழியில் பார்த்த ஒரு பலாமரம் நினைவுக்கு வந்தது. சின்ன மரம் தான். ஆனால் சின்னதும் பெரியதுமாக காய்கள் எட்டிப் பிடிக்கக்கூடிய உயரத்தில் மொய்த்துக்கொண்டிருந்தன? அம்மாவும் ஒரு பலாமரம் போலத்தான். பதினொரு குழந்தைகளைப் பெற்ற அவள், ஒரு தடவைகூட இந்தப்

பெரும் பாரத்தை நினைத்து நொந்துகொண்டதில்லை: அவளுக்கு இப்போது வயதுமட்டும் ஜம்பத்திரண்டாக இல்லாமல் நாற்பத்து நாலோ, நாற்பத்து ஐந்தோவாக இருந்தால் இன்னும் காய்த்துக்கொண்டே யிருப்பாள்: கவலைப்படாமலும் இருப்பாள்.

ஐந்தாறு ஜதை செருப்புகளில், சிவப்பு வெல்வெட் செருப்பை அணிந்துகொண்ட மங்களா, காது 'ஸ்டட்'டை ஒரு தடவை தொட்டுப் பார்த்துக்கொண்டாள். கைவிர லுக்கு நிறபேதம் தெரியாது என்று தெரிந்தும், காதணிகள் சிவப்பு அணிகள்தானோ என்று பார்த்தாள். அடுத்த விநாடியே, அது முந்தின நாள், க்ரீம் கலர்ப் புடவைக்கு ஏற்ற முத்துக்கள் இழைத்த 'ஸ்டட்' என்று நினைவுக்கு வந்தது: கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்: ஐந்து பத்து ஆகியிருந்தது.

மாடிப்படி இறங்கினால் சென்ட்ரல் ஸ்டேஷன். மூன்றாவது பிளாட்பாரத்தில்தான் பம்பாய் மெயில் வழக்க மாக வந்து சேரும். மீண்டும் தன் அறைக்குச் சென்று, அலமாரியைத் திறந்து சிவப்பு 'ஸ்டட்'டுக்களைத் தேடி எடுத்து, இருக்கிறதைக் கழற்றிப் போட்டுக்கொள்ளுவதற் குள், ரேணுகா அவனைப் பிளாட்பாரமெல்லாம் தேட ஆரம்பித்துவிடுவாள். புடவையை மாற்றிவிடலாமா? ஒரு கணம் யோசித்தாள். அதற்கும் நேரம் இல்லை என்று யோசனையைக் கைவிட்டாள்.

ஒருவித ஏமாற்றத்தோடு மாடிப்படியில் இறங்க ஆரம் பித்தாள்.

சென்ட்ரல் ஸ்டேஷன் மின்சாரக் கடிகாரங்கள் இரண்டுமே ஓடவில்லை. 'கடை மூடப்பட்டது' என்று அட்டை கட்டித் தொங்க விடுவதுபோல, ஒரு சதுரமான காகிதம் கடிகாரத்தின் நடுவில் ஒட்டப்பட்டிருந்தது. சர்தாரணமாக, சென்ட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரக்

கடிகாரங்கள் இரண்டும் ஒப்வே எடுத்துக் கொள்ளா. அப்படி எடுத்துக்கொண்டாலும் அது ஒருசில மணி நேரங் களுக்குத்தான்.

பிளாட்பாரத்துக்குப் போகும் வழியில், பெட்டிமீதும், படுக்கைமீதும் உட்கார்ந்தும் படுத்தும் பிரயாணிகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்: ஒரு வடஇந்திய யாத்திரிகர் கூட்டம், தன் சலவை செய்ய முடியாத அழுக்கில் தோய்ந்து உறங்கிக்கொண்டிருந்தது. வலதுபுறக் கோடியில், தாற்காலிகமாகச் சாமான்களை வைக்கும் அறையை ஒரு சிப்பந்தி திறந்துகொண்டிருந்தான். இடதுபுறத்து ஹீக்கின் பாதம்ஸ் புத்தகசாலை இன்னும் திறக்கப்படவில்லை: ஆனால் அதன் வலதுபுற ஓரத்தில் தினசரிப் பத்திரிகைகள் விற்பனையாகிக் கொண்டிருந்தன.

ரயில் நிற்பதற்குள் தாவி ஏறிச் சொல்லாமலே பெட்டி யைத் தூக்கும் நீலச் சட்டைக்காரர்கள் சிவப்பு அங்கவஸ் திரத்தை இன்னும் தலையில் முண்டாசாகக் கட்டவில்லை:

மூன்றாவது பிளாட்பாரத்தில் அவள் கால் வைக்கவும் ஒலிபெருக்கி கதற ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது: ஆங்கிலத்தில் ஆரம்பித்த அறிவிப்பு தமிழில் அலறியது.

''பம்பாயிலிருந்து வரும் பாம்பே மெயில் இன்னும் சில நிமிடங்களில் மூன்றாவது பிளாட்பாரத்தில் வந்துசேரும்.''

ஹிந்தி மொழிபெயர்ப்பை அவள் உதாசீனம் செய்து கொண்டே நடக்கலானாள். ஏன் ஒலிபெருக்கியாளர், 'இருந்து', 'மூன்றாவது', 'வந்து' என்ற வார்த்தைகளில் 'து' எழுத்துக்கு அவ்வளவு முக்கியவத்துவம் கொடுத்து அதைக் கெட்டிப்படுத்துகிறார் என்று புரியவில்லை: என்றுமே அவளுக்கு ரேடியோவில் தமிழ்ச் செய்திகளையும், அறிவிப்புக்களையும் கேட்கப் பிடிக்காது. ஜீவனற்ற குரலில் வார்த்தைகள் வறவறவென்றிருப்பதாகத் தோன்றும். சந்தோஷ சமாசாரமானாலும் சரி, துக்கச் செய்தி

யானாலும் சரி, அறிவிப்பவர் அதனை விட்டுத் தனித்து நிற்பதாகத் தோன்றும். ஒருவேளை அப்படி நிற்கவேண்டியது அரசின் ஆணை என்றோ, கடமை என்றோ நினைக்கிறார்கள் என்று மங்களா எண்ணுவாள். ஆனால் சென்ட்ரல் ஸ்டேஷன் ஒலிபெருக்கியில் எப்போதுமே வார்த்தைகள் இயற்கையான பாணியில் வராது. கேட்பவர்களுடைய காதுகளில் குரல் மோதுகிறதே தவிர, ஒரு மனிதனுடைய குரல், கேட்பவர்களின் மனத்தைத் தொடுவதே இல்லை. இதற்குக் காரணம், கடமையின் அடிப்படையில், எட்டு மணி நேர வேலை என்ற திட்டத்தின் அடிப்படையில் எழுகிற குரல் என்பதுதானோ என்னமோ!

மங்களா நடந்தாள். எல்லா சிமெண்ட் பெஞ்சிகளிலும் யார் யாரோ தூங்கிக்கொண்டிருந்தார்கள். துண்டைப் போட்டு, ரயில் பெட்டி சீட்டுகளையும் ஆசனங்களையும் விலை பேசும் ஊர் சுற்றிகளிலிருந்து, ஹோட்டல் அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொள்ள மனம் கூசும் கருமிகள் வரை எத்தனையோ பேர்.

மங்களா அலுத்துக் கொண்டாள். தினசரி வேலையில், அதுவும் சென்ட்ரல் ஸ்டேஷன் விசாரணைக் காரியாலயத்தில் பணி ஆற்றும் நாட்களில் அவளுக்கு அலுத்துக் கொள்ளத்தான் நேரம் இருக்கும். அவசரம் அவசரமாய் வீட்டிலிருந்து ஓடி வந்த அவளை பம்பாய் மெயில் காக்க வைக்கிறது. உட்காருவதற்குக்கூட இடமில்லை. ஓட்டப் பந்தயத்துக்குத் தயாராக உட்காருகிறவர்களைப் போல், போர்ட்டர்கள் உட்கார்ந்திருக்கும் காட்சி வேறு கண்ணை உறுத்திவிட்டது. அவர்களுடைய அவலப் பிழைப்பை எண்ணி, கண் உறுத்தலை மறக்கலாம் என்றால், பலபேர்களுடைய வாயிலிருந்து வந்த பீடியின் நாற்றம் அவளுடைய அலுப்பையும் வெறுப்பையும் அதிகமாக்கியது. இதெல்லாம் போதாவென்று காதையே கிழிப்பதுபோல, காங்கிரீட் தளத்தில் இரும்புச் சக்கர டிராலிகள் ஓலமிட்டுக் கொண்டே

அங்குமிங்குமாய் ஓடிக்கொண்டிருந்தன. யாராவது மந்திரியின் காதிலோ, எதிர்க்கட்சித் தலைவர்களின் காதிலோ இந்த டிராலிகளின் ரீங்காரம் தொடர்ந்து ஒரு மணி நேரம் இசைத்தால்தான் பிரயாணிகளுக்கு விமோசனம் பிறக்கும். டிராலிகளுக்கு ரப்பர் டயர் பொருத்துவார்கள்.

பல பிரயாணிகள், பல பெரிய தினசரிகளுக்குக் கடிதங்கள் எழுதியாகிவிட்டது. டிராலியின் சக்கரங்கள் இன்னும் பதில் சொல்லவில்லை! ஒரு நாள் இல்லாவிட்டால், ஒரு நாள் எல்லா பிளாட்பாரங்களிலும் தரையின் காங்க்ரீட் உடைந்து, உதிர்ந்து கற்கள் குத்தப்போகின்றன. அப்போதும் டிராலியைக் கவனிக்கமாட்டார்கள். புது காங்கிரீட்தான் போட ஆரம்பிப்பார்கள்.

இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிக்கு ஒரு தடவை நடந்தாகி விட்டது. பம்பாய் மெயிலின் சுவடே தெரியவில்லை. அவள் நிதானமாக, புடவை, சோளிக்கு ஏற்ற, பாந்தமான சிவப்பு 'ஸ்டிட்'டை அணிந்துகொண்டே வந்திருக்கலாம்.

மீண்டும் ஒலிபெருக்கி அலறியது.

மீண்டும் 'சில நிமிடங்கள்' என்ற வார்த்தைகள் காதில் மோதின.

மங்களா கடிகாரத்தைப் பார்த்தாள். ஐந்து இருபத்திரண்டு. பிளாட்பாரத்தின் விளிம்பில் நின்றுகொண்டு கண்ணைச் சிரமப்படுத்திப் பார்த்தாள். ஓர் என்ஜின் நகர்ந்து வருவது தெரிந்தது.

அந்தக் கோடியிலிருந்து திரும்பி நடந்தாள். ஒரு சிமெண்ட் பெஞ்சியை அடைத்துக்கொண்டு வாத்துக் கூடைகள்: 'குவா, குவா' என்ற எக்காளம். ஓரிரு மூக்குகள் கயிற்று ஜன்னல்கள் மூலம் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன: ஒரு வாத்து சந்தோஷத்தில் கத்துவதாகத் தோன்றியது.

நடந்து வந்த மங்களா, வாத்துகளை மறந்து ரேணுகா வைப்பற்றி நினைக்க ஆரம்பித்தாள். பம்பாயில் ஒரு பெரிய கம்பெனியில் அவள் ஒரு டைரக்டர். அவளுடைய அப்பா தான் அவளை அந்தப் பதவியில் வைத்திருக்கிறார்; சென்னை பிராஞ்சு விஷயமாக வருகிறாள். சென்னைக்கு வந்தால் அவளுடன்தான் தங்குவாள். 'இத்தனை பெரிய குடும்பத்தில் பிறந்து வளரக் கொடுத்து வைக்க வேண்டும்' என்பாள். தாயில்லாத அவள் ஒரே பெண். அந்தத் தனிமையின் ஏக்கம் மங்களா வீட்டில் இருக்கையில் மறைந்துவிடும்.

முதல் வகுப்புப் பெட்டிகள் வருகிற இடத்தை விசாரித்துக் கொண்டு அவள் வந்து நின்றாள்.

என்ஜின் அலறி அடித்துக் கொண்டு வந்தது. ஓட்டப் பந்தயக்காரர்கள், சிவப்பு முண்டாசைக் கடைசித் தடவையாகச் சரிசெய்துகொண்டு தயாரானார்கள். மங்களாவைப் போல எதிர்கொண்டு அழைக்க வந்தவர்கள் எங்கே தேடுவது என்று புரியாமல் எல்லாப் பக்கங்களிலும் பார்த்துக் கொண்டு அலைய ஆரம்பித்தார்கள்.

ஒரு முதல் வகுப்புப் பெட்டியில், பெயர்கள் இருந்த 'லிஸ்டை'ப் பார்த்தாள் மங்களா. 'பி' கம்பார்ட்மெண்டில் லோயர் பர்த் ரேணுகாவுக்காக ரிசர்வ் செய்யப் பட்டிருப்பது தெரிந்தது.

ஓரிரு நிமிடங்கள் பெட்டிக்கு வெளியே நின்று ரேணுவுக்காகக் காத்திருந்த மங்களா அவள் வராததைக் கண்டு பொறுமை இழந்தாள்.

சாமான்களுடன் இறங்கிக்கொண்டிருக்கும் போர்ட்டர்களையும், பிரயாணிகளையும் லட்சியம் செய்யாமல் ரயிலினுள் ஏறி, 'பி' கம்பார்ட்மெண்டை அடைந்தாள்.

அங்கே ஒருவன் அப்போதுதான் ஸாக்ஸை மாட்டி பூட்ஸைக் கையில் எடுத்துக் கொண்டிருந்தான்.

அவனைத் தவிர மூன்று பர்த்கள் காலியாக இருந்தன.

மங்களா ஏமாற்றத்துடன் திரும்பவும் "ஆர் யூ மிஸ் மங்களா?" என்று அவன் பூட்ஸை மாட்டிக்கொண்டே கேட்கவும் சரியாக இருந்தது.

"எஸ் ஐ ஆம் மங்களா..."

"யுவர் ஃப்ரண்ட் ரேணுகா குட்நாட் மேக் தி ட்ரிப்" என்று சொன்ன அவன், "கொஞ்சம் இருங்கள்; இந்த பூட்சையும் போட்டுக்கொண்டபின் விவரம் சொல்லுகிறேன்" என்றான்.

மங்களா மௌனமாக அவனையும், அவன் கை விரல்கள் பூட்ஸ் லேஸுடன் விளையாடும் அழகையும் பார்த்துக்கொண்டே நின்றாள்.

2

கீழே இருக்கும் புகைப்படங்களில் இருப்பவர்கள் பிரசித்தி பெற்ற ஜேப்படிக்காரர்கள்; பணத்தை எடுக்கும்போதும் வைக்கும்போதும் ஜாக்கிரதையாக இருக்கும்படி பிரயாணிகள் கோரப்படுகிறார்கள்.

—சென்ட்ரல் ஸ்டேஷன் அறிவுரை

பளபளக்கும் சைக்கிளை ரயில்வே போலீஸ் ஸ்டேஷன் வாயிலில் வைத்துப் பூட்டிவிட்டு ஒருவிதப் பெருமிதத்துடன் அதையே பார்த்து நின்ற மணி, கான்ஸ்டேபிள் ஏகாம்பரம் தன்னையே புன்முறுவலுடன் கவனிப்பதை உணரவில்லை. சைக்கிளுக்கு டைனமோ விளக்கு இருக்கிறது. சுகமாக உட்கார்ந்து போவதற்கு ஃபோம் குஷன் இருக்கிறது. அரை ஹார்ஸ் பவரில் ஒரு மோட்டாரும் பொருத்திவிட்டால், காலின் சக்திக்கு விரயமில்லாமல் பதினைந்து மைல் வேகத்

நில் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம். கார், ஸ்கூட்டர்களுக்கு இருப்பதுபோல் நம்பர் பிளேட்டும் இருக்கும்.

மணி கற்பனையில் திளைத்துப் போனான்.

''என்னப்பா மணி! உனக்குள்ளேயே பேசிக் கொள்ளுகிறே?'' என்று ஏகாம்பரம் கேட்டான்.

விழிப்பு வந்தவனைப்போல் மணி ஏறிட்டுப் பார்த்தான். ஏகாம்பரத்தின் தலையில் அந்தப் பழுப்பேறின சிவப்புத் தொப்பி இல்லை. அதுவே ஒரு நல்ல சகுனமாகப் பட்டது. ஆனால் அடுத்தகணமே அவனுடைய கழுத்தில் கட்டியிருந்த அழுக்கேறிய கைக்குட்டை கண்ணை உறுத்தி, இது இன்றையத் தொழிலின் தோல்விக்கு அறிகுறியோ என்ற பயத்தை உண்டுபண்ணியது.

''என்ன நான் கேட்கிறேன், பதில் சொல்லாமல் இருக்கிறியே?''

''நான் எனக்குள்ளே பேசிக்கொள்ளவில்லை, ஏகாம்பரம்; குளிரு பாரு, குளிர் அதிலே உதடு தந்தி அடிச்சுது.''

''அது கிடக்கட்டும் எனக்கு ஒரு டிக்கெட் வேணுமே. மச்சான் மீரட்டுக்குப் போறான்; திடீர்னு ஆர்டர் வந்திருக்கு.''

''என்ன நீங்க ரயில்வே கான்ஸ்டபிள். என்கிட்டேயே டிக்கட் வாங்கிக் கொடுன்னு கேட்கிறிங்களே! வெட்கமாயில்லை?''

''வெட்கமாத்தான் இருக்கு. ஆனால் கிடைக்கலியே?''

''என்னிக்குப் போறான் உங்க மச்சான் மீரட்டுக்கு?''

''நாளன்னிக்கு.''

''எட்டு மணிக்கு டில்லி கவுண்டர்கிட்டே இருப்பேன்... வந்து பாருங்க!''

''சரி, மணி!''

''மணின்னு சொன்னாப் போறாது. 'மணி'யோட வா.''

சொல்லிவிட்டுக் காதலியைவிட்டுப் பிரிய மனமில்லாமல் செல்லும் காதலனைப்போல் மணி சைக்கிளைக் கடைசித் தடவையாகப் பார்வையால் விழுங்கிவிட்டு ஸ்டேஷனுக்குள் புகுந்தான்.

அப்போது மணி சரியாக ஐந்து பத்து.

வாசலில் வந்து அப்போதுதான் ஒரு முக்காலியின் மேல் உட்கார்ந்த டிக்கட் பரிசோதகர் நாராயணராவ் மணி வருவதைப் பார்த்ததும் ஏதோ தம் எண்ணம் பூர்த்தியாகி விட்டதாகப் பூரித்துச் சிரித்தார்.

''மணி! இப்பத்தானப்பா உன்னைப்பத்தி நினைச்சேன். நீயே வந்துட்டே.''

''ராவ்ஜி, காலங்கார்த்தாலே ஒரு பொய்யுடன் உங்க வேலையை ஆரம்பிக்காதீங்க. என்னைப் பார்த்தப்புறம் தான் உங்களுக்கு என் ஞாபகமே வந்தது... என்ன வேண்டும்?''

''அதுதான் சொன்னேனே, போன வாரம்...''

''உங்க அக்கா பெண்ணுக்கு டைப்பிஸ்ட் வேலை தானே?''

''ஆமாம்ப்பா... அக்கா வீட்டுக்குத் திரும்பி வந்ததிலிருந்து என்னாலே ஒரு சம்பளத்திலே சமாளிக்க முடியலே... நீதான் அதற்கு ஒரு வழி பண்ணணும்.''

''கிம்பளம் வாங்குங்களேன். இருபது வருஷங்கள் வரை உத்தியோகம் பார்க்கிறேன்னு சொல்லிக்கொள்வதில் குறைச்சல் இல்லை... ஒரு ஆள்கிட்டே எட்டணா, ஒரு ரூபாய்னு வாங்கினால்கூட உங்க எட்டு மணி வேலையில் பத்து ரூபாய் தேறுமே!''

''புதுசா ஒரு தொழிலைக் கத்துக்கச் சொல்றியா? வேணாம்ப்பா, வேணாம், நீ போ.''

''கவலைப்படாதீங்க, ராவ்ஜி... இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை. பம்பாய் மெயிலைப் பார்க்கப் போயிண்டிருக்கேன். நாளை திங்கள்... அப்புறம் செவ்வாய்... புதன் கிழமையன்னிக்கு உங்க அக்கா பெண்ணை அழைச்சுண்டு வாங்க. நாம எல்லோரும் போய்ப் பார்த்து ஏற்பாட்டைச் செய்யலாம்.''

''கையிலே ஒரு ரூபாய் இருக்குமா மணி... இரண்டு நாட்களிலே உனக்குத் திருப்பித் தரேன்.''

''கிம்பளம் வாங்குகிற ஆளா இருந்தால் பதினைந்தாம் தேதியே கடன் வாங்க ஆரம்பிச்சிருப்பீங்களா?''

சொல்லிக்கொண்டே ஷர்ட்டின் வலது கையின் மடிப்புக்களிலிருந்து பணத்தை எடுத்தான். ஒரு ரூபாயை அவரிடம் நீட்டினான்.

''உன்கிட்டேயே இரண்டு நோட்டுத்தானே இருக்கு?''

ராவ்ஜி 'வேண்டாம்' என்று சொல்வதுபோலப் பேசி, முகத்தில் ஓர் இரக்கத்தையும் இழுத்து வைத்து, கையையும் நீட்டினார்.

''என்கிட்டே இரண்டாயிரம் இருக்கும்னு ஒரு ரூபாய் கேட்டீங்களா?''

கொடுத்துவிட்டு மணி நேரே ஏழாம் பிளாட்பாரத்தினுள் நுழைந்தான். விரைவாக நடந்த அவன் எந்தப் பக்கமும் பார்க்கவில்லை. வெள்ளை பாண்ட், வெள்ளை முழுக்கை ஷர்ட் முழுக்கையாக மடித்த மடிப்பே பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருந்தது. காலில் கறுப்பு பூட்ஸ். ஊதா நிற சாக்ஸ் புதுமைப் பொலிவுடன் விளங்கியது. உருண்டு திரண்ட தோள்பட்டை, நடைக்கே ஒரு கம்பீரத்தை அளித்தது.

என்றும் வற்றாத ஜீவநதியைப் போல் அஸ்தமனமே ஆகாத புன்முறுவல் உதடுகளில் விளையாட அவன் வேகமாக நடந்தான்.

ஆர் எம்.எஸ்.ஸை அடைந்ததும் அவன் நின்றான். ஏழாவது பிளாட்பாரத்தில் ஆள் அரவமே இல்லை. கூடுர் பாஸஞ்சர் ஆறு மணி ஐம்பத்தைந்து நிமிடங்களுக்குப் புறப்படும். அதில் போகிறவர்களில் பாதிப்பேர் சீசன் டிக்கட்காரர்கள். கால்வாசிப் பேர் ரயில்வே ஊழியர்கள். மீதியில் ராவ்ஜியைப் போன்ற உத்தமர்கள் சிலர்—டிக்கட்டுடன் பிரயாணம் செய்கிறவர்கள்.

ஆர்.எம்.எஸ்.ஸுக்கு முன்னே நின்றவன் அதிக நேரம் காத்துக்கொண்டிருக்கவில்லை.

''சித்தப்பா!''

ஒரு கிழவர் பெரிய ஜாதிக்காய்ப் பெட்டியின் மேல் உட்கார்ந்து வெற்றிலையையும் பாக்கையும் சிறு உலக்கையால் இடித்துக்கொண்டிருந்தவர், ''இதோ வரேண்டா, மணி!'' என்று சொல்லி உரலையும் உலக்கையையும் பக்கத்தில் வைத்துவிட்டு இறங்கினார்.

''என்னாலே வர முடியாது. ஒரே சாமான்களாகக் கொட்டிக் கிடக்கு. ஜாக்கிரதையா நீங்க வாருங்கோ'' என்று மணி கத்தினான்.

கிழவர் இறங்கி வந்தார். முகத்தில் வெள்ளிப் பொடிகள் தூவினாற்போல் தாடி. வழுக்கைக்குக் கரை கட்டிய தலை மயிர் காதோரம் மண்டிக் கிடந்தது.

அவர் அருகே வந்ததும் பாண்ட் பாக்கெட்டிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்தான் மணி.

''சித்தப்பா! உங்க பிள்ளைகிட்டே யிருந்து இந்த இரண்டு நோட்டுக்களைக் கறக்கறதுக்குள்ளே என் தாவு தீர்ந்துடுத்து. ஒண்ணாம் தேதி வர்றதுக்கு என்ன கேடுன்னு

கேட்டான். நீங்க ஜெனரல் ஆஸ்பத்திரியிலே மூணு நாள் கிடத்தீங்கன்னேன். எப்போ டிஸ்சார்ஜ் எப்படி இருக் கார்னுகூடக் கேட்கலை... இந்தாருங்கள். எனக்கு பாம்பே மெயிலைப் பார்க்கணும்...''

''நான் செத்தாக்கூட அவனுக்கு என்ன? அது சரி, நான் இங்கேதான் இருக்கேன்னு அவனுக்கோ, அவன் பெண்டாட்டிக்கோ தெரியுமா?''

''தெரியாது. நான் சொல்லலை. அடுத்த தடவை பணம் கேட்கப் போறபோது ஞாபகமாச் சொல்றேன்...''

''வேண்டாம். சொல்லாதே.''

''ஏன், உடனே டாக்ஸியோட வந்து உங்களை அழைச் சுண்டு போய் நடுக்கூடத்திலே உட்கார வைச்சுடுவானோ? சித்தப்பா! நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்கா தீர்கள். நீங்க ஏதாவது ஒரு குற்றத்தைப் பண்ணியிருக் கிறீர்கள் என்றால் அது அவனைப் பெத்ததுதான்... நான் வரேன்.''

ஏழாவது பிளாட்பாரத்திலிருந்து விரைவாகத் திரும்பிய மணி, மூன்றாவது பிளாட்பாரத்தை நோக்கி நடந்தான். இன்னும் பம்பாய் மெயில் வரவில்லை என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அவனுடைய தொழிலில் அவன் என்னதான் நிபுணனாக இருந்தாலும் ஜரூராகக் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் இருக்க வேண்டும். குறித்த பிரயாணியை அணுக வேண்டும்.

நடக்கும்போது சித்தப்பாவையும் அவருடைய பிள்ளை யையும் பற்றிச் சிந்தனை பிறந்தது. இந்தச் சித்தப்பாவை அவனுக்குக் கடந்த இரண்டு மாதங்களாகத்தான் தெரியும். ஒருநாள் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் ஸ்லீப்பர் பெட்டி யில் அவர் ஏறினார். டில்லியில் அண்ணா பெண் இருக் கிறாளாம். ரோம்ப நல்லவளாம். 'சித்தப்பா, சித்தப்பா'

என்று அவன் உயிரை விடுவாளாம். தம் அந்திய நாட்களை அவள் வீட்டில் கழித்துவிடுவது என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டாராம்.

அவருடைய இந்த முடிவு ஸ்லீப்பர் கண்டக்டர் தாமஸுக்குப் பிடிக்கவில்லை. கீழே இறக்கிவிட்டார். டில்லிக்குப் போனதும் பணம் கொடுத்துவிடுவதாகச் சொன் னார். டில்லியில் இருக்கும் அண்ணா பெண் என்ன வேண்டுமானாலும் தருவாள் என்று சத்தியம் செய்து பார்த்தார். தாமஸ் அவரைக் கீழே இறக்கிவிட்டார். பிளாட்பாரத்தில் நின்ற அவருடைய கண்கள் கனத்தன. துண்டால் துடைத்துக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த் தார்.

அந்தச் சமயத்தில்தான் மணி எதிர்ப்பட்டான். அவ னுடைய உடையையும், நடையையும் பார்த்து ஒருகணம் பயத்துடன் மயங்கின அவர் அவனுடைய புன்முறுவல் பூத்த முகத்தைப் பார்த்து அடுத்தகணமே தைரியத்துடன் அணுகினார்.

''சார்...''

''என்ன பெரியவரே?''

''நான் டில்லிக்குப் போகணும்.''

''இதோ நிற்கிறதே, இதுதான் டில்லி ரயில், ஏறுங்கள்.''

''ஏறினேன். கீழே இறக்கி விட்டுவிட்டான் ஒரு மகானுபாவன்!''

''ஸ்லீப்பரில் ஏறியிருப்பீர்கள். ரிஸர்வேஷன் இல்லையா?''

''டிக்கட்டே இல்லை...''

''போச்சுடா டிக்கட்டே இல்லையா?'' வியப்புடன் பார்த்தான் மணி.

''அண்ணா பெண் டில்லியிலே இருக்கிறாள். ராம கிருஷ்ணா நகரில் வீடு. மாப்பிள்ளைக்கு செக்ரடேரியட்டில் எண்ணூறு ரூபாய் சம்பளம். ஒரு 'உம்' கொட்டினால் ஜானகி ஏர்கண்டிஷனுக்கே பணம் அனுப்புவாள், அவ்வளவு நல்ல பெண்.''

''கடிதாசு எழுதிப் போடுங்கள். பணம் வந்ததும் போகலாம்.''

''அதுவரையில் என் கதி?''

''இந்த ஊரில் யாரும் இல்லியா?''

''கொள்ளி போடறதுக்கு ஒரு பிள்ளை இருக்கான்; ஆனால் அவன் என் வயத்துக்குப் போடமாட்டேன் என்கிறான்... அவன் மனைவிக்கு அடக்க ஒடுக்கம் போறாதுன்னேன். எப்போ பார்த்தாலும் வாசலிலேயேதான் ஜாகையும் பார்வையும். இதைச் சொல்லப்படாதோ? சொன்னேன்... இந்த மாதிரி அடிக்கடி சொன்னேன். அவள் நேத்திக்கு ராத்திரி ஒரு நாடகம் ஆடினாள். ஏற்கனவே என் பிள்ளைக்கு நான் லட்சியம் இல்லை. 'ஒண்ணு நான் இருக்கணும் அல்லது உங்க அப்பா இருக்கணும்' என்று அவள் கைகேயி மாதிரி தலையை விரிச்சுண்டு தரையிலே உருண்டாள். திரௌபதி மாதிரி தலைமயிர் அவளுக்கு. அந்த நீளத்தை வைச்சுண்டு அதிலேயே சீதை மாதிரி தற்கொலை பண்ணிக்கொள்ள முடிவு பண்ணி விடுவாளோ என்று என் பிள்ளைக்குப் பயம். நாடகம் முடிஞ்சுது. நானும் வெளியே வந்துட்டேன்.

''நீங்க ராமாயணம் பாரதம் அளவுக்கு மீறிக் கேட்டிருக்கிறீர்கள். ராமன்மேலே தசரதனுக்கு எத்தனை ஆசை... அதுமாதிரி இருந்திருக்கணும்.''

''இருந்தேன். தசரதனைவிட அதிகமாகவே இருந்தேன். ஆனால் அவன் சம்பாதிக்க ஆரம்பிச்சான். என் மனைவி செத்தாள். அவனுக்கு ஒரு மனைவி வந்தாள். மனைவி போனால்தான் மனுஷன் மாறணும்; வந்தால் மாறணுமா? அவன் மாறினான். அதிலே யார் மாட்டிண்டா? இதோ நான்! என் கதியைப் பாருங்கோ! என் பிள்ளை அவள்தான் எல்லாம்னு இருக்கான். இன்னிக்குத் தெரியாது... அவள் தாடகி, பூதனை, சூர்ப்பனகை.

''நான் நேத்துச் சாயங்காலம் சாப்பிட்டது. கையில் காலணா இல்லை...''

''எங்கிட்ட இருக்கு. சாப்பிடுங்கள்.''

அன்று ஆரம்பித்த பரிச்சயம் இன்று தொடர்ந்து வளர்ந்துவிட்டது. பெரியவரின் பெயர் சாமிநாதன். அண்ணா பெண் ஜானகியின் பெயரைத் தினம் ஆயிரம் தடவைகள் உச்சரித்த அவரை அவள் கூப்பிடுவதுபோல் 'சித்தப்பா' என்று அழைக்க ஆரம்பித்தான் மணி. அவர் மீது அவனுக்கு இரக்கம் என்று தனியாக ஓர் உணர்ச்சி பிறக்கவில்லை. இந்த சென்ட்ரல் ஸ்டேஷன் என்கிற மகா யந்திரத்தில் இவரும் புகுந்துவிட்டார். அது இயங்குகிற வேகத்தில் இவரும் கூட இயங்குகிறார். இவரைப் போன்றவர்கள் எத்தனையோ பேர் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். கிழவருடைய வயிற்றுப்பாட்டுக்காக ஓரிரு தடவை மணி அவருடைய பிள்ளையைப் போய்ப் பார்த்தான். சிவராமன் நல்ல பிள்ளையாகவே தோன்றினான். மருமகள் செய்வது எதுவுமே அப்பாவுக்குப் பிடிக்கவில்லை என்று நொந்துகொண்டான். அவராகத்தான் கோபித்துக் கொண்டு வெளியேறினார் என்று சாதித்தான். தன் சம்பளத்தில் அவருடைய சாப்பாட்டுச் செலவுக்கு என்று தனியாக மாதம் நாற்பது ஐம்பது என்று கொடுக்க முடியாது என்றும், அவர் எப்போது வேண்டுமானாலும் திரும்பி வரலாம் என்றும் சொன்னான். சிவராமனுடைய மனைவி சாரதா மணிக்குக் காப்பி கொடுத்தாள். மாமனாரைப்பற்றி அவள் ஒரு வார்த்தை அவனுடனாகச் சொல்லவில்லை. பெரியவருடைய இருமலைப் பற்றித் தான் அவள் விசாரித்தாள்.

மொத்தத்தில் வயதாகியும் முதிர்ச்சியில்லாதவர் என்று சாமிநாதனை மணி எடை போட்டான். அவருடைய சொற்படி ஜானகிக்குக் கடிதாசும் எழுதினான் ஏர்கண்டிஷன் வகுப்புக்கே பணம் கொடுக்கக்கூடிய அவள் பத்துப் பைசா கார்டில் பதில்கூட எழுதவில்லை. இருந்தும் ஜானகி ஸ்மரணையைச் சித்தப்பா நிறுத்தவில்லை பிள்ளையும் பணம் தரவில்லை. சித்தப்பாவுக்குச் சாப்பிட்டாக வேண்டும். என்ன செய்வது? மாதத்தில் ஒருநாள் வரும் படியை மணி அவருக்காக ஒதுக்கி வைத்தான் இதற்காக அவன் வருத்தப்படவில்லை. அவருக்காக ஒருநாள் அதிகமாக வேலை செய்ய வேண்டியிருக்கிறதே என்றுதான் அவன் மனம் கஷ்டப்பட்டான்.

அன்றும் பம்பாய் மெயில் என்றும்போல் கூட்டத்தைக் கொண்டுவந்து தள்ளியது. மணி சாதாரணமாக மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளை அண்டுவதில்லை. மேல் வகுப்புப் பிரயாணிகளிடம்தான் அவனுக்கு மோகம். ஆனாலும் தன் கொள்கை தப்பு என்று மனம் அடிக்கடி உதைத்துக்கொள்ளும். முதல் வகுப்பில் வருகிறவர்களில் எழுபத்தைந்து சதவிகிதம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களில், காசு கொடுக்காமல் பாஸைக் காட்டி வரும் ரயில்வே அதிகாரிகள்தான். பணத்தைக் கொடுத்து வருகிறவர்களில் பெரும்பாலோர் மூன்றாவது வகுப்பில்தான் வருகிறார்கள். அதுவும் தூங்குவதற்குப் பலகை வந்த பிறகு கேட்கவே வேண்டாம். ஓர் உயர்நீதிமன்ற நீதிபதி, இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி, நீதிமன்றம் வாசற்படி ஏற ஆயிரம் ரூபாய் பீஸ் கேட்கும் பிரபல வக்கீல் ஒருவர்—இவர்களையெல்லாம் அவன் ஸ்லீப்பர் பெட்டியில் பார்த்திருக்கிறான். சர்க்காரோ, கட்சிக்காரனோ பணம் கொடுக்கும் போதுதான் இவர்கள் தங்களுடைய அந்தஸ்தையும் கௌரவத்தையும் பத்திரமாகக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் போல இருக்கிறது.

மெயில் வான், பார்சல் வான் எல்லாவற்றையும் கண்ணாலேயே ஒதுக்கிவிட்டு எதிரே வரும் போர்ட்டர்கள், டிராலிகள் எல்லாரையும் மறந்து அவன் விரைந்தான். அர்ஜுனனுக்கும், கர்ணனுக்கும் தங்களுடைய சாமர்த்தியத்தில் நம்பிக்கை இருந்ததோ என்னவோ, மணிக்கு என்றுமே தன் தொழிலின் வெற்றியில் அவநம்பிக்கை பிறந்ததில்லை. சில டாக்டர்கள் இஞ்செக்ஷன் கொடுக்கும் போது ஊசி ஏறுவதே தெரியாது. இது டாக்டருடைய கைலாகவத்தை உணர்த்துகிறது. அவரையும் மிஞ்சுகிறவன் மணி. டாக்டர் குத்துகிற ஊசி ஒரு கணமேனும் உடலில் தொட்டு உணர்ச்சியை ஏற்படுத்தும். மணி விரல் வைத்தால் ஆளுடைய துணிகூட அசையாது. மின்னல் வேகம், மின்சார வேகம்தான். வலி இல்லாமல் ரண சிகிச்சை செய்வதில் அவன் நிபுணன்.

மணிக்குத் தான் ஒரு சிங்கம் என்று நினைத்துக் கொள்வதில் பெருமை. சிங்கம் பசி வந்த பின்தான் இரை தேடப் போகும். பசி அடங்கிவிட்டால் யார் வேண்டுமானாலும் அதன் முதுகில் ஏறி உட்கார்ந்து விளையாடலாம். அதுபோலத்தான் மணியும். முதலில் செய்ய வேண்டியது தேவைதானா என்று எண்ணிப் பார்ப்பான். எத்தனை நாட்களுக்கு நீட்டிப் போடலாம் என்று கணக்குப் போடுவான்.

சில சமயங்களில் தேவை அத்தியாவசியமாகத் தோன்றும்; ஆனால் கைக்குக் கிடைத்தது அவசியத்தின் அளவுக்கு வரவில்லை என்றால் அத்துடன் விட்டுவிடுவான். மறுநாள்தான் மறுபடியும் அவன் இரை தேடப் போவான்.

மணி ஒரே நாளில் இரண்டு தடவை தன் தொழிலில் அக்கறை காட்டினான் என்று சரித்திரம் சொன்னதில்லை.

அவன் கடைசியாக முதல் வகுப்புப் பெட்டி ஒன்றை அடைந்தான். அங்கே ஒரே கூட்டம். அதனுள் புகுந்தான்.

அதே சமயத்தில் ஸ்டேஷன் சூப்பிரண்டெண்டின் பெண், என்கொயரி கிளார்க் மங்களா பெட்டியிலிருந்து இறங்கினாள்; அவள் இறங்கிய சில நிமிடங்களில் ஒருவன் இறங்கினான்.

அவனுடைய உருவத்தை விழுங்கிய மணி உடையைக் கவனித்தான்: நீலநிற பாண்ட், வெள்ளை ஷர்ட்;

மணியைத் தாண்டிக்கொண்டு அவன் நடந்தான். மணி கவனித்தான். அவனைப் பின்தொடர்ந்தான் மணி.

பாண்டின் ஹிப் பாக்கெட் அவன் கண்களை அழுத்தின. பின்னால் போர்ட்டர்கள் தலைச் சுமையுடன் 'வழி வழி' என்று கூவிக்கொண்டே நெரித்தார்கள். அவனும் கூட்டத்தில் ஒன்றாகி 'வழி வழி' என்று கத்தினான். பின்னால் ஒருவன் மோதும்வரை காத்திருந்த அவன், தன்மேல் ஒருவன் மோதவும் முன்னால் சென்றவன்மேல் மோதினான்.

கண் இமைக்கும் நேரத்தில் கத்தரிக்கோல் மஸ்லின் துணியில் பாய்ந்து வெளியே வருவதுபோல் இரு விரல்கள் விளையாடின.

மணி யார்மேலும் இடிக்காமல் நழுவித் திரும்பி எதிர்த் திசையில் நடக்கலானான். அவனுடைய வயிற்றுக்கும் பனியனுக்கும் நடுவே ஒரு சின்னஞ்சிறு பர்ஸ் தூங்கிக்கொண்டிருந்தது.

பிளாட்பாரத்தின் கோடிவரைக்கும் நடந்தான். முத்துவின் ஞாபகம் வந்தது: டைப்பிஸ்ட் முத்துவின் அம்மா சாகக் கிடக்கிறாள். எப்படியாவது அவனை இன்று ரயிலில் ஏற்றி அனுப்ப வேண்டும். கோயமுத்தூருக்கு ரயில் சார்ஜ் பதினைந்து ரூபாய், எழுபது பைசா. குறைந்தது முப்பது ரூபாயாவது முத்துவுக்குக் கொடுத்தால்தான் அவனுக்குத் திருப்தியாக இருக்கும்.

மணிபர்ஸைத் திறந்து பார்த்தபோது அவன் கண்ணில் பட்டவை.

மூன்று பத்து ரூபாய் நோட்டு.

இரண்டு ஐந்து ரூபாய் நோட்டு.

நான்கு ஒரு ரூபாய் நோட்டு.

ஐம்பது பைசா, பத்துப் பைசா, மூன்று பைசா நாணயங்கள்.

அதை அவன் மேலும் குடைந்தபோது இரண்டு மூன்று பம்பாய் விலாசங்கள், யாரோ ஒருவருடைய மளிகைக் கடைக் கையெழுத்தில் ஒரு சிறு கடிதம். கூட்டிக் கூட்டிச் சேர்த்துச் சேர்த்து எழுதியிருந்த அந்தத் தமிழைப் படிக்க அவன் சிரமப்படவில்லை.

கடைசியாக இரண்டு சிறு படங்களைப் பார்த்தான். ஒன்றில் நீல நிற குருவாயூரப்பன் புன்முறுவலுடன் திகழ்ந்தார். இன்னொன்று பரீஸ் சொந்தக்காரனுடைய படம். முகத்தில் களை இருந்தது. சினிமாவில் சேரத் துடிக்கும் இளைஞன் 'போஸ்' கொடுப்பதுபோல் விழிகள் சற்றே மேல் நோக்கி நின்றன. புகைப்படத்தின் பின்புறத்தில் பெயரும் விலாசமும் இருந்தன;

நாற்பத்து நாலு ரூபாய், அறுபத்துமூன்று பைசாவைத் தனியாக எடுத்து பாண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்ட மணி, 'முத்து அதிர்ஷ்டசாலிதான்' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

அதே சமயத்தில் இதுவரையில் நினைத்துப் பாராத ஓர் எண்ணம் திடீரென்று உதித்தது.

மங்களா அந்தப் பெட்டியிலிருந்து இறங்கிய ஒருசில நிமிஷங்களுக்குப் பின்தான் பர்ஸ்காரன் இறங்கினான். இருவருக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? ஆனால் தனியாகத்தானே போனார்கள்?

காலை நேரத்தின் குளிர் காற்று முகத்தில் அடித்தது: கேள்விகளை மறக்க முயன்றான். மெதுவாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தான்;

முத்து அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பான். அவனை முதலில் சந்தித்தாக வேண்டும். அதன் பின்தான் மங்களா.

போகும் வழியில் ஒரு சிமெண்ட் பெஞ்சியின் மேல் வாத்துக் கூடைகள் கண்ணில் பட்டன. ஓரிரு வாத்துக்கள் கயிற்றுச் சிறையை மீற முயன்றன. அலகுகளின் அசிங்கத்தை ரசித்துக்கொண்டே மணி விரைந்தான்.

3

''நீங்கள் என்னதான் சொல்லுங்கள், நான் எத்தனையோ ரிடயரிங் ரூம்களைப் பார்த்தாச்சு. திருச்சி ரிடயரிங் ரூம் மாதிரி வராது. சென்ட்ரல்லே ரொம்ப இரைச்சல் சார்!''— ஒரு பிரயாணி இன்னொரு பிரயாணியிடம்.

தனக்கு முன்னால் இறங்கி நடந்த மங்களாவின் உருவம் தெரிகிறதா என்று ஜன நெரிசலிடையே கண்ணைத் துழாவித் துழாவிப் பார்த்துக்கொண்டே நடந்த கேதாரம் இரண்டு இரவு பிரயாணத்தின் அசதியையும் மறந்தான். சாமான்களை தூக்கிய போர்ட்டர் சீனனையும் மறந்தான். மூன்றாவது பிளாட்பாரம் நொடியில் மறைந்து அவனுடைய மனத்திலேயே ஒரு ரயில் கிளம்பியது. முதல் வகுப்புப் பெட்டியில் நான்கு பர்த்துகள். இரண்டு காலி. ஒன்றில் அவன். இன்னொன்றில் ரேணுகாவின் சிநேகிதி மங்களா. ரயில் புறப்பட்டு எவ்வளவோ நேரமாகியும் அவன் அவளுடன் பேச்சுக் கொடுக்கவில்லை. அவளுடைய அழகையே ரசித்துக்கொண்டு வந்தான். அவளுடைய முகத்தின் பொலிவிலும் பிரகாசத்திலும் அவனுடைய கண்கள் கூசின. ஒருகணம் கண் இதழ்கள் மூடிக்கொண்டன.

திடீரென்று கேதாரம் மூச்சு வலிக்க நின்றான்.

''யோவ், எங்கியா பார்த்துணு வர்றே... வளியைப் பார்த்துப் போயர்...''

எதிரே வந்த போர்ட்டர் கத்தினான்.

கேதாரத்துக்கு வெட்கமும் பிறகு அதை மீறிய ஆத்திரமும் பீறிட்டுக்கொண்டு வந்தன. ஆனால் என்ன செய்வது? தப்பு அவனுடையதுதான். மூன்று நிமிடங்களுக்கு முன் பார்த்த மங்களாவைப்பற்றி அவன் அதற்குள் கனவு காண ஆரம்பித்தால்? தெய்வத்துக்கே பொறுக்காது. சென்ட்ரல் ஸ்டேஷன் போர்ட்டருக்கு, அதுவும் சுமையுடன் வருகிறவனுக்கு எப்படிப் பொறுக்கும்?

கேதாரம் ரிடையரிங் ரூமை நோக்கி நடந்தான். இங்கே அவனைச் சந்திக்க இருக்கும் மங்களாவைப் பற்றி தற்போதைக்குக் கனவு காணக்கூடாது என்ற சங்கற்பத்தோடு நடந்தான்.

அறுபது வருடங்களுக்கு முன்னால் பங்குனி உத்தரத்தன்று சிதம்பரத்தில் பிறந்த சீனனுக்கு இந்த வருடம் சஷ்டி அப்த பூர்த்தி விழா நடக்க வேண்டும். நல்ல வேளையாக அவன் ஒரு கட்சித் தலைவராகவோ, மந்திரியாகவோ வாய்க்கவில்லை. இல்லாவிட்டால் அறுபது காளைகள் பூட்டிய வண்டியில், அறுபது சவரன்கள் பரிசளித்து அறுபது மாலைகளை அணிவித்து அவனை அலங்கோலப்படுத்தியிருப்பார்கள்.

பதினாறாம் வயதில் சென்னைக்கு ஓடிவந்த அவன் வெகு சீக்கிரத்திலேயே போர்ட்டர் பதவியை ஏற்றுக் கொண்டான். அரையணா, ஓர் அணாவுக்குப் பெட்டி படுக்கை, கூடை எல்லாம் தூக்கிய அவன் இப்போது ஒரு பிரயாணியின் சாமான்களில் கை வைத்தால் போதும், ஒரு ரூபாய் குறைந்தபட்சம் கட்டணமாக வசூல் செய்து

விடுவான். விலைவாசி ஏற்றத்தின் கணக்கு அவனுக்கு அத்துபடி. எந்தப் புள்ளி விவரக் கணக்கு அதிகாரியாலும் அவனுடன் வாதம் செய்து ஜெயித்துவிட முடியாது.

கருகருவென்ற மேனி. சதை சுருங்கித் தொய்ய ஆரம்பித்திருந்தாலும் மிடுக்கான நடை, பார்வை, நெற்றியில் வெள்ளை வெளேரென்ற விபூதி. நடுவே இருபது பைசா நாணய அளவுக்குக் குங்குமம். தலை ஒரு தும்பைப் பூ பந்து. ஆனால் மீசை இன்னும் முழுதும் நரைக்கவில்லை.

சினனுக்குக் குடும்பக் கவலை என்று எதுவும் இல்லாவிட்டாலும், பணத்துக்குத் தேவை வற்றாத நதியாக ஓடிக் கொண்டேயிருந்தது: ஊரில் இரண்டு காணி நிலம் இருக்கிறது. அதை அவனுடைய மனைவியும் பிள்ளையும் பார்த்துக்கொள்ளுகிறார்கள். பெண்ணை ஒரு நாயனக்காரன் கலியாணம் செய்துகொண்டு, தன் இசையால் அவளையும் ஊரையும் சித்திரவதை செய்துகொண்டிருக்கிறான் சேரிக் கலியாணங்கள், திரௌபதி அம்மன் கோயில் விழா, திருப்பதி பழனி போன்ற மலைகளுக்குச் செல்லும் பக்தர் கோஷ்டி என்று அவனுடைய 'பீப்பீ' நடக்கிறது. ராஜரத்னம் காற்றுக்கு வடிவம் கொடுத்து, உயிர் கொடுத்து ஸ்வரங்களை ஒரு மலர் மாலையாக வடித்துக் கொடுத்தால் சினனுடைய மாப்பிள்ளை காற்றைச் சிதற அடித்து மாலையின் மலர்களையே கசக்கிப் பிழிந்தான். ஆனாலும் என்ன? அவனுடைய குழாயும் சோறு போடத்தான் செய்தது.

மனைவி ஊரில் இருந்ததால் சினனுக்கு இல்லறம் என்று ஒன்று இல்லாமல் போய்விடவில்லை. கடந்த இருபது வருடங்களாக வால்டாக்ஸ் ரோடு மரகதம் அவனுடைய இல்லத்தரசி. மரகதத்துக்கு இப்போது வயது நாற்பத்தாறோ, நாற்பத்தேழோதான். கண்டிப்பாக அதற்கு மேலில்லை! மத்தியான வேளைகளில் அவள் ஸ்டேஷன் பிளாட்பாரங்களில் தென்படுவாள். பார்சல் மூட்டைகளிலிருந்து சிதறி விழும் மீன், உருளைக்கிழங்கு, தக்காளி போன்ற காய்கறி வகைகளிலிருந்து, மூட்டைகளைக் குத்தி எடுத்துக் கிடைக்கும் அரிசி, பருப்பு, கோதுமை வரை எல்லாம் அவளுக்குச் சொந்தம். அவளை யாரும் ஏதும் சொல்லமாட்டார்கள். ஒரு தடவை அவளை ஒரு கோழியும் கையுமாக ஒருவன், பாவம் அவன் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என்று நினைத்த பைத்தியக்காரன்—பிடிக்க, அவள் கூட்டத்தைச் சேர்க்க, அவனால் அவளுடைய கற்புக்கே பங்கம் வர இருந்ததாகக் கூட்டம் நினைக்க, ஒன்றாம் எண் பிளாட்பாரமே அல்லோலகல்லோலப் பட்டது. மரகதம் அன்றுவிட்ட கண்ணீர் ஆறாகப் பெருக் கெடுத்தது!

இப்பேர்ப்பட்ட இல்லத்தரசிதான் சினனுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தாள். முப்பத்தொன்பதில் யுத்தத்தில் சேர்ந்த அவளுடைய கணவன் கண்ணாயிரம் ஹிட்லரும் டோஜோவும் செத்தபிறகும் திரும்பி வரவில்லை. அவன் சிப்பாயாக யுத்த களத்தில் இறந்தான் என்ற செய்தியும் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு தகவல் வரும்வரைக்கும், தன் மஞ்சளுக்கும் குங்குமத்துக்கும் அழிவில்லை என்று கருதிய மரகதம், நாளடைவில் கண்ணாயிரத்தின் சிம்மாசனத்தில் சினனை ஏற்றி வைத்தாள். சிந்தாதிரிப்பேட்டை காக்ஸ் சேரியிலிருந்து வால்டாக்ஸ் ரோட்டுக்கு வந்தாள். நாளாவட்டத்தில், யானைகவுனிக்கு அருகே, யாரோ வாங்கிப் போட்டிருந்த ஒரு நிலத்தில் குடிசையைப் போட்டாள். அவளைப் பார்த்து இன்னும் சிலர் போட்டார்கள். காலனிக்கு 'மரகதம் காலனி' என்று பெயர் வைத்தாகிவிட்டது. நிலத்தின் சொந்தக்காரர் கீழ்க்கோர்ட்டுக்கும் மேல் கோர்ட்டுக்குமாய் ஏறி இறங்கிக்கொண்டிருந்தார். தான் பாவாடை கட்டிய நாளிலிருந்து அதே இடத்தில்தான் வசித்து வருவதாக மரகதம் சத்தியம் செய்து சாட்சியம் சொல்ல, அவளுக்கு ஆதரவாக நாலுபேர் எங்கிருந்தோ வந்து முளைத்தார்கள்.

மொத்தத்தில் மரகதம் காசு கொடுக்காமங் வாங்கிய நிலத்தில், சீனனுடன் தாம்பத்தியம் நடத்தி வந்தாள். அவளைப்பற்றி நினைக்க நினைக்கச் சீனனுக்குப் பெருமையும் அதேசமயத்தில் தன் கட்டிய மனைவிக்கு அவளைப் போல் சாமர்த்தியம் இல்லையே என்ற வேதனையும் உண்டாயிற்று.

இந்தச் சீனன் (வில்லை நம்பர் 13) பெட்டி, ஹோல்டால் தோல் பையுடன் ரிடையரிங் அறையை அடைந்தான்.

வயதான ஓர் ஆங்கிலோ-இந்திய மாது, ''என்னாப்பா போர்ட்டர், ஆளுங்க வர்றாங்களா?'' என்று கேட்டாள் அவனைப் பார்த்ததும்.

''ஆமாங்க, அம்மா... பம்பாய் மெயில் கிராக்கி.''

''பேரு தெரியுமா?''

''இதோ அவரே வராரு.''

கேதாரம் அருகே வந்ததும், ''என்னா ஸாமி, ரிஸர்வேஷன் பண்ணியிருக்கே?'' என்று கேட்டான் சீனன்.

''ஓ, எஸ்!'' என்றான் கேதாரம். அந்த ஆங்கிலோ—இந்திய ஸ்திரீயைப் பார்த்து; பிறகு, ''யூ ஆர் தி மாட்ரன் ஹியர் ஐ ஸப்போஸ்!'' என்றான்.

''யெஸ்... யுவர் நேம் ப்ளீஸ்?''

''கேதாரம், எஸ். கே. கேதாரம், டி வி ஷனல் என்ஜினியர் வெஸ்டர்ன் ரயில்வே... பாம்பே. ஐ ஸென்ட் எ டெலிகிராம்.''

''தாங்க்யூ, போர்ட்டர்! இரண்டாம் நம்பர்லே வை... ரூம் நெம்பர் டூ, ப்ளீஸ்...'' என்று கூறி மாட்ரன் முறுலலித்தாள்.

இரண்டாம் எண் அறையில் சாமான்களை வைத்து விட்டு சிவப்பு முண்டாசைக் கழற்றினான் சீனன்.

''என்னப்பா கொடுக்கணும் போர்ட்டர்?'' என்று கேதாரம் கேட்டுக்கொண்டே பாக்கெட்டில் கை வைக்கப் போனான்.

''குடு ஸாமி... ஒனக்கு தெரியாத கூலியா...? ரூபாய்க்கு மூணு படி போடறேன்னான்... மூணு ரூபாய்க்கு ஒரு படி கிடைக்கமாட்டேங்குது... குடு. பம்பாயிலே எம்மாம் குடுத்தே... அதைக் குடு.''

சீனன் பேசிக்கொண்டிருந்தான். கேதாரத்தின் கை ஒவ்வொரு பாக்கெட்டிலும் மூன்று மூன்று முறைகள் நுழைந்து நுழைந்து உதறியது.

''போர்ட்டர்!''

''என்னா ஸாமி!''

''பர்ஸ் போயிடுத்துப்பா.''

''பூடிச்சா... நல்லாப் பாரு ஸாமி. சென்ட்ரல்லே படா பேஜாரு ஸாமி... நல்லாப் பாரு...''

''பார்த்துட்டேன் போர்ட்டர்... காணோம்... ராத்திரி கடப்பாவிலே சோடா குடிக்க பர்ஸை எடுத்தேன். குடிச்சப் புறம் பாக்கெட்டிலேதான் போட்டேன். இப்போ காணோம்.''

''பர்ஸை அநியாயமா தாரை வாத்திட்டியே, ஸாமி... எவ்வளவு பூடுச்சு?''

''இங்கேதாம்ப்பா, போச்சு; ஆமாம்ப்பா ஸ்டேஷன்லே தான் போச்சு; பாஸை எடுத்துத் தனியா வைச்சேனே, ஆமாம், பேனின் பிரிட்ஜிலே எடுத்து ஷர்ட் பாக்கெட்டிலே போட்டுண்டேன்... இப்போ யார்கிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணறும்?''

''கம்ப்ளெயிண்ட் கொடுத்து என்னா ஸாமி பண்ணப் போறே நீ? கூவத்திலே போட்ட கணக்குத்தான். தினம் தினம் எம்மாம் பணம் எம்மா பர்ஸிலிருந்து அபேஸ் ஆவது? நெறைய பூட்ச்சா ஸாமி? பாவம்!''

சீனனுடைய கேள்விகளையோ அனுதாபத்தையோ லட்சியம் செய்யாமல், கேதாரம் பெட்டியைத் திறந்தான்: அவன் பிளாட்பாரத்தில் நடந்து வருவகையில்தான் யாரோ பறித்திருக்கிறார்கள். அவன் மங்களாவை நினைத்துக் கனவு நடை போட்டிருக்கிறான். பின்னால் யாரோ பர்ஸைப் பிடுங்கி ஓடியிருக்கிறார்கள். ஒருகணம் மனம் சலித்து, மங்களாவைச் சபித்தது.

பெட்டியிலிருந்து பெரிய பர்ஸ் ஒன்றை எடுத்த கேதாரம், ''ஏம்ப்பா, பத்து ரூபாய்க்குச் சில்லறை இருக்கா?'' என்று கேட்டான்.

''இதுதான் ஸாமி, போணி எங்கிட்டேது?''

''எங்கே கிடைக்கும்?''

''புக்கிங் ஆபீஸ்லே வாங்கியாரட்டுமா?''

சீனனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான் கேதாரம்.

''என்னா ஸாமி, அப்படிப் பார்க்கிறே... சென்ட்ரல் ஸ்டேஷன் போர்ட்டர் ஒன் பத்து ரூபாயோடே ஓடிடு வான்னு நீ நினைக்கிறியா? நான் ஒன்னை நம்பறேன் சாமி... அப்பாலே வந்து வாங்கிக்கறேன். பங்களூர் வர்ற டயம்.''

சீனன் வெளியேற முற்பட்டான்.

''இருப்பா... நீயே போய்ச் சீக்கிரம் சில்லறை வாங்கி வா... நான் உன்னை நம்பறேன்...''

''அப்படிச் சொல்லு ஸாமி. என் பேரு சீனன். 13ம் நம்பர். எம் மூஞ்சியைப் பார்த்துக்க... எவன் நெற்றியிலும் இந்த அம்மன் குங்குமம் இருக்கவே இருக்காது!''

சீனன் போனபிறகு கேதாரம் எரிச்சலுடன் உடையை மாற்றினான். திறந்த பெட்டியில், ரேணுகா மங்களாவிடம் கொடுக்கச் சொன்ன காக்லேட் பெட்டி கண்ணில் பட்டது. அதை அவன் கையில் எடுத்தான். வட்ட வடிவமான, நீல நிற டப்பா... ஓவியங்களில் யானையும், சிங்கமும், புலியும் கம்பீரமாக நின்றன. மிக உயர்ந்த ரக சாக்லேட் என்று அவன் வாய் முணுமுணுத்தது.

ஒரு ரூபாயை வாங்கிக்கொண்டு சீனன் போனான்: அதன்பின், பல் தேய்த்துக் குளித்துவிட்டுக் கேதாரம் பேப்பர் படிக்கலானான்: மனம் ஒடவில்லை. பறிபோன பர்ஸில் எத்தனை ரூபாய் இருந்தது என்று அவன் எவ்வளவு யோசனை செய்தும் பிடிபடவில்லை. மூன்று பத்து ரூபாய் நோட்டுக்கள் என்று மட்டுமே நிச்சயமாகத் தெரிந்தது: ஒரு ரூபாய் நோட்டுக்கள் எவ்வளவு?

அவன் மண்டையைக் குழப்பிக்கொண்டான். மங்களா மீண்டும் கண்முன்னால் தோன்றினாள்.

அதேசமயம், 'சார்' என்ற குரல் அறை வாயிலிருந்து கேட்டது.

பேப்பரை ஒதுக்கிவிட்டுப் பார்த்தான் கேதாரம்: ஒரு பதினைந்து அல்லது பதினாறு வயதுப் பையன் நின்று கொண்டிருந்தான்.

''என்ன வேணும்?''

''நீங்கதானே இன்னிக்குப் பாம்பே மெயிலில் வந்தீர்கள்?''

''ஆமாம்... பர்ஸ் உன் கையிலே கிடைச்சிருக்கா?''

வந்தவன் விழித்தான்: பிறகு, ''பர்ஸா? என்ன பர்ஸ் என் பெயர் பாபு. மங்களாவின் தம்பி... என் அக்கா அனுப்பினாள்: பாம்பேயிலிருந்து ரேணுகா ஏதோ கொடுத்து விட்டிருக்கிறாள் என்று சொன்னீர்களாமே?'' என்றான்:

தன் அவசர புத்தியை ஒரு தரம், வெறும் எண்ணத்தாலேயே அடித்துக்கொண்ட கேதாரம், ''ஆமாம், ஆமாம்! இதோ தரேன்... ஆனால் உன் அக்காதானே வருவதாகச் சொன்னாளே?'' என்றான்.

''சொன்னாளோ என்னமோ எனக்குத் தெரியாது. 'நான் சொன்னேன்னு சொல்லி வாங்கி வா'ன்னாள். அதுதான் வந்தேன். தரேளா?''

''நீ அவள் தம்பியா?''

''அதான் சொன்னேனே.''

''இருந்தாலும் கேட்டேன். கேட்கப் படாதா?''

''ரேணுகா கொடுத்தனுப்பியதைத் தருகிறீர்களா?''

''உன் பெயர் என்னன்னு சொன்னே?''

''சிவசங்கரன்.''

''பாபுன்னு சொன்னேபோல் இருக்கே?''

''அப்போ தெரிஞ்சிருந்து ஏன் கேட்டீர்கள்? என்னை நம்பினால் கொடுங்கள். இல்லாவிட்டால் என்னமோ செய்யுங்கள்.''

''இந்த வயசிலேயே இந்தக் கோபம் வர்றதே உனக்கு!''

''கோபம் வர்றதுக்கு ஒரு வயசுன்னு வரணுமா? நீங்க நம்பாதது மாதிரி இருக்கு. நான் வர்றேன்...அப்போதே அக்காகிட்டே சொன்னேன், என்னாலே போக முடியாதுன்னு... அவள்தான் கெஞ்சினாள்!''

''இந்தா... இதுதான் ரேணுகா கொடுத்தது...'' சாக்லேட் டப்பாவை நீட்டிய கேதாரம், ''ஏன் உன் அக்காவால் வர முடியவில்லை?'' என்று வியப்புடன் கேட்டான்.

''தெரியாது. ஒருவேளை உங்களைப் பார்க்கப் பிடிக்கலையோ என்னவோ...! நன்றி!''

பாபு அடுத்தகணம் அறையை விட்டு வெளியேறினான்.

கேதாரத்துக்கு துக்கமும் ஏமாற்றமும் பீறிட்டுக் கொண்டு வந்தன. மங்களாவின் வருகையை நினைத்து அவன் காத்துக்கொண்டிருந்தான். ஆனால் அவள்?

தம்பியை அனுப்பிவிட்டாள். ஒருவேளை இது அவளுடைய உதாசீனத்தைக் காட்டுகிறதோ?

திடீரென்று ஆள் அரவம் கேட்டது.

பார்த்தான்.

மாமா வந்துகொண்டிருந்தார்.

''டேய் கேதாரம், யாருடா ஒரு பையன் ஒரு சாக்லேட் டப்பாவுடன் போய்க்கொண்டிருக்கிறான்; ஒரு பெண் வேறு அந்தப் பையனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாள்.''

''மாமா... வாருங்கள், மாமா...''

''யாருடா அந்தப் பெண்?''

''பெண்ணா?''

''ஆமாம்டா. பின் என்ன சொன்னேன் நான்? எருமைன்னா சொன்னேன்? ஒல்லியா ஒரு பெண். சிவப்புப் புடவை கட்டிண்டு ஒரு பெண்.''

''தெரியாது மாமா. உட்காருங்கள்.''

''உட்காருகிறேன், உட்காருகிறேன். சரியா மூணு மணிக்கு வர்றோம்னு சொல்லியிருக்கிறேன்... அவர்கள் காரை அனுப்புகிறார்கள்.''

''உம்.''

''பெண்ணைப் பிடிச்சுட்டா உடனேயே சரின்னு சொல்லித் தொலைக்காதே... புதன்கிழமை க்ராம்ட்டன் என்ஜினீயர் பெண்ணைப் பார்க்கணும். வெள்ளிக்கிழமை.''

''தெரியும் மாமா... ஒய்வு பெற்ற பிரதம காரியதரிசி பெண். என்னைக் கேட்டா, நீங்க பார்த்து வைச்சிருக்கிற எல்லாப் பெண்களையும் ஒரு சுயம்வர மண்டபத்தில் கூட்டமாகக் கூட்டி வைத்துவிடலாம்.''

''உன்னைக் கேட்டால்தானே? உன்னைக் கேட்கமாட்டேன். பயப்படாதே. அது சரி, மாமிக்கும் எனக்கும் என்ன வாங்கிண்டு வந்திருக்கே பம்பாயிலிருந்து?'' என்று கேட்டார் மாமா.

''இங்கே கிடைக்காதது என்ன புதுசா அங்கே கிடைக்கிறது? ஒண்ணும் வாங்கிண்டு வரல்லே.''

''உன் வழக்கம்தான் தெரியுமே...அது சரி. கண்றாவி, ஏன் இங்கே வந்து இறங்கினே? உட்லண்ட்ஸ் இருக்கு, ஸ்வாகத் இருக்கு, தாசபிரகாஷ் இருக்கு.

''இங்கே சௌகரியத்துக்கு என்ன குறைச்சல்?''

''அதுவும் சரிதான். ரயில்வேக்காரன். வேறே எங்கே தங்குவே?''

''மாமி பங்கஜம், கமலா எல்லாரும் சௌக்கியமா''

''உம், உம்... சௌக்கியம்தான்... நீ இந்தத் தடவையாவது குத்தாலத்துக்கு வந்து ஆசிரமத்தைப் பார்த்துவிட்டுப் போகணும். விளையாட்டுப்போல ஆரம்பிச்சு ஆறு மாசம் ஆகலை. நூத்தி ஏழுபேர் வந்து சேர்ந்தாச்சு. செலவை நினைச்சாத்தான் பயம் வயத்தைக் கிள்ளறது.''

''இந்த வயசிலே இது அநாவசியம் உங்களுக்கு!''

''எதுடா அநாவசியம்? அநாதைக் குழந்தைகளுக்கு மட்டும் ஆசிரமம் நடத்தலாம். வயசான அனாதைக் கிழங்களுக்கு நடத்தப்படாதோ? எத்தனை தகப்பன்மார்கள், பிள்ளைகளைப் பெத்து வளர்த்து ஆளாக்கி, அந்தப் பிள்ளைகள்கிட்டேயிருந்து ஓர் ஆதரவும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள்! எத்தனைபேர் வயசுக் காலத்திலே குளிரிலேயும் மழையிலேயும் கஷ்டப்படுகிறார்கள்?... ஒரு சாப்பாடு, இரண்டு காப்பி, ஒரு பலகாரம். ஒரு நாளைக்கு இன்னிக் கெல்லாம் இருந்தால் ஒண்ணரை ரூபாய் ஆகிறது. முத்துசாமி வாண்டையார் ஆசிரமம் கட்டறதுக்கு இடம் கொடுத்தார். அஞ்சு வேலி நிலமும் எழுதி வைக்கிறேன்னு சொல்லியிருக்கார். நானும் நடனம், நாடகம் ஏற்பாடு பண்ணி வசூல் பண்றேன்...எதுக்கு? கண்ணை மூடிண்டு ஊதாரித்தனமாச் செலவு பண்ற பிள்ளைகளின் கண்ணைத் திறக்கத்தான்! முப்பது வருஷங்கள் போனால் இவன்கள் பிள்ளைகளும் இவன்களைக் கைவிடத்தானே போறது? அதை இன்னிக்கே ஞாபகப்படுத்துகிறேன். என் யோசனை இன்னிக்கு உனக்குச் சிரிப்பாக இருக்கலாம்...ஆனால், உனக்கே தெரியும், பாரு...பாரு...''

மூச்சு விடாமல் மாமா பேசிக்கொண்டே போனார்.

நடுவே, திடீரென்று ஒரு பெண் பிரவேசித்தாள்.

கேதாரம் திடுக்கிட்டவனாய் எழுந்தான்.

4

''ஸ்டேஷன் மாஸ்டர் என்ற இடத்தில் ஆரம்பிக்கும் வாழ்க்கை ரயில், ஓயாமல், தளராமல் ஓடி, நிதானத்தை இழக்காமல் முன்னேறிக் கடைசியில் ஸ்டேஷன் சூப்பரின் டெண்டன்ட் என்ற இடத்தில் நின்று பிரயாணத்தை முடித்துக்கொள்ளுகிறது.

—ஒருவருடைய அனுபவம்

''மங்கா, மங்கா!''

சமையல் அறையிலிருந்து சங்கரி கத்தினாள்.

''இதோ வரேன்'' மங்களா அலுத்துக்கொண்டாள். இந்த அம்மா கூப்பிட ஆரம்பித்தால் போய்ச் சேரும்வரையில் நிறுத்தவே மாட்டாள். பாதி வாரிக்கொண்டிருந்த தலையை முடிந்துகொண்டு சமையல் அறையை நோக்கி நடந்தாள்.

மூன்றாவது அறையில் ஒரு பென்சிலைப் பிடித்துக் கொண்டு கல்யாணமும் ரவியும் யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். சிவப்புத் தரையில், ஓர் எருமையின்

நீளத்துக்கும் உயரத்துக்கும் யானையைத் தரையில் சாக்கினால் வரைந்துவிட்டு, அதன் துதிக்கையின் அழகை ரசித்துக்கொண்டிருந்தாள் சுஜா.

''அப்பா, யானை எப்படி?''

''ரொம்ப நன்னா இருக்கு...புஸ்தகத்தைப் படிக்காதே. இப்படி வீடெல்லாம் வரைந்துகொண்டிரு'' என்று மங்களா சிடுசிடுத்தாள்.

''இன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடம் கிடையாது!'' என்றாள் சுஜா.

''அப்போ மிருகக்காட்சிசாலைக்குப் போய் முதல்லே யானையைப் பார்த்துட்டு வா. படம் எருமை மாடு மாதிரி இருக்கு.''

''அவளே எருமைதான்'' கல்யாணம் ஒருகணம் பென்சிலை மறந்துவிட்டுக் கத்தினான்.

''போய் குளிடா...மூஞ்சியிலே மூணு நாள் அழுக்குப் படிஞ்சிருக்கு...டேய் ரவி போடா, போய்ப் பல்லைத் தேய்; மணி ஏழு அடிச்சாச்சு...'' மங்களாவுக்கு ஆத்திரம் வந்தது.

''மங்களா!'' மறுபடியும் அம்மாவின் குரல் கேட்டது.

''இதோ வந்துண்டேயிருக்கேனே.''

சமையல் அறையை அடைந்ததும், ''என்ன அம்மா வேணும்?'' என்று கேட்டாள்.

''உன் அப்பா பூஜையை முடிச்சுண்டு வர்ற நேரம் ஆயிடுத்து. தேங்காயைத் துருவிச் சட்னியை அரை; பொட்டுக்கடலை இல்லை, கடலைப்பருப்பை வறுத்துத் தரேன்.''

''எனக்கு வேலைக்குப் போகணும்.''

''என்கொயரிதானே—காலங்கார்த்தாலே யார் வந்து நிற்கப்போறா?''

''மிளகாய்ப் பொடி இல்லியா?''

''இருக்கோ இல்லியோ... சட்னி அரை. இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. எல்லாம் தின்ன உட்காரும்...''

''மெதுவாச் சமைச்சாப் போருமே? நீயே அரைச்சுக் கோயேன் அம்மா.''

''என்னடி, எனக்கு என்ன பத்து கையா இருக்கு? ஒரு சட்னி அரைக்க எத்தனை நேரமாகும்? வயசு இருபத்து இரண்டு ஆகிறது; வீட்டு வேலையிலே அக்கறை இல்லை! செய்யணும் என்கிற கரிசனம் இல்லை. ஒன் வயசிலே...''

''போதும், போதும்...சட்னியை அரைச்சு விடறேன். உன் பல்லவியைப் பாட ஆரம்பிக்காதே. என் வயசிலே நீ என்ன செய்தாய்ன்னு எனக்குத் தெரியும். இடுப்பிலே ஒண்ணும் வயத்திலே ஒண்ணுமாய் விறகடுப்பிலே வெந்து மாமியாருக்கும், மாமனாருக்குமாய்ச் செய்து போட்டாய். எல்லாம் தெரியும், தேங்காய் எங்கே!''

''அப்பப்பா...இந்தக் காலத்துப் பெண்களுக்கு வாயும் பேச்சும் மட்டும்தான் இருக்கு. வக்கணையாய் நாலு பேருக்கு சமைச்சுப் போடத் தெரியாது...'' என்று அம்மா முணு முணுத்துக்கொண்டே இட்லி மாவைச் சிப்பலில் போடலானாள்.

* * *

ஸ்டேஷன் சூப்பரிண்டெண்டெண்ட் கணபதி பூஜையில் ஆழ்ந்திருந்தார். பூஜை என்றால் என்ன, விஷ்ணு சகஸ்ரநாமம்தான்; அவருக்கு வேறு எதுவும் தெரியாது; மனத்துக்குச் சந்துஷ்டியும், நிம்மதியும் விஷ்ணு சகஸ்ர நாமம் படித்தால் கிடைத்துவிடும் என்று இருபது வருடங்களுக்கு முன்னால் கனக்கம்பட்டி ஸ்டேஷன் மாஸ்டராக இருக்கும்போது யாரோ சொல்லியிருந்தார்கள். அன்றிலி

ருந்து இன்றுவரை, அவர் எது தவறினாலும் விஷ்ணுவை ஆயிரம் நாமங்களால் கூப்பிடுவதை நிறுத்தவில்லை; இதனாலேயே தமக்கு ஒருவித நிம்மதி வந்துவிட்டது என்று உள்ளூற நம்பினார். வீட்டில் ஆயிரம் தொல்லைகள், சிரமங்கள், கஷ்டங்கள் வந்தாலும் அவையெல்லாம் பெரிய பாரங்களாக அவருக்குத் தோன்றவில்லை; எல்லாம் தோன்றி மறையக்கூடிய எறும்புக் கடி வலிகள் என்று அவர் ஒதுக்கினார். இப்படிப்பட்ட மனப்போக்குக் காரணமே அவர் தினந்தோறும் சொல்லும் விஷ்ணு சகஸ்ரநாமம்தான் என்று நினைத்தார். மூர்த்தி, மோகன் என்ற இரண்டு பிள்ளைகளால் அவருடைய மனசுக்கு வேதனை பிறந்த போதுகூட, வேதனையை மீறி மனம் சமாதானம் அடைய வேண்டும் என்ற உத்வேகம் எழுந்தது. அவர்களை மறப்பதற்குக்கூட இந்த விஷ்ணு சகஸ்ரநாமம் ஒரு பெரும் மருந்தாகக் கிடைத்தது.

மொத்தத்தில் அவருடைய மனத்தில் பூசல் இல்லை; கிலேசமில்லை. நாளைக்கு இந்தக் குழந்தைகளின் கதி என்ன என்ற அங்கலாய்ப்பும் பயமும் இல்லை.

ரயில்வேயில் உள்ள அத்தனைபேர்களும் அவரை ஸ்டேஷன் சூப்பரிண்டெண்டன்ட் என்று ஒரு மைல் நீளத்துக்கு வார்த்தைகளை இழுத்துக் கூப்பிடவில்லை; 'எஸ்.எஸ்.' என்றே குறிப்பிட்டார்கள்; அழைத்தார்கள்.

நான்கு வருடங்களாக எஸ்.எஸ்.ஸாகப் பணிபுரியும் அவர் இன்னும் மூன்று ஆண்டுகளில் ஓய்வு பெற்றுவிடுவார்; ஐம்பத்தெட்டு வயதுக்குப்பின் அவரை யாரும் மதிக்கப் போவதில்லை. யாராவது போர்ட்டரோ, புக்கிங் கிளார்க்கோ டிக்கட் பரிசோதகரோ புன்முறுவலால் விசாரித்தால் அதுவே பெரிய மதிப்புத்தான். அவர் பழுத்துக்கொண்டிருக்கும் ஓர் இலை. மரத்திலிருந்து விழப் போகிறது. மற்ற பச்சை இலைகளுக்கு விழப்போகிற, விழுகிற இலைகள்மீது என்ன அக்கறை இருக்க முடியும்?

இந்தக் கணபதி எதிர்காலத்தைப்பற்றி எப்படிக் கவலைப்படாமல் இருந்தாரோ, அதேபோல் கடந்த காலத்தைப் பற்றியும் சிந்திக்காமலே இருந்தார்; சிந்தனை என்று ஆரம்பித்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. மனமே ஒரு ரணகளமாகிவிடும்.

சொந்த ஊர் நங்கவரம். திருச்சியில் செயிண்ட் ஜோசப் கல்லூரியில் முதல் வகுப்பில் ஹானர்ஸ் பாஸ் செய்தவர். பலருடைய வற்புறுத்தலின் பேரிலும் நங்கவரத்துப் பணக்காரர்கள் உதவியிலும் ஐ.ஸி.எஸ். பரீட்சை எழுத லண்டனுக்குப் போனார். பரீட்சை எல்லாம் நன்றாகத் தான் எழுதினார். நிறைய மார்க்குகளும் வாங்கினார். ஆனால் அவருடைய அதிர்ஷ்டம் அந்த ஆண்டு பன்னிரண்டு பேர்களைத்தான் தேர்ந்தெடுத்தார்கள் அவர் பதிமூன்றாவது ராங்க் தமது தோல்வியில் அவருடைய மனம் ஒடிய வில்லை. பிறருடைய பணம் செலவழிந்ததற்கும், அவர்கள் அவரிடம் எதிர்பார்த்த சாதனை தோல்வியில் முடிந்ததே என்றும்தான் மனம் நொந்தது. ஐ ஸி.எஸ். பதவி மயிரிழையில் கைக்குக் கிட்டாமல் நழுவியது. அதன்பின் வகிக்கக்கூடிய பதவி, சுமாராகவாவது இருக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். சென்னை சர்க்காரில் டிப்டி கலெக்டர் வேலைக்காகப் பாடுபட்டார்; ஏழு நியமனங்களில் ஒரு நியமனம்தான் ஜாதி அடிப்படையில் அவருடைய ஜாதிக்கு உண்டு. அந்த ஒரு ஸ்தானமும் அவருக்குக் கிடைக்கவில்லை. வேறு யாரோ சிபாரிசில் நியமிக்கப் பட்டார்.

அதன்பின் கணபதி எந்த வேலையானாலும் சரி என்று ஒரு முடிவுக்கு வந்தார். ஸவுத் இந்தியன் ரயில்வேயில் ஸ்டேஷன் மாஸ்டர் பதவி கிடைத்தது பச்சைக்கொடியும் சிவப்புக்கொடியும் கையில் விளையாட, அவர் வாழ்க்கையை ஆரம்பித்தார். ரிலீவிங் ஸ்டேஷன் மாஸ்டர் வாழ்க்கை முடிந்ததும், சிறு சிறு ஸ்டேஷன்களில் இரண்டு

வருஷங்கள், மூன்று வருஷங்கள் என்று காலம் ஓடிற்று. ஐ.ஸி.எஸ்ஸுக்கு மனைவியாக வாய்க்க இருந்த சங்கரி ஒரு ஸ்டேஷன் மாஸ்டரின் தர்மபத்தினியாகி, தர்மபத்தியத்தின் கனிகளை முறை தவறாமல் ஈன்றுகொண்டே வந்தாள்; ரயிலின் ஓட்டத்துக்கு ஓய்வு இருந்ததோ என்னவோ, அவளுடைய தாய்மைச் சுமைக்கு ஓய்வே பிறக்கவில்லை. பதினொறு குழந்தைகள் பிறந்த பிறகுதான், தெய்வம் விழித்துக்கொண்டது.

சென்ட்ரல் ஸ்டேஷனில் பதினொரு பிளாட்பாரங்கள். கணபதிக்குப் பதினொரு குழந்தைகள்; பன்னிரண்டாம் பிளாட்பாரம் வராமல் இருக்க வேண்டுமே என்று இரவும் பகலும் வேண்டிக்கொண்டார் கணபதி. சென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் தம் வாழ்க்கைக்கும், ஒருவித பிணைப்பு, ஒருவித ஒற்றுமை இருப்பதாக அவர் நினைத்தார். இந்த நினைப்பு பிதற்றல், அசம்பாவிதம் என்று சிற்சில சமயங்களில் தோன்றினாலும் பிளாட்பாரங்களின் எண்ணிக்கை ஓர் எச்சரிக்கையாகவே கண்முன் நின்றது.

இப்போது சமீபகாலமாக அவர் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தவள் பெண் மங்களாதான். அவளுக்குக் கலியாணமான பிறகுதான், மூத்தபிள்ளை மூர்த்திக்குப் பெண் எடுக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்த அவர் கடைசியில் சங்கரியின் நச்சரிப்புக்கும், மங்களாவின் பிடிவாதத்துக்கும் தலைசாய்க்கும்படியாயிற்று. பெரிய இடத்திலிருந்து கைநிறைய சீர்செனத்திகளுடன் மூர்த்திக்கு வரன் வந்தது; மங்களா பி.எஸ்ஸி. பாஸ் செய்துவிட்டு, ரயில்வேயில் குமாஸ்தாவாகச் சேர்ந்தாள். 'இப்போதைக்குக் கலியாணம் வேண்டாம்' என்று அவள் பிடிவாதம் செய்தாள். பிள்ளை மூர்த்தியும் பொறுமையிழந்து கொண்டிருந்தான். கணபதி பார்த்தார். தம் பிடிவாதத்துக்கு அர்த்தமில்லை என்று நினைத்தார். பிள்ளையின் கலியாணத்தை முடித்து, அவனைப் பெண் வீட்டார் கையில் ஒப்படைத்தார்.

அது நடந்து இரண்டு வருடங்களாகப் போகின்றன. இரண்டாவது பிள்ளை மோகன். பஞ்சாபுக்குப் போனவன் அமெரிக்காவுக்குச் சென்றாகிவிட்டது. அவனைப் பற்றிச் சிந்திப்பதில் அர்த்தமில்லை. கவலைப்பட வேண்டியது மங்களாவின் கல்யாணத்தைப் பற்றியே.

மங்களாவுக்கு அப்புறம் சங்கர், விசு, பாபு, ராதா, அனு, கல்யாணம், ரவி, சுஜா, ராதா, அனு, சுஜா இவர்களுடைய கலியாணங்களைப்பற்றி இப்போது விசாரப்பட வேண்டியதில்லை; விசாரப்பட்டும் பயனில்லை. பிள்ளைகள் தலையெடுத்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், தங்கைகளுடைய கலியாணம் நடக்கும். இல்லாவிட்டால் தெய்வம்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மங்களாவுக்கு இன்றுவரையில் அவர் வரன் பார்க்கப் புறப்படவில்லை. இதற்குக் காரணம் சங்கரிதான். அவள், மங்களாவைத் தன் அண்ணா பிள்ளைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிறாள். அந்த அண்ணா மண்ணோடு மண்ணாகிப் போய் பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன. அப்போது, அந்தப் பிள்ளைக்கு வயது பதினேழு. எஸ்.எஸ் எல் சி. தேறிவிட்டு, அப்பாவுடன் சண்டை பிடித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறியவன், மூத்தாள் பிள்ளையான அவன், அப்பாவின் மரணத்துக்குகூட வரவில்லை. அவன் இப்போது எங்கே இருக்கிறான், என்ன செய்கிறான் என்று யாருக்கும் தெரியாது. இப்படிப்பட்ட அண்ணன் பிள்ளைக்கு மங்களாவைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று சங்கரி ஒற்றைக் காலால் நிற்கிறாள். காரணம், அண்ணா சாகிற சமயத்தில் அவள் வாக்குக் கொடுத்துவிட்டாளாம். 'சரி, அந்தப் பிள்ளையைக் கொண்டுவா!' என்றால் சங்கரி விழிக்கிறாள். 'நீங்கள் தேடுங்கள்' என்கிறாள். கணபதி உத்தியோகத்தைப் பார்ப்பதா, மைத்துனன் பிள்ளையை வலைபோட்டுத் தேடுவதில் முனைவதா.

மொத்தத்தில் காலம் ஓடுகிறது; மங்களா வேலையில் சேர்ந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. சங்கரியின் பிடி வாதம் இன்னும் தளரவில்லை.

விஷ்ணு சகஸ்ரநாமம்தான் உதவிக்கு வரவேண்டும்;

* * *

பூஜையிலிருந்து விடுதலை பெற்றுக் கணபதி சமையலறைக்கு வந்தபோது மணி ஏழே கால். கல் உரலிலிருந்து சட்டினியை வழித்து, ஓர் அலுமினியப் பாத்திரத்தில் போட்டுக்கொண்டிருந்தாள் மங்களா.

''உனக்கு டியூட்டி இல்லை?''

''இருக்கு அப்பா!''

''பின் ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? போ... போ... எஸ் எஸ்.ஸின் பெண். அதுதான் நினைச்சபோது வர்றான்னு நாலுபேர் சொல்லணுமா?''

''எட்டு மணிக்கு வரேன்னு சொல்லியிருக்கேன்.''

''ஒரு மணி நேரம் லேட்டா?''

''ஆமாம்.''

''சங்கரி, டிபன் தயாரா.''

''எல்லாம் தயார், உட்காருங்கோ. சட்னிக்குத் தாளிச்சுக் கொட்டணும்;''

கணபதி சமையலறையிலேயே உட்கார்ந்தார்.

''பலகையைப் போடேண்டி'' என்று அதட்டினாள் சங்கரி.

''துப்புரவாகத்தான் இருக்கு'' என்ற கணபதி, ''மங்கா, நீயும் டிபன் சாப்பிட்டுவிட்டுப் போ!'' என்றார்;

''இந்த ஏடு எடுத்து அவளுக்குப் போடறேன்... நீங்க முதல்லே சாப்பிட்டுவிட்டு இடத்தைக் காலி பண்ணுங்கோ;''

''ரொம்ப சரி, மாட்டேன்னா டிபன் இல்லேன்னு சொன்னாலும் சொல்லிடுவே!'' கணபதி சிரித்தார். மங்களா அதை ஆமோதிப்பதுபோல் புன்முறுவலித்தாள்;

''மங்கா, உன் சிநேகிதி ரேணுகா வந்தாளா?''

''இல்லையப்பா;''

''பாம்பே மெயிலுக்குப் போனியே?''

''வரவில்லை; புதன்கிழமை வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறாள். கடைசி நிமிடத்திலேதான் 'கான்சல்' பண்ணியிருக்கிறாள்.''

''இரண்டுபேரும் வகுப்புத் தோழிகள். நீ ஒரு குமாஸ்தா; ஆனால் அவள்? ஒரு கம்பெனி டைரக்டர்...'' என்றார் கணபதி.

''இந்திராகாந்தி உங்களைவிடச் சின்னவள்; அவள் பிரதம மந்திரி... இட்லிக்கு எண்ணெயா, நெய்யா.'' சங்கரி பொரிந்து தள்ளினாள்;

கணபதி சிரித்தார்.

''மங்கா, இன்னிக்கு என்ன அம்மா 'மூடில்' இல்லை போலிருக்கே!''

''எனக்கு என்ன 'மூடு'க்குக் குறைச்சல்? ரயிலுக்கு ஒச்சல் ஒழிவு இருக்கோ இல்லியோ, எனக்குத் தினம் தினம் இதே தொழில்தான். என்னடா ஒருத்தி மாடுமாதிரி உழைக்கிறாளே, ஒத்தாசை செய்வோம்னு யாருக்காவது ஒரு எண்ணம் இருக்கா?''

''அப்பா... இப்போ, புரியறதா! நான் ஒத்தாசை செய்யறதில்லைன்னு குத்திக் காட்டறாள் அம்மா. என்னை எதுக்கு அப்பா காலேஜிலே படிக்க வைத்தீர்கள்?.'

ஓர் இட்லியை விண்டு வாயில் போட்டுக்கொண்டே, கணபதி, ''நானா படிக்க வைச்சேன்? நீயாகவேதான் போய்ச் சேர்ந்தாய்!'' என்றார்.

''கல்லூரியிலே படிச்சால், சமைக்கப்படாதுன்னு யாராவது ஆர்டர் போட்டிருக்கிறார்களா? என்னை மாதிரி மண்டுகங்கள்தான் அடுப்படியில் வேகணும் என்கிறாயா?''

''அதில்லே சங்கரி, கல்லூரியுடன் நிறுத்தியிருந்தால் சமைக்கலாம். அப்புறம் வேலைக்கும் போகிறாளே, எட்டு மணி நேரம் டியூட்டி, எட்டு மணி நேரம் தூக்கம். குளிக்க, சாப்பிட, டிரஸ் பண்ணிக்க, வெளியே வாசல்லே போக இதற்கெல்லாம் அஞ்சாறு மணி நேரம் போறது. எப்படிச் சமைக்க முடியும்? நீயே சொல்லு.''

''நான் ஒண்ணும் சொல்லலை. யார் யார் எப்படி எப்படிப் போகணுமோ, அப்படி அப்படிப் போய்க்கொள்ளட்டும். நான் ஒருத்தி இல்லைன்னா, இந்த வீட்டிலே நாய் நுழையாது. அடுப்படியிலேதான் பூனைதான் தூங்கிக் கொண்டிருக்கும்.''

''நீ இருக்கிறதாலேதான் நாங்கள் எல்லோரும் ஏதோ தைரியமாக இருக்கிறோம். உன் கண்ணைத் தொடைக்கறதுக்குன்னு நான் இரண்டு நாட்கள் சமைக்கலாம். ஆனால் அது போதுமா? உனக்கே திருப்தியாயிருக்காது. 'உன் அப்பாவுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாது. நீ போய் உன் காரியத்தைப் பாரு'ன்னு நீயே என்னை விரட்டுவே.''

''கொஞ்சம் சட்னி போடு!'' என்றார் கணபதி. பிறகு, ''ஆமாம், ரேணுகா யார்கிட்டே தகவல் அனுப்பினாள்?'' என்று கேட்டார்.

''யாரோ கேதாரமாம். வெஸ்டர்ன் ரயில்வேயில் டிவிஷனல் இன்ஜினீயர். ரிடயரிங் ரூமில் தங்கியிருக்கிறார். அவருடைய கம்பார்ட்மெண்டிலேதான் ரேணுவுக்குப் 'புக்' காகி யிருந்தது, புதன்கிழமை வந்துவிட்டுச் சனிக்கிழமையே கல்கத்தாவுக்குப் போகிறாளாம். ஒரு சாக்லெட் பெட்டி கொடுத்து அனுப்பியிருக்கிறாள்.''

''எனக்கு இட்லி போதும்'' என்றார் கணபதி. தட்டுடன் அருகே வந்த சங்கரியிடம்.

''இந்த இரண்டையும் போட்டுக்கொள்ளுங்கள்; உங்கள் வயிறு உங்களுக்கே தெரியாது. இப்போ போனால் எப்போ வருவீர்களோ? பசின்னு வந்தால் உங்களுக்குத் தலை வேறு சுற்ற ஆரம்பித்துவிடும்.'' சங்கரி இட்லியைப் போட்டாள். பிறகு, ''நீயும் உட்காருடி!'' என்றாள் மங்களாவைப் பார்த்து.

''பெயர் என்னன்னு சொன்னே? கேதாரமா?''

''ஆமாம்.''

''கிண்டி என்ஜினீயரிங் கல்லூரியிலே படித்துவிட்டு, ஐ.ஆர்.எஸ்.இ. பரீட்சை எழுதித் தேறியவனாம். ஆமாம்... எனக்கு அவனைத் தெரியாது. ஆனால் அழுதுகொண்டே அவனைப் படிக்கவைத்த அவனுடைய மாமாவைத் தெரியும். ஜம்புநாதனுடைய அக்கா பிள்ளை அவன்; ஜம்புநாதன்தான் அவனை எடுத்து வளர்த்து ஆளாக்கினார்.''

''எந்த ஜம்புநாதன்?'' என்று கேட்டாள் சங்கரி.

''உனக்குத் தெரியணுமே, நாம பொன்மலையிலே இருந்தபோது பூதலூரிலிருந்து ஒருவர் வருவாரே, அன்னதானம் செய்யப்போறேன், சமாராதனை நடத்தப் போறேன்னு. அவர்தான்.''

''அவரா? அவருடைய மனைவி தர்மு ரொம்ப நல்லவள். இப்போ எங்கே இருக்கா? இரண்டு பெண்கள் கூட உண்டே; பாவம் எப்பப் பார்த்தாலும் புருஷனுடைய போக்கைச் சொல்லிச் சொல்லி அவள் வருத்தப்படுவாள்.''

சங்கரி முடித்தாள். மங்களாவின் மனம் அவள் முன்பின் பார்த்திராத அந்த இரண்டு பெண்களைப்பற்றி நினைக்க ஆரம்பித்தது. கேதாரத்தின் மாமாதான் கேதாரத்தை

எடுத்து வளர்த்திருக்கிறார். அதற்குக் கைம்மாறு என்ன வாக இருக்கும்? ஒருவேளை இரு பெண்களுக்கும் ஏற்கனவே கலியாணமாகி விட்டதோ என்னவோ?

''ஜம்புநாதனைக் கிறுக்கன்னும் ஒதுக்கிவிட முடியாது. லட்சியவாதின்னும் சிலை எழுப்பக் கூடாது. ஒவ்வொறுத்தருக்கு ஒவ்வொன்றில் ஆசை. பொதுஜனங்களிடமிருந்து பண வசூல் செய்து அதை நாலு பேருக்குத் தெரியும்படியாகச் செலவு செய்வதில் ஒரு தனி உற்சாகம்.''

''இது என்ன பைத்தியக்காரத்தனமான உற்சாகமோ!'' என்று அலுத்துக்கொண்டாள் சங்கரி.

அதே சமயத்தில் ''அப்பா! அப்பா!'' என்று ஓடி வந்தாள் அனு.

''என்னம்மா அனு?'' என்று விசாரித்தார் கணபதி.

''அப்பா, காளி கோவில் பூசாரி சீனன் வந்திருக்கான்'' என்றாள் அனு.

''போர்ட்டர் சீனனா... சங்கரி ஏதாவது வாங்கி வரணும்னா சீனன்கிட்டே சொல்லி அனுப்பு.''

''இன்னிக்கு ஒன்றும் வேண்டாம்: கொத்தமல்லிகூட இருக்கு.''

''அனு சீனனை இருக்கச் சொல்லு. எனக்கு அவனைப் பார்க்கணும்'' என்றாள் மங்களா ''

''எதுக்கு?''

''அவன்தான் கேதாரத்தின் சாமான்களை இன்னிக்குத் தூக்கினான் ''

''அதனாலே?''

''கைநிறையக் கூலி கொடுத்தாரா, இல்லை கருமிபோல நடந்துகொண்டாரான்னு தெரியணும்.''

''தெரிஞ்சு என்ன ஆகணும்?'' என்று கேட்டாள் சங்கரி.

''உனக்குத் தெரியாது'' என்றாள் மங்களா.

5

வெயிட்டிங் ரூம் ஃபார் அப்பர் கிளாஸ் பாஸஞ்சர்ஸ்.

—அறையின் பெயர்ப் பலகை.

பிரயாணிகளைத் தவிர, மற்ற எவரும் இந்த அறையில் தங்கவோ, பெரிய அறைகளை உபயோகிக்கவோ கூடாது.

—இதுவரையில் எங்கேயும் ஒட்டப்படாத அறிக்கை,

எந்த முத்துவுக்காக மணி கேதாரத்தின் நாற்பத்தி நாலு ரூபாய் அறுபத்திமூன்று பைசாவை விரல்களால் விளையாடி எடுத்தானோ, அந்த முத்து இப்போது முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கான வெயிட்டிங் ரூமில் கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தான். குளித்தவுடன் நெற்றியில் பென்சில் கீற்றாக இட்ட விபூதி இப்போது உலர்ந்து பளிச்சென்று பிரகாசித்தது. ஜவ்வாது விபூதி என்று நண்பன் ஒருவன் பழநியிலிருந்து வரும்போது வாங்கிக் கொடுத்திருந்தான். இப்போது ஜவ்வாதின் மணம் அவன் நெற்றியிலிருந்து நாசிக்கு எட்டவில்லை. இது ஒரு வகையில் ஏமாற்றத்தை அளிக்கத்தான் செய்தது. இருப்பினும், விபூதியை முகர்ந்து பார்க்கையில் ஜவ்வாது மணம் கண்டிப்பாக வீசுகிறது என்ற திருப்தி இருந்தது.

விபூதியை மறந்து அவன் தலையை அழுத்தி வாரினான். பின்புறம் படியாமல் கொத்தாகத் தூக்கி நின்றது. விரல்களால் அந்தக் கொத்தைத் துழாவிவிட்டு மீண்டும் சீப்பால் இலேசாக வாரினான். இப்போது அவனுடைய கிராப்பு

அவனுடைய கண்களுக்கே ரம்யமாக இருந்தது: அவனுடைய ஐசுவரியமெல்லாம் இந்தக் கிராப்புத்தான்: டைபிஸ்ட் தொழிலில் கிடைக்கிற நூற்று எழுபது ரூபாயில் நான்கு ரூபாய் முடி அலங்காரத்துக்கே ஒடியது. முத்து இதை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. அவன் என்ன, எத்தனையோ பேர்களைப்போல வாரத்துக்கு இரண்டு சினிமாக்களா பார்க்கிறான்?

தலை வாரியபின், குளிக்க வரும்போதே கூட எடுத்துக் கொண்டு வந்திருந்த பாண்ட்டையும் ஸ்லாக்கையும் அணிந்துகொண்டான். அவிழ்த்த வேட்டியை அழகாக மடித்து வட்ட வடிவமான மேஜையின் மேல் வைத்தான். மின்சார விசிறியைச் சுழல விட்டான். நாற்காலியில் உட்கார்ந்து 'ஹிந்து' பத்திரிகையைப் பிரித்துப் படிக்கலானான். அந்தச் சமயத்தில் அறையில் நான்கைந்து பேர் சாமான்களைக் கட்டுவதிலும், கட்டிய சாமான்களை அவிழ்ப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். முத்துவும் தங்களைப் போல ஒரு பிரயாணி, எப்போதோ புறப்பட இருக்கிற ரயிலுக்காக இந்த அறையில் காத்துக்கொண்டிருக்கிறவன் என்றுதான் அவர்கள் நினைத்துக்கொண்டிருக்க வேண்டும்: அதுவும் அவனைப் பற்றிய சிந்தனை எழுந்திருந்தால்.

ஆனால் முத்து எந்த ரயிலுக்காகவும் காத்திருப்பவனல்ல. ஒரு வருஷத்துக்கு முன்னால், சுவாமிமலையிலிருந்து சென்னை எழும்பூருக்கு வந்தவன். தம்புச்செட்டி தெருவில் ஊரில் பெரிய மனிதரான ஒருவருடைய சிபாரிசில் அவருடைய சம்பந்தி நடத்திவரும் மின்சாரச் சாமான்கள் விற்கும் கடையில் டைப்பிஸ்ட் வேலை கிடைத்தது. தலைமுறை தலைமுறையாகச் சுகபோகத்துடன் வாழ்ந்து அழிந்த குடும்பம் அவனுடைய குடும்பம். கொள்ளுத் தாத்தா தாத்தாவுக்கு நூறு வேலி வைத்துவிட்டுப் போனார். தாத்தா அப்பாவுக்கு இருபது வேலி வைத்தார். அப்பா போவதற்கு முன் பிள்ளைக்குப் பொறுப்பை

வைக்காமல் தாமே மஞ்சள் காகிதத்தைக் கொடுத்தார். யாரும் எந்த வேலைக்கும் போகாமல், தாம் தூம் என்று செலவு செய்துகொண்டு நூறு வேலி நிலத்தை மூன்று தலைமுறைக்குள் தீர்த்துக் கட்டினார்கள். இப்பேர்பட்ட பரம்பரையின் அவதாரமான முத்து இன்று நூற்றி எழுபது ரூபாய் சம்பளத்தில் டைப்பிஸ்டு உத்தியோகம் பார்க்கிறான். ஜாகை திருவல்லிக்கேணியில் சிங்கராச்சாரி தெருவில் நரசிம்மாசாரி என்பவருடைய வீட்டில் ஓர் அறை இருந்தது. அதுவும் மாடியில்: வாடகை பதினைந்து ரூபாய். ஆறடி நீளம், மூன்றரை அடி அகலம். வடக்குப் புறத்தில் ஒரு சிறு ஜன்னல். தெற்குப் புறக் கதவு வழியாக எங்கே காற்று வந்துவிடுமோ என்று ஒரு சுவர் எழுப்பியிருந்தார் வீட்டுக்காரர். நான்கு அடி உயரக் கதவு வழியாக முத்து உள்ளே போனான் என்றால் குளிர் காலத்திலேயே உடம்பு வியர்வையில் குளிக்கும்:

இந்தக் கூத்தில் நரசிம்மாசாரி கீழ்க்கண்ட நிபந்தனைகளை ஒரு காகிதத்தில் எழுதி அவனிடம் கொடுத்துப் பதிலுக்கு ஒப்புதலையும் கையெழுத்துடன் கேட்டார்.

1. காலை ஆறேகால் மணிக்குள் காலைக் கடன்களை முடித்துக்கொள்ளக் கீழே கிணற்றடிக்கு வந்துவிட வேண்டும். இருபது நிமிடங்களில் திரும்ப அறைக்குப் போய்விட வேண்டும்.

2. ஈரத் துணிகளைக் கிணற்றுக்குப் பக்கத்திலோ, மொட்டை மாடியிலோ (நான்கு அடிச் சதுரம்) உலர வைக்கக்கூடாது.

3. இரவு எட்டு மணிக்கு முன்பாகவே அறைக்குத் திரும்பிவிட வேண்டும்.

4. தின்னையிலோ ரேழியிலோ சிநேகிதர்களுடன் அரட்டை அடிக்கக் கூடாது:

5. சினிமாப் பாட்டுப் பாடக்கூடாது:

6. வீடடு ஸ்திரீகளுடன் பேச்சு கொடுக்கக் கூடாது.

7. வீட்டுத் தினசரிகளையும் பத்திரிகைகளையும் இரவல் கேட்கக் கூடாது.

8. அறையைப் பூட்டக் கூடாது; பூட்டினால் சாவியை வீட்டாரிடம் கொடுக்க வேண்டும்.

வாடகை பதினைந்து ரூபாய் என்ற ஒரே காரணத்துக்காக நரசிம்மாசாரியின் இந்த எட்டு கட்டளைகளையும் முத்து சிரசின்மேல் தாங்கி நடந்து வந்தான். அவருடைய அக்கா பெண் குமுதாவுடைய கண்கள் அவனுடைய கண்களைச் சந்தித்தபோதும், ஆறாவது நிபந்தனையை மனத்தில் நினைத்துக்கொண்டு தலை குனிந்து, தன் கிராப்புத் தலையைக் காட்டிவிட்டுப் போனான்.

ஆனால் ஒரு நாள் மத்தியானம் அன்று கோயமுத்தூருக்கு அம்மாவைப் பார்க்கப் போக வேண்டிய காரணத்தால் சீக்கிரமே வீடு திரும்பிய முத்து அறைக்குள் நுழைந்ததும் தேளை மிதித்தவன்போலத் திடுக்கிட்டான்.

குமுதா அழகாக அவனுடைய அறையில் படுத்து, கோதைநாயகி அம்மாள் நாவலைப் படித்துக்கொண்டிருந்தாள். முத்துவைக் கண்டதும் அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கவில்லை. புத்தகத்தை மார்பின்மேல் வைத்துக்கொண்டு அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள்.

முத்துவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அறை வாயிலிலேயே ஒரு நிமிடம் நின்றான். புத்தகம் மார்பின் விம்மலில் மேலும் கீழுமாக ஊஞ்சலாடியது. அவளுடைய மதமதப்பான உடல் கட்டும், சிரித்து அழைக்கும் கண்களும், பூரிக்கும் கன்னங்களும் அவனுடைய உடம்பை எரித்தன.

''நான் தினமும் மத்தியானம் இந்த அறையிலேதான் படுத்துண்டு புத்தகம் வாசிக்கிறேன்;''

நரசிம்மாசாரியின் ஆறாவது நிபந்தனை மனத்தில் எழுந்து முகத்தில் அறைந்தது. அவன் மௌனமாகப் பார்த்தான்.

''மாமா, மாமி, அம்மா எல்லோரும் மதுராந்தகம் போயிருக்கா... யாரோ செத்துப்போய் விட்டார்களாம்... பாட்டி கீழே தாழ்வாரத்தில் இருக்கிறாள் பாவம் அவளுக்கு கண்ணும் தெரியாது; காதும் சரியாகக் கேட்காது.''

குமுதா சிரித்தாள்.

நிபந்தனையை மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது முத்துவுக்கு.

''நீ வெளியே வந்தால்தான் நான் உள்ளே வரலாம்.''

''நான் ஒதுங்கிக் கொள்கிறேன் உனக்கு வர இடமிருக்கு.''

''வெளியே வர்றியா?''

''வரணும் என்கிறாயா?''

''ஆமாம். மாமாவின் நிபந்தனை, நான் உன்னோடோ அல்லது புடவை கட்டிய யாருடனுமோ பேசக்கூடாது.''

''என் மாமா ஒரு பைத்தியம். பழங்காலப் பஞ்சாங்கம் அந்தக் காலம்''

''ஆனால் நான் அதற்குக் கட்டுப்பட்டிருக்கேன்.''

''நான் இப்ப வரலைன்னா நீ என்ன செய்வே?''

''ஒண்ணும் செய்யமாட்டேன். நான் இறங்கித் தெருவுக்குப் போய்விடுவேன்.''

குமுதா முகம் சிணுங்கினாள்

''நீ இந்தக் காலத்துப் பிள்ளைன்னு நான் எடை போட்டேன்.''

''மனுஷனுடைய உண்மையான குணமும், கடைப் பிடிக்கவேண்டிய தர்மமும் காலத்தினாலே மாற முடியாது.

தேவ குணமும் அசுர குணமும் மனுஷாள்கிட்டே எப்போ துமே எந்தக் காலத்திலுமே உண்டு. நீ இப்போ எழுந்திருந்து வா.''

''எனக்கு இப்போ வயசு இருபத்திரண்டு. மேஜர்.''

''இதை அம்மாவிடம் சொல்லு.''

''இப்போ நான் 'ஐயோ'ன்னு கத்தினால், தெருவிலே கூட்டம் சேர்ந்துவிடும். உன்னைத்தான் எல்லாரும் மொத்துவார்கள்.'' குமுதா எக்காளத்துடன் சிரித்தாள்.

நிலைமையின் பயங்கரத்தைத் திடீரென்று உணர்ந்தான் முத்து. குமுதா சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை. எந்த சமூகத்திலும் பெண்ணின் வார்த்தைக்கு எதிராக ஆணின் வார்த்தை செல்லாது. நிச்சயமாகக் கல்லடிபடுகிறவன் அவன்தான்.

மின்னலாக ஓர் எண்ணம் அவனுள் தோன்றியது. அப்படித் தோன்றியதற்கு அவன் தன்னையே போற்றிக் கொண்டான்.

''குமுதா, ஒரு முக்கியமான விஷயத்தை நீ மறந்து விட்டே... நானும் நீயும் பழகுவதற்கு இந்த வீடோ, அறையோ லாயக்கில்லை. ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் எல்லாருக்கும் தெரிந்துவிடும். எனக்கு உன்னைப் பிடிக்கலையோன்னு நீ சந்தேகப்படறது எனக்குப் புரிகிறது. ஆனால் நான் என்னையே அடக்கி வைச்சுண்டிருக்கேன்னு எனக்குத்தான் தெரியும்.''

''நீ என்ன சொல்றே?''

''ஆனால் நான் அவசரப்பட்டு எதையும் செய்யமாட்டேன். கொஞ்சம் பொறு, இன்னிக்கு வெள்ளிக்கிழமை. கோயமுத்தூர் போறேன். திங்கட்கிழமை திரும்பி வருவேன். அன்னிக்கு மத்தியானம் சாந்தி தியேட்டருக்கு முன்னாலே நில்லு. நம்ப சிநேகிதத்தை இந்தத் திருவல்லிக்கேணியிலே, இந்த வீட்டிலே வைத்துக்கொள்ளக் கூடாது. உனக்குப் புரிகிறதா?''

''புரியறது. நிச்சயமா திங்கட்கிழமையன்னிக்குச் சாந்தி தியேட்டருக்கு முன்னாடி என்னைச் சந்திப்பாயா?''

''சத்தியமா!''

''எனக்கு பீச்மெல்பா ரொம்பப் பிடிக்கும். நான் தின்னதேயில்லை.''

''புஹாரியில் வாங்கித் தரேன்.''

''டூட்டி ஃப்ரூட்டி?''

''அதுவும் வாங்கித் தரேன்.''

''பாப்கார்ன்.''

''அவசியம் வாங்கித் தரேன்!''

குமுதா திடீரென்று எழுந்தாள். அவன் எதிரே வந்து நின்றாள். முத்து நகர்ந்துகொண்டான்.

என் கையாலே ஒரு கப் காப்பி கலந்து தரட்டுமா?''

''ஊஹூம்... வேண்டாம். நான் இப்போதே புறப்படுகிறேன்.''

''இப்போது ஏது ரயில்?''

''கேரளா எக்ஸ்பிரஸ். நாலரை மணிக்குப் புறப்படறது.''

''நான் இங்கேயே உனக்கு 'டாட்டா' சொல்றேன்.''

''சரி.''

''டாட்டா.''

''டாட்டா.''

ஒரு நீண்ட பேருமூச்சுடன் ஓரிரு நிமிஷங்கள் குமுதா வெளியேறிச் செல்லுவதையே பார்த்து நின்ற முத்து, அவள் தலை மறைந்ததும், அவசரம் அவசரமாகத் துணிகளை அள்ளிப் பெட்டியில் போட்டான். சோப்பு சீப்பு, கண்ணாடி இவற்றையெல்லாம் கைக்கு வந்தபடி எடுத்து வைத்தான். ஜமுக்காளத்தில் அழுக்குத் துணியை விரித்து, தலையணை போர்வை எல்லாவற்றையும் வைத்துக் கட்டினான்.

பத்தாவது நிமிஷம் அவன் சிங்காராச்சாரி தெருவில் ஒரு ரிக்ஷாவில் ஏறினான். நீலகிரி எக்ஸ்பிரஸில் போக இருந்தவனை, குமுதா கேரளா எக்ஸ்பிரஸிலேயே ஏற்றி அனுப்பி வைத்துவிட்டாள்!

திங்கட்கிழமை திரும்பி வந்த அவனுக்கு, மீண்டும் நரசிம்மாச்சாரி வீட்டுக்குச் செல்லப் பைத்தியம் பிடிக்க வில்லை. குமுதா ஓர் இரண்டுங்கெட்டான் என்ற விஷயம் தெரிந்தவுடனேயே, அவளால் தனக்கு என்றைக்குமே ஆபத்து என்று உள்ளுணர்வு உணர்த்தியது.

சென்ட்ரல் ஸ்டேஷனில் காலை ஏழேமுக்காலுக்கு இறங்கிய அவனுக்கு எங்கே போவது என்று புரியவில்லை. ஒன்பதரை மணிக்குக் காரியாலயத்தில் இருந்தாக வேண்டும். அதற்குமுன் ஓர் இடத்தில் புகுந்துகொள்ள வேண்டும்; குளிக்க வேண்டும். தலையை வாரி டிரஸ் செய்து கொள்ள வேண்டும்.

திடீரென்று மின்னலாக முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறை நினைவுக்கு வந்தது. அடுத்த நிமிஷம் பெட்டி யையும் படுக்கையையும் தூக்கிக்கொண்டு அந்த அறையை நோக்கி நடந்தான். ஜமுக்காளத்தின் நைந்துபோன ஓரங் களும், மங்கிப்போன பச்சைப் பெட்டியின் தகரமும் தன்னை மூன்றாம் வகுப்புப் பயணி எனக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற பயம் ஒருகணம் எழத்தான் செய்தது. ஆனால், தைரியம் ஒன்றுதான் தேவை என்று அவனே முடிவு செய்துகொண்டான்.

பத்துப் பன்னிரண்டு நாற்காலிகளில் ஏழெட்டு காலி யாக இருந்தன. ஒரு நீண்ட பெஞ்சின் மேல் பெட்டி படுக் கையை வைத்துவிட்டு, மின்சார விசிறியை ஓடவிட்ட முத்து, நாலைந்து நாற்காலிகளில் சிதறி உட்கார்ந்திருந் தவர்களைப் பார்த்தான். ஒரே பிரயாணியின் அருகில்தான் நிறைய பெட்டிகளும் கூடைகளும் இருந்தன. அவருடைய

குடும்பத் தலைவி, எட்டு வயதுப் பெண்ணுக்குக் கீழே உட் கார்ந்து தலைவாரிப் பின்னிக்கொண்டிருந்தாள். குடும்பத் தலைவர் மும்முரமாக ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

இன்னொரு நாற்காலியில் ஒரு நீல பாண்ட்டும் காக்கி ஷர்ட்டுமாக ஒருவன் உட்கார்ந்து, டயரி மாதிரி ஒரு புத்த கத்தில் குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தான். ரயில்வே சிப்பந்தி என்று முத்துவின் வாய் முணுமுணுத்தது.

மூன்றாவது சாய்வு நாற்காலி. அதில் ஒரு பெரியவர் பேப்பரால் முகத்தை மறைத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். நாலாவது நாற்காலியில் இருந்த இளைஞன், நிமிடத்துக் கொரு தடவை, இடது கையால் மீசையைத் தடவி விட்டுக் கொண்டு, வலது கையால் சிகரெட் புகைத்து, கண்களால் நாவல் ஒன்றை விழுங்கியவனாய் உட்கார்ந்திருந்தான்.

"யார் நம்மை என்ன கேட்டுவிடப் போகிறார்கள்?"

திடீரென்று முத்துவுக்கு ஒரு தைரியம் பிறந்தது. பெட்டியைத் திறந்து, சோப்பையும் துண்டையும் எடுத் தான். ஆறேகால் ரூபாயைத் தாங்கிக்கொண்டிருந்த மணி பர்ஸைப் பாக்கெட்டிலிருந்து எடுத்துத் துண்டுடன் வைத் துக்கொண்டான்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு, முத்து ஆபீஸ் உடை யில் காட்சி அளித்தான்.

அடுத்த கேள்வி எழுந்தது. ஆபீஸுக்குப் போகத் தயார். ஆனால் இந்தப் பெட்டியையும் படுக்கையையும் எங்கே கொண்டு வைப்பது?

மும்முரமாக எழுதிக்கொண்டிருந்த குடும்பத்தலைவர் இப்போது நிமிர்ந்து பார்த்தார். முத்துவுக்கு யோசனை ஒன்று பிறந்தது. இவர் எந்த ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்?

"உங்களுக்குச் சிரமம் கொடுக்கிறதற்கு மன்னிக் கணும்...!" என்று ஆரம்பித்தான் முத்து.

''என்ன?''

''நீங்க எந்த ரயிலைப் பிடிக்கணும்?''

''மெயில். பாம்பே மெயில். என் ஏஜெண்டுகிட்டே முட்டிக்கொண்டேன், எக்ஸ்பிரஸில் 'புக்' பண்ணுடான்னு பத்து நிமிஷம் தாமதம் பண்ணியிருக்கான். முட்டாள்! ஏர்கண்டிஷன் கூடக் கிடைக்கலை மெயில்லேதான் மூணு பர்த் கிடைச்சுது என்கிறான். அதுவும் எப்போ சொல்கிறான்? நான் இன்னிக்குக் கார்த்தாலே பெங்களூர் மெயிலிலே வந்து இறங்கினப்புறம்... இப்போ இந்தக் குப்பை கூடத்துக்கு மத்தியிலே காத்திருக்க வேண்டியிருக்கு. பாம்பே மெயில் இராத்திரி ஒன்பது மணிக்கு மேலேதான் கிளம்பறது.''

''ச்சூ! ரொம்ப நேரம் நீங்க காத்துண்டிருக்க வேண்டியிருக்குமே!'' முத்து குழைந்தான்.''

''என்ன பண்ணறது? பிளேன்லே போகலாம்னா, இவள் ஏகப்பட்ட சாமான்களுடன் பிராணனை வாங்குகிறாள். இந்தக் கூடையெல்லாம் வெறும் வடாம், கறுவடாம். அப்பளாம்..... டர்ட்டி லக்கேஜ்.''

''சாப்பாட்டுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணிவிட்டீர்களா? பாவம் உங்க பெண்ணுக்குச் சீக்கிரம் பசிக்குமே?''

''எல்லாம் ஏற்பாடாகிவிட்டது... தாங்க்யூ...''

''உங்களுக்கு ஏதாவது வேணும்னா எங்கிட்டே சொல்லுங்கோ!''

''ஓ, தாங்க்ஸ்... நீங்ககூட என்னோடு விரும்பினால் சாப்பிடலாம்.''

''தாங்க்யூ சார்... எனக்கு வில்லிவாக்கத்துக்குப் போகணும். அங்கே எங்க மாமா வீடு இருக்கு. அங்கே ஒரு சின்ன விசேஷம். சாப்பிடப் போகிறேன்.''

''ரொம்ப சரி. ஜமாயுங்கோ!''

''போய் மத்தியானம் வந்துவிடுவேன், ஸார்!''

''கோ அஹெட், மை பாய்!''

''ஒரு சின்ன உதவி!''

''என்ன?'' குடும்பத்தலைவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு போறதானால் அநாவசியமாக டாக்ஸிச் செலவு ஆகும்.''

''நான் பிறத்தியார் அநாவசியமாச் செலவு செய்யறதை விரும்பலே!''

''இங்கேயே வைத்துவிட்டுப் போகிறேன் சார். கொஞ்சம் கவனித்துக்கொண்டால் போதும்.''

''ஓகே, ஓகே... எங்க சாமான்களுக்குப் பக்கத்திலே ஓர் ஓரமா வை... சியாமளா, பாரு, இவருடைய பெட்டி படுக்கை நம்ப சாமான்களோடு இருக்கட்டும். நீலு, இந்த மாமாவோட பெட்டி படுக்கை: என்ன?''

* * *

காலை ஒன்பது மணிக்குச் சென்ற முத்து மாலை ஐந்து மணிக்குத் திரும்பியபோது, அவனுடைய நெஞ்சு திக்கென்றது. குடும்பத் தலைவர், சியாமளா, நீலு அவர்களுடைய சாமான்கள் எதையும் காணோம். ஆனால் அடுத்தகணமே நெஞ்சில் பால் வார்த்தாற்போல் உணர்ச்சிகள் பீறிட்டன. அவனுடைய பெட்டியும் படுக்கையும் சீண்டப்படாமல் அங்கேயே இடந்தன.

அவன் தனது பெட்டியை நெருங்கியபோது, ஒருவன் குறுக்கிட்டான்.

''யார் சாமி, நீ?''

''ஏம்ப்பா.....''

''இது யார் பெட்டின்னு தெரியுமா?''

''அதெல்லாம் தெரியாது, சாமி. நீ இப்போ எங்கேயிருந்து வர்றே?''

''எதுக்குக் கேட்கிறே?''

''நீ கேள்வி கேட்காதே சாமி. ஒரு பெரிய மனுஷர், கையிலே ஒரு ரூபாய் கொடுத்து, டேய், ஒருவர் சின்னவரா இருப்பாரு. வருவாரு. எனக்கு எக்ஸ்பிரஸிலே ஏ.ஸி. டிக்கட் கிடைச்சுக் கிளம்பிட்டேன்னு சொல்லிப் பெட்டி படுக்கையை அவருகிட்டே ஒப்படைச்சுடுன்னாரு. நான் கண்ணியமா நடந்துக்கிட வேணாமா?''

முத்துவுக்குப் பளிச்சென்று யோசனை உதித்தது. அவனுடைய பெயர் தெரியாத பெரியவர், ஒரே ஒரு அடையாளம்தான் கொடுத்திருக்கிறார். அதுதான், இவன் அவனிடம் 'எங்கேயிருந்து வர்றே' என்று கேட்டிருக்கிறான்.

''ஏன், வில்லிவாக்கத்தில் மாமா வீட்டிலிருந்து வருகிறேன்.''

''நீதான் சாமி, அந்த ஆள் பெட்டியைத் திறந்துக்கோ.''

சொன்னவன் தலையைச் சொறிந்து நின்றான்.

''உன் பெயர் என்ன?''

''நீலமேகம்.''

''என்ன தொழில்?''

''ஸ்லீப்பர் இங்கே பெருக்கிச் சுத்தமாக வைக்கிற வேலை.''

''இப்போ ஒரு ரூபாய் தரேன். அப்புறம் வாரா வாரம் ஒரு ரூபாய் என்ன?''

''எதுக்கு சாமி?''

' இனிமேல் நான் தினமும் இங்கேதான் குளிப்பேன். டிரஸ் பண்ணிப்பேன். பெட்டி படுக்கையை நீதான் பார்த்துப்பே!''

''குடு சாமி, அந்தப் பெட்டி படுக்கையை! என்கூட வா!''

''எங்கே?''

''வா, சொல்றேன். இந்த சென்ட்ரல் ஸ்டேஷனிலே ஜாகை வைக்கப்போறே. அதுதானே?''

''அதேதான்.''

''என் ஜாதிக்கா பெட்டி ஏழாம் பிளாட்பாரத்திலே ஆர்.எம்.எஸ். ஸாண்டே இக்கீது... அதை ஒழிச்சுத் தாரேன், பூட்டு மட்டும் வாங்கிப் போட்டுக்கோ... சரித்தானே.''

''சரித்தான்.''

''குடைக்கூலி மாசம் அஞ்சு ரூபா!''

''ஜமாய்!'' முத்து துள்ளினான்.

* * *

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன் சென்ட்ரல் ஸ்டேஷனில் கிரகப்பிரவேசம் செய்த முத்து இப்போது ஞாயிற்றுக்கிழமையன்று காலையில், கோயமுத்தூரில் அம்மாவின் உடம்பு எப்படி இருக்கிறதோ என்ற வேதனை நெஞ்சின் ஒரு மூலையில் வலிக்க, பேப்பரை வாசித்த வனாய், மேல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, ''டேய், முத்து!'' என்ற குரல் கேட்டது.

''ஹலோ, மணி! குட்மார்னிங்!'' என்றான் முத்து.

சென்ட்ரலில் சந்தித்து, பரிச்சயமாகி, இப்போது நண்பனாகிவிட்ட மணியைப் பார்த்தபோது முத்துவின் கவலையெல்லாம் பறந்துவிட்டதுபோலத் தோன்றியது.

6

சென்ட்ரல் ஸ்டேஷன் சூப்ரிண்டெண்டுக்குக் குவார்ட்டர்ஸ் ஸ்டேஷன் மாடியிலேயே உள்ளது. எல்லா வசதிகளையும் கொண்ட வீட்டில் ஏழு அறைகள் உள்ளன.

—போய்ப் பார்த்த ஒருவர்.

மாமா ஜம்புநாதனும் கேதாரமும் திடுக்கிட்டுப் பார்த்தனர். ஒரு பத்து வயதுப்பெண்ணுக்கு இரண்டாம் நம்பர் ரிடயரிங் அறையில் என்ன வேலை இருக்க முடியும் என்று மாமா தீவிரமாக யோசனை செய்தார்.

''யார் அம்மா வேணும், உனக்கு?'' கேதாரம் எழுந்து அந்தப் பெண்ணின் அருகே வந்தான்.

''நீங்கதானே கேதாரம்?''

''ஆமாம்.''

''பம்பாயிலிருந்து வந்திருக்கிறீர்கள்?''

''ஆமாம்.''

''ரேணுகா தந்த சாக்லேட்டைப் பாபுகிட்டே கொடுத்தீர்கள்?''

''ஆமாம், ஆமாம். நீ யாரு?''

''என் பேரு அனு. என் அக்கா இந்தச் சீட்டை உங்ககிட்டே கொடுக்கச் சொன்னாள்!''

அனு நீட்டிய ஒரு சின்னஞ் சிறு காகிதத்தை வாங்கிப் பார்த்தான். அதில், ''ரேணுகா தங்கள் வசம் கொடுத்

தனுப்பிய சாக்லேட் கிடைக்கப் பெற்றது. பாபு, தன்மீது உங்களுக்கு நம்பிக்கை விழவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டதால் இதை எழுதும்படி நேரிட்டது.

இப்படிக்கு, — மங்களா'' என்று எழுதியிருந்தது.

''நீ அவள் தங்கையா?''

''ஆமாம். நான் வரேன்''

''உன் அக்கா எங்கே இருக்கிறாள்?''

''வேலைக்குப் போய்விட்டாள்.''

''எப்போ திரும்பி வருவாள்?''

''இரண்டு மணிக்கு. இப்போது 'என்கொயரி'யில் இருப்பாள்'' என்று சொல்லிவிட்டு அவள் ஓடோடிச் சென்றாள்

''யாருடா, இந்தப் பொண்ணு?''

''ஸ்டேஷன் சூபரிண்டெண்டின் பெண் மாமா.''

''கடிதாசு எழுதி அனுப்பியிருக்கிறாளே, அவள்?''

''இந்தப் பெண்ணோட அக்கா.''

''உனக்கு எதுக்குடா அவள் எழுதணும்? அந்தக் கடிதாசை இப்படிக் கொடு. மத்தியானம் பெண் பார்க்கப் போகணும். கார்த்தாலேயே ஒரு சிநேகமா?''

''உளறாதீர்கள். மாமா... இந்தா பாருங்கள், கடிதாசை நீங்களே படித்துப் பாருங்கள்.''

எதையோ எதிர்பார்த்து, அதற்கு ஆயத்தமாக இருந்த ஜம்புநாதன் கடிதத்தைப் பார்த்தார். அவருக்குச் சுவாரசியம் திடீரென்று குறைந்தது.

''பூ! என்னமோ நினைச்சேன், இந்த எஸ்.எஸ்.ஸை எனக்குத் தெரியும்டா! கணபதின்னு பேரு. பூர்வீகம் நங்கவரம். திரும்பிப் போறப்போ பார்த்துட்டுப் போறேன்...

அந்தக் காலத்திலே பொன்மலையிலே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தான். வேலையிலே படுசுட்டி, பாவம், அவனுக்கு நிறைய குழந்தைகள்!''

மாமா எழுந்தார்.

''நான் வரேண்டா, கேதாரம்!''

''சரி.''

''நீ என்னிக்குத் திரும்பிப் போறேன்னு சொன்னே?''

''சனிக்கிழமை ராத்திரி மெயிலில்.''

''ஞாயிற்றுக்கிழமை வந்து சனிக்கிழமை போறியா? ஏழாம் நாள். பாதகம் இல்லை... ரிசர்வு பண்ணிட்டியா?''

''பம்பாயிலிருந்தே தந்தி கொடுத்து ஏற்பாடு செய்தேன். இப்போ போய்ப் பார்க்கணும்.''

''அதைப் பார்த்துட்டுச் சாப்பிடு... ஒரு தூக்கமும் போடு... நான் இரண்டரைக்கு வர்றேன். என்ன வரட்டுமா?''

''சரி.''

''பம்பாயிலே உனக்குத் தெரிஞ்சவா ஆயிரம்பேர் இருப்பா... என் ஆசிரமத்தைப்பற்றிச் சொல்லு. ஷண்முகானந்த சபாவில் நாடகம் போட முடியுமான்னு விசாரி... என்ன விசாரிக்கிறியா? இல்லே போனதும் மறந்துடுவியா? அங்கே போட்டால் மூவாயிரம் பேர் உட்கார்ந்து பார்க்கலாமாமே...? நீ என்ன சொல்லறே.''

''நீங்க போயிட்டு வாருங்கள், மாமா!''

''காருடன் வருவேன். நன்னா டிரஸ் பண்ணிக்கொள்... டெரிலின் இருக்கோ இல்லியோ?''

''எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் போய் வாருங்கள்.''

''நான் வரேன். வரட்டுமா?''

கேதாரம் பதில் சொல்லவில்லை. மாமாவும் வெளியேறினார், ஒரு வழியாக.

* * *

ரிடயரிங் ரூமிலிருந்து வெளியே வந்த கேதாரத்துக்கு, மங்களாவின் போக்கு விசித்திரமாகத் தோன்றியது ரயிலினுள் சந்தித்தபோது அவன் ரேணுகா சொல்லி அனுப்பிய விஷயத்தை விவரமாகச் சொன்னான். அதன்பின், சாக்லேட் பெட்டியை அப்புறம் தன் பெட்டியிலிருந்து எடுத்துத் தருவதாகச் சொன்னான். ரிடரியங் ரூமுக்கு வந்து வாங்கிக்கொள்ளுவதாகக் கூறிவிட்டு மங்களா சென்றாள்.

ஆனால் அவள் வரவில்லை தம்பியை அனுப்பினாள். அதன்பின் கிடைத்த விவரத்துக்கு ஒரு குறிப்புபோல ஒரு காகிதத்தில் எழுதித் தங்கையின் மூலமாகக் கொடுத்து அனுப்பினாள். மாமா வந்ததும் வராததுமாகக் கூறினதிலிருந்து தம்பியுடன் அவளும் வந்து அறைக்கு வெளியே மாடிப்படி அருகில் நின்றுகொண்டிருந்தாள் என்று தெரிகிறது ஏன் அவளே வரவில்லை...?

காரணம் என்னவாக இருக்கும்? அவனைச் சந்திக்கப் பிடிக்கவில்லையா? சாக்லேட் பெட்டியைக் காரணமாக வைத்து. அவளைத்தான் ரிடயரிங் ரூம்வரை இழுப்பதாக அவள் நினைத்துவிட்டாளா? கேதாரம் மெதுவாக மாடிப்படி வழியாக இறங்கி முதல் வகுப்பு டிக்கெட்டுகள் ரிசர்வ் செய்யும் இடத்துக்கு வந்தான். அவனுடைய கண்கள் பம்பாய் மெயில் எக்ஸ்பிரஸ் கவுண்டரைத் தேடின. என் கொயரி கவுண்டரில் போனில் ஒரு பெண் பேசிக்கொண்டிருந்தாள் மங்களா! தன் அவசரத்தையும் ஆத்திரத்தையும் அவளுக்குக் காட்டிவிடக்கூடாது என்ற உத்தேசத்தோடு, பம்பாய் கவுண்டர் முன்னால் போய் நின்றான். அப்போதுதான் அங்கிருந்து ஒரு பிரயாணி தம் காரியத்தை முடித்துக்கொண்டு சென்றார்.

''என்ன ஸார் வேணும்?'' என்றார் பம்பாய் கவுண்டர்.

''சனிக்கிழமை மெயிலில் ரிஸர்வேஷனுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். கன்ஃபர்மேஷன் இன்னும் வரவில்லை.''.

''இருபத்தெட்டாம் தேதிக்கா?''

''ஆமாம்!''

பெரிய ரிஜிஸ்தரைப் புரட்டிய கிளார்க், இருபத்தெட்டாம் தேதி வந்ததும், ''பேரு?'' என்று கேட்டார்.

''கேதாரம். எஸ். கே. கேதாரம்.''

கிளார்க் பெயர்களைப் படித்துக் கொண்டே வந்தவர், திடீரென்று நிறுத்திப் பார்த்துவிட்டு நிமிர்ந்தார்.

அதுவரையில் ரிஜிஸ்தரில் தன் பெயர் இருக்கிறதா என்று கண்களைச் சிரமப்படுத்திக் கொண்டே பார்த்துவந்த கேதாரமும் நிமிர்ந்தான். தன் பெயரை அவனால் பார்க்க முடியவில்லை.

''வெயிட்டிங் லிஸ்ட். எண் இருபத்திரண்டு...''

''என்ன?'' என்று கத்தினான் கேதாரம்.

''நீங்க வெயிட்டிங் லிஸ்டிலே இருபத்திரண்டாவதிலே இருக்கீங்க!'' என்றார் கிளார்க் அழுத்தமாக.

கிளார்க்கின் நிதானம் கேதாரத்தின் எரிச்சலைத் தீவிரமாக்கியது.

''எட்டு நாட்களுக்கு முன்னாலேயே தந்தி கொடுத்தாச்சு...''

''இருக்கலாம் ஸார்! ஆனால் அதற்கு முன்னாடியே ரிஸர்வேஷன் முடிஞ்சுபோச்சு!''

''எனக்கு ஸீட் கிடைக்க வாய்ப்புண்டா?''

''வெயிட் பண்ணிப் பாருங்கள்.''

''அது எனக்குத் தெரியும்; எனக்கு ரிஸர்வேஷன் வேணும்.''

''இருபத்தொன்பதாம் தேதிக்கு ஒரு பர்த் காலி இருக்கிறது.''

''வேண்டாம்.....இருபது நாள் முன்னாலேதானே ரிஸர்வேஷன் தொடங்கறீங்க?''

''ஆமாம்!''

''நான் பத்து நாட்கள் முன்னாலேயே ரிஸர்வ் பண்ண பம்பாயிலிருந்து தந்தி கொடுக்கச் சொல்லியிருந்தேன். உங்களுக்கு எப்போ தந்தி கிடைச்சது?''

மீண்டும் ரிஜிஸ்தரைப் பார்த்தார் கிளார்க். பிறகு ''பதினேழாம் தேதி!'' என்றார்.

''நான் பன்னிரண்டாம் தேதியோ, பதின்மூன்றாம் தேதியோ தந்தி கொடுத்தேன்.''

''உங்க கணக்குப் பிரகாரமே பத்து நாட்கள் ஆகவில்லை. தினசரி மூவாயிரம் தந்திகள் வருகின்றன; உங்க தந்தி பதினாறாம் தேதி இரவு வந்திருக்கிறது; பதினேழாம் தேதி பதிவு பண்ணியிருக்கிறோம்...போதுமா? உங்களுக்குப் பின்னால் இரண்டு மூன்று பேர்கள் நிற்கிறார்கள்...''

கேதாரத்துக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது; அவன் ஓர் அதிகாரி. அதுவும் ரயில்வேயில் முதல்தர அதிகாரி. அவனுக்கே இடம் இல்லை என்கிறார்கள்; இது அநியாயம். அவனைப் போன்ற அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்தானே மற்ற பிரயாணிகளுக்கு இவர்கள் ரிஸர்வ் செய்ய வேண்டும்?

அடுத்தகணமே அவன் தன் நினைப்பும் எண்ணமும் கீழ்த்தரமாகப் போகின்றன என்பதை உணர்ந்தான். அவன் டியூட்டியில் வரவில்லை. பெண் பார்க்க, லீவு எடுத்துக் கொண்டு சர்க்கார் சலுகையுடன் காசு கொடுக்காமல் பிரயாணம் செய்கிறான். எப்படிப் பணம் கொடுத்து வருகிறவர்களைவிட அதிக உரிமையை எதிர்பார்க்கலாம்?

திடீரென்று என்கொயரி கவுண்டர் நினைவுக்கு வந்தது; பம்பாய் கவுண்டர் அளித்த ஏமாற்றத்துக்குச் சாந்தி கிடைக்க வழி இருக்கிறதா என்று அங்கேதான் தேட வேண்டும்.

மெதுவாக 'என்கொயரி' கௌண்டர் முன்னால் போய் நின்றான்.

''குட்மார்னிங்!''

நிமிர்ந்து பார்த்த மங்களா ஒருகணம் திடுக்கிட்டாள். ''ஓ, நீங்களா! சாக்லேட் பெட்டி கிடைத்தது தாங்க்ஸ்.''

''வரேன்னு சொன்னீர்களே?''

''சொன்னேன். முடியவில்லை.''

''உங்க அப்பாதான் எஸ். எஸ். ஸா?''

''ஆமாம்.''

''மிஸ்டர் கணபதியை என் மாமாவுக்குத் தெரியும்.''

''அப்படியா? சந்தோஷம்.''

''பம்பாய் மெயிலில் இருபத்தெட்டாம் தேதிக்கு வெயிட்டிங் லிஸ்டில் போட்டிருக்கிறார்கள்.''

''இடம் இல்லையா?''

''உஹூம்...வெயிட்டிங் லிஸ்டில் நம்பர் இருபத்திரண்டு.''

''பத்து வரையிலும் நிச்சயமாகச் சொல்லலாம். ஏதாவது அதிகமா ரயில் பெட்டிகள் சேர்த்தால் உங்களுக்கும் கிடைக்க வழி இருக்கு.''

''எமர்ஜன்ஸி கோட்டாவில் முயற்சி பண்ணலாம்னு இருக்கேன்.''

''நல்ல யோசனைதான். ஆனால் இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. நாளை ஆபீஸில்தான் நீங்க முயற்சி பண்ணணும். ஆனால் அது அவசியம்னு தோணலை.''

''ரயில் பெட்டிகள் சேர்ப்பதற்கு நிச்சயம் வழி உண்டா?''

''பண்ணுவார்கள்.''

''ரேணுகா புதன்கிழமை வருவாள்.''

பேசுகிற விஷயமெல்லாம் தீர்ந்துவிட்டதை உணர்ந்தான் கேதாரம்.

''ஆமாம்...வேறு ஏதாவது விசேஷம் உண்டா?''

திடீரென்று பர்ஸின் நினைவு வந்தது.

''இன்னிக்கு வந்ததிலேயிருந்து எல்லாம் அபசகுனமாகவே இருக்கு.''

''ஏன்? என்ன நடந்தது? முதன் முதலில் என்னைத் தானே பார்த்தீர்கள்?''

''அது ஒன்றுதான் நல்ல சகுனம். நீங்கள் அந்தப்புறம் போனீர்கள். இந்தப்புறம் என் பர்ஸ் போச்சு. நாற்பது ரூபாய் சொச்சம்.''

''அடப் பாவமே!'' என்றவள் ஏதோ ஞாபகம் வந்தவளைப்போல, ''எஸ். எஸ். ஸிடம் ஒருவன் ஏதோ ஒரு பர்ஸைக் கண்டெடுத்ததாகச் சொல்லிக் கொடுத்து விட்டுப் போனான். விவரத்தை என்னிடமும் சொன்னான். நீங்கள் எஸ்.எஸ் ஸைச் சந்தித்துப் பாருங்கள். ஒருவேளை அது உங்கள் பர்ஸாக இருக்கலாம்'' என்றாள்.

''யார் அவன்?''

''மணி என்று பேரு. உங்களுக்குத் தெரியாது. ஏதோ டிராவல் ஏஜன்ஸியில் வேலை போலிருக்கிறது.''

''தாங்க்யூ வெரி மச், மங்களா!''

''ஓ, ப்ளீஸ் டோண்ட் மென்ஷன். நாங்கள் ஒத்தாசை செய்யறதுக்காகத்தானே இருக்கோம்?''

தான் பிரயாணி, அவள் ஒரு என்கொயரி கிளார்க் என்பதைச் சுட்டிக் காட்டிவிட்டாள் என்று நினைத்தான் கேதாரம். தொடர்பு அவ்வளவுதானா?

ஒரு நிமிஷத்தில் கேதாரம் தனக்குள் அவளை மன்னித்தான். கோபித்துக்கொண்டால், பரிச்சயம் இத்துடன் நின்றுவிடும் என்ற பயம்.

''ரேணுகா வந்தால் தகவல் சொல்லி அனுப்புகிறீர்களா?''

''அவளும் அது அவசியம் என்று கருதினால் சொல்லி அனுப்புகிறேன்!''

''இப்போது, ஏண்டா இப்படிப் பேசினோம் என்று தோன்றியது கேதாரத்துக்கு. அவன் தன்னைத்தானே சபித்துக்கொண்டிருக்கையில் மங்களா கேட்டாள். ''உங்களுக்கு ரேணுகாவை ரொம்ப காலமாகத் தெரியுமா?''

''தெரியாது. முப்பது நிமிஷங்கள் ஒருவருக்கொருவர் விக்டோரியா டெர்மினஸில் பார்த்துப் பேசியதுதான்?''

''ஓ, அரைமணி நேரமா?''

அவள் கேட்ட விதமே நையாண்டியாகப் பட்டது. மேலும் அவனுக்கு அங்கே நிற்கப் பிடிக்கவில்லை.

''தாங்க்ஸ். மிஸ் மங்களா!'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

அங்கிருந்து நேரே எஸ்.எஸ்.ஸின் அறையை நோக்கி நடந்தான்.

திடீரென்று போர்ட்டர் சீனன் வழிமறித்தான்.

''என்னா சாமி, பர்ஸ் கிடைச்சுதா?''

''ஐயாகிட்டே இருக்குன்னு தகவல் கிடைச்சது. அதுதான் போறேன்.''

''அதிலே பணம் முழுசும் அப்படியே இருக்கும்னு நீ நம்பறியா?''

''போய்ப் பார்த்தால்தான் தெரியும்...''

''இருக்காது சாமி... சத்தியமா பர்ஸ்ஸை எடுத்தவன் பணத்தை எடுத்துக்காமக் கொடுக்கமாட்டான். போய்ப் பாரு... போ...''

கேதாரம் எஸ்.எஸ்.ஸின் அறையினுள் நுழைந்தான்.

ஒரு நீண்ட சதுரமான அறை. நீளம் பதினைந்து, அகலம் பத்து என்று கேதாரத்தின் என்ஜினீயர் மூளை அனுமானம் செய்தது. அறையின் நட்ட நடுவே மிகப் பெரிய—அறையின் விஸ்தீரணத்துக்கு ஒவ்வாத—மேஜை அரை வட்ட வடிவில், அப்போதுதான் போடப்பட்ட பிரெஞ்சு பாலிஷில் பிரகாசித்தது. மேஜையின்மேல் இரண்டு கண்ணாடிச் சதுரங்கள். அவற்றின் கீழே நானாவிதமான காகிதங்கள்: குறிப்புகள். கடிதங்கள். ரயில்வே அறிக்கைகள். இடது கோடியில் மூன்று டெலிபோன்கள்... ஒன்று சென்ட்ரல் ஸ்டேஷன் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச், நகரத்திலுள்ளவர்களுடன் பேச. இன்னொன்று சென்ட்ரல் ஸ்டேஷனில் இருக்கும் மற்ற டெலிபோன்களில் மட்டுமே தொடர்பு கொள்ள. மூன்றாவது என்ன என்று மேற்கத்திய ரயில்வே டிவிஷனல் இன்ஜினீயர் கேதாரத்துக்குத் தெரியும். எல்லா ரயில்வே நிலையங்களுடனும் பேச என்று தனியாக போன்:

எஸ்.எஸ். ஏதோ மும்முரமாக எழுத்து வேலையில் ஆழ்ந்திருந்தார். அவர் முன்னால் இரண்டு நாற்காலிகளில் இரண்டுபேர்—வடநாட்டுக்காரர்—உட்கார்ந்து எஸ்.எஸ்.ஸின் எழுத்து வேகத்தைப் பார்த்து வியந்துகொண்டிருந்தனர். காலியாக இருந்த மற்ற இரு நாற்காலிகளில் வலது கோடியில் உட்கார்ந்துகொண்டான் கேதாரம்.

எஸ் எஸ். இன்னும் எழுதுவதை நிறுத்தவில்லை. அறை முழுதும் ஒரு நோட்டம் விட்டான் கேதாரம். சுவர்களுக்கு இள நீல நிறத்தில் டிஸ்டெம்பர் அடித்திருந்தது. ஒருபுறம் நேரு. அவர் எதிரே லால்பஹதூர். 'ஏன் மகாத்மாவின் படத்தை மாட்டவில்லை?' என்று கேதாரம் தனக்குள் கேட்டுக்கொண்டான். ஒருவேளை மகாத்மா நீதி நிலையங்களில் நீதிபதிக்குப் பின்னால்தான் இருக்க வேண்டுமோ? அல்லது மூன்றாவது வகுப்பிலேயே பிடிவாதத்துடன் பிரயாணம் செய்த அவர், இவ்வளவு அழகான அறையில் காட்சி அளிக்கக்கூடாதோ?

அறையை விட்டுவிட்டு மீண்டும் எஸ். எஸ். ஸைப் பார்த்தான் கேதாரம். தளதளவென்ற பொன்னிற மேனி. நெற்றியில் சந்தனப் பொட்டு. அதன் நடுவே குங்குமம். நடுத்தலையின் வழுக்கை தெரியாவண்ணம், தலையைத் தூக்கி வாரியிருந்தார். ஷெல் பிரேம் கண்ணாடி. தூய வெண்ணிற கோட்டு. ரோஜாப்பூ இருக்க வேண்டிய இடத்தில் வெள்ளைப் பிளாஸ்டிக் ஒரு சிறு கொண்டை ஊசியின் பலத்தில் நின்றது. பிளாஸ்டிக்கில், 'கணபதி' என்ற அவருடைய பெயர் பொன்னிறத்தில் மிளிர்ந்தது. தோள்பட்டையில் ஓர் இளம் பச்சை பாண்ட். அதன் மேலே அசோக ஸ்தூபியும் சக்கரமும். 'பீக்காப்' மேஜை மேல் டெலிபோனருகே பச்சை வர்ணத்தில் காட்சி அளித்தது.

எழுதி முடித்தவுடன் எஸ்.எஸ் கேதாரத்தின் மேல் பார்வையைச் செலுத்திவிட்டு, அவன் எங்கே பேச்சை ஆரம்பித்து விடுவானோ என்ற பயத்துடன் வடஇந்தியர்கள் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

''இந்த லெட்டரை நார்த்பூர் எஸ்.எஸ் னிடம் கொடுங்கள்!''

''தாங்க்ஸ்...'' கடிதத்தை வாங்கிக்கொண்டார் ஒருவர்

''நாங்கள் தந்தியும் தனியாக அனுப்புகிறோம்.''— எஸ் எஸ்.

''ரொம்ப தாங்க்ஸ்.''— ஒருவர் சொல்லி எழ, இன்னொருவர் கூடவே மௌனமாகவே எழுந்தார்.

அவர்கள் இருவரும் வெளியேற ஸ்டேஷன் சூபரிண்டெண்டண்ட், கேதாரத்தின் பக்கம் திரும்பினார்.

''குட்மார்னிங் ஸார்!''

''குட்மார்னிங்... உங்களுக்கு என்ன செய்யணும்!?''

''நான் கேதாரம். எஸ்.கே. கேதாரம்...''

''ஓ, அப்படியா? இன்னிக்குத்தானே பம்பாயிலிருந்து வந்தீர்கள். மங்களா சொன்னாள்... உங்க மாமாவை எனக்குத் தெரியும்— ஜம்புநாதன்.''

''அவர்கூட இன்னிக்கு உங்களைப் பார்க்கப் போவதாகச் சொன்னாரே?''

''அப்படியா? மெட்ராஸிலா இருக்கிறார்... இங்கே வரலையே.''

''இனிமேல் வருவாரோ என்னமோ. வந்து இன்னிக்குக் கார்த்தாலே ரயிலை விட்டு இறங்கியதும் இறங்காததுமா என் பர்ஸை யாரோ பிக்பாக்கெட் அடித்து விட்டார்கள்.''

''அப்படியா?''

''உங்க பெண் சொன்னா, யாரோ ஒருவர் உங்கிட்டே ஒரு பர்ஸை ஒப்படைச்சிருப்பதாக.''

''அது ரொம்பப் பழைய பர்ஸ். நான் திறந்துகூடப் பார்க்கவில்லை.''

''என் போட்டோ, குருவாயூரப்பனுடைய படம், மூணு பத்து ரூபாய், இரண்டு அஞ்சு ரூபாய் எல்லாம் இருக்கும். எத்தனை ஒரு ரூபாய் சில்லறைன்னுதான் எனக்கு நினைவு இல்லை''

''அதனால் என்ன பரவாயில்லை. பழைய பர்ஸாச்சே... அது எப்படி உங்களுடையதாக இருக்க முடியும்னுதான் யோசிச்சேன்...''

''மாமாவின் இரண்டு கடிதாசுகளும் அதில்தான் இருக்கு.''

மேஜை டிராயரை ஏற்கனவே திறந்துவிட்ட எஸ்.எஸ். ஒரு சதுரமான கறுப்பு பர்ஸை எடுத்தார்.

''இதுவேதான். பட்டன்கூடப் போயிருக்கும்.''

அந்தப் பழைய பர்ஸைத் திறந்து பார்க்க விருப்பமில்லாதவரைப் போல, எஸ்.எஸ். அவனிடம் நீட்டினார். கேதாரம் அவசரம் அவசரமாய்த் திறந்து பார்த்தான். பிறகு, உற்சாகமே குலைந்துபோய், ''சார்! எல்லாம் அப்படியே இருக்கு. பணத்தைத்தான் காணோம்'' என்றான். அதே சமயத்தில் போர்ட்டர் சீனன் உறுதியாகச் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

''எடுத்தவன் பணத்தை மட்டும் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, பர்ஸைத் தூக்கி எறிந்திருக்கிறான்.''

எஸ்.எஸ். சொல்லி முடிக்கவும், மணி திடீரென்று பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

''வா, அப்பா மணி... நல்ல சமயத்தில்தான் வந்திருக்கிறாய், நீ கொடுத்தியே பர்ஸ் அது இவருடையதுதான்!''

''அப்படியா! கங்கிராஜுலேஷன்ஸ்... மூன்றாவது பிளாட்பாரத்தில் கிடந்தது. நீங்கள் பாம்பே மெயிலில் வந்தீர்களா?''

கேதாரம் ஒரு தடவை ஏற இறங்க மணியைப் பார்த்தான். இருவரும் அப்படி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு ஏன் காலதாமதம் செய்கிறார்கள் என்று கணபதி விழித்தார்.

கடைசியில் மணி, திடீரென்று கத்தினான்: ''டேய், நீ மாம்பிஞ்சு கேதாரம்தானே...? எப்படியடா இப்படி வளர்ந்து பெரியவனாகிவிட்டே... இத்தனூண்டுக்குக் குள்ளமாயிருப்பியே... எஸ்.எஸ்.ஸார்! நானும் இவனும் திருச்சியிலே ஈ.ஆர். ஸ்கூல்லே ஒண்ணாப் படிச்சோம். ஏண்டா, பதினைஞ்சு வருஷங்கள் இருக்காது!''

''தாங்க்ஸ் எஸ்.எஸ். வாடா நான் ரிடயரிங் அறையிலேதான் இருக்கிறேன். அங்கே போய்ப் பேசுவோம்.'' கேதாரம் எழுந்தான்.

''சார்! ஜம்புநாதனை எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்குத்தான் என்னைத் தெரியாது. வீட்டுக்கு வாருங்கள், பம்பாய்க்குத் திரும்பிப் போவதற்கு முன்னால்'' என்றார் கணபதி.

''எஸ்.எஸ்.ஸின் வீடு எங்கே தெரியுமாடா? இங்கேயேதான் மாடியில்!'' என்றான் மணி.

அவனுடைய மனம் வருத்தத்தை உள்ளடக்கிக்கொண்டு சிரித்துப் பேசியது.

7

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்! தி பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் பவுண்ட்ஸ்பார் பெங்களூர் வில் லீவ் அட் ஸெவன் தர்ட்டி ஃபர்ம் பிளாட்பாரம் நம்பர் ஸிக்ஸ்.''

—சென்ட்ரல் ஸ்டேஷன் ஒலிபெருக்கி.

மேல் வகுப்புப் பிரயாணிகளின் தங்கும் அறையில் முத்துவைச் சந்தித்த மணி, முப்பது ரூபாயை அவனிடம் நீட்டினான். அதை வாங்கிக்கொண்ட அவன், ''இதை ஒரேயடியாய்த் திருப்பித் தரமுடியும்னு எனக்குத் தோணவில்லை'' என்றான்.

''நான் திருப்பித் தா என்றே சொல்லவில்லையே முத்து? இதை வைத்துக்கொண்டு அம்மாவைப் போய்ப் பாரு... போகும்போது ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கிக்கொண்டு போ— மூர்மார்க்கெட்டிலே வாங்கு. ரூபாய்க்கு நாலோ ஐந்தோ பழங்கள் கிடைக்கும்.''

''அரை டஜன் போதும். அம்மா எங்கே சாப்பிடப் போகிறாள்? அவள் பெயரைச் சொல்லி அண்ணாவும் குழந்தைகளும்தான் சாப்பிடுவார்கள்.''

''அப்போ இரண்டு டஜனா வாங்கிக்கொண்டு போ!'' என்றான் மணி. பிறகு, ''நீ இதைத் திருப்பித் தரணும்: தருவாய் என்ற எண்ணத்தோடு, காலங்கார்த்தாலே நான் இங்கே வரவில்லை'' என்றான்.

முத்துவுக்குச் 'சுருக்'கென்றது, இந்த மணிக்கு அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை. என்ன வேலை செய்து எப்படிப் பிழைக்கிறான் என்று இன்னும் அவனுக்குத் தெரியாது- 'யாரோ டிராவல் ஏஜண்டிடம் கமிஷனுக்கு வேலை செய்கிறான். பம்பாய், தில்லி முதலான இடங்களுக்கு மற்றவர்களுக்குக் கிடைக்காத ரிஸர்வேஷன் இவனுக்குக் கிடைக்கிறது. அதிலிருந்து ஐந்து பத்து என்று சம்பாதிக்கிறான். என்றெல்லாம் மட்டும் பராபரியாக, டிக்கட் பரிசோதகர் ராவ்ஜி, ரயில்வே கார்டு ரோஸாரியோவின் பிள்ளை எட்மண்ட் ஸ்லீப்பர் நீலமேகம் இவர்கள் மூலமாகத் தெரியும். இப்பேர்ப்பட்ட நாடோடிப் பயலிடம் அவன் ஓர் அவசரத்துக்கு முப்பது ரூபாய் கடன் வாங்குகிறான். ஆனால் அதைத் தானம் செய்வதுமாதிரி மணி பேசுகிறான்!

நினைக்க நினைக்க முத்துவின் உடல் எரிந்தது. ரத்தம் சூடேற ஆரம்பித்தது. தன்மான உணர்ச்சி சூட்டில் வெந்தது.

''எனக்கு இரக்க சிந்தனையோ, தானமோ தேவையில்லை மணி!''

''என்னடா, உனக்கு என்ன வந்துவிட்டது திடீர்னு? உன் அம்மாவுக்குத்தானே உடம்பு சரியில்லை!'' என்றான் மணி முத்துவின் திடீர்ப் போக்கு அவனை வியப்பில் ஆழ்த்தியது.

''டேய், இன்னிக்கு நான் ஒரு டைப்பிஸ்ட்தான். சம்பளம் நூற்று எழுபது ரூபாய்தான். வாடகையும் பஸ் சார்ஜும் கொடுக்க வக்கில்லாமல், பிளாட்பாரத்தில் ஜாதிக்காய்ப் பெட்டியில் சாமான்களை வைத்துக்கொண்டு

சென்ட்ரல் ஸ்டேஷன்லே குடியிருக்கிறவன்தான். ஆனால் நான் பெரிய பரம்பரையைச் சேர்ந்தவன். என் கொள்ளுத் தாத்தா நூறு வேலி நிலத்தை—அதுவும் தஞ்சாவூரிலே காவேரிக் கரையிலே—ஆண்டவர்டா—ஒரு கலியாணம் கார்த்தின்னா ஆயிரக்கணக்கிலே செலவு செய்து, 'ஓகோ', 'ஓகோ'ன்னு ஊரெல்லாம் சிலாகிக்கும்படியாக இருந்த குடும்பம்டா, மணி...! இதெல்லாம் உனக்குத் தெரிஞ்சிருந்தால் இந்த முப்பது ரூபாயைத் திருப்பித் தர வேண்டாம்னு நீ சொல்லியிருக்கமாட்டாய்!''

முத்துவின் திடீர் முகமாற்றத்தையும் பேச்சின் வேகத்தையும் கண்டு மணிக்குச் சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை.

''ரொம்ப சரி! திருப்பிக் கொடு... ஆனால் கேவலம் இந்த முப்பது ரூபாய்க்காக உன் பழைய பரம்பரைப் பெருமையை இந்த ஸ்டேஷன்லே நாற அடிக்காதே!''

''உனக்குப் பரம்பரை இல்லையோ என்னவோ!''

''நான் நேத்து நடந்ததையே மனசில் வைத்துக் கொள்றதில்லை...என்னடா பரம்பரைப் பெருமை வேண்டியிருக்கு? தஞ்சாவூரிலே பாதிப் பேர் சீட்டாடிக்கொண்டும்; மற்ற கேளிக்கைகளிலும் இறங்கிச் சொத்தையே முழுங்குகிற அளவுக்குக் கடனை வாங்கி, கடைசியில் உன்னை மாதிரி வாரிசுகளை இன்னிக்கு இந்த மாதிரி ஸ்டேஷன்களில் சந்திசிரிக்க வைக்கிறார்கள்! உன் பாட்டன், முப்பாட்டன் பெருமையைப் பேசுகிறாயே, நாளைக்கு உன் பேரன் கொள்ளுப் பேரன் உன்னைப்பத்திப் பெருமையாப் பேச இன்னிக்கு உன்னிடம் என்னடா இருக்கு? ஆனால் யார் கண்டார்கள்? உன்னுடைய இந்தக் கோலமே பெருமையா அவர்களுக்குத் தோன்றுமோ என்னமோ? ஏன்னா நீ இங்கே இருக்கே, அவர்கள் ரோடு பிளாட்பாரத்திலும் மரத்தடியிலும் இருப்பார்களோ என்னமோ!''

''டேய், மணி! உன் பொறாமை எனக்கு நன்னாத் தெரியறதுடா, நன்னாத் தெரியறது. நீ ஒரு நாடோடி. அப்பா, அம்மா சொந்தக்காரர்கள் இல்லாத அநாதை... இப்படிப்பட்ட நீ பெரிய பரம்பரையிலே பிறந்த எனக்கு இன்னிக்கு ஓர் உபகாரம் பண்ணிப் பெரியவனாகிப்போய் விட்டே. அந்தக் கர்வத்தில் தானமா வைச்சுக்கோன்னு வேறு சொல்றே!''

''டேய் முத்து, உன் பரம்பரைக் கர்வம் உன் தலையிலிருந்து இறங்கினால்தான் நீ உருப்படுவே! இல்லாட்டா என்னன்னிக்கும் நீ டைப்பிஸ்ட்தான். அது சரி இவ்வளவு தூரம் பேசினாயே, ஏன் சென்ட்ரல் ஸ்டேஷன்லே இத்தனைபேரை ஏமாத்திண்டு இத்தனை நாளா இருந்து கொண்டிருக்கே? ஏமாத்தறது பரம்பரைக் குணமா? ஜாதிக்காய்ப் பெட்டி வாடகை அஞ்சு ரூபாய். ஏழாம் பிளாட்பாரத்திலே தூக்கம். ரிடயரிங் ரூமிலே குளியல், டிரஸ்ஸிங், மின்சார விசிறியின் கீழே ஓலிப் பேப்பர். ஏண்டா, இப்படித்தான் உன் தாத்தாவும் கொள்ளுத் தாத்தாவும் பொது இடங்களிலே ஒதுங்கினார்களா?''

முத்துவுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. 'பளார்' என்று மணியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து விட்டு ஓடிவிடலாமா என்று யோசித்தான். ஆனால் மணி அதற்குள் அவனைப் பிடித்துவிட்டால்? ஓர் அறைக்கு நாலு அறை கொடுத்துவிடுவான். கொடுத்திருக்கும் முப்பது ரூபாயும் போய்விடும்! தான் ஒரு முட்டாள். தன்னுடைய பரம்பரைப் பெருமையை இவ்வளவு விஸ்தாரமாக இந்த அனாமதேயத்திடம் சொல்லியிருக்கக் கூடாது. கற்பூர வாசனையை யாரிடம் காட்டவேண்டும் என்று தெரியாமல் காட்டிவிட்டான். இப்போதைக்கு இனிமேல் மௌனமாக இருப்பதுதான் விவேகம்.

முத்துவின் மௌனத்தை மணி தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளவில்லை; மேலும் மேலும், குத்திக்

குத்தி, அவனுடைய மனத்தைப் புண்படுத்தும் நோக்கம் தனக்கு இல்லை என்பதைத் தன் முறுவலால் காட்டினான்.

''நான் வரட்டுமாடா முத்து!''

''உம்.''

''நாம ரெண்டுபேரும் ஒரே பருவம்டா. நீ என்னைவிட ஒரு வயசோ இரண்டு வயசோ சின்னவன். இருந்தாலும் 'ஸார்' சொல்றேன்.''

''ஸாரிடா மணி! நீ எதைப் பற்றியும் கவலைப்படறதில்லை. நான் கவலைப்படாத விஷயம் ஏதுமில்லை. இந்த வித்தியாசம்தான் என்னை இப்படிப் பேச வைத்ததோ என்னவோ!''

''விட்டுத் தள்ளு. ஆனால் யார் கிட்டேயும் உன் பரம்பரையைப் பற்றிப் பேசாதே இனிமேல்: ரொம்பப் பேர், நம்ப பாரதத்தின் பண்டைய பெருமையைப் பேசிப் பேசியே நிகழ்காலத்தை நாற அடித்து விட்டார்கள்; நாம் பேசுவதை நிறுத்தினால்தான் பெருமை நாலு பேருக்குத் தானாகத் தெரிய வரும் என்னை எடுத்துக்கொள். எனக்குப் பரம்பரையே கிடையாது என்றுதானே நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்?''

''ஆமாம். எனக்கு உன்னைப் பற்றிய விவரமே ஏதும் தெரியாது.''

''எப்படித் தெரிய முடியும்? நான் என்னைப்பற்றி யார் கிட்டேயுமே எப்போதுமே சொல்லிக் கொள்ளுவதில்லை. அதனால் ஒன்றுமே கிடையாது என்ற எண்ணமா? கேளு. என் அப்பா அலகாபாத் சர்வகலாசாலையில் பேராசிரியராக இருந்தவர்: எனக்கு ஏழு வயசு நடக்கிறபோது அவரும் அம்மாவும் தங்கையும் கங்கையில் ஒரு விபத்தில் உயிர் இழந்தார்கள். அன்னிக்கு எனக்கு ஜுரம். அதனால் என் உயிர் போகவில்லை. பெரியப்பா டிப்டி கலெக்டராக இருந்தவர். என் அப்பா போன இரண்டு மூன்று வருஷங்

களில் அவர் திடீரென்று மாரடைப்பில் செத்துப் போனார். என் தாத்தா யாருன்னு மனசுக்குள்ளே கேட்டுக்கிறியா? சொல்றேன். அவர் செஷன்ஸ் ஜட்ஜ். கண் முன்னாலே தாம் பெற்றெடுத்த இரண்டு மலைகள் சரிவதை அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. பிள்ளை இழந்த சோகமே ஒரு நோயாக அவரை அரித்து அரித்துத் தின்றது. அவர் போகும்போது எனக்கு வயசு பதினொண்ணு. அதுக்கு அப்புறம் நாதிகள் நாதிகள்னு ஒன்றுவிட்ட சித்தப்பா, இரண்டுவிட்ட பெரியப்பான்னு யார் யாரோ என்னையும் பெரியப்பா குழந்தைகளையும் வளர்த்தார்கள். இருந்த சொத்தையெல்லாம் சூறையாடினார்கள். இப்போ நான் வீடு, வாசல், பெண்டாட்டி ஏதும் இல்லாமல் அலைகிறேன். இதுதாண்டா என்னுடைய பரம்பரை! போதுமா?''

''மன்னிக்கணும்டா மணி!...''

''அதனாலே பரவாயில்லே. நேத்து நடந்ததை மறந்து விடு. இன்னிக்குக் கிடைக்கிறதை வைத்துக்கொண்டு சந்தோஷப்படு. நாளையைப் பற்றிக் கவலைப்படாதே. நான் வர்றேன்!''

மணி பதிலுக்குக் காத்திராமல் வெளியேறினான்.

கடிகாரத்தில் அப்பொழுது மணி ஏழே கால்.

* * *

கேதாரத்தின் மணிபர்ஸை யாரிடம் ஒப்புவிப்பது என்ற கேள்வி அவனை அரித்துக் கொண்டேயிருந்தது. ரயில்வே போலீஸிடம் கொடுக்க மனம் வரவில்லை. முன்னொரு தடவை கொடுத்துவிட்டு அவன் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அந்தப் பர்ஸை வைத்துக்கொண்டு ஆயிரமாயிரம் கேள்விகள் கேட்டார்கள். ஒரு கட்டத்தில் கண்டெடுத்த பர்ஸிலிருந்து அவனே பணத்தைக் கையாடியிருப்பானோ என்று சந்தேகப்பட்டார்கள்!

அதன்பிறகு நல்ல வேளை, ஒரு பர்ஸிலும் பணத்தைத் தவிர முக்கியமான காகிதங்கள் இருக்கவில்லை. சமுத்திரமும் கூவமும் சௌகரியமாக இருந்தன பர்ஸ்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு. இப்போது கேதாரத்தின் பர்ஸில் இரண்டு கடிதங்கள் இருந்தன. சில விலாசங்கள் இருந்தன. அவற்றை அவன் படித்துப் பார்த்து முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளவில்லைதான். ஆனாலும் கடிதங்களைச் சேர்ப்பித்துவிட வேண்டும் என்று சங்கற்பம் செய்துகொண்டான்.

என்கொயரி கவுண்டர் நினைவுக்கு வந்தது. அதே சமயத்தில் அங்கே பணி புரிகிறவள் மங்களா என்றும் அவள்தான் கேதாரத்துக்கு முன்னால் நடந்துசென்றவள் என்றும் நினைவுக்கு வந்தன.

கவுண்டருக்குச் சென்றபோது அங்கே யாருமே இல்லை. கொச்சி கவுண்டரில் விசாரித்தான். மங்களா எட்டு மணிக்குத்தான் வருவாள் என்ற தகவல் கிடைத்தது.

மணிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நேரே ஹிக்கின்பாதம்சுக்கு வந்தான். பிரும்மாண்டமான புத்தகச்சாலை முன் பத்து அல்லது பன்னிரண்டு பேர் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் நின்ற இடத்திருந்தே புரட்டியும் படித்தும் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தார்கள்.

மணி அலுத்துக்கொண்டே திரும்பினான். கண்முன் காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எழுப்பப் பட்டிருந்த ஞாபகச் சின்னம் கண்ணில் பட்டது. அந்தச் சின்னத்தில், காந்தி சென்னைக்கு விஜயம் செய்த விவரங்கள் சுருக்கமாகப் பொறிக்கப்பட்டிருந்தன. சின்னத்தின் கீழே பரவலாக வாழைப்பழ, ஆரஞ்சுப் பழத் தோல்களும் சாப்பிட்டானபின் பந்தாகச்சுருட்டி வீசப்பட்ட இலைகளும்

காகிதங்களும் சிதறிக் கிடந்தன. ஒரு டிபன் இலை திறந்து கிடக்க அதன்மீது ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. காந்திஜியின் சின்னத்துக்கு நேரும் கதியை நினைத்துக் கொண்டே அவன் ஆறாம் பிளாட்பாரத்தை நோக்கி நடந்தான். வழியெல்லாம் பெட்டிகள், கூடைகள், மூட்டைகள். இரு பெட்டிகளுக்கு நடுவே ஒரு சிறு துணியின்மேல் ஒரு குழந்தை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. பெற்றவர்கள் பெட்டிகளின் மேல் உட்கார்ந்துகொண்டு விரல்களில் எண்ணெய் கசியும் வடைகளை விண்டு கொண்டிருந்தார்கள்.

மணி நடந்தான். விசாலமான அந்தப் பெரிய ஹாலில் நானாவிதமான மக்கள். அவசரப்படுகிறவர்களுடன் பொறுமைசாலிகள் போட்டி இட்டார்கள். கொத்துக் கொத்தாக நின்று பேசினார்கள். குழந்தைகள் தூங்கின, ஓடின, விளையாடின.

பூட் பாலிஷ் செய்கிறவன், ஊதுபத்தி வியாபாரி, கால் ஆணி எடுக்கிற வைத்தியர், வக்கீல்களுக்குக் கட்சிக்காரர்களைத் தேடிப் பிடிக்கும் புரோக்கர்கள், ஹோட்டல் அறைகளுக்கு அழைக்கிற ஏஜெண்டுகள் என்று எத்தனையோ விதமான மனிதர்கள் அங்குமிங்குமாய் ஊர்ந்துகொண்டிருந்தார்கள். ஓரிரு நாய்கள் யாரையும் லட்சியம் செய்யாமல் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தன.

மணி ஆறாவது பிளாட்பாரத்தை அடைந்தான். நீல நிற பிருந்தாவனம் நின்றுகொண்டிருந்தது. ஐஸ்கிரீம், வாழைப்பழம், குளிர்பானம் டிராலிகள் என்று ஒரே சத்தம். பிளாட்பாரத்தில் நடக்க முடியாமல் சாமான்கள், மூட்டைகள். அதே பிளாட்பாரத்திலிருந்து மத்தியானம் ஒன்று ஐம்பதுக்குப் புறப்படப் போகிற பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸில் ஏறப்போகும் பார்ஸல்கள் மலைபோலக் குவிந்து கிடந்தன.

இரு பெண்கள் ஆங்கிலத்தில் பேசிச் சிரித்துக்கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டார்கள். அவர்கள் சாப்பிடும் அழகைக் கூட இருந்த இளைஞர்கள் ரசித்து மெய்மறந்து நின்றார்கள்.

ஒரு கிழவரையும் கிழவியையும் ரயிலில் ஏற்றிவிட்ட திருப்தி. பெண்டாட்டி பிரசவத்துக்காகத்தான் போகிறாள் என்ற நிறைவு. இருந்தும், அவளைப் பிரியவேண்டியிருக்கிறதே என்ற ஏக்கம், எச்.எம்.டி.யில் இண்டர்வ்யூ எப்படி முடியும், வேலை கிடைக்குமா என்ற கவலை. மெட்ராஸ் வியர்வையிலிருந்து குளுகுளுவென்றிருக்கும் பெங்களூருக்குப் போகிறோம் என்ற மகிழ்ச்சி. பெண்ணை ஒருவழியாக ஒருவன் கையில் கொடுத்து இப்போது அவளை அவனிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்ற சாந்தி. முந்தின நாள் ஆஸ்பத்திரியில் இரவு திடீரென்று காலமாகிவிட்ட உறவினருடைய உடல் போய்ச் சேரும்வரை இருக்குமா என்ற கேள்வியினூடே உண்டாகும் துக்கம். கணவருடன் அன்று இரவு என்னென்ன பேசவேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும், அவர் அவள் உடலைத் தீண்டும்போது உடலில் என்னென்ன விதமாய் எப்படி எப்படிச் சுகமாய் உணர்ச்சிகள் பீறிடும் என்றெல்லாம் முதலிரவைச் சுற்றி வட்டமிடும் கனவு. பத்து நாட்கள் கழுத்தை அறுத்துவிட்டு ஒரு வழியாய்த் திரும்பிச் செல்லுகிற குடும்பத்தை வழி அனுப்பும் உற்சாகம். வந்த காரியம் இப்படித் தோல்வியில் முடிந்துவிட்டதே என்ற வருத்தம். இவ்வளவு தூரம் பெண்ணை அழைத்து வந்து காட்டியும், பாடத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்துக்காக ஒதுக்கிவிட்டார்களே என்ற ஏமாற்றம். 'விட்டுத் தள்ளுங்கள் அப்பா; நான்தான் வேலை செய்து சம்பாதிக்கிறேனே' என்ற ரீதியில் பேசினவள் காதில் மட்டுமே உள்ளுறக் கேட்கும் கேவல்...

இன்னும் எத்தனை எத்தனை உணர்ச்சிகளோ, உள்ளங்களோ!

ஆறாம் பிளாட்பாரத்தில் ஓர் உலகமே இயங்கிக் கொண்டிருந்தது.

உணர்ச்சி அற்றவனாய், எதிலும் உள்ளம் ஒட்டாதவனாய் மணி இரு முறைகள் நடந்தாகிவிட்டது. மீண்டும் ரயிலின் மறு கோடிக்கு வந்தபோது, ஒலிபெருக்கியிலிருந்து அறிவிப்பு அலறியது: காதைப் பொத்திக்கொண்டே அவன் கார்ட்வான் பக்கம் வந்தான்.

''இன்னிக்கு யார் அப்பா கார்டு?''

ஒரு காக்கிச் சட்டை சிப்பந்தியிடம் மணி கேட்டான்:

''ரொஸாரியோ!''

அவன் சொல்லி முடிப்பதற்கும் ரொஸாரியோ அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது:

''குட்மார்னிங் ஸார்!'' என்றான் மணி.

''குட்மார்னிங் மணி... ஒரே நிமிஷம் இதோ வரேன்.''—ரொஸாரியோ தம் கூட வந்த இளைஞனிடம் பேசலானார்.

அவருடைய கம்பீரமான உயரத்தையும், செதுக்கி விட்ட தாடையையும், பழுப்பு நிற மீசையையும் பார்த்துக்கொண்டே நின்ற மணிக்கு அவருடன் பேசும் எட்பண்டை ஓர் அறை அறையலாமா என்று எரிச்சல் வந்தது.

''எனக்கு அவசியம் டாடி... எப்படியாவது சமாளிச்சுத் தரணும்!''

''ஓ, மை பாய்... தொளைச்செடுக்காதே. எங்கிட்டே மூணு ரூபாய் இருக்குது. நாளைக்கு வேணுமானால் பார்க்கலாம்!''

''நோ, இன்னிக்கே வேணும் டாடி!''

முதல் மணி அடித்து இரண்டு நிமிடங்களாகி விட்டன: ரொஸாரியோ பொறுமை இழந்தார்; பிடிவாதம் பிடிக்கும்

பிள்ளையைச் சமாளிக்க வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தார். பாக்கெட்டிலிருந்து அந்த மூன்று ரூபாய்களையும் எடுத்துப் பிள்ளைமுன் நீட்டினார். அவன் அதைச் சீண்டவில்லை:

''வீட்டுக்குப் போ!'' என்றார் கார்டு.

''நீங்க கொடுக்கல்லேன்னா உங்க கூடவே வருவேன்!''

மணிக்குப் பொறுக்க முடியவில்லை.

''எட்மண்ட்.''

அவனுடைய கத்தலைக் கேட்டு எட்மண்ட் திரும்பினான்.

''ஸார்! உங்க பிள்ளைக்கு இப்போ என்ன வேண்டுமாம்?''

''ஒண்ணுமில்லே மணி! நீ வொர்ரி பண்ணிக்காதே.''

''சொல்லுங்கள் சார்...''

''எனக்குப் பத்து ரூபாய் வேணும்!''

''நீங்கள் போங்கள் சார். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். என்னுடன் வா, எட்மண்ட்: நான் தரேன்.''

''நிச்சயமாக?''

''என்னிடம் நம்பிக்கை இல்லையா?''

ரொஸாரியோவின் வேதனை முகத்தில் படர்ந்தது: மணி பத்து ரூபாயை எட்மண்ட் கையில் கொடுப்பதையும், அதை வாங்கிக்கொண்ட அவன் பெற்றவரின் முகத்தையும் பாராமல் விரைந்து செல்லுவதையும் பார்த்தவராய் நின்றார்.

''மன நிம்மதியுடன் போங்கள் ஸார்!'' என்றான் மணி.

''இவன் பிறந்த அன்னிக்கே என் நிம்மதி செத்து விட்டது மணி... நான் ரொம்பத் துரதருஷ்டசாலி! இந்தப்

பத்து ரூபாயை நான் நாளன்னிக்குத் திருப்பித் தருகிறேன்.''

''பரவாயில்லே! நீங்க சந்தோஷமா போய் வாங்க!''

''தாங்க்யூ... மணி... ஒரு சின்ன உதவி பண்ணுவியா?''

''ஓ பேஷா!''

''இந்த லோன் அப்ளிகேஷனை எஸ்.எஸ் ஸிடம் கொடுத்து அவரைக் கையெழுத்தைப் போட்டு, நாளைக்குக் காத்தாலே கோவாபரேட்டிவ் பாங்கில் கொடுக்கச் சொல்லு... லோன் வாங்குகிறேன்... எனக்கு அவர்தான் ஷ்யூரிட்டி.''

''எத்தனை ரூபாய் ஸார்?''

''இருநூறு ரூபாய். அதற்கு மேலே கிடைக்காது.''

மணி ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் இரண்டாவது மணியடித்தது.

''மேரி எப்படி இருக்கிறாள்?''

''சௌக்கியம். தாங்க்ஸ். நாளன்றைக்கு உன்னைப் பார்க்கிறேன்! வர்றேன்!'' அவருடைய கையில் பச்சைக் கொடி, சிவப்புக் கொடியிலிருந்து பிரிந்து வந்தது. கை உயரக் கிளம்பியது பிறகு ஆடியது. கை நடுக்கத்துடன் ஆடுவதாக மணிக்குத் தோன்றியது.

ஐந்தே நிமிடங்களில் ஆறாவது பிளாட்பாரம் ஜனக் கூட்டத்தை அள்ளி வெளியே வீசியது. மணி மெதுவாக நடந்தான். எட்டரை மணிக்கு ஏழாவது பிளாட்பாரத்திலிருந்து ஹௌரா ஜனதா புறப்படும். இனிமேல் ஐஸ்கிரீம், பிஸ்கட் சாக்கலேட், டிராலிகள் இவற்றின் சத்தம் அங்கே கேட்க ஆரம்பிக்கும். இதே ஆறாம் பிளாட்பாரத்தில் நீலகிரி எக்ஸ்பிரஸ் இன்னும் பத்து நிமிடங்களில் வந்து சேரும். வரவேற்க ஆண்களும் பெண்களும் போர்ட்டர்களும் வந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு ஜன மூட்டை

பிருந்தாவனத்தில் வெளியேற இன்னொரு ஜனமூட்டை வந்து அவிழ்ந்து சிதறப்போகிறது. போவதும் வருவதும் புறப்படுவதும் சேருவதும்தான் பிரயாணம்! யார் யார் எதை எதை நோக்கிப் பிரயாணம் செய்கிறார்கள்! இந்தப் பிரயாணமே ஒரு மகா பிரயாணத்தின் ஒரு பின்னமா? பெரிய பிரயாணத்தினுள் அடங்கிப் போகிற பிரயாணமா? இந்த ஒரு சின்னப் பிரயாணத்துக்காக இவ்வளவு பெரிய ஸ்டேஷன், ஏற்பாடுகள், சிப்பந்திகள்...

எட்டு மணிக்கு என்கொயரி கவுண்டரில் மங்களா வைச் சந்தித்தான் மணி.

அவள் அக்கறையுடன் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, எஸ் எஸ்.ஸிடம் கேதாரத்தின் பர்ஸை ஒப்படைக்கச் சொன்னாள். அவளிடமிருந்து ஓரிரு தகவல்களைப் பெற்றுக் கொண்ட பின் எஸ்.எஸ்.ஸின் அறையை அடைந்து பர்ஸை ஒப்படைத்துவிட்டான்.

ரொஸாரியோ இருநூறு ரூபாய் கடன் வாங்க வேண்டியது அவசியம்தானா என்ற கேள்வி அவனை அரித்தது. அதன் பதிலை அவன் தீர்மானிக்கும் வரை, 'லோன் அப்ளிகேஷனை' எஸ்.எஸ் ஸிடம் கொடுக்க வேண்டாம் என்று அவன் முடிவு செய்தான்.

டைனமோ லைட்டோடு, குஷன் சீட்டோடு அவன் மனத்தைக் கொள்ளை கொண்ட அவனுடைய சைக்கிள் திடீரென்று கண்முன் தோன்றியது. ரொஸாரியோவுக்கும் சைக்கிளுக்கும் இடையில் நடந்து வந்த அவனது மனத்தின் பிரயாணம் முடியவில்லை.

8

இந்தப் பாலம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தாறில் கட்டப்பட்டது. இதன் நீளம் எண்ணூற்று இருபது மீட்டர். இந்தப் பாலத்தின்மீது நடப்பதோ, பாலத்தை போட்டோ எடுப்பதோ கூடாது. அத்துமீறி நடப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

—ஒரு ரயில்வே பாலத்தின் முன் அறிக்கைப் பலகை.

கேதாரமும் மணியும் ரிடயரிங் அறையை அடைந்தார்கள்.

''என்னடா சாப்பிடறே மணி? காப்பியா, டீயா?''

''இரண்டுமே வேண்டாம். நான் இப்பத்தான் டிபன் காப்பி சாப்பிட்டேன்.''

''உன்னைப் பார்த்து ஒரு யுகம் ஆச்சு என்பார்களே, அதுமாதிரி உண்மையாகவே ஒரு யுகம் ஆச்சு.''

''வாஸ்தவத்தில் நான் உன்னை மறந்தே போயிட்டேன்'' என்ற மணி ''இப்பவும் சாயங்காலங்களில் புஸ்தகம் தான் படித்துக்கொண்டிருக்கிறாயா? கல்யாணம் ஆச்சா?' என்று கேட்டான்.

''இல்லை. ஆனால் கூடிய சீக்கிரம் ஆயிடும்னு தோணறது...ஆமாம் உன் கதையைச் சொல்லு. இப்பவெல்லாம் கால்பந்தும் கூடைப்பந்தும் ஆடுகிறாயா?''

''என் வாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கியவர்கள் இரண்டுபேர். ஒண்ணு, கால்பந்து. இன்னொண்ணு என் தாயாதிக்காரர்கள். ஒண்ணு படிப்பை ஒழிச்சுக் கட்டிடுத்து; இன்னொண்ணு சொத்தைத் தீர்த்து அழிச்சுது.''

''இப்போ என்ன செய்கிறாய்?''

''ஏதோ செய்கிறேன். எப்படியோ பிழைப்பு நடக்கிறது. விட்டுத் தள்ளு மேலே கேட்காதே...''

''பள்ளிக்கூடத்திலே படிக்கிறபோது எப்படி என்னைக் கோட்டா பண்ணி அழவைப்பாய்? இப்போது நினைச்சாலும் உன் மேலே ஆத்திரம் வர்றது'' என்றான் கேதாரம்.

''அப்போ நீ எப்படியடா இருந்தாய்! அதை முதல்லே நினைச்சுப் பாரு. காவி ஏறிய வேஷ்டி, இஸ்திரி போடாத ஷர்ட்டு. கொத்தவரைக்காய் பின்னல். பெண்கள் பூ வைச்சுக்கிற மாதிரி பின்னலுக்கு மேலே செருகின சங்கு புஷ்பம். நெற்றியிலே பட்டை பட்டையாக விபூதி...இந்தக் கோலத்திலே நீ தூக்க முடியாமல் புஸ்தக மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருவே...சாப்பாட்டு வேளையிலே வகுப்பறையே காலியாகக் கிடக்கிறப்போ ஒரு மூலையிலே ஒடுங்கி ஒளிஞ்சிண்டு மாமி பிசைஞ்சு கொடுத்த எருமைத் தயிர்—பழைய சாதம்—வடு மாங்காயைத் தொண்டைக் குழாய் அடைக்க அரை மணி நேரம் சாப்பிடுவாய். உன்னைக் கேலி பண்ணாமல் யாரைக் கேலி பண்ணுவார்கள்?''

''ஆனால் மணி! நீதாண்டா என்னைக் காவிரியிலிருந்து காப்பாத்தினாய்...அதை நான் சாகிற வரைக்கும் மறக்கவே மாட்டேன்.''

ஒரிரு நிமிஷங்களுக்கு மணி பதில் சொல்லவில்லை; எங்கேயோ பார்த்தவனாய் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

கேதாரத்தின் கண்முன் விதியின் அந்தத் தோல்வி நாள் நிழலாக ஓடியது. அதே காட்சி மணியின் மனக்கண்ணுக்கும் தெரிந்தது.

ஆடிப் பெருக்கு. காவிரி பொங்கிச் சிரித்து கரைகளை வாரி அணைத்துக்கொண்டு ஓடினாள். எல்லா வருடங்

களைப்போல அந்த வருடமும் மணியும் அவனுடைய கோஷ்டியும் ரயில்வே பாலத்திலிருந்து ஆற்றில் குதித்து, சீற்றத்துடன் பாயும் நதியுடன் சமர்செய்து கரையை அடைந்து கரையில் இருப்போரின் கரகோஷத்தைப் பெற்று அவர்கள் அளித்த சித்திரான்னங்களை வயிறு புடைக்கத் தின்றார்கள். இக்கரைக்கு அக்கரை என்று நீந்தினார்கள்.

இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போய் மீண்டும் இக் கரைக்கே திரும்பிய மணி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க உட்கார்ந்திருந்தான். கைகால்கள் அசைக்கவும் முடிய வில்லை. மார்புக் கூடு வலித்தது. அவனுடைய கோஷ்டியில் மற்ற எல்லோரும் இன்னும் அக்கரையிலே இருந்தார்கள். ஒரு சிலர் ரயில்வே பாலம் வழியாக நடந்து வந்துகொண் டிருந்தார்கள்.

கையெழுத்து மறையும் வேளை: ஜனக் கூட்டம் மெள்ள மெள்ளக் கலைந்துகொண்டிருந்தது: மணி தரை யிலே சாய்ந்து படுத்துக்கொண்டான்.

அதே சமயத்தில் ''ஐயோ'' என்ற அலறல் கேட்டது.

மணி திடுக்கிட்டு எழுந்தான். மங்கிக்கொண்டு வரும் வெளிச்சத்தில், ஒரு பையன் ஆற்றோடு கால்களை மேலே கொண்டு வந்து நீந்த முடியாமல் தத்தளிப்பது தெரிந்தது: தத்தளிக்கும் பையனை மேலும் விட்டுவிடக் கூடாது என்று தோன்றியது. சக்தியை எல்லாம் திரட்டி ஒரே எட்டில் பாய்ந்து அந்தப் பையனுடைய தலையை ஒரு கையால் கவ்வினான். அவனது குடுமி சிக்கியது.

அதன்பின் நதியின் போக்கோடு கரையை நோக்கிச் செல்வது கடினமாகப் படவில்லை:

அவன் கரையில் பையனுடன் விழுந்தான்:

மணி கண் விழித்துப் பார்க்கையில் யாரோ முன்பின் பார்த்திராத ஒருவருடைய வீட்டு ஹால் ஊஞ்சலில் படுத்துக் கொண்டிருப்பதை அறிந்தான்.

''அந்தப் பையன் எங்கே?''

''இதோ நான்தாண்டா மணி.'' குரல் தலைமாட்டி லிருந்து எழுந்தது.

''யாருடா கேதாரமா?''

''ஆமாம்டா! கரையோரமா நீஞ்சலாம்னு இறங்கிட் டேன்...நதியோட வேகத்தைப் பத்தி யோசிக்கலை நீங்க ளெல்லாம் நீஞ்சறதைப் பார்த்து ஒரு ஆசை கிளம்பிடுத்து.'

''முட்டாள்...முட்டாள்...''

மீண்டும் கண் மூடின மணி விழித்தபோது மறுநாள் காலை ஏழு மணி.

* * *

''நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன் மணி... ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்... இன்னிக்கு நான் ஒரு பி.ஈ. படித்து ஐ.ஆர்.எஸ்.இ: பாஸ் பண்ணி ரயில்வேயில் ஆயிரத்துக்கும் மேலே சம்பாதிக்கிறேன்னா, அதுக்குக் காரணம் நீ அன்னிக்குப் போட்ட உயிர்ப் பிச்சை தாண்டா.''

மணி சிரித்தான்.

''அன்னிக்கு முட்டாள்மாதிரி ஆற்றிலே இறங்கினே... இன்னிக்கு முட்டாள்மாதிரி பேசறே... நீ ஒண்ணும் மாறவே யில்லை... குடுமி ஒண்ணுதான் மாறியிருக்கு. ஆனால் அன்னிக்கு நீ குடுமி வைச்சுண்டிருந்தது எனக்கு எவ்வளவு சௌகரியமாக இருந்தது தெரியுமா?''

''இன்னிக்கும் மாமி உன்னைப்பற்றிப் பேசுவாள்!''

''டேய், கேதாரம்! அன்னிக்கு உசிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தவன் கேதாரம், என் வகுப்பு மாணவன் என்ற காரணத்துக்காகத்தான் நான் நதியிலே குதிச்சுக் காப் பாத்தப் புறப்பட்டேன்னு நீ நினைக்கிறாயா? அப்படி

நினைச்சா நீ இவ்வளவு படிச்ச படிப்புக்கு அர்த்தமே இல்லை... ஓர் உயிர் தவிக்கிறது. இன்னொரு உயிர் அதைக் கண்டு தவிக்கிறது. காப்பாற்றத் துடிக்கிறது... மனுஷனை மனுஷன் வாழ்க்கைக் கஷ்டங்களிலிருந்து காப்பாற்ற மாட்டான்... அதுவும் பணச் செலவு வந்துவிடும் என்று தெரிந்தால்... ஆனால் மனுஷனுடைய மனத்தையும் சிந்தனையையும் மீறித் துடிக்கிறது பாரு, அதுதாண்டா உயிரின் மனம்... அதற்கும் வீரம் உண்டு, சோகம் உண்டு, தாகம் உண்டு... கேதாரம் என்கிற உயிர் அதனுடைய கூட்டிலிருந்து பிரிந்து போகாமலிருக்க மணி என்கிற கூட்டில் இருக்கிற உயிர் தவிச்சுது... அவ்வளவுதான். கேதாரத்துக்குப் பதிலாக வேறு யாராக இருந்திருந்தாலும், மணிக்குப் பதிலாக வேறு யாராக இருந்திருந்தாலும் இது நடந்திருக்கும்.''

''ரொம்ப எளிசாச் சொல்லிவிட்டே: அது சரி, இன்னிக்கு உன்னுடைய 'புரோகிராம்' என்ன?''

''ஒன்றுமில்லை.''

''என் மாமா...அவர்தாண்டா தர்ம குண்டாமணின்னு கோட்டா செய்வியே, அவர் என் பிராணனை வாங்கிக் கடைசியில் பெண் பார்க்க வரவழைத்துவிட்டார். மூன்று மணிக்குப் பெண் பார்க்கப் போகிறேன்... நீயும் கூட வாயேன்...அரை மணி நேரத்திலே சொஜ்ஜியையும் பஜ்ஜியையும் தின்றுவிட்டு ஏதாவது சினிமா பார்க்கலாம்...''

''உன் மாமா என்னடா நினைப்பார்? அரை மணி நேரத்துக்குள்ளே அவசரப்பட்டால் அவருக்கு ஏமாற்றமாக இருக்கும்.''

''போடா முட்டாள்! அவர் சந்தோஷப்படுவார்... புதன்கிழமை இரண்டாவது பெண்... வெள்ளிக்கிழமை மூன்றாவது பெண்... சனிக்கிழமை நான் பம்பாய்க்குத் திரும்பிப் போகிறேன்!''

''சுயம்வரமே நடத்தியிருக்கலாம்!''

''இதையேதாண்டா, இதே வார்த்தையைத்தாண்டா நானும் அவரிடம் சொன்னேன். மனுஷனுக்குக் கை நிறைய வரதட்சிணை வாங்கணும்னு ஆசை. ஆனால் அவரையும் குத்தம் சொல்ல முடியாது. ஓர் இருபது ரூபாய் கிடைச்சா, தம் இரண்டு பெண்களையும் கலியாணம் செய்து கொடுத்து விடுவார்''

''நீயே ஒருத்தியைப் பண்ணிக் கொள்ளலாமே?''

''என்னடா உளர்றே...? இரண்டு பேர்களுடனும் நான் கூடப் பிறந்தவன் மாதிரி வளர்ந்திருக்கேன்; என்னை ரெண்டும் 'டா' போட்டுப் பேசும்.''

மணி சிரித்தான்.

''என்னடா சிரிக்கிறே?''

''அவர்களில் ஒருத்தியை நீ கலியாணம் பண்ணிக் கொண்டால், அவள் கேட்பாள் உன்னிடம்: 'ஏண்டா இன்னிக்குச் சாயங்காலம் சினிமாவுக்குப் போகலாமாடா'ன்னு அதுக்கு நீ 'சரிடீ' என்பே. இல்லே...?''

''அது நடக்காது...என்ன நாம் போவோமா?''

மணி ஒருகணம் யோசித்தான்: ரொஸாரியோ கண் முன் நின்றார். அவருக்கு அவசரமாக இருநூறு ரூபாய் தேவை. சைக்கிள் விற்றால் இருநூறுக்கு மேலே கிடைக்கும்: லால்சந்திடம் வைத்தால் அவன் மல்லுக்கு நின்று நூற்றைம்பதோடு அனுப்புவான். அப்புறம் கை விரலில் இருக்கிற் மோதிரத்தையும் விற்க வேண்டிவரும். சாயங்காலத்துக்குள் இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண வேண்டும். கேதாரத்துடன் சினிமாவுக்குப் போனால், திரும்பிவர ஆறரை ஏழு மணி என்றாகிவிடும்.

''இன்னிக்கு வேண்டாம்டா, இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்.''

''ஓகே!'' என்ற கேதாரம் ''ஏண்டா மிஸ் மங்களாவை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''என்னடா, திடீர்னு எஸ் எஸ்.ஸின் பெண் ஞாபகம் உனக்கு வர்றது...?''

''சொல்லேன் தெரியுமா?''

''நன்னாத் தெரியும்.''

''எப்படி?''

''வால் ஆட்டாதே. ஒட்ட நறுக்கிவிடுவாள். சகஜ மாகப் பேசுகிற பெண்களிடம் எப்போதுமே ஜாக்கிரதை யாக இருக்கணும். சகஜமாப் பேசுகிற சுபாவத்தைப் பெண்மையின் பலவீனம் என்று ரொம்பப் பேர் தப்பாக நினைக்கிறார்கள்.''

''சீ நான் அப்படி நினைத்துக் கேட்கவில்லை...''

''அவள் ரொம்ப நல்ல பெண்ணாக்கும்!'' என்றான் மணி.

''பம்பாயில் அவளுடைய சிநேகிதி ஒருத்தி இருக் கிறாள். பெயர் ரேணுகா, அவள் மூலமாகத்தான் எனக்கு மங்களா அறிமுகமானாள்.''

''இன்னிக்குக் கார்த்தாலே உன் வண்டியிலிருந்து அவள் இறங்குவதைப் பார்த்தேனே!'' என்று சொல்ல மணி வாயெடுத்தான். ஆனால் அடுத்தகணமே பர்ஸ் கண் முன் நின்றது.

''அப்படியா?''

''எனக்கும் அவள் நல்ல பெண் என்றுதான் படுகிறது.''

''ஆமாம் எதற்கு அடிபோடுகிறாய்? மூணு பெண் களைப் பார்க்கிறது போதாதா?''

''மூணு பெண்களையும் எனக்குப் பிடிக்கப் போவ தில்லை என்று எனக்கு இப்போதே தெரியும்!''

''இப்போதுதான் தெரியுமா? அல்லது பாம்பேயிலிருந்து புறப்படும்போதே தெரியுமா?''

''இப்போது;''

''அப்போ நீ மூன்று பெண்களையும் பார்க்க வேண் டாம்...''

''இல்லை... மாமா சென்ட்ரல் ஸ்டேஷன்லே நட்ட நடுவே நின்னு கத்தி ஆள் கூட்டம் சேர்த்துவிடுவார்.''

''மங்களா...?''—இழுத்தான் மணி.

''எனக்குப் புரிகிறது. அவளுடைய அப்பாவைத் தெரியும். என் மாமாவுக்கு நன்னாத் தெரியும். எனக்கு சுமாராக...''

''அப்போ நன்னாத் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு இருக்கு.''

''என்னடா உளர்றே?''

''சிவா—விஷ்ணு கோயிலிலே தினமும் பாகவதம் நடக் கிறது. சந்தான கோபாலாச்சாரியார் சொல்கிறார். தினமும் கேட்கிறேன். எஸ்.எஸ் ஸும் வர்றார் இன்னிக்கு மூணுபேருமா போவோம்.''

''பாகவதமா?''

''ஏண்டா மூஞ்சியைச் சுளிக்கிறே? 'பயாக்ரபி ஆஃப் லார்ட் கிருஷ்ணா' என்றால்தான் பிடிக்குமா? என்ன வர்றியா?''

''சரி!''

''அப்போ ஆறு மணிக்கு இங்கேயே இரு.''

''ஆகட்டும்!''

''நான் வரேன். எனக்கு நிறைய வேலை இருக்கு.

''எங்கே எந்த ஆபீஸில் வேலைன்னு கேட்டால் பதில் சொல்லமாட்டேன் என்கிறாய்!''

''தரித்திர வேலையடா சொன்னால் என்னைப்பத்தி ரொம்ப மட்டமாய் நினைப்பாய்...எஸ்.எஸ்.எல்.எல்.பாஸ் செய்தவன், பெரிய கால்பந்தாட்டக்காரன் செய்யற வேலையா இதுன்னு கேட்பே...! இந்த அறைக்குள்ளேகூட விடமாட்டே. சரி சரி, நான் வர்றேன்.....''

* * *

மணி பத்து.

'என்கொயரி' கவுண்டரில் கூட்டம் இல்லை. மணி மற்ற கவுண்டர்கள்மீது நோட்டம் விட்டுவிட்டு மங்களா விடம் வந்து சேர்ந்தான். மங்களா 'ரீடர்ஸ் டைஜஸ்டை' ஒரு கையில் வைத்துக்கொண்டு இன்னொரு கையைக் கன்னத்தில் வைத்தவளாய் உட்கார்ந்திருந்தாள்.

''ரயில் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்கக் கூடாது.''

நிமிர்ந்து பார்த்த மங்களா ''ஓ நீங்களா?'' என்றாள்.

''ஏன் கேதாரமோ என்று நினைத்தாயோ...?'' முறுவலித்தான் மணி.

''அவரைப் பற்றி நான் ஏன் நினைக்கணும்? ஏதோ ரேணுகா தகவல் சொல்லி அனுப்பினாள் அவர் மூலமாக. வந்த இடத்தில் அஜாக்கிரதையில் பர்ஸைத் தொலைத்து விட்டு இங்கே வந்து பம்பாய்க்கு பர்த் வேணும்னு அழுதார்...''

''பர்த் இல்லையாக்கும்.''

''ஊஹூம்...இருந்தால் ஏன் அழறார்...? அது சரி, எங்கே இவ்வளவு தூரம்...?''

''இந்தக் கேதாரமும் நானும் எஸ்.எஸ்.எல்.சி. வரை ஒன்றாகப் படித்தவர்கள்—ஈ.ஆர். ஸ்கூலில்.''

''இதைச் சொல்லுவதற்கா வந்தீர்கள்...? இது என்கொயரி கவுண்டர். தகவல் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் வரணும். தகவல்கள் வாங்கிக்கொள்ள எங்களை வேலைக்கு அமர்த்தவில்லை.''

''அந்தக் காலத்தில் எஸ்.எஸ்.எல்.சி.யில் மாவட்டத் திலேயே முதன்மையாக வந்தால் பரிசுகளோ, விழாக் களோ, புகைப்படங்களோ கொடுப்பார்களா, நடத்துவார் களா, எடுப்பார்களா...?''

''இது கல்வி இலாகாவிடம் கேட்கவேண்டிய கேள்வி!''

''என்கொயரின்னு கேட்டேன்...கேதாரத்துக்குப் பரிசு கொடுக்கவில்லை. விழா நடத்தவில்லை...''

''படமும் எடுத்திருக்கமாட்டார்கள்.''

''ரொம்ப சரி. அப்புறம் இண்டர்மீடியட்டை நேஷனல் காலேஜில் படிச்சான். சர்வகலாசாலையிலே ஆறாவது ராங்க்...அப்புறம் குடுமியும் விபூதிப் பட்டையு மாய் என்ஜீனீயரிங் காலேஜில் சேர்ந்தான்...மெட்ராஸில் தான். இந்த ஃபஸ்ட் கிளாஸ் விடமாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சது அங்கேயும்.''

''பம்பாய்க்கும் பர்ஸ்ட் கிளாஸில்தான் போகிறார்.''

''இப்போது பாம்பேயில் டிவிஷனல் என்ஜீனீயர்... ஆயிரத்துக்கும் மேலே சம்பளம்.''

''சரி, ரொம்ப சரி! என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள், அவருடைய சரித்திரத்தை?''

''இத்தனை நேரமாக ஆவலோடு கேட்டாயே...!''

''நான்சென்ஸ்...''

''மாமா பார்த்து வைத்திருக்கிற பெண்களை ஒவ்வொருத்தியா பார்க்கத்தான் வந்திருக்கிறான். இன்னிக்கு ஒண்ணு, புதன் ஒண்ணு, வெள்ளிக்கிழமை ஒண்ணு.''

''திங்கள், செவ்வாய், வியாழன், சனி எல்லாம் இருக்கே...பெண் பார்க்கும் வாரம் யார் கொண்டாடினால் எனக்கு என்ன?''

''உன் அப்பாகூட இன்னிக்கு வீட்டுக்கு அழைத்திருக் கிறார் கேதாரத்தை.''

''என் அம்மாகிட்டே சொல்லி ஆறின காப்பியா கொடுக்கச் சொல்கிறேன்.''

''சாயங்காலம் நான், உன் அப்பா, கேதாரம் மூவருமா பாகவதம் கேட்கப் போகிறோம்.''

''இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா?''

''உனக்கு என்ன அலுப்பா, வெறுப்பா...? என் பேச்சு பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடு. போய்விடுகிறேன்.'

''போய்விடுங்கள்... ஸார்! உங்களுக்கு என்ன வேணும்?'' மங்களா மணிக்குப் பின்னால் அப்போதுதான் வந்து நின்றவரை விசாரித்தாள்; மணி ஒதுங்கி நின்றான்.

''டாடா எக்ஸ்பிரஸில் போகிறேன். பர்த் ரிஸர்வாகியிருக்கு. பன்னிரண்டு மணிக்குப் புறப்படறது... அதற்கு முன்னால் எனக்கும் என் மனைவிக்கும் சாப்பிடணும். 'லஞ்ச்' கிடைக்குமா?''

''ரிஃப்ரஷ்மெண்ட் அறையில் கேளுங்கள்.''

''இதுவும் என்கொயரிதானே?''

''ஆமாம்.''

''உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?''

உங்களை மாதிரி நிறையப்பேர் இதுமாதிரி கேள்விகளைக் கேட்க இந்தக் கவுண்டருக்கு வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.''

''போனில் கேட்டுச் சொல்லுங்கள். நான் முதல் பிரயாணி.''

''அப்படியானால் கிடைக்கும்'' என்றான் மணி.

கேள்வி காதில் விழுவதற்கு முன்பேயே மங்களா போனில் பேசலானாள்.

''சரி...தாங்க்யூ...ஸார், கிடைக்குமாம்.''

''ரயிலில் வந்து சாப்பாடு கொடுப்பார்களா?''

மங்களா விசாரித்தாள். பிறகு ''கிடைக்குமாம்'' என்றாள்.

''தாங்க்ஸ்...'' என்றார் முதல் வகுப்புப் பிரயாணி.

அவர் திரும்பிச் சென்றதும் ''நல்ல உத்தியோகம்!'' என்றான் மணி.

''ஓ...நீங்கள் இன்னும் போகலியா? நாங்கள் இங்கே உதவி பண்ணத்தானே இருக்கிறோம்.''

''இதுவே பெரிய செய்தி! வீட்டிலேயிருந்து என்கொயரிக்கு போன் பண்ணினால், யாருமே போனை இங்கே எடுக்கிறதில்லை என்ற புகார் பேப்பரில் அடிக்கடி வருகிறதே...''

''எப்பவாவது ஒண்ணு ரெண்டுதரம் ஒரே ஆளுக்கு நேர்ந்திருக்கும். போனை வைச்ச கையோடு ஆத்திரமா வீடு நிறைய பேப்பரும் பேனாவும் இருக்கேன்னு கடிதாசு எழுதிப் போட்டிருப்பான். கடைசி நிமிஷம்வரை விளம்பரத்துக்குக் காத்திருந்துவிட்டு ஆசிரியர் அதைப் பிரசுரித்திருப்பார்...''

''அப்போது புகார் ஆதாரமில்லாத புகார் என்று சொல்லு...''

''பொதுஜனத் தொடர்பு அதிகாரின்னு ஒருவர் இருக்கிறார்; அவரிடம் கேளுங்கள்.''

''தாங்க்ஸ்!'' என்று சிரித்த மணி ''இப்போது உன் அப்பாவைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்' என்றான்.

''கூடவே தலைவலி மாத்திரையையும் வாங்கிக் கொண்டு போங்கள்'' என்றாள் மங்களா. மணி போன சற்றைக்கெல்லாம் மேரி மங்களாவைப் பார்க்க வந்தாள்.

9

கார்டு பச்சைக்கொடி காட்டினால் ரயில் புறப்படும். சிவப்புக்கொடி காட்டினால் புறப்பட முடியாது.

—எல்லாருக்கும் தெரிந்த விஷயம்

ஞாயிற்றுக்கிழமை காலை பிருந்தாவன் எக்ஸ்பிரஸுக்கு கார்டாகச் சென்ற ரொஸாரியோவுக்கு வருகிற ஏப்ரலில் ஐம்பத்திரண்டு வயது நிறையும். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் மனைவி க்ளாரா ஆறு வயது மேரியையும் மூன்று வயது எட்மண்டையும் அவருடைய தோளின்மேல் சாத்திவிட்டுக் கண்களை மூடினாள். ஓரிரு ஆண்டுகளுக்குக் குழந்தைகளை உறவினர் களிடமும் அக்கம் பக்கத்து வீட்டாரிடமும் 'பார்த்துக் கொள்ள'ச் சொல்லிவிட்டு ரொஸாரியோ தம் டியூட்டிக்குப் போய் வந்துகொண்டிருந்தார். அகால வேளைகளில் புறப்படுவதும், திரும்பி வருவதும் அவருடைய வேலையில் சகஜமான நிகழ்ச்சிகள். மேரி பள்ளிக்கூடம் செல்ல, எட்மண்ட் அக்கம்பக்கத்து வீடுகளிலும் உறவினர்களுடைய இல்லங்களிலும், யாருடைய அன்பும் பரிவும் இல்லாமல் திரிந்துகொண்டு வந்தான்.

சுமார் மூன்று வருடங்கள் ரொஸாரியோ பல்லைக் கடித்துக்கொண்டு நாட்களைத் தள்ளினார். முப்பத்து நான்காம் வயதில் மனைவியை இழந்த அவர் இரண்டாம் கலியாணத்தைப்பற்றி முதலிலெல்லாம் நினைத்துப் பார்க்க வில்லை. க்ளாராவைக் காதல் மணம் செய்துகொண்டிருந்த அவர், அவளுடைய ஆத்மாவின் திருப்தியையும் நிம்மதியை யுமே வேண்டினார்.

ஆனால் நாள் செல்லச் செல்ல, வீட்டின் அவலம் கண்ணில் அறைய அறைய அவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கூடப்பிறந்த தம்பியின் குடும்பத்தில் குழந்தை களை விட்டுவிடலாமா என்று ஓரிரு மாதங்கள் யோசித் தார். ஆனால் தம்பி வடக்கே கோரக்பூரில் ரயில்வேயில் கார்டாக இருந்தான். அவனுக்கே ஐந்தாறு குழந்தைகள். அவர்களுடன் இவர்களையும் சேர்த்தால் தம்பியின் மனைவி பாரத்தைத் தாள முடியாமல் ஒடிந்துபோவாள். மேலும் அவருடைய குழந்தைகளை அடிக்கடி பார்க்கக்கூட இயலாது. மனைவியை பறிகொடுத்த துக்கத்தோடு, குழந்தைகளைப் பிரிந்து வாழ வேண்டிய துர்ப்பாக்கியமும் அதனால் ஏற்படக்கூடிய வேதனையும் அவரை அரிக்க ஆரம்பிக்கும்.

ஒருநாள் டிவிஷனல் டிராஃபிக் சூபரிண்டெண்டின் பிறந்த நாளுக்குச் சென்ற ரொஸாரியோ, அந்த அதிகாரி யின் மைத்துனன் பெண் லூஸியைச் சந்திக்க நேர்ந்தது. லூஸிக்கு இருபத்தாறு வயது. கணவனை ஒரு விபத்தில் இழந்தவள். குழந்தைகள் இல்லாதவள்.

விருந்தில் சந்தித்த இருவரும் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்த டி.டி.எஸ். மறுநாள் இருவரையும் தனித் தனியே கூப்பிட்டு அனுப்பிப் பேசினார். எடுத்த எடுப்பிலேயே லூஸி தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். ரொஸாரியோ மூன்று மாதங்கள் அவகாசம் கேட்டார். இந்த மூன்று மாதங்களுக்குள் தன் மனம் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வரும் என்று அவர் நம்பினார். ஆனால் அந்தக் குறுகிய காலத்தில் லூஸி நாலைந்து தடவைகள் அவருடைய வீட்டுக்கு வந்தாகிவிட்டது. எட்மண்டுக்கு ஆறு வயது ஆயினும் அவனைத் தூக்கி எடுத்துக் கொஞ்சினாள். மேரிக்குக் கணக்கும் பூகோளமும் சொல்லிக் கொடுத்தாள். லூஸி பரிபூரணமாகத் தன் குழந்தைகள்மீது அன்பும் பாசமும் காட்டுகிறாள் என்று ரொஸாரியோ நம்பினார். அவருடைய உள்ளம் கறைபடியாத உள்ளம். லூஸிக்கு

ஆதரவு காட்ட இந்த உலகத்தில் யாரும் இல்லை என்றோ, பணக்காரச் சொந்தக்காரர்கள் அவ்வப்போது அவளுடைய நச்சரிப்பால் உந்தப்பட்டு அளிக்கும் உதவிகளைக் கொண்டு வாழ்கிறவள் அவள் என்றோ அவருக்குத் தெரியாது. டி.டி. எஸ். ஸின் மைத்துனன் பெண் மைத்துனன் இறந்து போயாகிவிட்டது; பெண்ணும் கணவனை இழந்தவள் என்ற சமாசாரங்கள்தான் தெரியும்.

மூன்று மாத அவகாசம் கேட்டவர் இரண்டே மாதங்களில் தம் சம்மதத்தைத் தெரிவித்தார் எளிய முறையில் கலியாணம் நடந்தது. அக்கம் பக்கத்தில் குழந்தைகளை விட்டு விட்டுத் தம்பதியர் கோடைக்கானல் சென்றனர். முதல் மனைவி க்ளாரா, குழந்தைகளின் க்ஷேமத்துக்காக இரண்டாம் கலியாணம் செய்துகொண்ட அவரை, கல்லறையில் இருந்துகொண்டே வாழ்த்துவாள் என்று ரொஸாரியோ மனப்பூர்வமாக நம்பினார்.

ஏழெட்டு மாதங்களுக்கு வண்டி சரியாகத்தான் ஓடியது. அதன்பின்தான் கோளாறு மெள்ள மெள்ளத் தெரியலாயிற்று. முணுமுணுக்க ஆரம்பித்த லூஸி நாளடைவில் இரையலானாள். பத்து வயது மேரி படிப்பையும் பார்த்துக் கொண்டு வீட்டு வேலைகளையும் கவனிக்க வேண்டியதாயிற்று. எத்தனையோ நாட்கள் பகலில் மட்டும் வீட்டில் இருக்காத லூஸி நாள் செல்லச் செல்ல இரவுகளிலும் நேரம் கழித்து வரலானாள். ரயில்வே கார்டின் வேலை நேர முறைகள் அவளுடைய பொழுதுபோக்குகளுக்குச் சாதகமாக அமைந்தன. ஆங்கிலோ— இந்தியன் அஸோஸியேஷனில் அவள் கமிட்டி அங்கத்தினரிலிருந்து, உதவி காரியதரிசி பதவிக்கு உயர்ந்தாள் குழந்தைகளைப் பெறாததால், உடற்கட்டு கலையாமல் யெவ்வனத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தது. அழகைவிட அவளிடம் கவர்ச்சிதான் அதிகம். அஸோஸியேஷன் விருந்துகளிலும், தேநீர் விருந்துகளிலும் அவள் பளிச்சென்று நின்றாள்.

அவளுடன் நடனம் ஆடுவதில் பலர் பெருமையடைந்தார்கள். சிலர் தம் வீட்டில் விருந்துக்கு அழைத்தார்கள்; அங்கே விருந்துக்கு முன்னால் இசை, நடனம், மதுவகைகள் எல்லாம் விளையாடின...

அநாதையாக இருந்த கைம்பெண் லூஸிக்கு அடைக்கலம் வேண்டியிருந்தது. அப்பாவி ரொஸாரியோ கிடைத்தார். அதன்பின் அவளுடைய சுபாவம் வெளியே வந்தது; இதைப் புரிந்துகொள்ள ரொஸாரியோவுக்கு ஓரிரு வருடங்கள் ஆகின. அப்போது அவர் நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். கர்த்தரின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, பச்சைக்கொடியும், சிவப்புக்கொடியுமாக அவர் நாட்களைத் தள்ளலானார்

தந்தையால் குழந்தைகள்மீது முழுக் கவனத்தையும் காட்ட முடியவில்லை. சித்திக்கு மூத்தாள் குழந்தைகளின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணமே பிறக்கவில்லை.

மேரியின் பிஞ்சு உள்ளத்தில் அப்பாவின் வேதனை முள்ளாகக் குத்தியது. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவருடைய சௌகரியங்களிலும் தன் படிப்பிலும் முனைந்து நின்றாள். அம்மாவையே உரித்து வைத்திருந்த அவளைப் பார்க்கும்போதெல்லாம் ரொஸாரியோவின் கண்கள் ரத்தத்தை வடிக்கும். தாம் இருந்தும் தம் பெண் அநாதை என்று மனம் விம்மும்.

எப்படியோ காலம் ஓடியது; மேரிக்குப் பதினாறு வயது ஆகியது. தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் படித்தாள்; டெலிபோன் ஆபரேட்டர் பயிற்சிக்குச் சென்றாள். ஞாயிறு தவறாமல் மாதா கோவிலுக்குச் சென்றாள். இளம் வயதிலேயே அடிபட்ட உள்ளம் வயது வந்தபோது ஆத்திரத்தில் கத்தவில்லை. அப்பாவையும் அதன்பின் கர்த்தரையும் திருப்திபடுத்துவதுதான் தன் வாழ்க்கையின் லட்சியம் என்று கருதினாள்.

ரயில்வேயிலேயே டெலிபோன் ஆபரேட்டர் வேலை கிடைத்தது. சென்ட்ரல் ஸ்டேஷனில் போட்டார்கள். ஆங்கிலோ இந்திய பாணியில் ஆடை தரிக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. விலை குறைந்த வாயில் புடவைகளையும் சோளிகளையும் வாங்கினாள்.

மேரியின் நடையே ஒரு தனி அழகு. பேசினால் இசையின் இனிப்பைக் காது உணரும். பிறர் கஷ்டப்படுவதைக் கண்டால் அவள் கண்ணில் நீர் தளும்பும். எட்மண்ட் அப்பாவுடன் எதிர்த்துப் பேசும்போதோ, சித்தி அவரை அலட்சியம் செய்யும்போதோ மேரி துவண்டு போவாள். அப்பாமீது இரக்கமும், பரிவும் பீறிடும். அதே நேரத்தில் சகோதர பாசமும், அம்மா ஸ்தானத்தில் இருக்கிற சித்திமீது அபிமானமும் பொங்கி எழும். அழுது தீர்த்து மனச்சாந்தி பெற முயல்வாள். எட்மண்டிடம் அவன் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று கெஞ்சுவாள். ஊதாரித்தனமாக செலவு செய்து வீட்டின் பொறுப்பையே உணராத சித்தியிடம், அவளுடைய உதாசீனத்தையும் பொருட்படுத்தாமல், அப்பாவிடம் அன்பும் மரியாதையும் காட்டும்படி கெஞ்சுவாள்.

இந்த மேரிக்கு இப்போது இருபத்திநாலு வயது. இரண்டு வருடங்களுக்கு முன்னால், சற்றுப் பூசினாற்போல் இருந்த அவள் இளைத்துப் போயிருந்தாள். கண்களின் கீழே மன ஆயாசத்தின் முத்திரைகளாகக் கருங்கோடுகள் பிறந்திருந்தன. உதடுகள் புன்முறுவலைக் காட்டினாலும் ஒருவகை சோகம் முகமெல்லாம் படர்ந்திருப்பதாகத் தோன்றியது. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே மாதா கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்தவள் ஒரு வருட காலமாகத் தினந்தோறும் சென்று வருகிறாள். அவள் என்ன பிரார்த்தனை யாருக்காகச் செய்கிறாள் என்பது அந்தக் கர்த்தருக்குத்தான் தெரியும்.

இருபத்திரண்டாவது வயதில், வானத்தில் எரி நட்சத்திரம் திடீரெனப் பூப்பதுபோல, மேரியின் மனத்தில் காதல் பூத்தது. குழந்தைப் பருவத்தில் சித்தி வந்த நாளிலிருந்து அவளுடைய மனத்தில் அசையாமல் ஆழ்ந்திருந்த வைராக்கியம் என்றென்றும் கன்னியாகவே இருந்துவிட வேண்டும் என்பதுதான். சித்தியின் ஆடம்பர, அலட்சியப் போக்கு, ஊதாரித்தனமான வாழ்க்கை, கணவருக்குச் செய்யும் அநீதி இவற்றையெல்லாம் மேரி ஒரு படிப்பினையாகக் கருதினாள். தானும் ஒருநாள் ஒருவனுக்கு மனைவியாகி, சித்தியைப் போல் மாறிவிடுவோமோ என்ற பயம். அசம்பாவிதமாய், அர்த்தமில்லாமல், அவளுக்கு எழுந்து, அவளைத் தினம் தினம் உலுக்கியது. பருவம் வந்ததும் முளைக்க ஆரம்பித்த இச்சைகளை அழுக்கு எனப் பாவித்துக் கட்டிப்போட்டாள். நடனம், சினிமா இவையெல்லாம் மனத்தைக் கிளறி, உடலைத் திசை தெரியாமல் அலையவிடும் என்று மிரண்டு களியாட்டங்களையும் கேளிக்கைகளையும் தவிர்த்தாள்.

ஆனால் இந்த வைராக்கியம் உதவி ஜெனரல் மானேஜருடைய சுருக்கு எழுத்தாளர் பலராமனுடன் பழக ஆரம்பித்தபோது தளர ஆரம்பித்தது. பலராமன் மேரியைச் சந்தித்தது அவளுடைய விதியின் கொடுமை. அவன் தன் மீது உயிரையே வைத்திருக்கிறான் என்பதை அவள் அறிவாள். ஆனால் பலராமனுடைய தாயாரும் தகப்பனாரும் பழமையில் ஊறியவர்கள். அவர்களுடைய கோபத்துக்கும் வேதனைக்கும் பலராமனைப் பலியிட மேரி விரும்பவில்லை. என்னதான் அன்புடன் பழகினாலும் அவள் விலகியே நிற்க முயன்றாள். காதலைத் துறக்கவும் தயாராக இருந்தாள். பலராமன் விடவில்லை. உற்றார் உறவினர்களையும், தந்தை வைத்துவிட்டுப் போகக்கூடிய வீட்டையும் தியாகம் செய்யச் சித்தமாயிருந்தான். ரொஸாரியோவையே சந்தித்து, தன் ஆசையையும் முடிவையும் சொன்னான்.

ரொஸாரியோவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அந்தண வகுப்பில் பிறந்த ஓர் இளைஞன் தன் பெண்ணை மணக்க விரும்புவதைக் கண்டு மனம் வெறுக்க

வில்லை. ஆனால் ஜாதி வேற்றுமைகள், மண வாழ்க்கையின் தினசரி ஓட்டத்தில் அவ்வப்போது தலைதூக்குமே? அப்போது பெண்ணும் அவனும் எப்படி நடந்துகொள்ளுவார்கள்? காதலிக்கும்போது ஜாதியைப்பற்றி நினையாதவர்கள் தாம்பத்தியத்தின் இளவேனில் கழிந்தபின் எப்படி நடந்து கொள்ளுவார்கள்? மேரியைப்பற்றி அவர் சிறிதேனும் பயப்படவில்லைதான். ஆனால் பலராமன் என்றென்றும் ஒரே மாதிரியாக இருப்பானா என்ற கேள்வியும், கேள்வி தோற்றுவித்த பயமும் அவருள் எழுந்தது. அவருடைய பயத்துக்கெல்லாம் உறுதிமொழிகளால் சமாதானம் சொன்னான் பலராமன்.

ஒரு வெள்ளிக்கிழமை பதிவுத் திருமணம் நடத்திக் கொள்ளுவது என்று நிச்சயமாயிற்று கடைசிவரையில் ரகசியமாகவே இருந்த விஷயம் பிள்ளையின் மாமாவுக்குத் தெரிய வந்தது. ஊரில் இருக்கிற அப்பாவைச் சந்தித்துத் திரும்பினார். அங்கிருந்து அவருக்கு உடல் நலம் சரியில்லை என்று தந்தி பறந்தது. மாமாவே பலவந்தமாகப் பலராமனைத் தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் ஏற்றிக்கொண்டு போனார். போனவர் ஒரு மாதத்துக்குப் பலராமனை விடவில்லை. கிராமத்தில் ஜாதியார் அனைவரும் பலராமனுடைய மூளையைக் குழப்பினார்கள் அப்பா 'தூக்குக் கயிற்றில் தொங்கிவிடுவேன்' என்று பயமுறுத்தினார். அம்மா தலையை விரித்துப் போட்டுக்கொண்டு கதறினாள்.

மொத்தத்தில் கலியாணம் நடக்கவில்லை. யார் யார் காலையோ பிடித்து, மாமாக்காரர் பலராமனைச்சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார்.

அதன்பின் எரிநட்சத்திரம் வானிலிருந்து மறைந்தது. மேரி விதியை நொந்துகொண்டாள். பலராமன் என்ற பெயரின் வாசனை மட்டும் அவளுடைய உள்ளத்தில் நறுமணம் வீசிக்கொண்டேயிருந்தது.

* * *

ரொஸாரியோவின் பிள்ளை எட்மண்ட் ஹாக்கி வீரன். முழுக்கீ முழுக்க இளம் பருவத்திலிருந்து சுதந்திரமாகவே அலைந்து திரிந்த அவன், சித்தியையே அவளுடைய எல்லாக் குணங்களிலும் பின்பற்றினான். படிப்பு ஏற வில்லை. குடிப்பழக்கம் பதினாறர்ம் வயதிலேயே அவனைத் தாவிப் பிடித்துக்கொண்டது. பெற்ற தகப்பனாரை அவன் இன்னும் கைநீட்டி அடிக்கவில்லை. மற்றபடி எல்லாம் நடந்துவிட்டது.

இந்த எட்மண்டை எப்படியோ, திருவொற்றியூரில் ஒரு தொழிற்கூடத்தில் ஃபிட்டராகப் பயிற்சி பெறச் செய்து, அதே இடத்தில் வேலையும் வாங்கிக் கொடித்தார். ஒரு வருஷத்தில் அவன் அங்கே தன் திறமையைக் காட்டினான். போனஸ் தகராறில் தீவிரமாகப் பங்கு கொண்டான்: வொர்க்ஸ் மானேஜரை 'கேரோ' செய்வதில் பெரும் பங்கை ஏற்று, அவர் திமிறினபோது மண்டையிலும் அடித்தான்: லாக்-அவுட்டும் அதன்பின் வேலைநீக்கமும் நடந்தன.

எட்மண்ட் மீண்டும் தன்னிச்சையில் திரிய ஆரம்பித்தான். தகப்பனாரிடம் பணம் கறப்பது ஒன்றுதான் அவன் வெற்றியுடன் செய்த காரியம்.

ரொஸாரியோ கர்த்தரின்மீது பாரத்தைப் போட்டு, நெஞ்சில் தைத்த முள்ளை மறக்க முயன்றார்.

* * *

மேரி 'என்கொயரி' கவுண்டரின் எதிரே வந்து நின்றாள்.

''குட்மார்னிங் மங்களா!''

''ஹலோ மேரி...குட்மார்னிங்.''

''ரொம்ப பிஸியா இருக்கியா...!''

''ஊஹும்...இத்தனை நேரம் மணிதான் 'போர்' அடித்தான்.''

''வரும்போது எதிரே பார்த்தேன்... அப்பாவைப் பார்க்க வேண்டும்.''

''பாரேன்.''

''நீயும் கூட இருக்க வேண்டும்.''

''என்ன விஷயம்?'' என்று கேட்டாள் மங்களா.

''எட்மண்ட் விஷயமாய்!''

''உன் தம்பிக்கு என்ன? நன்றாகத்தானே சிகரெட் குடித்து ஊர் சுற்றுகிறான்?''

''இரண்டு நாட்களா வீட்டிலே ஒரே ரகளை: பணம் பணம் என்று பிய்த்து எடுக்கிறான்!''

''குதிரைப் பந்தயத்தில் நிறைய விட்டிருப்பான்...அது சரி! உங்க வீட்டு ரகளைக்கும் என் அப்பாவை நீ பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

''வெஸ்டர்ன் ரயில்வேயில், ரயில்வே வொர்க்ஷாப்பில் ஃபிட்டர், ஸ்மித்தீ, டர்னர் என்று நிறையப் பேர் எடுக்கப் போகிறார்கள். இப்போதைக்கு டெம்பரரி வேலைதான்: எட்மண்டை இண்டர் வ்யூவுக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள்!''

''என்ன? எட்மண்டுக்கு இண்டர்வ் யூவா? அவன் அப்ளிகேஷன் போட்டானா? இல்லை நீ அவன் கையெழுத்தைப் போட்டு அனுப்பினாயா?''

''பேப்பர்லே விளம்பரத்தைப் பார்த்ததும் அவனிடம் காட்டிக் கெஞ்சினேன்...அதைவிட்டுத் தள்ளு: உன் அப்பா உதவி பண்ணினால் போதும்...''

''என் அப்பா இங்கே எஸ்.எஸ். மேற்கத்திய ரயில்வேயில் யாரைத் தெரியப் போகிறது?''

''சொன்னவள், அடுத்தகணமே நிமிர்ந்து உட்கார்ந்தாள். கேதாரம் வெஸ்டர்ன் ரயில்வேயில் டிவிஷனல் என்ஜினீயர். அவனையும் அவன் மாமாவையும் அப்பாவுக்குத் தெரியும். அவள் யோசிக்கையிலேயே மேரி ஆயாசத்துடன் கேட்டாள்; ''யாரையும் தெரியாது என்றா சொல்லறே?''

''கொஞ்சம் பொறு.''

''சரி.''

''இதோ பார். இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை, நாளை திங்கள். நாளைக்கு மத்தியானம் எனக்கு ஓய்வு தான். அப்பா வீட்டில் இருப்பார். சரியா மூணு மணிக்கு வா. எட்மண்டை அழைத்துக்கொண்டு வராதே.''

''தாங்க்யூ, மங்களா...யாராவது இருக்கிறார்களா?''

''எல்லாம் அப்புறம் சொல்றேன்: ஆனால் ஒண்ணு: வேலை கிடைச்சா எட்மண்ட் ஒழுங்கா இருக்கணும்.''

''நான் எப்படி மங்களா இதற்கு உத்தரவாதம் கொடுக்க முடியும்? நான் அவனுக்காகப் பிரார்த்தனை பண்ணறேன். அதுதான் என்னாலே முடியும்.''

மங்களா சிரித்தாள்.

''கவலைப்படாதே. அப்புறம் இன்னொரு சமாசாரம். எங்க வீட்டிலே இதுவரையில் யாருக்குமே பிறந்தநாள் கொண்டாடியதில்லை. பதினோரு பேர் இருக்கிறோம்: எப்படிக் கொண்டாடுகிறது. ஆனால் இந்த வருஷம் சுஜாவின் பிறந்த நாளைக் கொண்டாடுறதுன்னு முடிவு செய்திருக்கிறோம்.''

''குட்...வெரிகுட்...அவளுக்கு என் நல்வாழ்த்துக்கள்''

''இதை இன்னிக்கே சொல்லாதே: வியாழக்கிழமை அன்னிக்கு. ராத்திரி 'கேக்'கை வெட்டறபோது சொல்லு. உன் அப்பாவையும் அழைக்கப் போகிறோம்.''

''அவருக்கு டியூட்டி இருக்கோ என்னவோ?''

''அதைப்பற்றி அப்புறம் பார்க்கலாம். நீ உன் போக்கிலே எப்போதும்போல் சாயங்காலத்திலிருந்து

ராத்திரிவரை மாதா கோயில்லே போய் ஒண்டிக்காதே... வியாழக்கிழமை நினைவிருக்கட்டும்.''

''தாங்க்ஸ், மங்களா!''

''ஆமாம் உன் மாற்றாந்தாய் எங்கே? இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாளா?''

''ராத்திரி ஒரு மணிக்குத்தான் வந்தாள். சனிக்கிழமை இரவு...''

''மேரி அவளுக்கு இப்போ வயசு முப்பத்தைந்து இருக்குமா?''

''அவளுக்கு நாற்பத்தொண்ணு!''

''கிண் என்று இருக்கள். உடம்பை இப்படி வைச்சுக்க அவள் என்ன சாப்பிடுகிறாள்?''

''வேறு பேச்சு இருந்தால் பேசு, மங்களா!''

''உன் அப்பா ஒரு அப்பாவி.''

''புதுசா ஏதேனும் சொல்லு.''

மங்களா சிரித்தாள். புதுசா சொல்லணுமா? நீ ஒரு முட்டாள்.

''எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லாதே!'' மேரி சிரித்தாள்.

''உன் சுபாவத்துக்கும் குணத்துக்கும் நீ கலியாணம் செய்துகொண்டு நிம்மதியா நிறைய குழந்தைகளைப் பெத்துக் கொண்டிருக்கணும் மேரி! நீ உன் வாழ்க்கையைப் பாழடிச்சுண்டிருக்கே!''

''உஸ்...இது என்கொயரி! மாரேஜ்ப்யூரோ இல்லே...''

''நாளைக்கு மூன்று மணிக்கு'' என்றாள் மங்களா.

''ஆகட்டும்!''

மேரி மெதுவாக நடந்து சென்றாள். அவளுடைய ஊதா நிற வாயில் புடவையையும் அதற்கேற்ற சோளியையும் பார்த்துக்கொண்டே மங்களா உட்கார்ந்தாள்.

அவளுடைய உள்ளத்தில் ஒருவித பரிவும், வேதனையும் எழுந்தன. மனம் அதேசமயத்தில் பலராமனையும் சபித்தது. அவனல்லவா இவளை இப்படி உருத்தெரியாமல் வாழ்வில் ருசி இல்லாமல் அடித்துவிட்டான்?

அடுத்தகணம் ரீடர்ஸ் டைஜஸ்டில் பார்வையைச் செலுத்தலானாள். ஆனால் இப்போது திடீரென்று வெஸ்டர்ன் ரயில்வே டிவிஷனல் என்ஜினீயரின் நினைவு வந்தது.

எட்மண்டுக்கு ஒரு சிறிய வேலைகூடவா அவரால் வாங்கிக் கொடுக்க முடியாது? முடியாமற் போனால் அவர் என்ன அதிகாரி? எட்மண்டின் வேலையைவிட ரொஸாரியோவின் விடுதலையைத்தான் மங்களா பெரிதாக நினைத்தாள்.

10

ஆப்பிள் ஒன்று — பைசா 84
ஆப்பிள் ஆறு — ரூபாய் 5
சாத்துகுடி டஜன் — ரூபாய் 3
ஸப்போட்டா டஜன் — ரூபாய் 1-50
வாழைப்பழம் டஜன் — ரூபாய் 1-25
—சென்ட்ரல் ஸ்டேஷன் பழவண்டியில் விலைப் பட்டியல்.

அன்று அடையாற்றில் ஜம்புநாதன் பார்த்து வைத்த முதல் பெண்ணைப் பார்த்துவிட்டுக் கேதாரம் அவருடன் சென்ட்ரலுக்குத் திரும்பினான். அப்போது மணி நான்கு.

''என்னடா சொல்லறே?'' என்று ஆரம்பித்தார் மாமா. அவர்களைக் கொண்டு வந்துவிட்ட கார் திரும்பியதும்.

''ஒண்ணும் சொல்லவில்லை.''

''பிடிச்சிருக்கா?''

''லேடஸ்டு அம்பாஸடர், மார்க் டூ, கடற்கரைக் காற்று சுகமாக இருந்தது.''

''ஏண்டா, கார்ரைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாய் என்றாடா கேட்டேன்? பெண் எப்படி?''

''இரட்டை நாடி. இடுப்புச் சதை வழியறது. பவுடரை அப்பிண்டு இருக்கா...உருண்டை மூஞ்சி. கழுத்தைத் தேடிப் பார்த்தேன் கிடைக்கலை. தலை 'பாப்' நன்றாயிருந்தது.''

''அவளுக்கு என்னடா குறைச்சல்?''

''நான் குறைவா எதையும் சொல்லலை...பார்த்ததைச் சொன்னேன்.''

''அவருடைய தொழிற்சாலையிலே வருஷாந்திர வருமானம் எவ்வளவு தெரியுமா?''

''தெரியாது.''

''ஒன்றரைக் கோடி ரூபாய் நிகர லாபம் ஆறு லட்சம் ரூபாயாம்: அதிலே பாவம், நாலேகால் லட்சம் வரி கட்டினாராம்.''

''கட்டின வரியே நாலேகால்னா கட்டாத வரியின் வரும்படி நிறைய இருக்குமே?''

''டேய் என்னடா சம்பந்தமில்லாமல் பேசிண்டே போகிறே? எனக்கு இந்த வரன் பிடிச்சிருக்கு...மாப்பிள்ளை யானால் உன்னை வொர்க்ஸ் மானேஜராகப் போட்டுண்டு, மூவாயிரம் சம்பளத்தையும் கொடுத்து, வீட்டோடு வைச்சுண்டுடலாம்னு ஆசைப்படறார் அவர்... ஐம்பத் தெட்டு வயசுவரை நீ என்னதான் ரயில்வேயிலே உழைச் சாலும் என்னடா கிடைச்சுடப் போறது? இன்னிக்கெல் லாம் இருந்தால் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ரூபாயிலே ரிடையராவாய்!''

''மாமா, மாமா! நான் பிறந்த வருஷம் நாற்பத்தி ஒண்ணு, நான் 1999-ம் வருஷம்தான் கணக்குப்படி ரிடையராவேன். ஆனால் நீங்க சொன்ன இரண்டாயிரத்து இருநூற்று சொச்சத்திலே இல்லே!''

''நிறுத்துடா...பெரிய பங்களா...மூணு ஏர்கண்டிஷன் அறைகள். பாதிச் சொத்து பெண்ணுக்கு கசக்கிறதாடா.''

''கசக்கலையே? பீடா கசக்கலை...''

''சொல்லுடா கண்ணா!''

''அவசரப்பட்டுண்டு எதையும் முடிவு பண்ணக்கூடாது. புதன் ஒரு பெண், வெள்ளி ஒரு பெண். அங்கேயும் டிபன் காப்பி சாப்பிடலாம்.''

''வேண்டாம்டா... வேண்டாம். அன்னிக்கு என்னமோ அப்படிச் சொன்னேன்... வேண்டாம்... கிராம்ப்டன் என்ஜினீயருக்கு மூணு பெண்ணும் மூணு பிள்ளையும், எல்லாம் மெடிகல் என்ஜினீயரிங் என்று படிக்கிறது. மூத்த பெண்ணுக்கு இருக்கிறதையெல்லாம் செலவு செய்ய முடியுமா? இந்த வரன் ஒரே பெண்: கோடீசுவரனின் பெண்.''

''ஒய்வு பெற்ற பிரதம காரியதரிசியின் பெண்ணை வெள்ளிக்கிழமை பார்க்கணும்.''

''அதுவும் வேண்டாம். வீட்டிலே அவரைச் சுத்தி மூணு குடும்பங்கள் இருக்குடா. அண்ணா ரிடயர்ட் வாத்தியார். தம்பி ரெவின்யூ இலாகா கிளார்க். இது போறாதுன்னு அப்பா அம்மா தொண்ணூறும் என்பதுமா வேறு கிழடா இருக்கு... வெள்ளிக்கிழமை நாம் பெண் பார்க்கவே போக வேண்டாம்... இதை முடிச்சுடுவோம்: நீ சம்மதத்தைச் சொன்னால் இன்னிக்கு ராத்திரியே பம்பாய் போயிட லாம்.''

''சரி சொல்றேன்... சொல்லிவிட்டு இன்னிக்கே புறப் பட்டும் போயிடறேன்... ஆனால் அதுக்கு முன்னாடி நான் ஒரு கேள்வி கேட்பேன்... அதுக்குப் பதில் சொல்வீர்களா?... உண்மையான பதிலாக இருக்கணும்.''

''சொல்றேன், சொல்றேன்! என் தலை எழுத்து. உன்னை வளர்த்துப் படிக்க வைச்சு ஆளாக்கினேன், இன்னிக்கு நீ உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்து என்னை ஆட்டி வைக்கிறாய் கேளு சொல்றேன்.''

''வரதட்சிணை எவ்வளவு கேட்டிருக்கிறீர்கள்...?''

''மூப்பதாயிரம். ஒரு கார்.''

''ரொம்ப நல்லது. அப்புறம்... அப்புறம்...? உங்க முதியோர் ஆசிரமத்துக்கு ஏதாவது நன்கொடை கேட்டிருக் கிறீர்களா?''

''டேய்! அது என் சொந்த விஷயம். இந்த விவகாரங் களில் தலையிடாதே!''

''அப்போ சரி.''

கேதாரம் எழுந்தான்.

''என்னடா, எழுந்திருக்கிறே?''

''பேச்சு முறிந்தது. என் கலியாணமும் என் சொந்த விஷயம்தான்.''

''டேய்!''

''என் கேள்விக்குப் பதில் தேவை!''

''இருடா, சொல்லித் தொலைக்கிறேன். குத்தாலத் திலே அவர் பேரிலே, 'ஆதிசேஷன் ஹால்'னு ஒரு மண்டபம் கட்டறேன்னேன். இந்த வருஷத்து லாபத்திலே கால்வாசியை நன்கொடையாகத் தர்றேன்னார். ஆனால் ஒரு நிபந்தனை...''

''நான் அவளை... பெயரென்ன...? உம், ஆமாம்... அபீதம் அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டு மாக்கும்...''

நிபந்தனை அது இல்லைடா... உதவி ஜனாதிபதியோ, காபினெட் மந்திரியோ வந்து திறந்துவைக்க வேணுமாம்... யாராவது ஒரு பத்திரிகைக்காரர்கள் மலர் கொண்டுவர வேண்டுமாம்... ஏதோ அசட்டுத் தைரியத்தில், எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். ரயில்வே மந்திரி ஹனுமந் தையா இருக்கார். இது மாதிரி நல்ல காரியங்கள் என்றால் வேறு யாரையும் வரவிடமாட்டார்'ன்னு அவரிடம் சொல்லி விட்டேன்... நீ என்ன சொல்லறே?''

''பணம் எப்போ வரும்?''

''இந்த மார்ச்சு முடிஞ்சா லாபக் கணக்கு தெரியும்.''

''அப்போ ஏப்ரலில் கலியாணமா?''

''ஆமாம்.''

''பணம் வந்தப்புறம்தான்.''

''ஆமாம்... ஆமாம்...''

''எனக்கு அதுக்கு முன்னாலேயே கல்யாணம் பண்ணிக் கணும்னு ஆசையா இருக்கு.''

''அது எப்படியடா, முடியும்?''

''நீங்க ஆசிரமத்துக்குத் தனியா வாங்கிக்கொள்ளுங் கள். இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?''

''என்னடா, என்னைப் பைத்தியமா அடிக்கிறே. நீ மாப்பிள்ளையா கிடைக்கிறதனாலேதானே அவரே நிதி தரேன்னு சொல்லியிருக்கிறார்.''

''அப்போ, நீங்க இரண்டையும் முடி போடுகிறீர்கள், மாமா?''

''நீ எப்படி எனக்கு உசிரோ, அப்படித்தாண்டா, ஆசிரமமும் என் உசிர்.''

''இரண்டு உசிரை வைச்சுண்டு இந்த வயசுக் காலத்தில் நீங்க கஷ்டப்படக்கூடாது... என்னைத் தியாகம் செய்து விடுங்கள்...''

''என்னடா, கேது...! ஏண்டா, என்னை அழ வைக்கிறே?''

''எனக்கு இந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லை... குண்டா இருக்கா.''

''இரண்டு குழந்தைகளைப் பெத்தா இளைச்சுடுவாள்.''

''குழந்தைகளைப் பெத்தப்புறம் குண்டாகத்தான் போவார்கள். இவள் இப்பவே குண்டு!''

''முப்பதாயிரம்டா முப்பதாயிரம்.''

''அது யாருக்குக் கிடைக்கப் போகிறது: எனக்கா... உங்களுக்குத்தானே...? எனக்கு விருப்பமில்லை!''

''சிவ சிவா... எனக்கு ஏன் ஒரு சகோதரி பிறந்தாள்? பிறந்தவள் ஏன் இவனைப் பெற்றாள்? இவனைப் பெற்றவள் ஏன் செத்தாள்?''

''இந்தக் கேள்வியைத் 'துக்ளக்'குக்கு எழுதிப் போடுங்கோ. சோ நன்னா அதற்கு பதில் கொடுப்பார்: வாங்கிக் கட்டிக்கலாம்.''

ஜம்புநாதன் ஆயாசத்துடன் எழுந்தார்: ''அம்பிகே அகிலாண்டேசுவரி!'' என்று கதறினார்:

கேதாரம் புஸ்தகம் ஒன்றை எடுத்துப் பார்க்கலானான்.

''நான் உனக்குச் செய்ஞ்சதற்கு எனக்கு நன்னா நன்றி காண்பிச்சிருக்கே... நான் வரேன்.''

''சரி மாமா?... காப்பி சாப்பிடுகிறீர்களா...? புதன் கிழமை அந்தப் பெண்ணையும் பார்ப்போம்.''

''வேண்டாம்டா, வேண்டாம்... இது குண்டு... அது தட்டு குச்சி மாதிரி ஒல்லியா இருக்கு என்பே...''

கேதாரம் சிரித்தான்:

''உனக்குச் சிரிப்பாடா வர்றது: சிரிப்பு? எனக்குப் பத்திண்டு வர்றது, பத்திண்டு.''

''கவலைப்படாதீர்கள் மாமா! என்னோடு பம்பாய்க்கு வாருங்கள். ஒரு ரவுண்டு சுத்துங்கள், நான் பெரிய பெரிய பார்ஸி, மார்வாடி, குஜராத்தி விலாசங்களெல்லாம் தரேன். சினிமா ஹால் அவ்வளவு பெரிசா மண்டபம் கட்டறதுக்குப் பணம் பெயரும். அங்கேயும் இழங்கள் நிறைய இருக்கு. ஒரு பத்துப்பேரைக் குத்தாலத்தில் குடியேற்றுங்கள்!''

* * *

ஜம்புநாதன் சென்ற அரை மணி நேரத்துக்கெல்லாம் எஸ். எஸ். வந்தார். கேதாரம் ஆச்சரியத்துடன் வரவேற்றான்.

''என்ன சார்! நீங்கள் வருகிறேன்னு சொல்லி அனுப்பியிருந்தீர்களே... மணி சொன்னான். அவனையும் இன்னும் காணோம்'' என்றார் எஸ் எஸ். கணபதி.

அவருடைய வார்த்தையை மறுத்துப் பேசுவதில் அர்த்தமும் விவேகமும் இல்லை என்று கேதாரம் நினைத்தான்... கேதாரம் சொன்னது பாகவதத்துக்குப் போகலாம் என்றுதான் எஸ் எஸ் ஸின் வீட்டிலிருந்து புறப்படலாம் என்று மணி சொல்லியிருக்கக்கூடும்.

''இப்பத்தான் வெளியே போய்விட்டு வந்தேன்.''

''பெண்ணைப் பிடிக்கவில்லையாமே?''

கேதாரத்துக்கு தூக்கிவாரிப் போட்டது.

''யார் சொன்னார்கள்?''

''உங்க மாமா... இங்கேயிருந்து நேரே என் வீட்டுக்கு வந்தார். பாவம், அவருக்கு ரொம்ப ஏமாற்றமாக இருக்கு.''

''கலியாணம் பண்ணீக்கொண்டால் எனக்கு ஜென்மம் முழுதும் ஏமாற்றமாக இருக்கும்... நாம் புறப்படலாமா... மணி வரலையே.''

''மணி என் வீட்டுக்கு நேரே வரட்டும் புறப்படுங்கள்.''

''எங்கே, தியாகராய நகருக்குத்தானே?''

''முதல்லே என் வீட்டுக்கு, டிபன் காப்பி உங்களுக்காக காத்துண்டு இருக்கு.''

மங்களாவின் முகம் எழவே, கேதாரம் பதில் சொல்லாமல் எழுந்தான்.

''உங்க குவார்ட்டர்ஸும் மாடியிலேதானே?''

''ஆமாமாம்.''

''நீங்கள் பாவம் நான் என் முகத்தைக் கழுவிக் கொள்கிற வரையில் சும்மா உட்கார்ந்திருப்பானேன்? நீங்கள் போங்கள். நான் பத்து நிமிஷத்திலே வர்றேன்.''

அதுவும் சரித்தான்... அப்போ நான் போறேன். மணி தப்பித் தவறி இங்கே வந்தால் அவனையும் உடன் அழைத்துக்கொண்டு வாருங்கள்.''

''ஆகட்டும்.''

* * *

ஐந்து நிமிஷங்களில் தயாரான கேதாரம் சென்ட்ரல் மெயின் ஹாலுக்கு வந்தான். மணி ஐந்து அடிக்கப் பத்து நிமிடங்கள். ஐந்தாவது பிளாட்பாரத்தில் ஐந்து மணிக்கு புறப்படும் கிராண்ட் டிரங்க் நின்றுகொண்டிருந்தது.

கேதாரம் விரைந்து நடந்தான். பழம் விற்பவர்கள் இப்போது அங்கேதான் கூவிக்கொண்டிருப்பார்கள்.

அவனுடைய அதிருஷ்டம் ஓர் ஆப்பிள் ஆரஞ்சு வண்டி அருகேயே நின்றுகொண்டிருந்தது.

''என்னப்பா விலை ஆப்பிள்?''

''ஐந்து ரூபாய்க்கு ஆறு.''

''எட்டு கொடு... ஐந்து ரூபாய்க்கு எட்டு.''

''நீங்க கேக்கிற விலைக்குக் காஷ்மீரத்திலேயே கிடைக்காது. இங்கே பேரமே கிடையாது... பாருங்க விலையை எழுதிக் கொடுத்திருக்காங்க.''

''பன்னிரண்டு ஆப்பிள்...'' என்று கூறிய அவன் நிறுத்திவிட்டு ஒரு கணம் யோசித்தான்: கணபதிக்கு ஏகப்பட்ட குழந்தைகள் ஆளுக்கு ஒன்றாவது கொடுக்க வேண்டாமா?''

''பதினைஞ்சு கொடுப்பா... பன்னிரண்டு ரூபாய் வைச்சுக்கோ.''

''கேக்காதீங்க சாமி...! இதிலே என்ன லாபம் இருக்குன்னு நினைக்கிறீங்க. ஒரு பழம் வித்தால் அஞ்சு பைசா.''

இரண்டு பெரிய காகிதப் பைகளில் அவன் ஆப்பிள்களை எண்ணிப் போட்டான். கேதாரமும்கூட எண்ணினான். இந்த ஆப்பிள் விற்கிற விலைக்காகவாவது, அளவோடு பெற்று வளமோடு வாழ வேண்டும் என்ற வைராக்கியம் அவனுள் எழுந்தது. முக்கோணம் என்றால் மூன்று குழந்தைகளா? ஒரு பக்கம் கணவன், ஒரு பக்கம் மனைவி, இன்னொரு பக்கம் குழந்தை. ஆஹா! ஆப்பிள் விஷயம் இரண்டரை ரூபாயில் தீர்ந்திருக்குமே.

கேதாரத்தை முதன் முதலில் பார்த்தது மங்களாதான்.

''குட் ஈவினிங்'' என்றான் கேதாரம்.

''குட் ஈவினிங்...வாருங்கள்...இது என்ன கையிலே சாமான்கள்?''

''ஹி...ஹி...ஒண்ணுமில்லை சும்மா குழந்தைகளுக்கு... நான் யார் வீட்டுக்குப் போனாலும் வெறும் கையோடு போற வழக்கமில்லை.

''நல்ல கொள்கை.''

அவள் சொல்லவும் சுஜா ஓடிவரவும் சரியாக இருந்தது.

''சுஜா! மாமா சாத்துக்குடி வாங்கிண்டு வந்திருக்கா. வாங்கிக்கொள்...அப்பா எங்கே? கூப்பிடு...இப்போ சாத்துக்குடி ஸீஸன். வெளியே வாங்கினால் கொஞ்சம் சீப்பாக இருக்கும்.''

பையில் இருக்கும் ஆப்பிளைப் பார்த்த பிறகுதான் மங்களா அப்படிப் பேசுகிறாளோ என்று தோன்றியது கேதாரத்துக்கு.

''அப்படியா? சாத்துக்குடி சீசன்னு தெரியாமல் போச்சே... தெரிஞ்சிருந்தால் ஆப்பிளை வாங்கியிருக்கமாட்டேன்...''

''சுஜா, ஆப்பிளாம்டீ...சாத்துகுடி இல்லையாம்...ஏன் இன்னும் நிற்கிறீர்கள்...? உட்கார்ருங்கள் சார். அப்பாவைக் கூப்பிடேண்டி சுஜா...''

''நீயே கூப்பிடு.''

''பார்த்தீர்களா. என்னை அதிகாரம் பண்ணுகிறாள்''

மங்களா உள்ளே சென்றாள். டீப்பாயின்மேல் வைத்த காகிதப் பொட்டணங்கள் சற்றே திறந்திருக்க சுஜா இடுக்கு வழியாகப் பார்த்தாள்.

''எடுத்துக் கொள்'' என்றான் கேதாரம். மனத்தைப் பன்னிரண்டு ரூபாய் வதைத்தது. ஓர் ஆப்பிளை நறுக்கி டிபனுடன் தரமாட்டார்களா என்று அவன் ஏங்கினான். வறட்டுக் கௌரவத்தை இவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டியது அவசியம்தானா என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

''ஊஹூம்... அம்மாதான் எங்களுக்கெல்லாம் கொடுப்பாள். உன் பெயர் என்ன?''

''சுஜாதா.''

''சுஜான்னு கூப்பிடுவாளா?''

''ஆமாம்.''

''எந்த வகுப்பிலே படிக்கிறே?''

''அப்பர்கேஜி பாஸ் பண்ணியாச்சு. ஒண்ணாம் கிளாஸ். வர்ற வியாழக்கிழமை ஸ்கூல்லே எனக்கு ஹாப்பி பர்த்டே பாடுவார்கள். நான் எல்லாருக்கும் டாஃபி கொடுப்பேன்.''

''பேஷ்! பேஷ்! எனக்கும் தருவாய் இல்லையா?''

''ஐயய்யோ! நீ பாயும் இல்லே, கேர்ளும் இல்லே...என் வகுப்பிலே படிக்கிறவாளுக்குத்தான் டாஃபி.''

''சுஜா! மாமாகிட்டே என்ன பேசிண்டிருக்கே... குட்மார்னிங் சொன்னியா?''...என்று கேட்டுக் கொண்டே நுழைந்தார் கணபதி. பின்னால் தொடர்ந்து மங்களாவும் வந்தாள்.

''மாமா டாஃபி கேக்கிறா, அப்பா...டாஃபி பிறந்த நாளுக்கு டாஃபி வேணுமாம்.''

''நான் கொண்டு தரட்டுமா?'' என்று மங்களா புன்முறுவலித்தவளாய்க் கேட்டாள்.

''மங்கா! அம்மாகிட்டே டிபன் கொண்டு வரச் சொல்லு.''

அவள் உள்ளே சென்றாள்.

கேதாரம் டீபாயின்மேல் இருக்கும் ஆப்பிள் பொட்டணங்களையே பார்த்தவனாய் இருந்தான்.

''மணி இன்னும் வரலையே.''

''ஆறரைக்குத்தானே பாகவதம்?''

''பெயருக்குத்தான் ஆறரை; ஏழு ஆயிடும்; முன்னாடியே போனால் ஸ்வாமி தரிசனம் பண்ணிவிட்டு நல்ல இடமாப் பிடிச்சு உட்காரலாம்.''

சங்கரி பலகாரத் தட்டுடன் வந்தாள். மங்களாவின் கையில் காப்பி இருந்தது.

''சங்கரி! நான் கார்த்தாலே, சொன்னேனே அவர்தான் இவர்...டி. இ...இவள்தான என் மனைவி... சங்கரி'' என்றார் கணபதி.

''நமஸ்காரம்.''

''மாமி சௌக்கியமா?''

''உம்.''

''ரெண்டு பெண்கள் உண்டே, கலியாணமாச்சா?'' சங்கரி கேட்டாள்.

''ஊஹூம் இல்லை. வரன் பார்த்துக் கொண்டிருப்பதாக மாமா சொன்னார்.''

கேதாரம் காப்பியுடன் நிற்கும் மங்களாவைப் பார்த்தான். தன் பதில் அவளுக்குத் திருப்தி அளித்திருப்பதை அவளுடைய முகம் காட்டுவதாகப் பிரமை தட்டியது.

''இவரும் இன்னிக்கு ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறார்'' என்றார் கணபதி.

கேதாரம் சிரித்தான்.

''பெண் ரொம்பக் குண்டோ? தைராய்டு கோளாறுன்னு கேள்வி'' என்றார் கணபதி.

கேதாரம் பதில் சொல்லவில்லை. மங்களாவைக் கவனித்தான். அபீதம் குண்டாக இல்லாமல், ஒல்லியாக அழகாக இருந்திருந்தால் அவன் வேண்டாம் என்று சொல்லியிருக்கமாட்டான் என்று அவள் நினைப்பதாக அவனுக்குத் தோன்றியது. தோன்றியகணமே அவன் தன்னை நொந்து கொண்டான். ஒரு சிறந்த அழகியை அவன் வேண்டாம் என்று ஒதுக்கினால்தான் மங்களாவுக்கு உண்மையாகத் திருப்தி பிறக்கும் என்று அவன் நினைத்தான்.

''புதன்கிழமையும் பெண் பார்க்கவேண்டும் என்கிறார் மாமா...நானும் இவருடைய நச்சரிப்புத் தாங்காமல் சரின்னு சொல்லியிருக்கேன்.''

''சீக்கிரத்தில் முடித்துவிட வேண்டியதுதானே?'' என்றார் கணபதி.

''சரித்தான்...ஆனால் எனக்குப் பிடிக்கவில்லை. மாமா பார்த்திருக்கிற அடுத்த இடம் நல்ல இடம்தான்...பெண் எம்.ஏ ரொம்ப நன்னா வீணை வாசிப்பாளாம். கிரேப் ஜூஸ்...பைனாப்பிள் ஜாம் எல்லாம் பண்ணத் தெரியுமாம். சிவப்பாகவும் அழகாகவும் இருப்பாளாம்.''

''பின் என்ன? சூட்டோடு சூடா அவள் கழுத்திலே மூணு முடிச்சுப் போட்டுவிட வேண்டியதுதான்...சமையல் தெரியுமோ தெரியாதோ, இந்தக் காலத்துப் பெண்களுக்கு ஜூஸும் ஜாமும் நன்றாய்ப் பண்ண வர்றது'' என்றாள் சங்கரி.

''எதுக்காக மங்களாவைக் குத்திக் காட்டறே?'' என்று சொல்லிச் சிரித்துவிட்டு மங்களாவைப் பார்த்தார் கணபதி.

''இவ்வளவு இருந்தும் நான் என் மனசுக்குள்ளே வேண்டாம்னு தீர்மானம் செய்துவிட்டேன்' என்றான் கேதாரம்:

''ஏன்?'' —கணபதி.

''எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்...''

''காரணம் இருக்கணுமே?''

''ஒவ்வொருத்தன் மனசிலேயும், வரப்போகிற மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று ஓர் ஆசை, ஓர் எண்ணம் இருக்கும். அதன் பிரகாரம் இல்லாவிட்டால் எப்படி?''

கணபதி சிரித்தார்.

சங்கரி உள்ளே திரும்பினாள்.

மங்களா புன்முறுவலை நிறுத்தாமல் சொன்னாள்:

''அவர் சொல்வது ரொம்ப சரி, அப்பா! அதேபோல் ஒவ்வொரு பெண்ணும் தனக்கு வரவேண்டிய கணவர் எப்படி இருக்கணும் என்று நிர்ணயம் செய்துகொள்

கிறாள். ஆனால் இரண்டு பேர்களுக்கும் லட்சியக் கணவர் மனைவி அமைவதுதான் துர்லபம். மிஸ்டர் கேதாரம் தன் மனசிலே உருவாகியிருக்கிற பெண்ணைச் சந்திக்கலாம்: ஆனால் அப்பெண்ணின் மனசிலேயும் மிஸ்டர் கேதாரம் மாதிரி ஒரு மனிதர் கணவராக உருவாகி இருக்கணுமே...?''

''அப்படி வந்தால் அதிசயம்னு சொல்றியா?'' என்று கேட்டார் கணபதி.

''ஆமாம்!''

''அதிசயம்? நடக்கிறதுண்டு சார்!'' என்றான் கேதாரம்.

''என்ன அதிசயம்? என்ன டிபன்? இது என்ன பாக்கெட்...?''

மணி கேட்டுக்கொண்டே வந்தவன், காகிதப் பொட்டணத்திலிருந்து ஓர் ஆப்பிளை எடுத்துக் கடிக்கலானான்:

கேதாரம் அவனைக் கழுத்தை நெரிக்கும் ஆத்திரத்துடன் உன்னிப்பாக ஊடுருவிப் பார்த்தான்:

11

''ஏன் சார்! எங்கே இந்த என்கொயரி கவுண்டர் கிளார்க் போயிட்டாங்க? ரொம்ப நேரமா இடத்திலேயே காணோம்?''—ஒருவர் இன்னொருவரடம் கேட்கும் அர்த்தமற்ற கேள்வி.

மங்களாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கேதாரத்தின் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அவன்தானே அவளுடைய மனத்தில் சலனத்தை உண்டாக்கியிருக்கிறான்?

அவனிடம் தன் மனம் லயித்துவிட்டது என்ற உண்மையை நினைத்துப் பார்த்தபோது அவளுக்கே நம்பிக்கை விழவில்லை. நான்கு நாட்கள் முன்னால்கூட அவள் மேரியிடம் அடித்துப் பேசியிருக்கிறாள், அவள் யார் மீதும் எந்த நிலையிலும் மனத்தை ஓடவிடமாட்டாள் என்று. மேரி சிரித்துக்கொண்டே 'பெண் மனத்தை ஒரு பெண்ணான மங்களாவே புரிந்துகொள்ளவில்லை' என்றாள். இப்போது நான்கே நாட்களில் அவளுடைய வீராப்பு அவளைப் பார்த்தே சிரிப்பாய்ச் சிரித்துவிட்டது: மேரி ஜயித்துவிட்டாள்!

எப்படிக் கேதாரத்தின் மீது அவள் மனம் ஈடுபட ஆரம்பித்து, நிலைத்துக் கடைசியில் லயிப்பில் முடிந்தது என்று அவள் அலசிப் பார்க்க முயன்றாள்: எதுவும் பிடிபடவில்லை. கேதாரத்தின் உயரமும், அதற்கேற்ற உடற்கட்டும், முகத்தின் அழகும் காரணமாக இருக்க முடியுமா? கேள்வி பிறந்த மறுகணமே அவள் கண்முன் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் தோன்றினார்கள். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், பார்த்துப் பேசியவர்கள் கல்லூரியில் படித்தவர்கள், இளம் ஆசிரியர்கள், இன்னும் எத்தனையோ பேர். இவர்களில் எவ்வளவோ பேர்கள் நிற அழகிலும், உடற்கட்டின் வசீகரத்திலும், பார்வையின் விசேஷத்திலும் —கேதாரத்தைத் தூக்கி அடித்தார்கள்: அவர்களில் ஒருவனைக்கூட அவள் மனத்தாலும் தொட்டுப் பார்த்ததில்லை. கேதாரம் மட்டும் எப்படி அவளிடம் ஒட்டிக் கொண்டான்? சின்ன வயதில் பெரிய பதவியை வகிக்கிறான். கை நிறைய சம்பளம் வாங்குகிறான் என்ற காரணமா? இதுவும் இருக்க முடியாது என்று தோன்றியது. எத்தனையோ பேர் லட்சாதிபதிகளாக இருக்கிறார்கள்: 'என்கொயரி'யில் வேண்டுமென்றே, அவசியத்தையும் மீறி நின்று அவளுடன் பேச்சுக் கொடுக்கிறார்கள்: ஒருவரைக்கூட அவள் நினைத்துப் பார்த்ததில்லையே?

புரண்டு புரண்டு படுத்துப் படுத்து அலுத்த அவள் கட்டிலைவிட்டு எழுந்து விளக்கைப் போட்டாள்:

மணி பத்தரை.

என்ன செய்வது என்று தெரியவில்லை. புத்தகத்திலும் மனம் செல்லவில்லை. படுக்கை கொள்ளவில்லை.

மெதுவாக அறையைவிட்டு வெளியில் வந்தாள்: தங்கை, தம்பிகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்: அடுத்த அறையிலிருந்து அப்பாவின் குறட்டை ஒலி இரைந்து வந்தது.

அம்மா இருக்கும் அறையை மங்களா அடைந்தாள்: விளக்கு எரிந்துகொண்டிருந்தது: ஆனால் அம்மாவைக் காணோம். மெதுவாகச் சமையலறையை நோக்கி நடந்தாள். சாதாரணமாக அம்மா எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு பத்து மணிக்குத் தொடர் கதைகள் படிக்க ஆரம்பிப்பாள். நாலைந்து வாரப் பத்திரிகைகளில் வரும் எல்லாத் தொடர்கதைகளையும் படிக்காவிட்டால் அம்மாவுக்கு ஜன்ம சாபல்யம் கிடைக்காதோ என்று தோன்றும்.

அந்த அம்மா சமையலறையில் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாள்?

நுழைந்ததுமே ஆப்பிளின் இனிய மணம் அவளைக் கவர்ந்தது. கேதாரம் வாங்கிய ஆப்பிள்?

''யாருடீ, மங்காவா?''

''ஆமாம், அம்மா:'' சொல்லிக்கொண்டே வலை அலமாரியின்மேல் இருந்த பழக்கூடையை நோக்கிச் சென்றாள்:

''நீ இன்னும் தூங்கலியா?''

''ஊஹூம்... நீ?''

''பார்க்கிறாயே, தெரியலையா?'' சங்கரி அடுப்புத் திண்டைத் துடைத்துவிட்டு, கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். ''ஏன் தூங்கலை?''

''வரலை.''

''ஏன்?''

''தெரியாது.''

''உங்க அப்பாவுக்கு எதிலுமே ஓர் அவசரம்'' என்றாள் சங்கரி.

''ஏன்?'' மங்களா ஓர் ஆப்பிளை எடுத்தாள்.

''கத்தி அலமாரிக்குள்ளே இருக்கு... நாளைக்கு அவனைச் சாப்பிடச் சொல்லியிருக்கிறார். மணியும் வேறு வரான்:''

''இதிலே என்ன அவசரத்தைக் கண்டுவிட்டாய்?'' கத்தியால் ஆப்பிளை நறுக்க ஆரம்பித்தாள் மங்களா:

''வீட்டிலே கறிகாய் ஒண்ணும் கிடையாது. பாகவதம் கேட்கப் போனாரே—வர்ற வழியிலே ரங்கநாதம் தெருவிலே நின்று வாங்கிண்டு வரப்படாது?... இந்தச் சீனன் எட்டு மணிக்கு முன்னாடி வந்து தொலைக்க மாட்டான்:''

''வத்தல் குழம்பு வை...''

''எனக்கு எதுக்குடீ இத்தனை ஆப்பிள்?...நீ சாப்பிடு... என்ன சொன்னே வத்தல் குழம்பு வைன்னியா... இப்போ சொல்லுவே..... கலத்திலே போடறபோது வாயைக் காட்டுவே.''

''மூர்மார்க்கெட்டிலே ஓரிரண்டு கடையிலே ஆறு மணிக்குக் கறிகாய் கிடைக்கும்.''

''நீ பையை எடுத்துண்டு போறியா?''

''போறேன்: என்ன செய்யறது?''

ஒரு துண்டு ஆப்பிளை அவள் மென்று தின்னும்வரையில் காத்திருந்த சங்கரி, ''மங்களா!'' என்றாள்.

''என்ன அம்மா?''

''என் அண்ணா பிள்ளை பம்பாயில் எங்காவது இருக்கானா என்று கேதாரத்தைக் கொண்டு தேடச் சொல்லலாம்னு இருக்கேன்: நீ என்ன சொல்றே?''

''நல்ல யோசனை அம்மா... பம்பாய் சின்ன ஊர்; ஏழெட்டுத் தெருக்கள்தான் இருக்கு. என் மாமா பிள்ளை ஏதாவது ஒரு தெருத் திண்ணையில்தான் அத்தை பெண்ணை நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பான். நல்ல யோசனை... சாப்பிட வரும்போது சொல்லு.''

சங்கரிக்குக் கோபம் வந்தது. ''பம்பாய் பெரிய நகரம்னு எனக்கும் தெரியும்டீ ஆனால் நம்ப மனுஷாள் இருக்கிற இடம் சின்னதுதான். மாதுங்கா, செம்பூர் இங்கே தேடினால் போதுமே?''

''சரி, தேடட்டும், என் மாமா பிள்ளையைக் கண்டு பிடிக்கிறார் என்றே வைத்துக்கொள்ளுவோம். அப்புறம் என்ன?''

''அப்புறம் என்ன? அப்புறம் உனக்கு வயசாகலியா?''

''ஆச்சு, ஆச்சு... வயசு ஆச்சு... ஆனால் அதுக்காகக் காணாமற்போன உன் அண்ணா பிள்ளையை வலை போட்டுத் தேடிப் பிடிச்சு அவன் கழுத்திலே என்னைக் கட்டிப் போடணுமா?''

''அவனுக்கு என்னடீ குறைச்சல்? பதினைஞ்சு வயசிலே ராஜகுமாரன் மாதிரி இருந்தான்.''

''இப்போ சக்கரவர்த்தி மாதிரி இருப்பான்... நான் இன்னொரு ஆப்பிள் சாப்பிடப் போறேன்.''

''உனக்கு எப்பவுமே இந்தத் தூக்கி எறிஞ்சு பேசுற சுபாவம்தான். நான் என் அண்ணாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன்.''

இந்தக் காலத்திலே ஏதாவது ஒண்ணு இல்லைன்னா அது சத்தியம்தான் அம்மா. அதுவும் நம்ப தேசத்திலே சத்தியத்துக்கு இப்போ மதிப்பே கிடையாது... இன்னொரு விஷயம் உனக்குப் புரியல்லைன்னா, இப்போ புரிஞ்சுக்கோ! நான் என் மாமா பிள்ளையை அவன் இப்போ மன்மதனாக, கோடீசுவரனாக இருந்தாலும் கலியாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன்.''

சங்கரி ஒருகணம் அயர்ந்து போனாள்.

''ஏண்டி, ஏன்?''

''மாட்டேன், அவ்வளவுதான். காரணம் தெரிவானேன்?''

''அதையும் தெரிஞ்சுக்கிறேன் சொல்லு... நீயும் அந்த மேரி பலராமன் பின்னாலே போனமாதிரிப் போய்க் கொண்டிருக்கிறாயோ?''

''மேரி என்னிக்குமே பலராமன் பின்னாடிப் போகலை; அந்த முட்டாள்தான் இவள் பின்னாடி நிழலைப் பிடிச்சுண்டு தொங்கினான்.''

''உன் கதை என்ன? அதைச் சொல்லு.''

''நீ நினைக்கிற மாதிரி எதுவும் கிடையாது.''

''சரி போ... தூங்கு, உனக்கு வயசு வந்துட்டதனாலே, நீ நாலு காசு சம்பாதிக்கிறே என்கிறதனாலே, உனக்குச் சுதந்திரம் இருக்குன்னு மனப்பால் குடிக்காதே... நாங்கதான் உன் கலியாணத்தை நிச்சயம் செய்து நடத்தப் போகிறோம். இதை நன்னா ஞாபகத்திலே வைச்சுக்கோ.''

மங்களா காதில் ஏதும் ஏறவில்லை. அவள் நகர்ந்தாள்.

''இந்த இரண்டு துண்டு ஆப்பிளை நீ சாப்பிட்டுவிடு அம்மா... வயிறு தெரியாம நறுக்க ஆரம்பிச்சுட்டேன்.''

* * *

திங்கட்கிழமை.

வழக்கத்துக்குப் பத்து நிமிடங்கள் முன்பாகக் காரியாலயத்தை அடைந்த மங்களா பம்பாய் கவுண்டரில் அன்று யார் டியூட்டி என்ற விவரத்தை அறிந்துகொள்ள சீஃப் புக்கிங் கிளார்க் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள். அவளைக் கண்டதும், சீஃப் புக்கிங் கிளார்க் ரங்காச்சாரி சிரித்தார்.

''குட்மார்னிங் சார்... ஏன் என்னைப் பார்த்ததும் சிரிக்கிறீர்கள்?''

''குட்மார்னிங்... குட்மார்னிங்...''

மங்களா ரிஜிஸ்தரைப் புரட்டிக்கொண்டே, ''என்ன ரொம்ப மகிழ்ச்சியா இருக்கிறீர்கள்? என்ன விசேஷம்?'' என்று கேட்டாள்.

''நீ முதலிலே உட்காரு...''

''பம்பாய் கவுண்டரிலே இன்னிக்கு யார் டியூட்டி?''

''அமிர்தம் இன்னும் வரலியா?''

''அமிர்தமா... ரொம்ப நல்லதாப்போச்சு...'' ரிஜிஸ்தரைத் தொப்பென்று மேப்பாயின் மேல் போட்டுவிட்டு ''நான் வரேன் சார்'' என்று கிளம்பினாள்.

''மூதல்லேஉட்காரு மங்களா. நான் ஏன் சிரிச்சேன்னு கேட்டாயே பதில் வேண்டாமா?''

மங்களாவின் மனமே அலாதி. யாராவது அவளைப் பற்றிக் கேலியாகப் பேசினாலோ சிரித்தாலோ அசாத்தியக் கோபம் வந்துவிடும். ஆனால் இன்று ரங்காச்சாரியின் சிரிப்பு அவளுடைய கண்ணுக்குத் தெரிந்ததே தவிர, மனத்தைத் தொடவில்லை. அவளுடைய போக்கு அவளுக்கே ஆச்சரியமாக, ஏன், ஒருவித ஏமாற்றமாகக்கூட இருந்தது. கேவலம், முந்தின நாள் காலை ஐந்தே முக்கால் மணிக்குச் சந்தித்த ஒருவன் அவளுடைய போக்கையே மாற்றுகிறானே! யார் அவனை பம்பாயிலிருந்து வரச் சொன்னது? அவளுடைய காதல் பாதையை வகுக்க வந்திருக்கும் விதியா?

அவள் இயந்திரமாக உட்கார்ந்தாள்.

''நீ 'மூடில்' இல்லை. ஏதோ ஒண்ணு உன் மனசை அரிச்சுண்டிருக்கு'' என்றார் ரங்காச்சாரி.

''ஒன்றுமில்லை...சும்மா சொல்லுங்கள்.''

''நேத்து ஞாயிற்றுக்கிழமைதானே? எனக்கு ஓய்வு. பதினோரு மணிக்குக் கோதண்டு 'மெஸ்'ஸிலே சாப்பிட்டுவிட்டுத் திரும்பினேன். கோதண்டு மெஸ்ஸிலே ஞாயிற்றுக்கிழமைகளிலே வெங்காய சாம்பார், உருளைக்கிழங்கு பொடிமாஸ், பாயசம் எல்லாம் உண்டு. 'குசேலன்' கிருஷ்ணர் மாளிகையிலே சாப்பிட்ட மாதிரி சாப்பிட்டேன். நடக்க முடியலை. இருந்தாலும் நடந்தேன். அறைக்கு வந்ததும் ஆல் பர்பஸ் ஃபானைப் போட்டுண்டு நாலு மணி வரை தூங்கணும். அப்புறம் கும்பகோணம் ஹோட்டலுக்குப் போய்ப் பாதம் அல்வாவும் தவலை வடையும் சாப்பிடணும். அப்புறம் வரதராஜலு நாயுடு வீட்டுக்குப் போய்ச் சீட்டாடணும் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டே நடந்தேன்.''

மங்களாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இந்த மனுஷன் எப்போதுமே இப்படித்தான். ஒரு சின்னஞ் சிறு விஷயத்தைச் சொல்லுவதற்குப் பூர்வாங்கமாக ஒரு பாரதமே பாடுவார். வெங்காய சாம்பாரையும் தவலை வடையையும் யார் கேட்டார்கள்?

''நடந்தேனா?'' என்றார் அவர்.

''அதுதான் நடந்தீர்களே!''

''நடந்தேன்.''

''மூணு தரம் நடந்தாச்சு.''

''நடந்தேன். அறைக்கு வந்தேன். ஜமுக்காளத்தை விரித்தேன். போர்வையை உதறி விரிப்பாகப் போட்டுக் கொண்டேன். தலையணையையும் தட்டிப் போட்டேன்.''

''ஆல் பர்பஸ் பானை ஓடவிடலியா?'' என்று மங்களா பொறுமை இழந்து கேட்டாள்.

''படுத்துக்கிறதுக்கு முன்னாலேதானே அதைச் செய்யணும்? தலைகாணியைத் தட்டிப் போடறதுக்கும் கதவை யாரோ தட்டுவதற்கும் சரியாக இருந்தது. கதவைத் திறந்தேன். யார்னு நீ நினைக்கிறே...?''

''நான் நினைக்கவில்லை.''

''சும்மா நினைச்சுப் பாரேன்.''

''ஒரு நிமிடம் மௌனமாக அவரையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் மங்களா. உருண்டைத் தலை: அகன்ற நெற்றியில் அழகான வடகலை நாமம்; காதில் வைரக் கடுக்கன்.

''கோதண்டு மெஸ் சிப்பந்தி பாக்கி சாம்பாரை ஒரு டம்ளரில் எடுத்துக்கொண்டு வந்தானா?''

ரங்காச்சாரி சிரித்தார்.

''உன் அப்பா எவ்வளவு சாது—நல்லவர். உனக்கு எப்படி இப்படித் துடுக்கு வந்தது? வந்தவன் ஆராமுதன்: ஆராமுதன் யார் தெரியுமா?''

''மகாவிஷ்ணு:''

''நான் சொல்ற ஆராமுதன் மகாவிஷ்ணு இல்லை. யமன் நட்சத்திரேயன், ஆறு மாசமா கழுத்தை அறுத்தவன். கடைசியிலே பெண்ணைப் பெத்தவனையும் இழுத்துண்டு வந்து நிக்கறான்.''

''பெண்ணைப் பெத்தவனையா?''

''ஆமாம்...எனக்கு மோட்சம் கிடைக்கணும் என்றால் நான் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமாம். என் வயசு நாற்பத்தெட்டு. ''நாற்பத்தெட்டுன்னு அவளிடம் நானூத்தெட்டு தடவை சொல்லி அவனை நாற்பது தடவை விரட்டியாச்சு. எனக்கு இன்னும் இளமை இருக்கு'' அப்படி ஒண்ணும் பெரிய வயசு ஆகலை என்கிறான். நேத்திக்குக் கைநீட்டி அவனை அடிச்சிருப்பேன். ஆனால் பெண்ணைப் பெத்தவன் கூட இருந்தான்;''

''அவனையும் இரண்டு மொத்து மொத்துகிறது தானே?''

''பாவம்...பெண்ணைப் பெற்றவர்கள் எல்லாருமே பாவம்! பெண் பெயர் என்ன தெரியுமா?''

''சோபியாலோரன்.''

''மங்களவல்லி. இருபத்து நாலு வயசு. எட்டாங் கிளாஸிலே படிக்கிறபோது அவள் அம்மா செத்துப் போயிட்டாளாம். கூடப் பிறந்ததுகளைக் கட்டி மேய்க்கிற பொறுப்பு அவள் தலையிலே விழுந்திருக்கு அதனாலே மேற்கொண்டு படிக்கலை.''

''படிச்சிருந்தால் வேலைக்குப் போயிருப்பாள். ஆராமுதமும் உங்களுடைய தூக்கத்துக்கு யமனாக வந்திருக்க மாட்டான்.''

''அந்தப் பெண்ணோட போட்டோவை ஆராமுதன் காண்பித்தான். காது, மூக்கு, கழுத்து எல்லாம் மூளி.''

''பாவம்.''

''அவளை எனக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆராமுதன் வேங்கடாசலபதியை வேண்டிக்கொண்டிருக்கிறானோ என்னவோ? என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தான். ஆனால் பெண்ணுக்கு அப்பா அடிக்கடி முகத்து வியர்வையைத் துடைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.''

''நீங்கள் ஃபானைப் போடவேயில்லையாக்கும்!''

''போட்டால் அவன் என் படுக்கையில் படுத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்துவிடுவானே. எப்படியாவது ஆட்கள் இடத்தைக் காலி பண்ணினால் போதும் என்றல்லவா நான் காத்திருந்தேன்?''

''உம்...அப்புறம்?''

''முழுசா ஒரு பொய்யைப் பெண்ணைப் பெற்றவரிடம் சொல்லி வைச்சேன். ஆராமுதனே நம்பினான் என்பது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டதிலிருந்து தெரிந்தது.''

''என்ன சொன்னீர்கள்?''

''எனக்கு ஏற்கனவே ஒரு ஹார்ட் அட்டாக் வந்தாகி விட்டது என்றும், இரண்டாவது 'அட்டாக்கு'க்காக நான்

டாக்டர். புரோகிதர் எல்லாரும் காத்துக்கொண்டிருக்கி றோம் என்றும் ஒரு அடி அடிச்சேன். பெண்ணைப் பெற்றவன் பரிதாபமாக என்னைப் பார்த்தான்: அவனுடைய உடம்புக்கு ஒன்றும் வந்துவிடக் கூடாதுன்னு வேண்டிண்டேன்.''

''கதை சரி. எதுக்குச் சிரித்தீர்கள்? அதைச் சொல்ல வில்லையே?''

''மங்களவல்லியில் வல்லியை எடு. மங்களம். 'ம்'ஐ அழிச்சு 'ள'வை நீட்டு. மஞ்சுளா. உன்னைப் பார்த்ததும் உன் பெயர் காரணமா நேத்து நடந்தது ஞாபகத்துக்கு வந்தது. அதுதான் சிரிச்சேன்.''

''பரவாயில்லை உங்களை மன்னிக்கிறேன்... ஏன் நீங்கள் இப்படிப் பிடிவாதமா பிரம்மச்சாரியாகவே இருக் கிறீர்கள்?''

''இன்னமே ஏன் கல்யாணம் பண்ணிக்கொண்டு, நானும் கஷ்டப்பட்டு அவளையும் கஷ்டப்படுத்தணும்? இன்னும் பத்து வருஷங்களில் ரயில்வேக்காரன் என்னைக் கூப்பிட்டு, 'டேய் ரங்காச்சாரி உனக்கு வயசு அம்பத்தெட்டு ஆயிடுத்து, மூட்டையைக் கட்டு' என்பான். அந்தச் சமயத்திலே சம்சார பாரம் கழுத்தை அழுத்தும்.''

''இப்போ வேண்டாம் என்கிறது சரி. ஏன் முன்பே நீங்க வேண்டாம்னு தீர்மானித்தீர்கள்?''

ரங்காச்சாரி திடீரென்று மௌனமானார். அவருடைய மௌனத்தைக் கண்டு மங்களாவுக்கு ஒரு கணம் வேதனை யாகக்கூட இருந்தது. ஏன் கேட்டோம் என்று நொந்து கொண்டாள்.

''மங்களா! இத்தனை நேரம் நான் சிரிச்சுப் பேசினேன். நீ கேட்ட கேள்வி என்னை எங்கெங்கோ இழுத்துண்டு போறது. பழசெல்லாம் கண்முன்னே நிக்கறது.''

மங்களா மெதுவாக எழுந்தாள்.

''என் வாழ்க்கையை மற்றவா சந்தோஷ வாழ்க் கைன்னு சொல்லுவா மங்களா! ஏன் நல்ல டெரிலினா

போட்டுண்டு வரேன். தஞ்சாவூர் கதம்ப அத்தர் மணக்க மணக்க நடக்கிறேன் வாய் நிறைய, வயிறு நிறைய ருசியா சாப்பிடுகிறேன்...எதிலும் குறைச்சல் இல்லாதவன் மாதிரி நடந்துகொள்கிறேன்... ஆனா இதெல்லாம் பிறத்தியார் பார்க்கிற வாழ்க்கை. இத்தனை சிரிப்புக்கு அடியிலே ஒரு பெரிய வேதனை அஸ்திவாரமா ஆடாம அசையாம இருக்கு... இன்னும் சொல்லப்போனால், வேதனையை என்னுடைய வாழ்க்கை முறையாலே போர்வை போட்டுப் போர்த்துகிற மாதிரி மறைச்சுண்டு வாழறேன்.

''மன்னிச்சுடுங்க சார்.''

''ஓ அதிருக்கட்டும்... ஒருநாள் சாவகாசமா என் கதை யைச் சொல்றேன். இருபத்தைஞ்சு வருஷங்களுக்கு முன் னாலே நடந்த கதை அம்மா அது. யாருக்கும் தெரியாத, நான் சொல்லாத கதை.''

''பரவாயில்லை சார்!''

''என் ஷர்ட்டின் கை ஏன் எப்போதும் மணிக்கட்டு வரை நீண்டிருக்கிறது தெரியுமா? நான் ஏன் எப்போதும் ஃபுல் ஹாண்ட் ஷர்ட் போட்டுக் கொள்ளுகிறேன் தெரியுமா?''

''தெரியாது சார்!''

''ஒருநாள் சொல்கிறேன் மங்களா!''—ரங்காச்சாரி யின் தொண்டை கனத்து குரல் கம்மியது.

''நான் வரேன் சார்.''

''இன்னிக்கு பம்பாய் கவுண்டரிலே அமிர்தம் இருக் கிறாள்!''

''நன்றி சார்.''

மங்களா கேதாரத்தின் நினைவே அற்றவளாக நடந்தாள். சீஃப் புக்கிங் கிளார்க், வைரக் கடுக்கன் ரங்காச்சாரி ஒரு பெரிய சுமையை அவள் மனத்தில் ஏற்றி விட்டதான பிரமை உதித்தது.

அவள் என்கொயரி கவுண்டரை அடைந்தாள். அங்கே மணி நின்றுகொண்டிருந்தான்.

12

வீட்டில் செல்லமாக வளர்க்கும் பிராணி களில் நாயும் ஒன்று.—குழந்தைகளுக்கான பாட புத்தகம் நாய்களை ரயில்களில் ஏற்றிச் செல்ல விசேஷ சௌகரியம் உண்டு.

—அறிக்கை

''குட்மார்னிங் மிஸ் மங்களா!'' என்றான் மணி அவள் தன் இடத்தில் வந்து உட்கார்ந்ததும்.

''குட்மார்னிங்...!''

''இன்னிக்கு நீ ரொம்ப 'பிஸி'யாக இருக்க வேண்டுமே!'' புன்முறுவலுடன் மணி கேட்டான்.

''எட்டு மணி நேர வேலை.''

''நான் அதைச் சொல்லவில்லை!''

''பின்?'' மங்களா மணியைப் பார்த்தாள். அதே சமயத்தில் கதர் வேஷ்டியும் கதர் ஜிப்பாவுமாக ஒருவர் ஒரு போமரேனியன் நாயுடன் அவளை அணுகி வந்தார்; வெள்ளை வெளேர் என்ற ரோமக் காடுடன் அது அங்கு மிங்குமாகப் பார்த்துக்கொண்டு வந்தது. முதன் முதலாக சென்ட்ரல் ஸ்டேஷனில் நுழைந்ததில் அதற்குப் பேரானந்தமோ, என்னவோ!

''நமஸ்காரம்'' என்று ஆரம்பித்தார் கதர்.

''நமஸ்காரம்'' என்றாள் மங்களா.

வெள்ளைக்காடு, மணியின் வெள்ளைப் பாண்ட்டை முகர்ந்து முகர்ந்து ஆனந்தப்பட, மணி அதன் நெற்றியையும் முதுகையும் தடவிக் கொடுத்து விளையாடினான். நாய் குஷியில் குதித்தது.

''என்னுடைய ஜூலி என்னுடன் பெங்களூர் வரணும்'' என்று ஆரம்பித்தார் கதர்.

''என்றைக்குப் போகிறீர்கள்?''

''இன்னிக்கு ராத்திரி மெயிலில். நான் இதுவரையில் பெண்டாட்டி குழந்தைகளைத்தான் அழைத்துக்கொண்டு போயிருக்கிறேன். ஜூலியை அழைத்துக்கொண்டு போனதில்லை.

மணி சிரித்தான்

கதருக்குத் திடீரென்று கோபம் வந்தது. மணியுடன் விளையாடிக்கொண்டிருந்த ஜூலியைத் தம் பக்கம் முரட்டுத்தனமாக இழுத்தார். அது பரிதாபமாக அவர் பக்கம் திணறிக்கொண்டு பின்வாங்கியது.

''எதுக்கு சார் சிரிக்கிறீர்கள்?''

வந்திருக்கிறவர் யார் என்பதை மணி நொடியில் புரிந்து கொண்டான்.

''ஜூலி ரொம்ப அழகா இருக்கு சார்! சொந்த வளர்ப்பா? அல்லது விலை கொடுத்து வாங்கினதா?''

மணி புன்னகையை விடவில்லை. மங்களா அலுப்புடன் உட்கார்ந்திருந்தாள்.

''என் ஜூலியின் அழகைப்பற்றி எனக்குத் தெரியும் சார்...! ஏன் சிரித்தீர்கள்?''

''நீங்கள் சொன்னீர்களே, 'பெண்டாட்டி குழந்தைகளை அழைத்துக்கொண்டு போயிருக்கிறேன். ஜூலியை அழைத்துக்கொண்டு போனதில்லை' என்று. அதைக் கேட்டபோது சிரிப்பு வந்தது.''

''இதில் என்னய்யா, சிரிப்பைக் கண்டுவிட்டீர்?''

''ஜூலியை உங்கள் குடும்ப அந்தஸ்துக்கு உயர்த்தினீர்களா? அல்லது குடும்பத்தை ஜூலியின் அந்தஸ்துக்கு...

மணி நிறுத்திவிட்டுச் சிரித்தான்.

''யோவ்'' என்று ஆரம்பித்த கதர் திடீரென்று நாக்கைக் கடித்துக்கொண்டார். அவருடைய தூய கதர் ஆடையும், முதல் வகுப்புப் பிரயாணி என்ற நினைப்பும் பண்பின் அவசியத்தை ஞாபகப்படுத்தின.

''மிஸ்டர்! நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். நான் என் வேலையைப் பார்க்க வந்திருக்கிறேன். நான் யார் தெரியுமா?''

''மாஜி எம்.பி., போன தேர்தல்லே நின்னு டெபாஸிட்டை இழந்தவர். மிஸ், மங்களா! உங்களைச் சிரமப் படுத்தினதற்கு மன்னிக்கணும்!''

''மாஜி எம்.பி, மணியைக் கூர்ந்து பார்த்தார்; அவனுடன் பேச்சைத் தொடர்ந்தால் அவன் இன்னும் ஏதாவது சொல்லிவிடுவானோ என்ற பயம் பிடித்துக் கொண்டது போலும்.

''ஜூலியை அவழத்துக்கொண்டு போவதற்கு நான் என்ன செய்யணும் அம்மா?'' என்று கேட்டார். அவர் அவள் திசையில் பார்க்கையில் ஜூலி மீண்டும் மணியின் பக்கம் தாவி விளையாட ஆரம்பித்தது.

''ஒன்றும் செய்யவேண்டாம். நாய் வண்டியில் போடலாம். இல்லாவிட்டால் கார்டு வண்டியிலே அதை வைக்கலாம்.

''நமஸ்காரம் ரொம்ப நன்றி. வாம்மா, ஜூலி..... வா, வீட்டுக்குப் போகலாம்.''

எம்.பி. அந்தப்பக்கம் போனதும், மணி, ''இந்த ஆள் ஐம்பத்தேழு தேர்தலிலே வெற்றி பெற்றவர். அறுபத்திரண்டிலே ஏனோ நிற்கலை. அறுபத்தேழிலே டெபாஸிட் போச்சு. போனால் என்ன? இன்னிக்கு ஏழு எட்டு லட்சங்கன் இருக்கு முன்னே இவன்தான் ஊரிலே எல்லாரகளைக்கும தலைவன். 'அரசாங்கத்துக்குப் புத்தி வரணும்னால், பாட்டில்களை யெல்லாம் உடைக்கணும்' என்று

காந்தி படத்தை வைச்சுண்டு மைக்கைப் பிடிச்சுண்டு கத்துவான். வீட்டுக்கு வந்ததும் தனியா அறையிலே உட்கார்ந்து, மேடையிலே சொன்னதைச் செய்து காட்டுவான்!''

மணி முடித்ததும் மங்களா அலுப்புடன், ''நீ அனாவசியமா அவரை வம்புக்கு இழுத்தாய்'' என்றாள்?

''வேண்டுமென்றுதான்... விட்டுத் தள்ளு... அப்போ கேதாரம் சாப்பிட வருகிறான். அப்புறம் மூணு மணிக்கு நீ, உன் அப்பா, மேரி எல்லோரும் எட்மண்ட் வேலை சம்பந்தமா அவனைச் சந்திக்கப் போகிறீர்கள்; அப்புறம்...?''

''அப்புறம் என்ன, அப்புறம்? நீதான் எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறாயே... நீயும் சாப்பிட வரப் போகிறாய்!''

''யார் சொன்னார்கள்?''

''அம்மா. ஏன்?''

''நான் வருகிறேன்னு சொல்லலியே?''

''அப்போ?''

''நான் வரவில்லை.''

''ஏன்?''

''கேதாரம் என்ன மாப்பிள்ளையா? அல்லது நான் அவனுடைய தோழனா? உன் அப்பா அவனை அழைச்சபோது நானும்கூட இருந்தேன். அந்தத் தோஷத்துக்கு என்னிடம் 'நீயும் வா' என்றார் நான் என்னிக்குமே ஒரு காற்றாடிதான். அதன் வால் இல்லை...''

''அதனாலே கோபித்துக்கொண்டு வராமல் இருக்கிறாய்'' என்றாள் மங்களா.

''இல்லே! இல்லே! நான் ஏன் கோபித்துக்கொள்ளணும்? இதுவரையில் ஒருநாள்கூட உன் அப்பா என்னைக் கூப்பிட்டதில்லை. நானும் எதிர்பார்த்ததில்லை. இப்போ

கேதாரத்தை அவன் ரயில்வேயில் பெரிய அதிகாரி—உபசாரமா கூப்பிட்டிருக்கிறார்: நானும் அவனும் ஒன்றாகப் படித்தவர்கள், நண்பர்கள். அதனால் என்னையும், போனால் போகிறது என்று கூப்பிடுகிறார்... வருவேனா'''

''இதுக்குத்தான் தாழ்வு மனப்பான்மைன்னு சொல்லுவார்கள்.''

''இல்லை நான் என்னுடைய தனித்தன்மையைக் காட்டுகிறேன்... அது கிடக்கட்டும் இந்த எட்மண்ட் பிரச்னையை நீ ஏன் உன் தலையில் போட்டுக்கொள்கிறாய்...? மேரியின் மேலுள்ள பரிவினால்தானே?''

''ஆமாம்.''

''ஆமாம்னு இப்போ எளிசாச் சொல்லறே. அவனாலே உனக்கும் உன் அப்பாவுக்கும் கடைசியில் கெட்ட பெயர்தான் வரும். எட்மண்ட் இரண்டு தடவை தீர்த்த யாத்திரை போய் வந்தவன்.''

''தீர்த்த யாத்திரையா?''

''சாராயத்துக்குப் புனிதமான பெயர் தீர்த்தம். சட்டத்தை மீறிச் சாப்பிட்டு, அகப்பட்டுக்கொண்டால் தண்டனை. அது அபராதமா இல்லாமல் ஜெயிலாகவும் இருக்கலாம். அங்கே போய்வந்தால் அது யாத்திரை!''

''இதை மேரி சொல்லவேயில்லையே?''

''அவளுக்குத் தெரிந்திருந்தால்தானே? எட்மண்ட் அடிக்கடி ஊர் சுற்றுகிறவன்... தம்பி ஹாக்கி விளையாட எங்கோ போயிருக்கிறான் என்று நினைத்துக்கொண்டிருப்பாள்... சரி, சரி! நான் ஏதேதோ பேசிக்கொண்டே போகிறேன். நாளைக்குப் புதன்கிழமை, உனக்குத் தெரியுமா?''

''நாளைக்குப் புதன்கிழமை என்று தெரியும்.''

'கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணைப் பெண் பார்க்க யார் போகிறார்கள் தெரியுமா?''

''தெரியும் மிஸ்டர் கேதாரம்.''

''அவனுக்கு விருப்பமில்லை.''

''எனக்கு அக்கறை இல்லை மிஸ்டர் மணி! ஏன் நீங்கள் அவரைப்பற்றிய சமாசாரங்களை என்னுடன் விவாதம் பண்ணுகிறீர்கள்? எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல்லே!''

''கோபிச்சுக்காதீங்கோ. மிஸ் மங்களா... மன்னிச்சுடு: உன் மனசைப் புண்படுத்திவிட்டேன்... நான் வருகிறேன்.'' மணி நகர்ந்தான்.

''மிஸ்டர் மணி!''

மணி நின்றான்

''என்ன?''

''நான் ஆத்திரமாகப் பேசிவிட்டேன்: என்னையும் மன்னிச்சுடுங்கோ!''

''இருக்கட்டும். நான் அவனைப்பற்றி இங்கே வர்ற போதெல்லாம் பேசறது தப்புத்தான். ஆனால் நான் என்ன செய்வது, அவனும் நானும் ராத்திரி ஒரு மணி வரையில் பேசிக்கொண்டிருந்தோம். அடிக்கடி உன் பெயர்தான் அடிபட்டது.''

மீண்டும் மங்களா தன்னை இழந்தாள்.

''நான்சென்ஸ்!''

''நான் ஒத்துக்கறேன்: நான் வரேன், நான் இங்கே வந்து இருபது நிமிஷம் ஆகியிருக்கும். இதற்குள் இந்த அபீதம் திரும்பிப் போயிருக்கமாட்டாள் என்றுதான் நினைக்கிறேன்.''

''அபீதமா... ஆதிசேஷன் பெண்ணா? எங்கே வந்திருக்கிறாள்? என்கொயரிக்கு நான் இல்லாத சமயம் வந்தாளா?''

''என்கொயரிக்கு வரவில்லை... ரிடயரிங் ரூமுக்கு வந்தாள். அவள் அங்கே வந்ததும் நான் கிளம்பி நேரே இங்கே வந்தேன்.''

''எதற்கு?''

''எனக்கு என்ன தெரியும்? உலக மகா படத்தை வைத்துக்கொண்டு, தேன்நிலவை எந்தத் தேசத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கேதாரத்துடன் விவாதம் பண்ணப் போகிறாளோ, என்னமோ? யார் கண்டார்கள்?''

''மிஸ்டர் கேதாரம்தான், அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை என்கிறாரே... இப்போ எதற்கு அபீதம் அவரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள்?''

மணி சிரித்தான்.

''மிஸ்டர் கேதாரத்தைப் பற்றி நான் விவாதம் பண்ணினால் உனக்குக் கோபம் வரும். நான் வருகிறேன் மங்களா?

அடுத்தகணம் மணி 'விர்'ரென்று நடந்து வெளியேறினான்.

மங்களாவின் நெஞ்சம் கனத்தது. துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

அபீதம் ஏன் கேதாரத்தைச் சந்திக்க வேண்டும்?

* * *

ரயில்வே கார்டு ரொஸாரியோவின் பிள்ளை எட்மண்ட் தண்டவாளங்களுக்கிடையே நடந்து போய்க்கொண்டிருந்தான். காலை வெய்யில் வலதுபுறத்தில் அடித்தது. ஒரு காக்கி அரைச் சிராய், அதற்கு ஒத்துவராத ஓர் அரைச் சிவப்பில் கட்டமிட்ட ஷர்ட். நாகரிகமற்ற பாணியில் ஷர்ட்டைச் சிராயினுள் செருகாமல் நழுவ விட்டிருந்தான். முகத்தில் ஏழெட்டு நாள் தாடி. வாரப்படாத தலை. வலது ஆள்காட்டி—நடுவிரல்களினிடையே சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. இடது கையில் சிகரெட் பெட்டி.

திடீரென்று எட்மண்ட் நின்று திரும்பிப் பார்த்தான். சென்ட்ரலின் பதினொரு பிளாட்பாரங்களும் பூதாகாரமாகத் தோன்றின. நான்கைந்து பிளாட்பாரங்களில்

ரயில்கள் நிற்பது தெரிந்தது. மேம்பாலத்தைக் கடந்து, வளைவைத் தாண்டி இன்னும் அரை மைல் நடந்தால் பேஸின்பிரிட்ஜ் வந்துவிடும் என்று அவன் மனம் கணக்கிட்டது.

அவன் சிகரெட்டை எறிந்துவிட்டு நடந்தான். பேஸின் பிரிட்ஜில் எலிஸா அவனுக்காகக் காத்துக்கொண்டிருப்பாள். அவளைப் பார்த்து மூன்று நாட்களாகி விட்டன. கையில் ஒரு பைசாகூட இல்லாமல் அவளை எப்படி அவன் சந்திப்பான். ஆனால் அவள் கண்டிப்பாக அவனைப்பற்றித் தப்பாக எண்ணிக்கொண்டிருப்பாள். எட்மண்ட் குடித்துவிட்டு எங்கேயோ யாருடனோ சண்டை பிடித்துவிட்டு போலீஸ் லாக்அப்பில் இருக்கிறான். அதனால்தான் தன் பிறந்த நாளுக்கும் அவன் வரவில்லை என்று அவள் கறுவிக் கொண்டிருப்பாள்.

எட்மண்டுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. எலிஸாவின் பிறந்த நாளுக்குப் பரிசு அளிக்காததுகூட அவ்வளவாக மனத்தை உறுத்தவில்லை. அவனைப்பற்றி அவள் எப்போதும் கேவலமாகவே எடை போடுகிறாளே என்றுதான் மனம் புண்பட்டது. அவனுக்கு இருக்கிற ஆசை நல்லவனாக மாறவேண்டும் என்பதைவிட, எலிஸாவின் உள்ளத்தில் அவன் நல்லவன் என்ற எண்ணம் விழவேண்டும் என்பதுதான். ஆனால் இதற்கு அவன் உண்மையாகவே நல்லவனாக இருக்க வேண்டும் என்ற உண்மை அவனுக்குத் தோன்றவில்லை.

எட்மண்ட் இடது கையிலிருந்த பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான். தீக்குச்சியின் ஜுவாலையில் எலிஸவேின் முகம்—அவனுக்கு எப்போதுமே அழகாக, கவர்ச்சியாகத் தோன்றும் முகம்—தெரிந்தது. அவளுடைய வெண்ணிறப் பற்களின் பிரகாசம் முகத்தில் அடித்தது.

அவளால் எப்படி அவனைக் காதலிக்க முடிந்தது? முடிகிறது? அவனுடைய ஹாக்கி விளையாட்டில் அவள் மயங்கிவிட்டாளா? வேப்பேரியில், டூமாஸ் வீட்டில் ரகசிய மாக நடக்கும் நடனக் களியாட்டங்களில் அவனுடன் நடனமாடியபோது, அவனுடைய லாகவத்தில் தன்னைப் பறிகொடுத்து விட்டாளா?

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எலிஸா படித்த பெண். மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதித்து அந்த சம்பாத்தியத்தில் ஒரு ரயில் விபத்தில் தம் இரு கால்களையும் இழந்த தகப்பனாரையும் இரண்டு தங்கைகளையும் மூன்று தம்பிகளையும் பராமரிக்கும் பொறுப்புள்ள பெண். அவளுடைய தகப்பனார் ஒரு நல்ல மனிதர். என்ஜின் டிரைவராக இருந்த அவரை விதி இப்படித் தண்டித்திருக்க வேண்டாம். அந்த விபத்து நான்கு ஆண்டுகளுக்குமுன் நடந்தது. அவனுடைய அப்பா ரொஸாரியோதான் கார்டு. அவர்தான் இரத்த வெள்ளத்தில் சுருண்டு கிடந்த டி மெல்லோவைத் தூக்கிக்கொண்டு வந்தார். டி மெல்லோ பெரம்பூர் ஆஸ்பத்திரியில் மூன்று மாதங்கள் தவித்து, தம் இரு கால்களையும் ஆஸ்பத்திரி மண்ணிலேயே புதைத்து விட்டு வெளியே வந்தார். இரு கைகளையும் உயர்த்தி வானத்தின் திசையில் விரித்துக் கர்த்தரின் அருளுக்காக இறைஞ்சினார்.

ரயில்வே நிர்வாகம் குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கவில்லை. எலிஸாவுக்குக் குமாஸ்தா வேலையைக் கொடுத்தது. எலிஸா தன் கடமையிலிருந்தும் தவறவில்லை.

எலிஸாவுக்கு இப்போது வயது இருபது. அப்பாவின் தாத்தா வெள்ளைக்காரர். அந்தத் தாத்தாவின் நிறம் சந்ததியில் யாருக்குமே ஒட்டவில்லை. எல்லாரும் மாநிறம், கருப்பு நிறம்தான். எலிஸா நல்ல கறுப்பு. ஆனால் முகத்தில் ஒரு வசீகரம். கவர்ச்சி. உருண்டு திரண்ட

உடற்கட்டு, பார்த்தவர்களின் மனத்தில் அசுரன் கட்டவிழ்த்துக் கொண்டு ஓட முயலுவான். அவளுடைய மத மதவென்றிருக்கும் உடற்கட்டே முதன் முதலில் எட்மண்டை அவளிடம் இழுத்தது. ஆனால் எலிஸா நல்ல பெண் நாளாவட்டத்தில் எட்மண்டின் ஆசை திருமணத்துக்கு அப்புறம்தான் நிறைவேற முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டாள்.

* * *

எட்மண்ட் மேம்பாலத்தைக் கடக்கவும் பின்னாலிருந்து ஒரு குரல் எழவும் சரியாக இருந்தது.

"சார்லி!"

சார்லஸ் ரொஸாரியோ எட்மண்ட் திரும்பிப் பார்த்தான்.

மணி ஓடோடி வந்துகொண்டிருந்தான்.

எட்மண்ட் நின்றான். மணி எதற்காக அவனைத் தேடிக் கொண்டு ஓடி வருகிறான்? முந்தின நாள் கொடுத்த பத்து ரூபாயைத் திரும்பப் பெறவா? ஆனால் அவன் அவனைக் கேட்கக்கூடாதே? அப்பாவை அல்லவா கேட்க வேண்டும்?

"எட்மண்ட்."

"என்ன வேணும்?"

"பேஸின் பிரிட்ஜுக்குத்தானே போறே... அங்கே எலிஸா இல்லை."

எட்மண்டுக்கு ஆச்சரியமும் கோபமும் ஒரே சமயத்தில் வந்தன. இவனுக்கு எப்படித் தெரியும்? அவன் எலிஸாவைச் சந்திக்கத்தான் செல்லுகிறான் என்று?

எட்மண்டை மணி பேச விடவில்லை.

"எலிஸா பெரம்பூர் ஆஸ்பத்திரியில் இருக்கிறாள்."

''என்ன சொல்லறே?'' என்றான் அதிர்ச்சியில்.

''நீ அவளை இரண்டு மூன்று நாட்களாகப் பார்க்க வில்லை போலிருக்கு. டிமெல்லோ முந்தா நாள் சாயங் காலம் குளியலறைக்குப் போறபோது 'க்ரச்சஸ்' வழுக்கி விழுந்துவிட்டார்; தாடையில் பலமான அடி... எனக்குத் தெரிஞ்சு நாலு பல்லு எடுத்தாச்சு.''

''உண்மையாகவா?''

''ஆமாம், வா. உன்கிட்டே எனக்குப் பேசணும். வா.''

''எனக்கு நம்பிக்கையில்லே! நீ சொல்றது நிஜம்னா நான் இப்பப் பார்க்கணும் டிமெல்லோவை!''

''நானே உன்னை அழைச்சுண்டு போறேன் எட்மண்ட் கவலைப்படாதே!''

''இப்போ எங்கே கூப்பிடறே?''

''உன் அக்கா உனக்காக ரொம்பக் கஷ்டப்படறா.''

''உன் வேலையைப் பார்த்துட்டுப்போ மணி!''

''ஆகட்டும்; அப்படியே செய்யறேன்; இப்போ என் னோடு வா!''

''மணி, என்ன மேன்?''

''பாரு, தாதர் எக்ஸ்பிரஸ் இப்போ புறப்பட்டுப் போகுது. பத்துப் பத்து!''

''இப்போ எங்கே வரணும்?''

''வெஸ்டர்ன் ரயில்வே டிவிஷனல் என்ஜினீயர் ரிடயரிங் ரூமில் இருக்கிறார்... உனக்கு நல்ல வேலை வாங்கித் தருவாரு. என்னோடு வா!''

''இல்லே. நான் மெட்ராஸ்விட்டுப் போகமாட்டேன்.''

''எலிஸாவை பாம்பேக்கு மாத்த நான் ஏற்பாடு பண்ணேறன்; கவலைப்படாதே!''*

''என்ன மேன்?''

''கேள்வி கேட்காமல் வா. என்னை எதிர்த்தேன்னா என்ன செய்வேன்னு உனக்குத் தெரியாது.

''என்ன மேன் ரொம்ப ரொம்ப விரட்டறே... என்ன செய்வே?''

''ராயபுரம் யார்டிலே போனவாரம் மாணிக்கம், அபாஸ் கோவிந்து, விக்டர் இவர்களோடு ராத்திரி மூன்று மணிக்கு என்ன செய்துகொண்டிருந்தே? மாணிக்கமும், அபாஸும் இப்போ லாக்-அப்பிலே இருக்கிறார்கள்; நீயும் போய் அவங்களுக்குத் துணையா இருக்கியா?''

''வாயை மூடு!''

''நான் வாட்ச்—வார்டுக்கு ரொம்ப வேண்டியவன், எட்மண்ட்...பேசாமல் வா...உனக்கு மெட்ராஸ் சூழ்நிலை ஒத்து வரலை...பாம்பேதான் சரி. வெஸ்டர்ன் ரயில்வே ஹாக்கி கோஷ்டியில் நீ விளையாடறதைப் பார்த்து எலிஸா சந்தோஷப்படப் போகிறாள்!'' மௌனமாக நடந்தான். எலிஸா...எலிஸா...எலிஸா...அவள் மனத்தில் அவன் நல்லவ னாகத் தோன்றவேண்டும்; அதற்கு இப்போ ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது அவளுக்கு மட்டும் பம்பாய்க்கு மாற்றல் கிடைத்தால் அவர்களுடைய வாழ்க்கை ரம்மியமாகிவிடும். சித்தி லூஸியை விட்டு விலகிச் செல்ல ஒரு நல்ல வாய்ப்பு உண்டாகிவிடும். வர வர, லூஸியின் போக்கே விபரீத மாகிக்கொண்டு வருகிறது; அப்பா இல்லாதபோது குடிவெறியில் அவள் அவனிடம் தாறுமாறாக நடந்து கொள்ளுகிறாள். என்னதான் அயோக்கியன், குடிகாரன் என்று அவன் பெயர் வாங்கினாலும் பெற்ற தகப்பனாருக் குத் துரோகம் செய்யவோ, சமூகத்தில் அவர் தலைகுனிந்து நடக்கக் காரணமாக இருக்கவோ இடம் கொடுக்கமாட் டான்; லூஸியைப் போன்றவர்களுக்கு இந்த ஜன்மத்தில் விமோசனம் கிடையாது; ஆனால் அவனை அவளால் பல வாங்க முடியாது; அவன் மனத்தில் எலிஸா ஒருத்திக்குத் தான் இடம் இருக்க முடியும்.

அவன் போக வேண்டியதுதான்.

அவனுடைய வயதில் பெற்றவர்களுக்குச் சம்பாதித்துப் போடவேண்டும். அது முடியாமற்போனாலும் தன் வயிற்றைக் கழுவிக் கொள்ளவாவது முயல வேண்டும்.

இருவரும் மௌனமாக நடந்தார்கள். தாதர் எக்ஸ்பிரஸ் கம்பீரமாக எதிரே வந்து அவர்களைத் தாண்டிக்கொண்டு போயிற்று.

சரியாகப் பத்தரைக்கு இருவரும் கேதாரத்தின் அறை முன்னால் நின்றார்கள்.

13

திருமணம் ஒரு ரயில்வே ஜங்ஷனைப் போல—பல திசைகளில் ரயில் செல்லுவது போல், வாழ்க்கையின் திசையும் மாறுகிறது.

அபீதம் அறைவாயிலில் நின்று "சார்!" என்று ஒரு தடவை அழைத்தாள். கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கேதாரமோ கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்த மணியோ அவளைக் கவனிக்கவில்லை.

"சார்!" குரல் அசுருதியுடன் வந்தது.

இப்போது மணி அவளைப் பார்த்தான். ஆதிசேஷன் பெண்ணை அவன் பார்த்திருக்கிறான். ஒரு கோடீசுவரனின் பெண் என்ற வியப்பைவிட, அபீதம் அவன் மனத்தில் எப்போதுமே ஒரு வித பரிவையும் கனிவையும்தான் ஏற்படுத்தியிருக்கிறாள். இப்போது அபீதத்தை ரிடயரிங் அறைவாயிலில் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. முந்தின நாள் கேதாரம் அவளைப் 'பெண் பார்த்து'விட்டு வந்திருக்கிறான்.

ஈவு இரக்கமில்லாமல் அவளிடமும், மாமர் ஜம்புநாதனிடமும் பெண் பிடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறான். கண்டிப்பாக இந்தச் செய்தி ஆதிசேஷன் வீட்டுக்கும் தெரிந்திருக்கும். அவனுடைய நிராகரிப்புக்கான காரணத்தை விசாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அபீதம் இப்போது இங்கே வந்திருக்கிறாளோ?

எண்ணங்கள் கண் இமைக்கும் நேரத்தில் மணியின் மனத்தில் தோன்றின. எட்டு வயதிலிருந்தே அபீதத்தின் உடலில் ஏதோ கோளாறு. டாக்டர்கள் 'தைராய்டு' என்று ஏதோ சொல்லி என்னென்னவோ மருந்து கொடுத்தார்கள். அபீதம் காட்டுப் புதர்போல் வளர்ந்துவிட்டாள். பல வருஷங்கள், தன் உடலின் பக்கவாட்டு வளர்ச்சியை வெளியே காட்ட வெட்கப்பட்டு அழுகையில் காலம் தள்ளினாள். ஆனால் நாளடைவில் மனத்தின் நோய் உடலின் நோயில் மடிந்துவிட்டது. தெய்வம் அவளைத் தண்டித்திருக்கிறது. பூதம்போல் வளர்ந்துவிட்டாள். அதற்காக அவள் எத்தனை நாட்கள்தான் தன்னையே தின்று மாய்த்துக்கொண்டு வீட்டினுள்ளேயே அடைந்து கிடக்க முடியும்? எல்லாப் பெண்களையும்போல் அவளுக்கு வாழ்க்கை இல்லை. கண்டிப்பாக இல்லை. ஆனால் அவள் தன்னிச்சையில் வாழ்வதை யாராலும் தடுக்க முடியாது. 'தைராய்டு டிஃபீஷியன்ஸி' என்ற வியாதியை அவள் ஏன் பெருமையுடன் சொல்லிக்கொண்டு, மற்றவர்கள் அவளுடைய பருமனைப் பார்த்துச் சிரிப்பதற்குமுன், அவளே சிரித்துத் தன்னைத்தானே ஆற்றிக் கொள்ளக்கூடாது?

பதினெட்டு வயதில் இப்படி ஒரு விவேகம் பிறந்தபோது, அபீதம் சமூக சேவகி ஆனாள். அப்பா அவளுடைய செலவுக்கு என்று மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தார். அதில் தொள்ளாயிரத்து ஐம்பதை ஏழைகளுக்குச் செலவு செய்தாள். ஏழைப் பெண்களின் பிரசவம், குழந்தைகளுக்கு மருந்து, பெரியவர்களுக்கு மூக்குக் கண்ணாடி என்று பணம்

ஓடியது: ஒவ்வொரு தீபாவளி, பொங்கல் தினங்களில் ஆயிரம் லட்டுக்களோ, ஜிலேபிகளோ அனாதை ஆசிரமங்களில் இருக்கும் சிறுவர், சிறுமியருக்கு வழங்கப்பட்டன. அவளே கூடைகளில் போட்டுக் காரில் எடுத்துப் போய் வழங்கினாள்.

அவள் செய்த தர்மங்களில், சேவையில் அவளுக்கு ஆத்ம திருப்தி கிடைப்பதாக முதலிலெல்லாம் எண்ணிக்கொண்டாள்: ஆனால் நாள் செல்லச் செல்ல, அவள் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளுவதாகத் தோன்றியது. தன் நெஞ்சின் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள அவள் இம்மாதிரி ஓர் உபாயத்தைத் தேடுவது சரியல்ல என்று தோன்றியது. ஆனால் இந்த எண்ணம் அவள் மனத்தில் உதயமாவதற்கு முன்பேயே, ஏழைகளின் வாழ்க்கையும் அவர்களின் அவலமும் நெஞ்சைப் பிளந்துவிட்டன. லட்சக்கணக்கான சொத்துக்கு வாரிசான அவள் என்ன சுகத்தைக் கண்டுவிட்டாள்? ஏழைகளின் ஏழ்மையை அவள் ஒருத்தியால் களைந்துவிட முடியாதுதான். இருந்தாலும் ஏதோ அவளால் முடிந்ததைச் செய்தால் அவர்கள் சந்தோஷமாக இருப்பார்களே? மொத்தத்தில் சுயநலத்தில் ஆரம்பித்த தர்மம் பொதுநலத்தில் முடிந்தது.

மணிக்கு அவளைப்பற்றி முழுதும் தெரியும். ஆனால் இப்போது ரிடயரிங் அறைக்கு அவள் வந்திருப்பதன் காரணம்தான் விளங்கவில்லை. அபீதம் கேதாரத்தைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள்: அவன் இருந்தால் விஷயத்தை வெளிப்படையாகப் பேசமாட்டாள். அப்புறம், அவள் திரும்பிச் சென்றபிறகு கேதாரத்தின் மூலமே சமாசாரத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

''கேதாரம்! நான் கிளம்புகிறேன்'' என்றான் மணி.

கேதாரம் இன்னும் அபீதத்தைக் கவனிக்கவில்லை.

''எங்கேடா போகிறாய்? எனக்கு 'போர்' அடிக்கிறது.''

''உன்னைத் தேடிக்கொண்டு யார் வந்திருக்கிறார்கள் என்று பார்! நீ பேசிக்கொண்டிரு. நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, மணி பதிலுக்குக் காத்திராமல் புறப்பட்டான்.

அறைவாசலில் அபீதம் ஒதுங்கி வழிவிட்டாள். ''தாங்க்யூ மிஸ் அபீதம். உங்களை எனக்குத் தெரியும்; எத்தனையோ ஏழைகள் உங்களை வாழ்த்துகிறார்கள்!''

கேதாரம் திடுக்கிட்டான். அபீதம் எதற்காக இங்கே வந்திருக்கிறாள்? யார் அவளை அனுப்பியிருக்கிறார்கள்? ஒருவேளை இது மாமாவின் சூழ்ச்சியோ?

''குட்மார்னிங். உள்ளே வரலாமா?'' என்று அபீதம் தன் கட்டைத் தொண்டையில் கேட்டாள்.

''ஓ, பேஷா! உள்ளே வரலாம்!''

''என்னை இங்கே பார்க்கிறபோது உங்க மனசிலே திகைப்பு, ஆச்சரியம், பயம் எல்லாம் உண்டாகின்றன, இல்லையா?''

''இல்லே! இல்லே! அதெல்லாம் இல்லை... வெறும் ஆச்சரியம் மட்டும்தான்... தயைசெய்து உட்காருங்கள்: காப்பி கொண்டுவரச் சொல்லுகிறேன்...''

''இல்லே; வேண்டாம். வீட்டிலே டிபன் காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் கிளம்பினேன்.''

''உட்காருங்கள்''

அபீதம் உட்கார்ந்தாள். கேதாரத்தை விட்டுவிட்டு, அறையை ஒரு நோட்டம் விட்டாள். பாண்ட், ஷர்ட், வேஷ்டி தாறுமாறாக அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன: காலையில் ஏற்றின விளக்கு இன்னும் எரிந்துகொண்டிருந்தது. அபீதம் எழுந்துபோய் அணைத்தாள். மேஜையின் கீழே இரண்டு மூன்று பத்திரிகைகள் கிடந்தன. எடுத்து மேஜையின் மேல் வைத்தாள். ஷேவிங்செட், பிரஷ் ஓர் இடம், சோப் ஓர் இடம் என்று கிடந்தன.

கேதாரத்தை அவமானம் பிடுங்கித் தின்றது. அதுவே அபீதத்தின் மேல் கோபமாகவும் எழுந்தது. ஆனால் கோபத்தைக் காட்ட முடியாமல் திணறினான். ''இது கட்டைப் பிரம்மச்சாரி தங்கியிருக்கும் அறை!'' என்றான்.

அபீதம் புன்முறுவல் செய்தாள். பிறகு, ''உங்க மாமா தான் துடியாய்த் துடிக்கிறாரே, உங்களுக்கு இதிலிருந்து விமோசனம் வாங்கித் தர'' என்றாள்.

''ஆமாம்.''

''நேத்து ராத்திரி, அவருக்கு எங்கள் வீட்டில் ராஜ உபசாரம். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வைகுண்டம் போய்த் திரும்பி வந்த மாதிரி ஒரு சந்தோஷம்... நான் ராத்திரி தூங்கவேயில்லை...'

கேதாரத்தின் உடல் ஆத்திரத்தில் கொதித்தது. பரபரப்புடன் கேட்டான். ''மாமா என்ன சொன்னார்?''

''நீங்கள் சொல்லி அனுப்பியதைத்தான் மிஸ்டர் கேதாரம்... உங்களுக்காக நான் மிகவும் வருந்துகிறேன்!''

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' கேதாரம் விழித்தான்.

''நீங்கள் படித்தவர், எஞ்ஜினீயர், அதிகாரி. ஆனால் எத்தனையோ பேரைப்போல...'' அபீதம் திடீரென்று நிறுத்தினாள்.

''எத்தனையோ பேரைப்போல் என்ன செய்துவிட்டேன்?''

''என்னைப் பெண் பார்க்க வந்தீர்கள். எனக்கு விருப்பமே இல்லை. ஆனால் அம்மா அழுதாள். அப்பா கெஞ்சினார். சரி, என் உடம்பை, உடம்பின் பருமனைப் பார்க்கத்தானே ஒருவன் வருகிறான் என்று சம்மதித்தேன். இதற்குமுன் யாரையும் அனுமதிக்கவில்லை. உங்கள் படிப்பு, பதவி இதையெல்லாம் தெரிந்துகொண்டபோது எனக்குத் தைரியம் வந்தது. சரி என்றேன்.''

''தைரியமா?''

''ஆமாம், தைரியம்தான். இளம் வயதில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிற ஒருவர், ஓர் அழகான, பாந்தமான பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ள விரும்புவார். என்னைப் போன்ற ஒரு பூசணிக்காயைப் பார்த்ததும் அரண்டு மிரண்டு ஓடிவிடுவார் என்று கணக்குப் போட்டேன். சரி என்றேன். நீங்கள் என்னடா என்றால்...''

கேதாரத்துக்கு விஷயம் ஒருவாறு புரிந்துவிட்டது. மாமா ஜம்புநாதன் சூழ்ச்சி செய்திருக்கிறார். இப்போது அபீதத்திடமே, 'எனக்கு உன்னைப் பிடித்தது என்று நான் என் மாமாவிடம் சொல்லவில்லை' என்று எப்படிச் சொல்லுவது? அவன் வார்த்தைகளைத் தேடினான். அவை அவன் மனத்தைவிட்டு விலகி எங்கோ ஒளிந்துகொண்டன.

''என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுவதனால், நீங்கள் என் அப்பாவின் கம்பெனியில் டைரக்டர் ஆகலாம். எனக்கு வரக்கூடிய சொத்தை ஆண்டு அனுபவிக்கலாம். ஆனால், தாம்பத்தியம் என்று ஒன்று இருக்கிறதே, அது கிடைக்குமா? இதைப்பற்றி ஏன் நீங்கள் யோசனை செய்யவில்லை என்பது எனக்கு இன்னும் புரியவில்லை...''

''மிஸ் அபீதம்... நீங்கள் என்னைப் புரிந்துகொள்ளவில்லை.''

''அப்படியானால் நான் மன்னிப்புக் கேட்கத் தயார். பணத்துக்காகச் சம்மதிக்கவில்லை என்றால் எதற்காக? மாமாவுக்காகவா? அல்லது என் அப்பா உங்களை வற்புறுத்தினாரா?''

''இல்லை, இல்லை!'' கேதாரம் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டான்.

''இதெல்லாம் காரணம் இல்லை என்றால், வேறு இரண்டே இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும்;

ஒன்று, நீங்கள் வேறு யாரையாவது காதலித்து அதில் தோல்வி அடைந்து, விரக்தியில் இனி யார் மனைவியாக வாய்த்தால் என்ன என்று முடிவு கட்டியிருப்பீர்கள்; இல்லையென்றால்...''

''தயவுசெய்து... தயவுசெய்து...'' கேதாரத்துக்கு அழுகை வந்தது.

அபீதம் அவனை லட்சியம் செய்யவில்லை. தொடர்ந்தாள்:

''என்மீது உங்களுக்கு இரக்கம் பிறந்திருக்கும், எனக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற தியாக உணர்ச்சி. ஆனால் தியாகத்தின் அடிப்படையில் உருவாகும் தாம்பத்தியம் உருப்படுவதே கிடையாது. என் வாழ்நாள் முழுதும் நான் உங்களுக்குக் கடமைப்பட்டவளாகவே இருக்க வேண்டும்.''

அபீதம் பேசி முடித்ததும், அவளுடைய வார்த்தைகளின் எதிரொலி அடங்கியதும் அமைதி நிலவியது.

கேதாரம் எழுந்து வெளியே சென்றான். ஒரு சிப்பந்தி எதிர்ப்படவே, ''ஒரு பாட் காப்பி, பிஸ்கட்ஸும்கூட எடுத்து வா!'' என்று அவனிடம் சொல்லிவிட்டுத் திரும்பினான்.

அபீதத்தைப் பார்த்தான். அவள் 'ஹிந்து'வைப் புரட்டிக்கொண்டிருந்தாள். செக்கச் செவேலென்ற முகம். குழந்தையின் முகத்தில் மிளிரும் களங்கமற்ற உள்ளத்தின் ஒளி. கன்னத்துச் சதை தொங்கினாலும் நிறத்தின் சோபையில் அது அழகாகத் தோன்றியது. அவளுக்கு அவளுடைய உடம்பே ஒரு பாரமாகத் தோன்றாதது போல் காணப்பட்டாள்.

''நான் என் மாமாவைப் பார்த்துப் பேச வேண்டும்.''

''நீங்கள் உங்கள் முடிவை மாற்றிக்கொண்டால் நான் என்றென்றும் உங்களுக்குக் கடமைப்பட்டவளாக இருப்பேன்; உங்கள் யௌவனத்துக்கும் படிப்பு பதவிக்கும் ஏற்ற

படி அழகான பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளுங்கள்; பணத்தால் கிடைக்கக்கூடிய சுக வாழ்க்கைக்காக தாம்பத்தியத்தை அதன் தெய்வீகத்தை அதன் நிம்மதியைக் குலைத்துக்கொள்ளாதீர்கள். உங்களுக்கு வேறு எந்தவிதத்திலும் உதவ நான் தயார்...''

''மிஸ் அபீதம்!''

''மிஸ்ஸஸ் அபீதம் கேதாரம் என்று என் பெயரை மாற்ற நீங்கள் சம்மதித்திருக்கிறீர்கள். ஆனால் அந்தப் பெயரே 'மிஸ்ஸஸ்' என்ற வார்த்தையே எனக்கு நாராசமாக இருக்கிறது.''

''மிஸ் அபீதம்... எனக்கு என்ன சொல்லுவது என்றே புரியவில்லை.''

''என்னிடம் சொல்ல வேண்டாம். இப்போ என் அப்பா தொழிற்சாலையில் இருப்பார். பத்து மணிக்கு லிங்கி செட்டித் தெருவில் ஆபீஸில் இருப்பார். அவருக்கு ஒரு போன்... போனில் ஒரே வார்த்தை... எனக்கும் விடுதலை உங்களுக்கும் விடுதலை...''

காப்பியும் பிஸ்கட்டும் வந்தன.

''சாப்பிடுங்கள்.''

''சாப்பிடுகிறேன். உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுகிறீர்களா?''

''இப்படிக் கேட்டால் நான் எப்படி பதில் சொல்லுவேன்?''

''நான் என் அம்மா அப்பாவிடம் கண்டிப்பாக, உங்களைக் கலியாணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லியாகிவிட்டது ஆனால் உங்கள் சம்மதத்தை உங்கள் மாமா சொன்னதிலிருந்து, அவர்கள் கலியாணத்தைப் பத்துப் பதினைந்து நாட்களில் நடத்திவிட வேண்டும் என்று பறக்கிறார்கள்.''

''இந்தக் கலியாணம் நடக்கக்கூடாது என்றீர்கள் இல்லையா மிஸ் அபீதம்?''

''ஆமாம்!''

''ஏன்?''

''நான் ஒருவருக்கு மனைவியாக இருக்க லாயக்கில்லை.''

''நான் அதை ஒப்பமாட்டேன். கல்யாணமான பின் ஒல்லியாக இருந்த பெண்கள் எத்தனையோ பேர் குண்டாக மாறிவிடுகிறார்கள்''

''இருக்கலாம். ஆனால் நான் என்னிக்குமே இளைக்க முடியாது...நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள், என்னை உங்கள் மனைவி என்று நாலுபேரிடம் அறிமுகம் செய்து வைக்கத் துணிவு இருக்கிறதா?''

கேதாரம் மௌனம் சாதித்தான்.

''பார்த்தீர்களா...வாயால் உண்டு இல்லை என்று சொல்லவே உங்களுக்குத் துணிவு இல்லை.''

அபீதம், வாயில் போட்ட பிஸ்கட் கரைந்து மாவாகித் தொண்டையில் இறங்குவதற்கு முன்பேயே காப்பியைக் குடிக்கலானாள்.

எத்தனையோ பேர்களுக்குச் சிலை எழுப்புகிறார்களே, இந்த அபீதத்துக்கு ஏன் எழுப்பக்கூடாது என்று கேதாரம் தன்னைத்தானே கேட்டுக்கொண்டு காப்பியை எடுத்தான்.

அதே சமயத்தில் போர்ட்டர் சீனன் உள்ளே நுழைந்தான்.

''வணக்கமுங்க...'' கேதாரம் ஏறிட்டுப் பார்த்தான்.

நெற்றியில் பளபளத்த விபூதியும், மின்னின குங்குமமும் அவனை அயரவைத்தன.

''என்னப்பா வேணும்?''

''எஸ்.எஸ். வீட்டுக்குச் சரியா பத்தரை மணிக்கு வருவீங்களா...?''

''பதினொரு மணிக்கு.''

''சரிங்க.''

''எதுக்குக் கேட்கிறே?''

''எஸ்.எஸ்.ஸுக்குச் சந்தேகம் வந்துடுத்துங்க. அதான் வந்தேன்.''

''பதினொரு மணிக்கு.''

''நல்லதுங்க... ஒரு ரூபா சில்லறை இருக்குமா...? இன்னும் நாஸ்தா பண்ணலை...''

கேதாரம் ஒரு கணம்தான் தயங்கினான் 'இல்லை' என்றால் அபீதம் அவனை மட்டமாக எடை போடுவாள். உடனே கொடுத்தால் அவனைப் பற்றி ஏதாவது சந்தேகம் வந்தாலும் வரும். என்ன செய்வது?

''சில்லரை நோட்டாக இல்லை...''

''மாற்றிக்கொண்டு வர்றேனுங்க.''

''அப்புறமா வா...''

அநாவசியமாக ஒரு ரூபாயை இழக்கக் கேதாரத்துக்கு மனம் வரவில்லை.

''சரிங்க... இன்னும் நாஸ்தா பண்ணலை!''

அபீதம் பேச்சில் குறுக்கிடவில்லை. 'ஹிந்து'வில் மூழ்கினாள்.

அவன் போனதும், யார் எஸ்.எஸ். மிஸ்டர் கணபதி தானே?'' என்று அவள் கேட்டாள்.

''ஆமாம்.''

''அவர் பெண் மங்களாவை உங்களுக்குத் தெரியுமா?''

''ஒரு மாதிரியா?க...''

''அவளும் நானும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்... பாட்மிண்டன் சாம்பியன்...நாடகத்திலே நன்னா 'ஆக்ட்' பண்ணுவாள்.''

''இந்த விவரமெல்லாம் தெரியாது.''

''ரொம்பத் துடுக்கு. சிரிச்சுச் சிரிச்சு, வெட்டி வெட்டிப் பேசுவாள்...எனக்கு ஒரு வருஷம் ஸீனியர்.''

''அப்படியா?''

''ஆனால் அவளுடன் நான் பழகினதில்லை. சொல்லப் போனால் அவள் என்னை மதித்ததுகூட இல்லை. இவ்வளவுக்கும் கல்லூரி நாடகத்துக்கு எங்கள் பணம்தான் அதிகம் செலவாகும்.''

''கர்வியோ?''

''இல்லே, இல்லே. அவள் போக்கு. ரொம்பப் பேர் அவளைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். கர்வியானால் அண்டு வார்களா? ரேணுகான்னு ஒரு சிநேகிதி... அவள்தான் இவளுக்கு ரொம்ப நெருங்கிய... இப்போ எங்கே இருக்கிறாளோ...?''

''பம்பாயில்.''

''உங்களுக்குத் தெரிமயுா?'' என்று அபீதம் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஒரு தடவை சந்தித்திருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்களில் அவள் வருகிறாள்.''

''அப்படியா?''

''மங்களாவுடன்தான் ரேணுகா தங்கப் போகிறாள்.''

''ரொம்ப நல்லதாகப் போச்சு! ஆமாம்! ரொம்பத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே?''

பம்பாயில் ரேணுகாவைச் சந்தித்ததையும் அவள் சொன்னதையும் கேதாரம் விவரமாகச் சொன்னான்.

''எனக்கு ஒரு சின்ன உதவி பண்ணுவீர்களா?''

''ஓ ஆகட்டும்!''

''ரேணுகா வந்ததும் எனக்கு போன் பண்ணுங்கள். நான் உடனே வந்து பார்க்கிறேன்.''

''ஆகட்டும் எனக்கும் ஒரு சின்ன உதவி...!''

''சொல்லுங்கள்!''

''என் மாமா ஜம்புநாதன் இனிமேல் உங்க வீட்டில் தான் பழியாகக் கிடப்பார், அவரை நான் உடனடியாகச் சந்திக்கணும்.''

''வரச் சொல்லுகிறேன்.''

''சாதாரணமாகச் சொன்னால் வரமாட்டார். நீங்கள் இங்கே வந்த விவரத்தைச் சொல்லுங்கள்... அதுபோதும்... அடித்துக் கட்டிக்கொண்டு ஓடி வருவார்.''

''அவர் இங்கே எப்போ வர வேண்டும்?''

''இரண்டு மணிக்கு.''

''நானே காரில் கொண்டு வந்து விட்டுப் போகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்!''

''ரொம்ப தாங்க்ஸ் மிஸ் அபீதம்.''

''நாம ரெண்டுபேரும் இப்போ தெரிந்தவர்களாகப் போய்விட்டோம். நண்பர்களாக இருப்பதுதான் நல்லது... இல்லியா?''

''ஆமாம்! நீங்க சொல்வது ரொம்ப சரி?''

''நான் வரேன்.''

''குட்லக்!''

''தாங்க்ஸ்!''

அபீதம் எழுந்து மெதுவாக நடந்து சென்றாள்.

அவளுக்காக மனத்தில் கண்ணீர் சிந்திக்கொண்டு கேதாரம் வெகுநேரம் கட்டிலிலேயே கிடந்தான்.

14

காலை 4-25லிருந்து இரவு 10-35 வரை, நூற்றியிருபத்தைந்து ரயில்கள் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வருகின்றன, புறபபடுகின்றன.
—புள்ளி விவரம்

ஜம்புநாதனுக்கு உட்கார நாற்காலி பெஞ்சு என்று ஏதுப் தேவையில்லை. மேல் துண்டால் தரையைத் தட்டி உதறிவிட்டு சப்பணம் போட்டு உட்கார்ந்துவிடுவார். இடதைதப் பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. பஸ்

நிலையம் ஆஸ்பத்திரி வராந்தா, பள்ளிக்கூடத் திண்ணை, ரயில்வே பிளாட்பாரம் எல்லாம் அவருக்குச் சொந்தம்.

சென்ட்ரலில் கேதாரம் பம்பாயிலிருந்து வந்த அன்று சந்தித்தாரே, அப்போது தாம் ஒரு சிநேகிதர் வீட்டில் தங்கியிருப்பதாக அவனிடம் சொல்லியிருந்தார். அவனும் அதை நம்பியிருந்தான். உண்மையில் ஜம்புநாதன்—குற்றாலம் முதியோர் ஆசிரமத்திலிருந்து ஒரு பெருங்காய விளம்பரமிட்ட காக்கிப் பையுடன் எழும்பூரில் இறங்கி அங்கேயே பல் தேய்த்து (வெறும் விரலால்) குளித்துவிட்டு நேரே சென்ட்ரலுக்குத்தான் வந்தார். ரயில்கள் எந்தப் பிளாட்பாரத்திலிருந்து அதிகமாகப் புறப்படுவதில்லை, எந்தப் பிளாட்பாரத்துக்கு அதிகமாக வந்து நிற்பதில்லை என்று அறிந்து கொள்ள விசாலமான அட்டவணையைப் பார்த்தார். மனத்தால் கணக்குப் போட்டுப் பார்த்தார்.

கீழ்க்கண்ட விவரம் பதிந்தது.

பிளாட்பாரம் நெம்பர்	வந்து சேரும் ரயில்கள்	புறப்படும் ரயில்கள்	மொத்தம்
1	6	—	6
2	5	2	7
3	6	3	9
4	3	7	10

பிளாட்பாரம் நெம்பர்	வந்து சேரும் ரயில்கள்	புறப்படும் ரயில்கள்	மொத்தம்
5	3	4	7
6	2	7	9
7	2	7	9
8	7	8	15
9	8	8½	16
10	10	7	17
11	11		20

நூற்று இருபத்தைந்து ரயில்கள் காலை நான்கு இருபத்தைந்திலிருந்து இரவு பத்து முப்பத்தைந்துவரை வந்து சேருகின்றன, புறப்படுகின்றன. இந்த நூற்று இருபத்தைந்தில் அறுபத்தியொரு ரயில்கள் ஆவடி, பட்டாபிராம், திருவள்ளூர், பொன்னேரி, அரக்கோணம் வரையிலுமே செல்லும் லோக்கல்கள். இவற்றில் பெரும்பாலானவை 8, 9, 10, 11 பிளாட்பாரங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன. 7-வது பிளாட்பாரத்தில் இரண்டே இரண்டு ரயில்கள் வந்து சேருகின்றன. ஆனால் ஏழு ரயில்கள் புறப்படுகின்றன. (நல்ல நெரிசல்) 4, 6 பிளாட்பாரங்களும் 7ஐப் போலத்தான் 2, 3 பிளாட்பாரங்களில் வந்து சேருகிற ரயில்கள் அதிகம் 5-ம் நெம்பர் பிளாட்பாரத்தைப்பற்றி விசேஷமாக எதுவும் தோன்றவில்லை.

ஜம்புநாதன் பள்ளிக்கூட நாட்களில் கணக்குப் பரீட்சையில் என்ன மார்க்கு வாங்கினாரோ ரயிலைப் பற்றிய கணக்குகள் அத்துப்படி. ரயில்வே கால அட்டவணைப் புத்தகத்தை ஒரு தடவை புரட்டிப் பார்த்தால் போதும், எல்லாம் சுந்தர காண்டம் பதிவதுபோலப் பதிந்துவிடும்.

அவர் இப்போது எல்லா பிளாட்பாரங்களையும் விட்டுவிட்டு 1ஆம் நம்பரில் லயித்துப் போனார். ஒரு ரயில்கூட அங்கிருந்து புறப்படுவதில்லை. ஆறே ஆறு ரயில்கள், காலை 5-25, 11-00, பிற்பகல் 2-30, மாலை 5-15, இரவு 7-15, 9-40 மணிக்கு வந்து சேருகின்றன. முதல் ரயில் அவரை எழுப்பிவிடும். வண்டி காலியானதும் அது திரும்பியார்டுக்குப் போவதற்கு முன் ஏதாவது ஒரு முதல் வகுப்புப் பெட்டியில் ஏறி, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, உடை மாற்றிக்கொள்ளலாம். அப்புறம் அவர் பன்னிரண்டு மணிக்குத் திரும்பி வரும்போது அமைதியாக இருக்கும். இரண்டரை ரயில் வருகிறவரை, ஒரு குட்டித் தூக்கம் போடலாம்.

ஒரே ஒரு அசௌகரியம்தான் மனத்தை உறுத்தியது: 1-ம் நம்பர் பிளாட்பாரம் வால்டாக்ஸ் சாலையை ஒட்டியிருக்கிறது. வீதியின் இரைச்சல் காதை அறுத்துக்கொண்டேயிருக்கும். ரிக்ஷா வண்டிக்காரர்களின் சண்டை, போர்ட்டர்களின் கூச்சல் இவையெல்லாம் நாராசமாக இருக்கும்;

ஜம்புநாதன் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தார்: 8,9,10,11 பிளாட்பாரங்களைப் பற்றிக் கனவிலும் நினைக்கக்கூடாது. 7-வது பிளாட்பாரத்தில் ஆர் எம்.எஸ்: இருக்கிறது. தபால் மூட்டைகளும், டிராலிகளும் வழியை அடைத்துக்கொண்டிருக்கும். 6,5,4,3,2 பிளாட்பாரங்கள் ஒதுங்கி வாழ ஏற்றதல்ல. வந்து போகிற ரயில் மந்தைகளினிடையே இருக்க முடியாது. பதினொரு பிளாட்பாரங்களில் சிறந்த பிளாட்பாரம் 1ம் நம்பர்தான்; அதையும் வேண்டாம் என்றால், அவர் சென்ட்ரலை விட்டுப் போக வேண்டியதுதான்.

ஜம்புநாதன் ஒரு தீர்மானத்துக்கு வந்தால், அவ்வளவுதான். கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறவரைக்கும் விடமாட்டார் 1-ம் நம்பர் பிளாட்பாரத்தில், பார்சல் ஆபீஸையெல்லாம் தாண்டி, கோடியில் குடியேறினார். ஒரு சிமெண்ட் பெஞ்சியில் பெருங்காய விளம்பரப் பையை வைத்துவிட்டு கீழே உட்கார்ந்தார். அப்போது காலை மணி எட்டு. இன்னும் மூன்று மணிநேரத்துக்கு ரயில் வராது. மறுநாள் கேதாரம் வருவான். அவனிடம் ஒரு சிநேகிதர் வீட்டில் தங்கியிருப்பதாகச் சொல்ல வேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

* * *

இன்று செவ்வாய்க்கிழமை. அவர் காலை ஏழரை மணிக்குப் பிளாட்பாரத்தில் உட்கார்ந்துகொண்டு பர்ஸைத் திறந்தார்;

அந்தப் பர்ஸ் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டாம் ஆண்டில், ஒரு ஜெர்மன் கம்பெனி உதவி மானேஜரால் அவருக்கு (பல தடவை வீடேறி நச்சரித்த பிறகு) கொடுக்கப்பட்டது. கறுகறுவென்று அந்தக் காலத்தில் இருந்த பர்ஸ், இப்போது மணம் இழந்து, பொலிவு இழந்து, பட்டன் இழந்து, தள்ளாடும் கிழவனைப் போலச் சுருங்கிக் கிடந்தது!

பெரிய பர்ஸ்!

அவருடைய ராசியோ அல்லது பர்ஸ் பிறந்த வேளையோ அதில் அவர் அந்தக் காலத்து ஓட்டைக் காலணாவையும் போட்டதில்லை; இந்தக் காலத்து விரல் இடுக்கு வழியாக நழுவும் பைசாவையும் போட்டதில்லை; பணம், ஷர்ட்டின் உள்பாக்கெட்டை விட்டு வெளியே வராது.

பர்ஸில் இருப்பவை, இதோ:

1. பெரிய பெரிய மனிதர்களின் பெயர்கள், விலாசங்கள்.

2. நாடக சபாக்களின் பெயர்கள், அவை சம்பந்தமாக யாரையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற குறிப்புக்கள்.

3. பெண்களுக்காக அவர் வாங்கி பொருந்தாத, பொருந்தியும் பிரயோசனமில்லாத ஜாதகங்கள்;

4. தினசரி காலண்டரிலிருந்து கிழித்த தேதிகள்; அவற்றின் பின்னால் அன்றாடச் செலவு கணக்கு;

5. ஒரு பெரிய நீலக் காகிதம். ஒரு பழைய லெட்ஜரிலிருந்து கிழிக்கப்பட்ட காகிதம். அதில் ஒரு நீண்ட பட்டியல். குத்தாலம் முதியோர் ஆசிரமத்தில் குடியேற்றப்பட்ட மகா புருஷர்களின் பெயர்கள், வயது, வந்து சேர்ந்த தேதி முதலான விவரங்கள்;

6. நான்கைந்து கல்யாணப் பத்திரிகைகள்;

7. அவருடைய புகைப்படம்.

8. வைத்தீசுவரன் கோயில் பிரசாதம்.

9. (பெரிய உறையில்) களிப்பாக்கு வெற்றிலை, புகையிலை.

ஜம்புநாதன் மனத்துக்குள் சிரித்துக்கொண்டார். களிப் மாக்கை எடுத்து வாயில் போட்டுக்கொண்ட போது, மனத் தின் சந்தோஷம் புன்னகையாக அரும்பியது. கேதாரம் இனிமேல் தப்ப முடியாது. ஆதிசேஷனுக்கு அவனை ரொம்பவும் பிடித்துவிட்டது. அவருடைய பெண் அபீதம் கேதாரத்துக்கு மனைவியாகிவிடுவாள். அதன்பின் கேதாரம் ரயில்வேயில் தொடர்ந்து இருந்தாலும் சரி, வேலையை விட்டுவிட்டு, மாமனாரின் கம்பெனியில் டைரக்டராகச் சேர்ந்தாலும் சரி, அவருக்கு ஒன்றுதான். கவலையில்லை. அவரைப் பொறுத்தவரையில் இந்தக் கல்யாணம் அவருக்கு ஒரு மகத்தான வெற்றி. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பவர்கள் சாதாரண மனிதர்கள். அவர் ஒரே கல்லில் ஒரு மரத்தையே வீழ்த்துகிறார். அவருடைய சம்பந்தி ஸ்தானம் உயருகிறது. ஆதிசேஷனுடைய பெயரில் ஆசிர மத்தில் ஒரு பெரிய ஹாலே எழப்போகிறது. பெண்களின் கல்யாணம் நடக்கப்போகிறது. கேதாரத்தை அவர் வளர்த்து ஆளாக்கியிருக்கிறார். அவருடைய பேச்சை அவன் ஆணையாகக் கருதி நடக்க வேண்டும். நல்ல பிள்ளை. நடப்பான். மறுநாள் புதன்கிழமையன்று, ஏற் பாட்டின்படி, கிராம்ப்டன் என்ஜினீயருடைய பெண்ணைப் பார்க்க வேண்டும். ஆனால் இப்போது அது அவசிய மில்லாது போய்விட்டது. கேதாரம் ஆதிசேஷனுடைய மருமகனாக வரவேண்டும் என்று ஜம்புநாதனுடைய தலை யிலேயே பிரும்மா எழுதினபிறகு, கேதாரம் எதற்காக மற்ற பெண்களைப் பார்க்க வேண்டும்?

சிந்தனையில் ஊறிப்போன அவருக்கு பொழுது போனதே தெரியவில்லை. எழுந்தார். கேதாரம் பம்பாய்க்கு சனிக்கிழமையன்று புறப்பட ஏற்பாடாகி

யிருப்பது அவருக்கு தெரியும். அந்தப் பிரயாணத்தை அவன் ரத்து செய்தாக வேண்டும். எப்படிச் செய்வது! பாஸ் அவன் கையில் இருக்கிறது. ரத்து செய்யக் குறித்து வைக்கச் சொன்னால், கவுண்டர் கிளார்க் ஒப்புக்கொள்வானா? பாஸை, அப்புறமாகக் கொண்டு வருகிறேன் என்று சொன் னால் போதாதா?

மெதுவாக நடக்கும்போது, அவர் தம் மண்டை யிலேயே ஒரு குட்டுக் குட்டிக்கொண்டார். என்ன ஞாபக மறதி! சே, இதற்கு ஏதாவது ஒரு மருந்து சாப்பிட வேண்டும்! ஸ்டேஷன் சூப்பிரண்டு கணபதி இருக்கும்போது அவர் எதற்காகக் கேவலம் கவுண்டர் கிளார்க்கின் தயவை எதிர்பார்க்க வேண்டும்? கணபதி, அந்தக் காலத்து மனுஷன். ஒரு வார்த்தை சொன்னால் போதும், எஸ்.எஸ். போனிலேயே கவுண்டருக்குத் தகவல் கொடுத்துவிடுவார்.

எஸ்.எஸ்.ஸின் அறையை அடையும் போதுதான், இந்தப் பிரயாண ரத்து அவ்வளவு பெரிய பிரச்னையா என்ற கேள்வி அவருள் உதித்தது.

கேதாரம் ஒரு ரயில்வே அதிகாரி அதுவும் பெரிய அதிகாரி. சனிக்கிழமை பிரயாணத்தை ரத்து செய்ய அப்படி என்ன அவசரம்? இதனால் அவருக்கு என்ன லாபம்?

திடீரென்று எண்ணத்தை அவர் கைவிட்டார். ஆனால் எஸ்.எஸ்.ஸைப் பார்த்து, தம் வெற்றியைச் சொல்லலாம் என நினைத்தார்.

அவருடைய அதிருஷ்டமோ, எஸ் எஸ்ஸின் போதாத வேளையோ, அறையில் யாருமில்லை.

''நமஸ்காரம் கணபதி.''

''வாருங்கள்.''

''விஷயம் தெரியுமோ இல்லியோ?''

''சொல்லுங்கள்.''

''நம்ப மருமான் கேதாரம் இருக்கிறானே...''

''உங்க மருமான்!''

''என் மருமான்தான். அவன் நேத்து ஆதிசேஷனுடைய பெண், அபீதத்தைப் பெண் பார்க்கப் போயிருந்தான்.''

''தெரியும்.''

''ஆதிக்கு ரொம்பப் பிடிச்சுட்டது.''

ஆதிசேஷன் வெறும் ஆதி ஆனதிலிருந்து உறவு பிறந்து விட்டது என்று புரிந்துகொண்டார் எஸ்.எஸ்.

''சந்தோஷம் பெண்ணுக்கு?''

''அபீதத்துக்கு என் மருமானைப் பிடிக்காமல் இருக்க, அவன்கிட்டே என்ன குறை? அவளுக்குப் பிடித்திருக்க வில்லை என்றால் ஆதி வாயெல்லாம் பல்லாய் இருந்திருப்பாரா?''

கேதாரம் பிடித்திருக்கிறது என்று சொன்னானா?''

''என் மருமான் என்னிக்குமே ஓர் அமுத்தல். சின்ன வயசிலேயே அவன் தன் மனசில் என்ன இருக்குன்னு வாய் வார்த்தையாகச் சொல்லமாட்டான். ஆனால் என்கிட்டே வளர்ந்தவன்தானே, அவன் மனசிலே என்ன இருக்கு என்ன இல்லைன்னு எனக்குத் தெரியும்.''

''என்ன இருக்கு?''

''கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்னுதான்.''

''யாரை?''

''இது என்ன ஸ்கூல் வாத்தியார் மாதிரி கணபதி! அவன் அந்தப் பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறான்.''

தாம் வேறுவிதமாகக் கேள்விப்பட்டதை ஜம்புநாதனிடம் சொல்லக் கணபதிக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. மனுஷன் ஏதோ தில்லுமுல்லு செய்து கேதாரத்தை மணையில் உட்காரவைக்கப் பார்க்கிறார் என்பது மட்டும் புரிந்தது.

''உங்களுக்கு எப்படி அவன் மனசு தெரிஞ்சுது?'' என்று கேட்டார்.''

''உள்ளூறப் பிடிச்சிருந்தால் உம்னு உர்ரென்று இருப்பான். இப்போ அப்படித்தான் இருக்கான்.''

''அப்படியா?''

''ஆமாம். பெண்ணு கொஞ்சம் குண்டுதான்.''

''கொஞ்சம்தானா?''

''கொஞ்சம் அதிகம்னு வைத்துக் கொள்ளுங்களேன். என் கண்ணுக்கு ரொம்ப அதிகம்னு தெரியலை. இரண்டு குழந்தைகளைப் பெத்துட்டா உடம்பு சரசரவென்று இறங்கிடும். அஞ்சு வருஷங்களுக்கு அப்புறம் பாருங்கள், பாந்தமாக இருப்பாள்.''

கணபதி கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தார். ஜம்புநாதனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''சாதாரணமா ஒல்லியா ஒத்தை நாடியா இருக்கிற பெண்கள் கல்யாணம் ஆகி இரண்டு குழந்தை பிறந்தால் சதை ஏறி வயிறு பெரிசாகிப் பாந்தமில்லாமல் போயிடறா. ஆனால் உங்க தியரிப்பிரகாரம்...''

''நீங்க சொல்றது ரொம்ப சரி. ஆனால் இவள் இப்போ ரெட்டை நாடி... இனிமேல் பருத்துப் போக முடியாது.''

''அப்போ சரி...எதற்கும் இதையெல்லாம் கேதாரத்திடமும் சொல்லி வையுங்கள். என்ஜினீயர் அவன்...உடம்பு விஷயம் தெரியாமல் இருக்கும். ஆதிசேஷன் என்ன செய்கிறார் கல்யாணத்துக்கு?''

''குபேரன் வீட்டிலே சீர்வரிசை பேசுவாளா?''

''நான் அதைக் கேட்கவில்லை!''

''பின்?''

''உங்க குத்தாலம் ஆசிரமத்துக்கு?''

''மொஸாய்க் பிளோரிங்கிலே ஒரு பிரும்மாண்டமான ஹால்.''

''கல்யாணக் கூடமா?''

''அது மாதிரி ஆனால் ஆசிரமம்.''

''மொஸாக் ஆசிரமம். அதிலே கிழங்கள் படுத்துண்டா முதுகுத்தண்டு உபயோகமில்லாமல் போயிடும் ஜாக்கிரதை.''

''உங்களுக்குக் கேலியாக இருக்கு'' ஜம்புநாதன் எழுந்தார்.

''கோபித்துக் கொள்ளாதீர்கள்...சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன். உங்க ஜாகை வசதியா இருக்கா?''

ஜம்புநாதனுக்குச் 'சுருக்'கென்று ஆகிவிட்டது.

''மருமகனோடு தங்கலாமே?'' என்றார் எஸ் எஸ்.

''தங்கலாம் ஆனால்.....''

''ஒண்ணாம் பிளாட்பாரம் பழகிப்போயிடுத்தாக்கும்.''

ஜம்புநாதனால் பேச முடியவில்லை.

''மிஸ்டர் கணபதி...'' என்று இழுத்துப் பார்த்தார்:

''ஜம்புநாதன்...உங்களை எனக்கு எத்தனை வருஷங்களாக தெரியும்னு நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. உங்க மனைவி பரம சாது. இரண்டு பெண்களை உமக்குக் கொடுத்திருக்கிறாள் உங்க மருமான் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறான். நீங்களெல்லாம் பொது இடங்களில், ஹோட்டல் அறைக்கு ஆகிற இரண்டு ரூபாய் மூன்று ரூபாயை மிச்சப்படுத்த இப்படித் தங்கலாமா? கேதாரத்துக்குத் தெரிஞ்சா அவன் குன்றிப் போகமாட்டான்?''

''நான் வரேன்.''

''கேதாரத்துக்குப் போன் பண்ணி சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''ஆதிசேஷனுக்கும் உங்க விலாசத்தைக் கொடுக்கிறேன் கேர் ஆப் பிளாட்பாரம் நம்பர் ஒன்...சென்ட்ரல் ஸ்டேஷன், மெட்ராஸ்-3 என்று! சரியா?''

''கணபதி!'' ஜம்புநாதன் உடல்வியர்க்க நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்தார். ''ஏன் என்னை இப்படி வதைக்கிறீர்கள்? நான் என்ன தப்பு செய்தேன்?''

''ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கிற சின்ன வயசுப் பிள்ளையை—அவனைப் படிக்க வைத்தோம் என்கிற காரணத்துக்காக—உங்க சொந்த நலனை உத்தேசித்து, பணத்துக்காகப் பணயம் வைக்கிறீர்களே! இதைவிட என்ன பெரிய தப்பு நீங்கள் செய்யணும்?'' என்றார்.

ஜம்புநாதன் எழுந்தார்.

''நானும் பிழைக்கணும் கணபதி, நானும் பிழைக்கணும். மலை மலையா இரண்டு பெண்களைப் பெத்து வைச்சிருக்கேன். அதுகளை இரண்டு பேர் கையிலே பிடிச்சுக் கொடுக்கணும். நியாயம், தர்மம், பாபம், புண்ணியம் எல்லாம் பார்த்தால் நான் என்னிக்கும் என் குடும்பத்தோடே ஒண்ணாம் நம்பர் பிளாட்பாரத்தில் ஜன்மத்தைக் கழிக்க வேண்டியதுதான்...! நான் வரேன்!''

எஸ். எஸ். ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஜம்புநாதன் வெளியேறுவதையே பார்த்தவராய் உட்கார்ந்திருந்தார்:

15

சிறந்த ஆட்டக்காரர்கள் பலர் அகில இந்திய ரயில்வேக்களில் பணி புரிகிறார்கள்:

அபீதம் கேதாரத்தின் நெஞ்சைப் பிளந்துவிட்டாள்: கோடான்னு கோடி மக்கள் அங்க அடையாளங்களிலும், முக விசேஷங்களிலும், நடையிலும், பாவனையிலும் வித்தியாசமாய் வேறுபாடுடன் இருக்கிறார்கள் என்றால் மன

உணர்ச்சிகளில் இந்த வித்தியாசங்கள், வேறுபாடுகள் இன்னும் எத்தனை ஆயிரம் மடங்கு அதிகமாகத் தெரிகின்றன! அபீதம் கறைபடியாத ஓர் உள்ளம். அதிலிருந்து பொழிந்த சத்திய மழை அவனை எவ்வளவு தூரம் நெகிழ வைத்துவிட்டது!

கேதாரம் படுக்கையில் விழுந்தான். ஒரு கோடீசுவரனின் பெண் அவனுடைய காலில் விழுந்து கெஞ்சுகிறாள்! தான் அவனுக்கு அருகதையற்றவள் என்று வற்புறுத்துகிறாள். கேவலம் பணத்தால் ஒருவன் வாழ முடியாது. அது சௌகரியங்களைத்தான் கொடுக்கவல்லது, திருப்தியையும் அமைதியையும் கொடுக்காது என்று அறிவுரை வழங்குகிறாள்!

அவள் நேருக்கு நேராய் அவனுடன் பேசியபோது அவன் அடக்கி வைத்திருந்த உணர்ச்சி இப்போது கட்டவிழ்த்துக்கொண்டு பீறிட்டது. திடீரென்று ஓர் அன்புவெள்ளத்தில் மூழ்கி அவன் தன்னைத்தானே தேடலானான்.

கேதாரம் சென்னை சென்ட்ரலில் பம்பாய் மெயிலில் இருந்து இறங்கும்வரை வெறும் இயந்திரமாக வாழ்ந்தவன். ஓர் என்ஜினீயர் என்கிற முறையில் இயந்திரங்களுக்கு உயிரூட்டிக் கொண்டிருந்தவன். அன்பு, பாசம், பக்தி, பச்சாத்தாபம் இவையெல்லாம் அவனுடைய கண்ணுக்குத் தெரியாத தொலை தூரத்தில் மின்னின நட்சத்திரங்கள்; இந்த நட்சத்திரங்களுக்கும் அவனுடைய வாழ்க்கைக்கும் சிறிதும் சம்பந்தமே இல்லை. இதற்குக் காரணம் அவன் பிறந்த பிறவியும் வாழ்ந்த வாழ்க்கையும்தான்.

அவன் என்றைக்குமே மனத்திருப்தியுடன் தைரியத்துடன் வாழ்ந்ததில்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே அவனுடன் வறுமை இணையாக வளர்ந்து வந்தது. ஏழைமையை மறைக்க உற்றார் உறவினர் யாரும் இல்லை; ஜம்புநாதன் அவனுடைய படிப்பை ஏற்றுக் கொண்டார்

என்றால் அது அவனுடைய முன்னேற்றத்தை உத்தேசித்து அல்ல. பிள்ளை இல்லாத அவர் அவனை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள அவனுடைய சிறு பிராயத்திலேயே திட்டம் தீட்டியிருந்தார். அவன் அவருக்குக் கடன்பட வேண்டும். அவன் பட்ட கடனை எப்போது, எப்படி, எந்த உருவத்தில் வசூல் செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தான் தெரியும்.

மாமாவின் உள் மனத்தைப் பற்றி அவன் முதலிலெல்லாம் கவலைப்படவில்லைதான். தான் ஓர் உயர்ந்த பதவியோடு உத்தியோக வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு அவர்தான் காரணம் என்று அவனுக்குத் தெரியும். இனிமேல் அவருடைய குடும்பம் அவனுடைய கையைத் தான் எதிர்பார்க்கும் என்பதையும் உணர்ந்திருந்தான்.

ஆனால் இதெல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளாய்த் தோன்றிய எண்ணங்கள். அதற்கு முன்? முப்பது பைசா கொடுத்துப் பஸ்ஸில் போகலாமா? அல்லது நான்கு மைல் நடந்தே போய்விடலாமா என்று யோசித்த நாட்கள், மாதங்கள் ஆண்டுகள். பழுப்பேறிய வெள்ளை பாண்ட், இஸ்திரி இல்லாத ஷர்ட், அழுக்கான கைக்குட்டை இவற்றுடன் அவன் பொறிஇயல் கல்லூரியில் பல மாணவர்களிடையே நடந்து சென்றபோது அவனுடைய மனத்தில் ஒரே ஒரு உணர்ச்சிதான் கொப்புளித்தது.

அதுதான் துக்கம்.

அவன் பிறந்தது ஒரு துக்கம். ஏழையாக வளர்ந்தது ஒரு துக்கம். நாலுபேர் அவனுடைய ஏழைமையைச் சுட்டிக் காட்டிப் பரிகசிக்கிறார்கள் என்று எண்ணி எண்ணி, மனம் வெந்துபோனது ஒரு துக்கம். யாராவது அவனைப் பார்த்து விட்டுப் பேசாமல் போனால், ஓர் ஏழையை ஒதுக்குகிறான் என்று அவன் தனக்குள் பொருமியது ஒரு துக்கம்.

பிஞ்சு மனத்தில் தோன்றிய புண் ஆறவேயில்லை. ஏழைமையை எதிர்த்து அவனால் போராட முடியாதது

தான். ஆனால் அதை மறந்து, அலட்சியம் செய்து, தலை நிமிர்ந்து நடக்கலாமே? இதற்கு வேண்டிய நெஞ்சுரமும் திடமும் அவனிடம் இல்லை. தான் தாழ்ந்தவன், தாழ்த்தப்பட்டவன் என்ற எண்ணங்களே, மனப்பான்மையே அவனுடன் வளரலாயிற்று.

பொறியியல் கலையில் முதல் வகுப்பில் தேறி, ரயில்வேயில் பெரிய வேலையில் சேர்ந்தபிறகும், பழைய நிழல் அவனுடன் தொடர்ந்து வந்தது டெரிலின் பாண்ட், டெரிலின் ஷர்ட், விதம் விதமான செருப்புக்கள், பூட்சுகள், எல்லாவற்றையும் அவன் சம்பளம் வாங்கிக் கொடுத்தது. ஏழ்மையை முறியடித்துவிட்டோம் என்று அவன் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். ஆனால் கண்ணாடி முன் நின்றபோது அவன் உடல் குன்றியது. வெளி வாழ்க்கையினால் மட்டும் ஒருவன் ஏழ்மையைக் களைந்துவிட முடியாது என்ற உண்மை முகத்தில் அறைந்தாற்போல் எழுந்தது.

மொத்தத்தில் கேதாரம் அதிருப்தி, ஏமாற்றம், சோகம் முதலான உணர்ச்சிகளைக் கக்கும் இயந்திரமானான். இந்த இயந்திரத்தில் என்றுமே அன்பு, பாசம், பக்தி போன்ற கனிப்பொருள்கள் பாய்ந்து சென்றதில்லை. அன்பும் பாசமும் இல்லாததால்தானோ என்னவோ, சுயநலம் மேலோங்கி நின்றது.

ஏழைமையைப் பெண்கள் பரிகசிப்பார்கள் என்ற எண்ணம்—அந்த எண்ணம் ஏன் எப்படி அவன் மனத்தில் உதித்தது என்று அவனுக்கே தெரியாது. வெகு காலத்துக்கு அவனுள் வேரூன்றியிருந்தது. இதன் காரணமாக அவன் பெண்களையே வெறுத்து வந்தான். நாளடைவில் வெறுப்பு அலட்சியத்துக்கு இடம் கொடுத்தது. ஆனால் காரியாலயத்திலும், அக்கம் பக்கத்திலும் சில பெண்கள் அவனுடன் பேச நேர்ந்தபோது அலட்சியம் மெல்ல மெல்ல

விலக ஆரம்பித்தது. ஆனால் அப்போதும் எந்தப் பெண்ணும் அவனுடைய மனத்தை ஈர்க்கவில்லை. பெண்ணிடம் நெருங்கிப் பழகினால் அவள் மெள்ள மெள்ள, அவனைத் தன் உடைமையாக்கிக் கொண்டுவிடுவாள் என்ற பயம்—இதுவும் காரணமில்லாமல் தோன்றியதுதான்—பிறந்தது.

வெறுப்பு, அலட்சியம், பயம் காரணமாகத்தான் அவன் மனத்தில் ஒரு குதூகலமோ, கிளுகிளுப்போ உண்டாகவில்லை. அதே காரணத்தால்தான் வாழ்க்கையில் எவ்வளவோ ருசியான அம்சங்கள் இருக்கின்றன என்பதை உணர முடியவில்லை. இல்லறம், தாம்பத்தியம், குழந்தைகள் இவைகளைப் பற்றியெல்லாம் அவனால் மனம் விட்டுச் சிந்திக்க முடியவில்லை. ஆண்—பெண் உறவெல்லாம் வெறும் உடல் உறவில் தோன்றிய உடல் உறவில் முடியக் கூடியது என்ற தப்பான, கேவலமான கருத்து அவனுடைய உள்ளத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கையாகத் தோன்றியது. ஆண்—பெண் உறவு உள்ளத்தின் அடிப்படையில் பிறப்பது, அது தெய்வீகமானது என்ற எண்ணங்களே அவனுள் எழவில்லை. யாராவது இந்த விஷயத்தில் சர்ச்சை செய்தாலும் அவன் ஒதுங்கிக் கொண்டான்.

இவ்வளவெல்லாம் இருந்தும் கடந்த ஓரிரு ஆண்டுகளாக, அவன் தன் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கப் பாடுபட்டான். ஜனங்களுடன் கலந்து பழகி வாழவேண்டும் என்ற துடிப்புப் பிறந்தது. ஆனால் பழைய வாழ்க்கை குறுக்குச் சுவர் எழுப்பியது. அதைத் தகர்க்க அன்பு, பாசம், பக்தியால்தான் முடியும் என்று எண்ணினான். குழந்தைகளிடம் எப்படி அன்பைக் காட்டுவது என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. அவனைக் கண்டாலே குழந்தை மிரண்டு ஓடின.

ஆனால் அவன் முயற்சியைக் கைவிடவில்லை. மனம் தளரவில்லை. காரியாலய விருந்துகளில் ஒதுங்கியே இருக்கும் அவன் கலந்து பழக ஆரம்பித்தான். சிநேகிதர்

வீடுகளுக்குச் செல்லலானான். அங்கிருக்கும் குழந்தைகளுக்குச் சாக்லேட்டும் பிஸ்கட்டுமாய்க் கொடுத்து வசியப்படுத்தினான். பிறருடைய சுகதுக்கங்களை விசாரிக்கலானான்; எவ்வளவோ இடங்களில் தன் இதயம் உணராமல் உதடு மட்டுமே இயங்குகிறது என்று நொந்துகொண்டான்; இதயத்தை உதட்டோடு இணைக்க அவன் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ள முயன்றான்.

மெள்ள மெள்ள அவனுடைய முயற்சி பலனளித்தது. வாய்விட்டுச் சிரிக்கக் கற்றுக் கொண்டான். ஹாஸ்யத்தை அனுபவிக்க அவனால் முடிந்தது. துக்கத்தில் கண்ணீர் சுரக்கலாயிற்று. மறைந்து கிடந்த உணர்ச்சிகள் ஒவ்வொன்றாகத் தோன்ற ஆரம்பித்தன.

* * *

இப்பேர்ப்பட்ட கேதாரம் இப்போது அபீதத்துக்காகக் கண்ணீர் வடித்தான். அதேசமயத்தில் பம்பாய் விக்டோரியா டெர்மினஸில் தற்செயலாகச் சந்தித்த ரேணுகாவின் மூலமாகப் பரிச்சயமான மங்களா நெஞ்சில் நின்றாள். அவள் ஏன் அப்படி இரவும் பகலும், உண்ணும் போதும் உறங்கும்போதும் அவனுடைய நெஞ்சில் நிறைந்திருக்கிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை. மணி சொல்லுவதுபோல அவள் அவனை ஈர்ப்பதன் காரணம், அவனுடைய நெஞ்சிலே வியாபித்து நிற்பதன் காரணம், அவனுடைய மனத்தில் திடீரென்று பிறந்துவிட்ட காதல் தானோ?

கேதாரத்தால் நம்ப முடியவில்லை அவனுடைய மர மனத்தில் எப்படி நளினமான காதல் உதிக்க முடியும்? ஆண்—பெண் உறவு உடலுறவின் அடிப்படையில் இயங்குவது என்று ஒரு கொள்கையாகக் கொண்டிருந்த மனத்தில் எப்படிக் காதல் மலர முடியும்? மங்களா அருகில் இல்லாதபோது அவளைப் பார்க்கவும் முடியாத நேரங்களில்

ஏன் அவள் அவன் கண்முன் தோன்றுகிறாள்? அவளுடைய சிரிப்பில் ஏன் மனம் லயிக்கிறது? பேச்சில் ஏன் மனம் பறிபோகிறது? அவளுடைய அமைதியில் ஏன் அவன் நெஞ்சம் துடிக்கிறது? அவள் அருகில் இருந்தாலே ஏன் மனம் பதறுகிறது?

எல்லாப் பெண்களையும்போல மங்களாவும் ஒரு பெண். ஆனால் மற்றவர்களை ஒதுக்கிவிட்டு, அவள் தனித்து அவன்முன் நிற்கிறாள் என்றால் அதற்குக் காரணம் அவள் இல்லை. அவன்தான். அவனுடைய இதயம்தான்! அவனுடைய உணர்ச்சிகள்தான்! இந்த உணர்ச்சிகள் மங்களாவைப்பற்றி நினைக்கின்றன. அவளுடைய உடலைப்பற்றியோ, உடலின் அங்கங்களைப் பற்றியோ, அங்கங்களின் அமைப்பைப் பற்றியோ, அமைப்பின் வசீகரத்தைப் பற்றியோ நினைப்பதில்லை. அவனுடைய தத்துவம், கொள்கை எல்லாம் பொய்; அவனுடைய கற்பனை. ஈரமில்லா நெஞ்சின் வெடிப்பு. அவன் மங்களாவை விரும்பினான் என்றால் அவளுடைய இதயத்தைத்தான் விரும்பினான். அந்த இதயம் எந்த உடலில் இருந்தாலும் அந்த உடலுக்கு அவன் மங்களா என்றுதான் பெயர் சூட்டியிருப்பான்.

மங்களா!

மங்களா!

கேதாரம் பெருமூச்செறிந்தான்.

திடீரென்று எழுந்த மணியின் குரல் அவனைத் திடுக்கிடவைத்தது.

"ஹலோ கேதாரம்."

"உள்ளே வா"

வாசற்படியிலிருந்து மணி மெதுவாக நடந்து வந்தான்; கேதாரத்தின் முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை.

"என்ன உன் உடம்புக்கு?"

"ஒன்றுமில்லை. உட்கார். யார் அங்கே வெளியே நிற்கிறார்கள்?"

''எட்மண்ட்...நீயும் உள்ளே வா!''

''ரயில்வே கார்டு ரொஸாரியோ என்று ஒரு நல்ல மனிதர் இருக்கிறார். அவருடைய பிள்ளை எட்மண்ட்.''

''உள்ளே வாங்க மிஸ்டர்!'' என்றான் கேதாரம்.

எட்மண்ட் அலட்சியமாக நடந்து வந்தாலும் ஒருவித பயம், அடக்கம் எல்லாம் முகத்தில் பிரதிபலித்தன.

''கேதாரம் இவனைப் பார்த்தாயா?''

''உம்...விஷயத்தைச் சொல் மணி!''

''இவன் ரொஸாரியோவின் பிள்ளை.''

''அதுதான சொன்னாயே.''

''அவர் ரொம்ப நல்லவர்.''

''இதையும் சொல்லியாகிவிட்டது.''

''எட்மண்ட் பெரிய ஹாக்கி ஆட்டக்காரன். தமிழ் நாட்டுக்கோஷ்டியில் ஆடுகிறான்...தென்னிந்திய ரயில்வே கோஷ்டியிலும் போன வருஷம் வரை ஆடியிருக்கிறான்.''

''இப்போ ரயில்வேயில் இல்லையாக்கும்?''

''ஆமாம்...அதைவிட்டுத் தள்ளு...நல்ல ஸ்போர்ட்ஸ்மன்.''

''ஹ்ஹும், பேஷ், பேஷ்! அப்புறம்?''

மணி எட்மண்ட் பக்கம் திரும்பினான். எட்மண்ட் எழுந்தான்.

''நான் வருகிறேன் ஸார்!'' என்றான்.

கேதாரம் பதில் சொல்லுவதற்குள் எட்மண்ட் வெளியேறியாகிவிட்டது.

''ஏண்டா அவனை அனுப்பிவிட்டாய்?'' கேதாரம் விழித்தான்.

''அவன் வந்த காரியம் முடிந்துவிட்டது.''

''என்னடா வந்த காரியம்? அதைப்பற்றி அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.''

''இனிமேல்தான் பேச்சு!''

''சரி பேசு.''

''எட்மண்டுக்கு ஓர் ஆசை.''

''என்ன?''

''மேற்கத்திய ரயில்வே கோஷ்டியில் ஹாக்கி ஆடணும். பம்பாயில் ஆடினால்தான் 1972 ஒலிம்பிக்கில் ஆட சான்ஸ் கிடைக்கும் என்று நம்புகிறான்.''

''ஆடட்டும்.''

''அவன் ஆடறது, ஆடாதது உன் கையில் இருக்கிறது.''

''என் கையிலா?''

''ஆமாம்! உன் கையில்தான்.''

''இங்கே கொஞ்ச நாட்கள் ஸ்மித்தியாக இருந்திருக்கிறான். படிப்பு அதிகம் இல்லை. ஆனால் உடம்பில் வலு இருக்கிறது. இவனுடைய அப்பாவுக்கு இவன் இப்போது ஒரு முள். அந்த முள்ளை நீதான் எடுக்கணும்.''

''எடுத்து வெஸ்டர்ன் ரயில்வே காலில் குத்தணும்! அப்படித்தானே?''

''ஆமாம். ஆனால் அவன் ஹாக்கி ஃபீல்டில் மலர்களாத் தூவுவான்! அவனை அங்கே கொண்டுவந்த பெருமை உனக்குத்தான் கிடைக்கும்.''

''நான் என்ன செய்ய முடியும்? நான் ஒரு எஞ்ஜினீயர். ரயில்வே சர்வீஸ் கமிஷன்தான் தேர்ந்தெடுப்பார்கள்.''

''அந்தக் கமிஷன் தேர்ந்தெடுப்பதற்கு ஆதாரமாக சர்ட்டிபிகேட்டுகள் இருக்கின்றன. உன்னுடைய சிபாரிசு முத்தாய்ப்பாக இருக்கும்.''

''பார்க்கலாம்.''

''இது மந்திரிகளின் வார்த்தை.''

''சரி, பார்க்கிறேன்.''

''இது முதலாளிகளின் வார்த்தை.''

''என்ன சொல்லணும் என்பதை நீயே சொல்லு.''

''செய்கிறேன்...கண்டிப்பாக செய்கிறேன்; அவசியம் செய்கிறேன்.''

''சரி.''

''சொல்லு; நான் காதாரக் கேட்கிறேன்.

''செய்கிறேண்டா...நிச்சயமாகச் செய்கிறேன். நல்ல மனுஷன் பிள்ளை என்கிறாய்...''

''தாங்க்யூ!'' மணி எழுந்தான்.

அதேசமயம் ஜம்புநாதன் பெருங்காய விளம்பரப் பையுடன் நுழைந்தார்.

''நான் அப்புறம் பார்க்கிறேன் கேதாரம்.''

அவன் தலை மறைந்ததும் கேதாரம் எழுந்தான். மாமா உட்கார்ந்த நாற்காலியின் அருகே வந்தான். அவனுடைய பார்வையே பயத்தை உண்டாக்கியது.

''கேதாரம்...'' அவர் நெகிழ்ந்தார். எஸ்.எஸ் ஸின் அறையில் உண்டான அனுபவம், வலி எல்லாம் இன்னும் நெஞ்சைவிட்டு மறையவில்லை.

''மாமா...! நீங்கள் என் தாயாருடைய சகோதரர். என்னை ஆளாக்கியவர்... நான் உங்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்; ஆனால் இதற்காக நான் என் வாழ்க்கையை உங்கள் காலடியில் வைத்து நாசமாகப் போக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை...புரிந்ததா?''

''புரியலைடா நீ என்ன சொல்றே?''

''புரியலை என்றால் நேரே ஆதிசேஷன் பங்களாவுக்குப் போங்கள். அங்கே அவருடைய பெண் அபீதம் என்று ஒரு தங்கக் கட்டி இருக்கிறது; அவளிடம் போய்க் கேளுங்கள்''

''அங்கேயிருந்துதான் வருகிறேன். அபீதம் சிரிச்சுப் பேசினாளே... ஒண்ணும் சொல்லவில்லையே, நீ ஏதோ உன்க்குள்ளே நினைக்கிற மாதிரி.''

''என்னுடைய மாமா என்னை முன்னுக்குக் கொண்டு வந்தவர், கேவலம் பணத்துக்காகப் பொய் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. நெற்றியிலே குங்குமம் இருந்தால் போதுமா மாமா? நெஞ்சில் சத்தியம் இருக்க வேண்டாமா?

''என்னடா என்னை வதைக்கிறே? நான் என்ன செய்துவிட்டேன்?''

''அபீதம் இங்கே வந்திருந்தாள். ஒரு மணி நேரம் இருந்தாள்! உங்களுடன் எப்படிச் சிரிச்சுப் பேசியிருக்க முடியும்?''

''சரி. இப்போ என்ன சொல்றே?''

''நானும் அபீதமும் எங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்தாச்சு!''

''அப்பாடீ என் கவலைவிட்டது. நல்ல பெண்...தேதியையும் நீங்களே முடிவு பண்ணியிருக்கிறீர்களா? கண்ணை மூடிக்கொண்டு செய்யாதீர்கள். நான் நட்சத்திரமெல்லாம் பார்க்க வேண்டும்.''

''எங்களுக்குக் கலியாணம் நடக்காது; இந்த விஷயத்தில் நாங்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் வாக்குக் கொடுத்து விட்டோம்.''

ஜம்புநாதன் எழுந்தார், ''நான் கட்டின கோட்டையை இடித்துவிட்டாய் கேதாரம்! இடித்துவிட்டாய்!''

''கோட்டையை இடிக்கவில்லை; மாமா! குத்தாலம் ஆதிசேஷன் ஹாலைத்தான் இடித்தேன்.''

''கோடி ரூபாய்க்குச் சொத்து இருக்கு'' என்றார் ஜம்புநாதன்.

''வேறு ஏதாவது பேச்சு இருக்கா மாமா?''

''நாளைக்குக் கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணை...''

''இனிமேல் பெண் பார்க்கும் படலம் கிடையாது; இனி ஒரு பெண்ணையும் பார்க்கிறதா உத்தேசம் இல்லை.''

''இதுக்கு என்னடா அர்த்தம்?''

''நானே என் கலியாணத்தைத் தீர்மானம் செய்து கொள்ளுகிறேன்...''

''டேய் கேதாரம்.''

''நான் பெண் பார்த்தாச்சு; எனக்கு அவளைப் பிடிச் சிருக்கு.''

''யாருடா அவள்?''

''போக போகத் தெரியும்.''

''வரதட்சிணை எல்லாம் பேசியாச்சா... நல்ல குலமா, கோத்திரமா...?''

''வரதட்சிணை காலணா கிடையாது.''

''ரிஜிஸ்தர் கல்யாணமா?''

''அன்ரிஜிஸ்டர்ட்... மாமா பேசாமல் போங்கள். நான்தான் அவளைப் பார்த்துத் தீர்மானம் செய்திருக் கேனே தவிர, அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கா இல்லை யான்னு எனக்குத் தெரியாது?''

''அப்பாடீ! உசிர் வந்தது! அவள் சம்மதம் வர்றதுக் குள்ளே, கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணை...''

அவரை முடிக்கவிடவில்லை கேதாரம்.

''நோ'' என்று கத்தினான்.

அதேசமயம் 4-வது பிளாட்பாரத்திலிருந்து ஜோலார் பேட்டை பாஸஞ்சர் குரல் கொடுத்துவிட்டுப் புறப்பட்டது.

16

ஒரு ரயில் பெட்டி முழுவதையும் ரிசர்வ் செய்துகொள்ள வேண்டுமானால், டிராபிக் சூப்பிரண்டெண்ட் அலுவலகத்தை அணுகி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

மங்களா மனம் குழம்பிப்போனாள். அபீதம் எதற் காக கேதாரத்தைச் சந்திக்க வேண்டும்? மணி சொல்லுவது போல, தேன் நிலவைப்பற்றி அவனிடம் பேசுவதற்கா?

அப்படியானால் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது என்று தான் அர்த்தம். ஆதிசேஷன் பலப் பல லட்சங்களுக்கு அதிபர். பல கம்பெனிகளின் டைரக்டர். சொந்தத்தில் ஒரு மாபெரும் தொழிற்சாலை நடத்துகிறார். அத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பல பொருள்கள் ரயில்வேக்கு விற்கப்படுகின்றன கேதாரம் ஓர் என்ஜினீயர்; அதுவும் ரயில்வேயில் மெக்கானிகல் என்ஜினீயர். தம் தொழிலையும் மனத்தளத்தில் வைத்துக்கொண்டுதான் ஆதிசேஷன் கேதாரத்தை வலைபோட்டுப் பிடித்திருக் கிறாரோ?

மங்களா திடீரென்று அடிபட்ட புலியைப் போலத் தன்னுள் சீறிக்கொண்டாள். இந்த கேதாரம் யார்? எத்தனையோ பேரைப்போல ஒருவன்!

ரயிலிலும், பஸ்ஸிலும் தற்செயலாக ஓர் அற்பக் காரணத்தை முன்னிட்டு எத்தனையோ பேர் அறிமுகமாவ தில்லையா? அப்படிப்பட்டவர்களில் இவனும் ஒருவன். ரேணுகாவுக்கும் அவளுக்கும் இடையே ஒரு மனிதப் போக்கு வரத்து. இதற்குமேல் அவனுக்கு எந்தவிதமான முக்கியத் துவமும் கொடுக்கத் தேவையில்லை ரேணுகா சொல்லி அனுப்பிய சமாசாரத்தையும், கொடுத்து அனுப்பிய சாக்லேட் பெட்டியையும் கொடுத்தான் அவ்வளவுதான்; அவ்வளவேதான்! அவள் மனம் சஞ்சலப்பட்டதன் காரணம் அவளுடைய பேதமை! இந்தக் கேதாரம் எங்கே இருந்தால் என்ன? எப்படிப் போனால் என்ன? யாரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு எந்த ஊருக்கு, தேசத்துக்குத் 'தேன் நிலவு' போனால் அவளுக்கு என்ன? அவள் ஒரு புக்கிங் கிளார்க், என்கொயரி கிளார்க். தினசரி ஆயிரமாயிரம் பேர் வருகிறார்கள் ஏதேதோ கேட்கிறார்கள். அவர்களில் கேதாரம் ஒருவன் அவள் ஏன் அவனைப்பற்றி நினைக்க வேண்டும்? மற்ற எல்லோரிடமிருந்தும் அவனைப் பிரித்து, தனியாக, நிறுத்திப் பார்க்க வேண்டும்? அவன் யாரோ, அவள் யாரோ? அவனுக்கும் அவளுக்கும் இடையில் அவளே

தன் பிரமையில் ஒரு பாலம் அமைக்க முற்பட்டால் அது அவளுடைய மனத்தின் பக்குவமற்ற தன்மையைத்தானே காட்டுகிறது! அவள் ஒரு பைத்தியம்!

திடீரென்று ஒரு குரல் அவளை எழுப்பியது:

''மாடெம்...''

''யெஸ் ப்ளீஸ்...''

''நான் ஐந்து நிமிஷமாக இங்கேயே நின்று உங்களையே பார்த்துக்கொண்டு நிற்கிறேன்... இரண்டு தடவை அழைத்தும் பார்த்தேன்.''

''மன்னிக்கணும், ஸார்... உங்களுக்கு என்ன வேணும்?''

''ரொம்ப மனசை அலட்டிக்கிட்டிருக்கீங்க. உங்க மனசை ஏதோ அரித்துத் தின்கறது... சரிதானா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. உங்களுக்கு என்ன வேண்டும்?'' மங்களாவுக்கு எரிச்சல் உண்டாயிற்று. இவர் யார் சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்பதற்கு?

வந்தவர் சிரித்தார். பல்லின் வரிசையும் அதன் வெண்மையும் ஒருகணம் மங்களாவையே பிரமிக்கச் செய்தன. பற்பசைக் கம்பெனிக்காரர்கள் போட்டி நடத்தினால் இவருக்குத்தான் முதற் பரிசு கிடைக்கும். அகில உலகப் பல்லழகன் என்ற பட்டமும்கூடக் கிடைக்கலாம். ஒருகணம், மங்களா அவரைப் பார்த்தாள், நல்ல உயரம். ஆறு அடி இருக்கலாம். ஒற்றை நாடியான தேகம். டெரிலின் பாண்ட், டெரிலின் ஷர்ட். நீல நிற டை. காதோரத்தின் வெண்மை, இன்னும் மேலே படரவில்லை. தங்க பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடி, அகன்ற நெற்றியில் நட்ட நடுவே ஒரு சிறு சிவப்புச் சாந்துப் பொட்டு. என்னதான்

இளமைத் தோற்றத்தோடு அவர் காட்சி அளிக்க முயன்றாலும், வயது ஏன்னமோ ஐம்பதைத் தாண்டியிருக்கும் என்று மங்களாவுக்குத் தோன்றியது.

இமைக்கும் நேரத்தில் அவரை அளந்த மங்களா, ''என்ன வேண்டும் என்று சொல்லவில்லையே?'' என்று கேட்டாள்.

''நீங்கள் சுதாரித்துக்கொள்ள நேரம் கொடுத்தேன்... கல்கத்தா மெயிலில் ஏர்கண்டிஷன் போகி முழுதும் ரிசர்வ் செய்யணும். அதற்கு யாரைப் பார்க்கணும்?''

''டிவிஷனல் டிராபிக் சூப்பிரண்டெண்ட்..... ஆபீசில் பார்க்கலாம்.''

''அடுத்த மாதம் பதினெட்டாத் தேதி போகணும். நானும் இன்னும் இரண்டு மூன்றுபேரும் தனித்தனியா நாலு நாலு பெர்த் ரிசர்வ் செய்தால்? ஒரு போகி முழுதும் நாங்களே இருப்போம்! என்ன சொல்லுகிறீர்கள்?''

''ரயில்வே எமர்ஜன்ஸி, ராஜ்ய சர்க்கார் கோட்டா என்று பர்த்துகள் இருக்கின்றன. அவற்றை இப்போது 'ரிலீஸ்' செய்யமாட்டார்கள். டி.டி. எஸ்ஸைப் பார்த்தால்தான் ஒரு போகி முழுதும் கிடைக்கும்.''

''தாங்க்யூ... என் பெயர் தேவன். எம். தேவன்...''

மங்களா பதில் சொல்லவில்லை. அவரும் பதிலுக்கு எதிர்பார்த்து நிற்காமல் பேசிக்கொண்டே போனார்.

''எனக்கு வயது ஐம்பத்து மூணு. ஆனால் யாரும் நம்பமாட்டார்கள். என்னுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் ஒழுங்கானவை. ரெகுலர் ஹாபிட்ஸ். என் உடம்பை நல்லா பாதுகாத்துக்கொள்ளத் தெரியும்.''

மங்களா அலுத்துக்கொண்டாள். கண்டிப்பாக அவர், அவள் தம்மைக் காதலிப்பதற்காக இதெல்லாம் சொல்ல வில்லை. பின் ஏன்? ஒருவேளை இந்த மனுஷர் தம்பட்டம் அடித்துக்கொள்ள ஆள் தேடி அவளைக் கண்டுபிடித்து விட்டாரோ?

''.....நான் இப்போ ஒரு மாசமா மெட்ராஸிலே இருக் கிறேன். ஒரே பிள்ளை. என்னை மாதிரியே இருப்பான். ஆனால் என் உயரம் இல்லை. அவன் ஒரு டாக்டர். எம்.டி. இங்கிலாந்துக்கு எப்.ஆர்.ஸி எஸ். எழுதப் போயேண்டா என்றேன். மாட்டேன் என்கிறான்... பிரை வேட் பிராக்டீஸில் மூவாயிரம் ரூபாய் வர்றது. கிளினிக் வைச்சிருக்கிறான்.....''

''அவனுக்குக் கல்கத்தாவிலே கலியாணம்... கல்யாண கோஷ்டிக்காக, ஏர்கண்டிஷன் 'புக்' பண்ண வந்திருக்கிறீர் கள்? எனறாள் மங்களா. வந்தவருடன் பேசிக்கொண்டிருந் தால், கேதாரம் அவளை விட்டுப் போய்விடுவான் என்று அவளுக்குத் தோன்றியது.

''நோ... நோ... இல்லே! இல்லே! கல்கத்தா பிரயாணம் பிஸினஸ் சம்பந்தமா. எனக்குக் கல்கத்தாவில் ஒரு தொழிற் சாலை இருக்கிறது ரேடியோ எலெக்ட்ரிகல் சம்பந்தமான தொழிற்சாலை... கண்டென்ஸர்ஸ், டிரான்ஸ் பார்மர்கள் தயாரிப்பாளர்கள் இப்போ ரேடியோ வால்வ் பண்ண லாம்னு ஒரு திட்டம். அது சம்பந்தமா ஹாலந்திலிருந்து பெரிய பெரிய கம்பெனிக்காரர்களும், நிபுணர்களும் வரு கிறார்கள் என் தொழிற்சாலையைப் பார்வையிடப் போகிறார்கள். என் பிள்ளை பிரம்மச்சாரி.....''

''அப்படியா...?'' இந்தக் கேள்வி அர்த்தமில்லாமல், அவளுக்கே தெரியாமல் வாயிலிருந்து உதிர்ந்தது.

''ஆமாம்..... ஆனால் அவனுடைய கல்யாணத்தை நடத்திவிட வேண்டியதுதான்; அவனே பெண்ணைப்

பார்த்து வைத்துவிட்டான். ஆனால் பெண்ணுக்கு அவனைத் தெரியாது.''

''சுவாரசியமா இருக்கு!''

''பெண் இந்த ஸ்டேஷன்லே குமாஸ்தாவாக இருக்கி றாள். பெரிய அழகின்னு சொல்ல முடியாது. ஆனால் முகத்திலே களை இருக்கு. ஒருவித லட்சுமி கடாட்சம் இருக்கு. என் பயமெல்லாம் அந்தப் பெண்ணுக்கு என் பிள்ளையைப் பிடிக்கணும் என்றுதான்.''

''பெரிய டாக்டர். ரேடியோ வால்வ் தயாரிப்பாளரு டைய பிள்ளை; ஒரே பிள்ளை. பார்க்கச் சுமாராக இருந் தால்கூடப் போதுமே, பெண் சம்மதித்துவிடுவாள்.'' மங்களா தன் இயல்பில் பேசிக்கொண்டே போனாள்.

''அப்படியா சொல்லுகிறீர்கள்?''

''ஏன், இதில் என்ன சந்தேகம்?''

''எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. எந்தப் பெண்ணும், பதவி பணத்துக்காக மட்டும் தன் கழுத்தை நீட்டிவிட மாட்டாள். அந்தக் காலத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணின் கழுத்தைப் பிடித்து நீட்டி னார்கள். பிள்ளையும் தாலியைக் கட்டினான். இந்தக் காலத்துப் பெண்கள்...''

''எந்தப் பெண்ணும் விரும்புவது அன்போடு நடத்தும் கணவன்—தேவைக்கு ஏற்றபடி அளவாகச் சம்பாதிக்கிற புருஷன்கூட, அவளுடைய தினசரிப் பார்வையின் பழக்கத் தில் அழகாகத் தோன்ற ஆரம்பித்துவிடுவான்.''

எம். தேவன் சிரித்தார்;

''தாங்க் யூ, மிஸ்; மங்களா!... தாங்க் யூ...!''

அவர் தம் பேரைச் சொன்னதும், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதேகணத்தில் இனம் தெரியாத பயமும் அவளைக் கவ்விக்கொண்டது.

''சார்...! சார்...!'' அவளால் மேலே பேச முடிய வில்லை. அவர் நகர்ந்துகொண்டிருந்தார்.

''இன்றைக்குச் செவ்வாய்க்கிழமை நாளைக்குப் புதன்: உன் அப்பா கணபதியை வீட்டில் நான் சந்திக்கிறேன்!''

''சார்... சார்...ப்ளீஸ்... சார்!'' மங்களா தன் ஆசனத் திலிருந்து எழுந்து அவரைப் பிடித்து நிறுத்தத் துடித்தாள்: ஆனால் கைகால் ஓடவில்லை: உடம்பே மரத்துப் போயிற்று தலை சுற்ற அவள் அப்படியே நாற்காலியில் பதிந்து போனாள்: கண்கள் இருண்டன:

* * *

"அக்கா... அக்கா..."

நான்கு தடவை பாபு கூப்பிட்ட பிறகுதான், மங்களா தம்பியைப் புரிந்துகொண்டாள். எம். தேவன் அவளை உலுக்கிவிட்டுப் போனதெல்லாம் ஒரு நீண்ட பயங்கரக் கனவாகத் தோன்றியது.

''என்ன பாபு?'' குரலே கம்மியது. பயத்தில் வயிறு சுருங்கியது.

''எல்லாரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்: உன்னை அப்பா வரச் சொன்னார்.''

''ஒரு மணி நேரம்வரை டியூட்டி இருக்கு.'' இயந்திர மாக வார்த்தைகள் வந்தன.

''அப்பாவுக்குத் தெரியாதா, அது. சீப் புக்கிங் கிளார்க் கிடம் சொல்லிவிட்டு வரச் சொன்னார்.''

சீப் புக்கிங் கிளார்க் ரங்காச்சாரியின் எலுமிச்சம் பழ நிறமும், உருண்டை முகமும், வைரக் கடுக்கன்களும்,

நெற்றி திருமண்ணும் மின்னலாக அவள் கண்முன் தோன்றி மறைந்தன. அவருடைய தலையில் ஒரு பெண்ணைக் கட்ட யாரோ முயல்கிறார்கள். அதேபோல, அவள் தலை யில் தம் பிள்ளையைக் கட்ட எம். தேவன் புறப்பட்டிருக் கிறார்!

''என்ன அக்கா இது... புறப்படு... எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.....''

''ஏல்லாரும் என்றால் யாருடா?''

''அப்பா, கேதாரம் எல்லாரும்தான்...''

''நான் வரலை என்று சொல்... போ... நான் ஒரு மணிக்குத்தான் வருவேன்.''

''அபீதம் கேதாரம்... கேதாரம்—அபீதம். கலியாணம். தேன் நிலவு. என்ஜினீயர்... பணம்... பதவி... சீ, என்ன உலகம் இது.''

''என்ன அக்கா, உனக்குள்ளேயே முணுமுணுத்துக் கறே?''

''நீ இன்னுமா இங்கே நிற்கிறாய்...? போ... போய்ச் சேர்!''

''கேதாரம்தான் நீயும் சாப்பிட வரணும் என்றார்.''

''நான் வரலை என்று சொல்லு...'' தன் சந்தோஷத் தில் அவளும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேதாரம் நினைத்தால் அந்த நினைப்பே அசம்பாவிதம்.

''என்னமோ செய்.''

பாபு ஓடிவிட்டான்.

மங்களாவின் கண்கள் கனத்தன. யாரோ அவளுடைய நெஞ்சைப் பிடித்துக் கசக்கிப் பிழிவதாகத் தோன்றியது. யார்? அவளுடைய கைகளேதானா? அல்லது கேதாரமா? இல்லை, அபீதமா? யார்? யார்?

திடீரென்று எம். தேவன் கிளப்பிவிட்ட பயம் மறைந்தது. எம். தேவனுடைய பிள்ளை, அவளைப் பார்த்

திருக்கிறான். அவளை அவனுக்குப் பிடித்திருக்கிறது. பண்போடு, நாகரிகத்தோடு, அப்பாவிடம் சொல்லி, அவளுடைய தகப்பனாரிடம் பேச அனுப்பியிருக்கிறான். அவர் மீது கோபமோ, எரிச்சலோ உண்டாகக் காரணமில்லை முன்பின் பார்த்திராத அந்த டாக்டர்மீது அவளுக்குப் பரிவுதான் உண்டாயிற்று. ஆனால் பரிவு வேறு, காதல் வேறு. அவளால் யாரையும் காதலிக்க முடியாது. காதல் ஒரு பொய்மை. ஓர் ஏமாற்று உணர்ச்சி. கனவு. அவளுக்குக் கிடைக்கப் போவது, ஒரு லௌகீக வாழ்க்கை. ஒரு குடும்பம், குடும்பத்தில் இரண்டு பேரில் ஒருத்தி. அந்த ஒருவன் யார் என்பதுதான் அந்த ஒருத்திக்கு முக்கியம். அவளைப் பொறுத்தவரையில் இனிமேல் யாருமே முக்கியமில்லை எல்லாரும் ஒன்றுதான். விருப்பு உண்டானால்தான், தாபம் எழும். தாபத்தின் தொடர்ச்சி வேதனை. மங்களாவின் மனத்தில் இனிமேல் விருப்பு, தாபம், வேதனை ஏதும் இருக்காது, இருக்க முடியாது.

அம்மா செத்துப்போன அண்ணனின் பிள்ளையை நினைத்து உருகுகிறாள்: உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் திரிந்துகொண்டிருக்கும் அவன்தான் மங்களாவின் வாழ்க்கையை மலரச் செய்ய வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள்! அப்பா அவளுடைய கல்யாணத்தை நினைத்தாலே நடுங்குகிறார்? பதினொரு குழந்தைகளைப் பெற்றவர். சீர் வரதட்சிணை, கல்யாணச் செலவு என்று பயந்து சாகிறார். 'என்றென்றும் கன்னிப்பெண்ணாகவே இருப்பேன்' என்று மங்களா பீஷ்ம சபதம் செய்தால், அந்தச் சபதத்தில் மனம் மகிழக்கூடியவர் அவளுடைய அப்பாதான். ஆனால் இந்த மகிழ்ச்சியினிடையிலும், அவருடைய மனம் வேதனைப் படும். தம் பெண்ணை வாழவைக்க அவரால் முடியாமற் போயிற்றே! கையாலாகாதவராகி விட்டாரே! ஆனால் இந்த எம். தேவன் தம் பிள்ளைக்காக அவரை அணுகினால், கல்யாணச் செலவு காலணாக்கூடக் கிடையாது என்று சொல்லிக்கொண்டு கதையை ஆரம்பித்தால், அப்பா

துள்ளிக்கொண்டு கிளம்புவார்; அம்மாவையும் வாய்ச் சாலகத்தால் சமாதானப்படுத்தி, அவளுடைய அண்ணா பிள்ளையை மறக்கச் செய்வார்!

இதனால் யாருக்கு என்ன லாபம்! எம். தேவனுக்கும், அவருடைய பிள்ளைக்கும், அப்பாவுக்கும்தான். கல்யாணத்துக்குச் சாப்பிட வருகிறவர்களுக்கும் லாபம்தான்! ஆனால் அவளுக்கு?

எல்லாம் ஒன்றுதான்!

மாமா பிள்ளையானால் என்ன, எம். தேவன் பிள்ளையானால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அவள் இனிமேல் இயந்திரம்; இயந்திரம்வெறும் இயந்திரம்.

கேதாரம்...அபீதம். அபீதம்—கேதாரம்.

மங்களா பெருமூச்செறிந்தாள்; எதிரே வந்து நின்ற மேரியையும் அவள் கவனிக்கவில்லை.

''ஹலோ மங்களா.''

''ஓ நீயா?''

''என்ன மங்களா, முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு... ஜ்வரமா?''

''இல்லை. நன்றாகத்தான் இருக்கிறேன்.''

''இன்னிக்கு மூணுமணிக்கு நாம் மிஸ்டர் கேதாரத்தை சந்திக்கப் போகிறோம்! இல்லியா...?''

''மன்னிக்கணும் மேரி...என்னால் வர முடியாது.''

''எட்மண்டுக்கு எப்படியாவது ஒரு வேலை கிடைக்க வேண்டும் மங்களா.''

''என் அப்பாவை அழைத்துக்கொண்டு போய் பாரு.''

''நீ வந்தால்தான் வெற்றி கிடைக்கும்'' மங்களா?''

மங்களா சிறினாள்: ''ஏன் நான் அவனுக்கு முன்னாலே போய் நின்றால்தான் உன் தம்பிக்கு வேலை கிடைக்கும் என்று நினைக்கிறாயா?''

மேரியின் முகம் வெளிறிப் போயிற்று. அவளுக்கு மங்களாவின்மீது ஆத்திரம் பிறக்கவில்லை. மாறாக அனுதாபம்தான் உண்டாயிற்று. ஓர் இருபத்துநாலு மணி நேரத்தில் மங்களாவின் மனத்தில் அதிர்ச்சி தோன்றியிருக் கிறது. இந்த அதிர்ச்சிக்கும் அந்தக் கேதாரத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. இல்லாவிட்டால் மங்களா, அவளாகவே செய்த ஏற்பாட்டை ஏன் இப்போது மீறுகிறாள்?

''ஓகே மங்களா... உன் அப்பாவும் நானும் போய்ப் பார்க்கிறோம்...''

''என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்...யாரை வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள்... என் கழுத்தை அறுக்காதீர்கள்...எனக்கு யாரும் லட்சியமில்லை...''

மேரி அவளையே கூர்ந்து பார்த்தாள். மங்களாவா இப்படிப் பேசுகிறாள்? அவளுடைய குரல் மற்ற கவுண்டர் களில் கேட்குமே? மேரி சுற்றுமுற்றும் பார்த்தாள். நல்ல வேளையாக யாரும் மங்களாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வில்லை.

மேரிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மங்களா உன்மத்தம் பிடித்தவளைப்போல் கத்துகிறாள். இன்னும் நின்றுகொண்டே இருந்தால் அவள் மேலும் கத்த அவளே வாய்ப்பு அளித்தவளாகி விடுவாள். என்கொயரி கிளார்க் மங்களா கத்தினாள் என்று நாலுபேர் பேச ஏதுவாகும்.

மேரி மெதுவாக நகர்ந்தாள். அவள் அந்த அறையை விட்டு வெளியேறுவதற்கும் ''மேரி'' என்ற குரல் கேட்பதற் கும் சரியாக இருந்தது.

மேரி நின்றாள். தலையைத் திருப்பிப் பார்த்தாள். மங்களாவின் கண்கள் கனத்து விழிகளை நீர் மறைத் திருந்தது. கன்னங்களில் ஓரிரு முத்துக்கள் உருண்டோடின.

மேரி திரும்பி ஓடி மங்களாவின் அருகே போய் நின்றாள்.

''மேரி...மேரி...மன்னிச்சுடு மேரி.....''

''மங்களா...! ஆனால் இங்கே உன் உணர்ச்சிகளைக் காட்டாதே...தோல்வியினாலே உன் மனம் உடைஞ்சு போயிருக்கு!''

மங்களா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்னை அறியாமல், எனக்குத் தெரியாமல் அழுகை வர்றது மேரி. அழறதே அவமானம்னு நினைக்கிற எனக்கு ஏன் இப்படி அழுகை வர்றது?''

''ஏமாற்றத்தால் உண்டாகிற வேதனை.''

''ஏமாற்றமா? ஆசை இருந்திருந்தால்தானே மேரி ஏமாற்றத்துக்கு இடம் இருக்கும்?''

''காரணமில்லாமல் அழுகை வரமுடியாது மங்களா. ரொம்ப மனசு உடைஞ்சு போயிருக்கு!''

மங்களா மௌனமாக இருந்தாள்.

''உன் மனசு புண்ணாகியிருக்கிறது. உன் மனப் புண்ணுக்குக் காரணம் தோல்வி, ஏமாற்றம். இதையெல் லாம் நான் சொன்னால் நீ ஒப்புக்கொள்ள மாட்டாய். ஏனென்றால் உன் மனசிலே உண்டாகியிருப்பது ஆசை, ஒரு புது விதமான ஆசை என்பதை நீயே இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. உன்னை அறியாமல் பிறந்த ஆசை, உன் கண் எதிரே ஏமாற்றமாக முடிந்துவிட்டது. இதனால் உனக்கு உன்மீதே கோபம் வருகிறது. ஏன் ஆசைக்கு இடம் கொடுத்தோம் என்று நீயே நொந்து கொள்ளுகிறாய்...''

''நோ...நோ...நோ...!''

''ப்ளீஸ் மங்களா...உன் வேதனையை நீ தனிமையில் தான் அழுது தீர்க்கணும். இந்த ஏமாற்றத்துக்கு அழுகை தான் மருந்து. கண்ணீரின் கடைசிச் சொட்டு விழுந்து விட்டால் நீயும் என்னைப் போலாகிவிடுவாய்...தண்டவா ளத்தில் ஓடுகிற வெறும் ரயில் மாதிரி மாறிவிடுவாய்...''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை...''

''மங்களா! நீ அந்தக் கேதாரத்தின் மேலே காதல் கொண்டிருக்கே! இப்போ அதிலே தோல்வி கண்டதும்...!''

''வாயை மூடு மேரி. நான் அவனை வெறுக்கிறேன். நான் அவனை மனதார வெறுக்கிறேன்.

இப்போது மேரி சிரித்தாள்.

''வெறுப்பு அன்பின் நிழல்தான் மங்களா...அன்பு இல்லாத இடத்தில் வெறுப்பும் இருக்கமுடியாது. உன்னால் கண்டிப்பாகக் கேதாரத்தை வெறுக்க முடியாது, எனக்குத் தெரியும்...பலராமன் என்னைவிட்டே ஓடிப்போய்விட்டான். ஆனாலும் என்னால் அவனை வெறுக்க முடியவில்லை. உன்னால் எப்படிக் கேதாரத்தை வெறுக்க முடியும்? உனக்கு உள்ளூற அவன் மேலே ஆசை இருக்கு. அதிர்ஷ்டம் பிறக்கட்டும். நான் வரேன்.

''மேரி!''

''உம்!''

''மூன்று மணிக்கு நாம் கேதாரத்தைப் பார்க்கலாம்.''

''எதற்கு?''

''எட்மண்ட் வேலை விஷயமாக!''

''ஓ.கே.''

மேரி தனக்குள் ஒருமுறை சிரித்து பலமுறை அனுதாபப் பட்டாள்! கடவுள் மங்களாவின்மீது கருணை காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

17

''இரவு நேரங்களில் தனியாகப் பிரயாணம் செய்யும்போது, பிரயாணிகள்—அதிலும் முதல் வகுப்புப் பிரயாணிகள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

ஓர் ஆபத்திலிருந்து தப்பியவரின் குரல்.
(நடுக்கத்துடன்)

எம். தேவன் என்கிற மகாதேவனிடம் என்றென்றும் வற்றாமல் வழிந்து ஓடுவது அவருடைய உதட்டுப் புன்னகை தான். எதிரிகளைத் தம் புன்னகையாலேயே சமாளித்து, வாய்ச்சாலகத்தால் வெற்றிகொண்டு அவர்களிடமிருந்து—அவர்கள் அவரிடம் எதை எதிர்பார்த்து வந்தார்களோ—அதையே வாங்கிக் கொண்டுவிடுவார். யார் யாரை லட்சியம் செய்யாமல் போய்க்கொண்டே யிருக்கலாம். எவனிடம் எதைப் பற்றிப் பேசினால் காரியம் ஜயமாகும் என்பதெல்லாம் எம். தேவன் தம் வாழ்க்கை அனுபவம் என்ற பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள்.

அவருக்கு நிறைய உற்றார் உறவினர் இருக்கிறார்கள். ஆனால் மனைவி மகன் என்ற இரண்டுபேரைத் தவிர வேறு யாரையும் உறவினர் என்று அவர் கருதவில்லை; மதிக்கவுமில்லை. தகப்பனாரின் ஒன்றுவிட்ட சகோதரியின் பிள்ளை பம்பாயில் பெரிய பணக்கார வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார். அடிநாளிலிருந்தே—எம். தேவன் அடுத்த சாப்பாட்டுக்கு என்ன வழி என்று யோசித்துக்கொண்டிருந்த காலத்திலேயே அந்த ஒன்றுவிட்ட அத்தையின் பிள்ளை

பெரிய பணக்காரர். அந்தக் காலத்தில் எம். தேவன் அவரை அணுகியிருந்தார். ஆனால் அவர் எம். தேவனை மதிக்கவில்லை. இரண்டு ரூபாயைக் கையில் கொடுத்து விட்டுக் கதவையும் சாத்திவிட்டார். அவர் இவ்வாறு செய்ததன் காரணம் எம். தேவனுக்குத் தெரியும். சொந்தக் காரர்களின் வீடுகளிலேயே பணம் பாத்திரம் நகை என்று விரல் ஜாலம் செய்யும் குணம் எம். தேவனுக்கு உண்டு என்று அத்தை பிள்ளை தெரிந்து வைத்திருந்ததுதான்.

இதெல்லாம் 1934ம் ஆண்டுக்கு முன்னால் நடந்தது.

1939-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்றாந் தேதி, எம். தேவனுடைய நல்வாழ்க்கையை உத்தேசித்து ஹிட்லர், போலந்தின்மீது படையெடுத்து, இந்திரஜித்து வேகத்தில் அதை விழுங்கினார். உலகத்தைக் காப்பாற்ற பிரிட்டனும் பிரான்சும் ஹிட்லரை எதிர்த்தன. போர்ப் பிரகடனம் செய்தன.

உடனடியாக, இந்தியாவில் பெரும் மாறுதல்கள் விளையாமற் போனாலும், ஐரோப்பாவில் விழுந்த குண்டு களின் சத்தம் எதிரொலி செய்தது. அரசாங்கம் விழித்து எழுந்து சுறுசுறுப்புடன் இயங்க ஆரம்பித்தது. அவர்கள் பாடிய பாட்டுக்களுக்கு அழகாகத் தாளம் போட்ட பல அரசியல்வாதிகள் பிரமுகர்கள், திவான்பகதூர்கள் மேடை ஏறிப் பேச ஆரம்பித்தார்கள். அவர்களுடைய பதவி, பணம், பட்டம் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமானால் இந்தியா பிரிட்டனுக்குத் தோள் கொடுத்து உதவவேண்டும் என்று சொன்னார்கள்; பல அறிக்கைகளும் விட்டார்கள்.

இத்தகைய பிரமுகர்களில் ஒருவர் திவான்பகதூர் டி.எஸ். லிங்கம். இந்தத் திவான்பகதூர் கல்கத்தாவில் ஓர் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரக் கம்பெனியில் ஒரு டைரக்டர். தரையைப் பார்த்தால் பாரதத்தின் பிச்சைக் காரர்களும், அவர்களுடைய அவலக் கோலங்களும்

கண்ணில் பட்டுக் கண்ணீரை வரவழைத்துவிடும் என்று மேலே பார்த்துக்கொண்டே நடப்பார் (அதாவது நடக்கும் வாய்ப்பு ஏற்பட்டால்!) இந்தப் பரம தயாளு மாட்சிமை தங்கிய வைசிராயின் கட்டளையைச் சிரமேல் தாங்கி யுத்தம் சம்பந்தமாக மற்ற திவான்பகதூர், ராவ்பகதூர், ஸர்களுடன் கலந்தாலோசிக்கச் சென்னையி லிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்.

இது 1940-ம் வருஷ ஆரம்பத்தில்.

திவான்பகதூர் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்தார். நேரம் எட்டு மணி. அவருடைய காரியதரிசி—மாதம் இரு பத்திரண்டு ரூபாய் எட்டணா வாங்குகிறவர்—முதல் வகுப்பு டிக்கெட்டை அவரிடம் கொடுத்துவிட்டு மூன்றாம் வகுப்பு டிக்கெட்டைப் பத்திரமாகத் தம் கோட் பாக்கெட் டில் வைத்துக் கொண்டார். திவான்பகதூரைச் சுற்றி ஒரு பஜனைக் கோஷ்டி நின்றுகொண்டிருந்தது. அவர் வியர்வை யைத் துடைக்க, கைக்குட்டையை எடுக்கக் கை போவதற் குள் சோடாவும் கலருமாகப் பல கைகள் ஓடின. அவருடைய தலைப்பாகையின் ஜரிகைக் கீற்றின்மேல் ஒருவர் வெண்பா பாடினார். இந்த வயதிலும் (திவான் பகதூரின் அப்போதைய வயது 56) அவர் தேசத்துக்காக, உலகத்துக்காக (தேசமும் உலகமும் பிரிட்டனில் அடக்கம்) உடல் நலனையும் லட்சியம் செய்யாமல் உழைப்பதைப் பற்றி ஒருவர் சிலாகித்துக் கண்ணீர் உகுத்தார். பல பக்தர் கள் பயத்துடன் கைகட்டி வாய் புதைத்து நின்றனர்.

ரயில் புறப்பட இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. திவான்பகதூர் முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணக் களைப்புக்குத் தம்மைத் தயாராக்கிக்கொண்டு உட்கார்ந் திருந்தார். பிளாட்பாரத்தில் பஜனைக் கோஷ்டி.

திடீரென்று 'வழி ஸார் வழி' என்று போர்ட்டரின் கூவல் கேட்டது. நவநாகரிக உடையில் ஓர் இளைஞன். புன்முறுவலைப் பன்னீர் தெளிப்பதுபோல் தெளித்துக் கொண்டே போர்ட்டர் பின்னால் வந்தான்.

திவான்பகதூருக்குத் தூக்கிவாரிப் போட்டது. தம் முடைய அந்தஸ்தைக் குறைக்கும் வகையில் ஒருவன்—அதுவும் இருபது இருபத்திரண்டு வயதில் ஒரு சிறு பையன் அர்ஜுனனுடைய கம்பீரத்துடன் வந்து ரயிலில் ஏறுகிறான்.

ஏறின இளைஞன் ஒரு தடவை—ஒரே தடவைதான் திவான்பகதூரைப் பார்த்தான்! அடுத்தகணம் அவர் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்தான்!

''ஸார்...திவான்பகதூர் ஸார்...என்னை ஆசீர்வதியுங் கள் சார்.....!''

இளைஞனுடைய நாத் தழுதழுப்பில் திவான் பகதூரின் உடம்பெல்லாம் சிலிர்த்தது. முன்பின் தெரியாத ஒருவன், பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளையின் தோற்றத்தோடு இருக்கிறவன் அவருடைய பாதங்களில் விழுகிறான்.

''எழுந்திரு மேன். உனக்கு என் பூரண ஆசி உண்டு!''

பஜனைக் கோஷ்டி பிரமிப்பில் வாய் அடைத்து நின்றது.

ரயிலும் புறப்பட்டது.

ரயில் ஓடலாயிற்று. திருவொற்றியூர் போவதற்குள் இளைஞனுடைய பட்டம், பிதிரார்ஜிதமாகக் கிடைத்த நஞ்சை, புஞ்சை, குலம், கோத்திரம் எல்லாம் திவான்பகதூ ருக்குத் தெரிந்தன.

ரயில் பொன்னேரியைத் தாண்டும்போது இளைஞன் பிளாஸ்கிலிருந்த பாலை எடுத்து பெரியவரிடம் நீட்டினான். அவருடைய பிளாஸ்கை அவனே கழுவிவைத்தான். திவான் பகதூரின் உடல் புல்லரித்தது. ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை, கல்கத்தாவில் மாபெரும் வெள்ளைக்கார பாங்கியில் அதிகாரியாகப் பதவி ஏற்கப் போகிறவன் அவருக்குப் பால் ஆற்றிக் கொடுக்கிறான்; படுக்கை விரிக்க நேரம் ஆகிவிட்டதா என்று கேட்கிறான்!

பொன்னேரிக்குப் பிறகுதான் அந்த இளைஞன் பேச ஆரம்பித்தான்.

''ஸார்!''

''யெஸ், பாய்!''

''நான் தூங்க முடியாது ஸார்.''

''ஏன்!''

''வேலையில் சேருவதற்குமுன் ஐம்பதாயிரம் டெபாஸிட் பணம் கட்டணும்னு நிபந்தனை. அதில் முப்பதாயிரத்தைக் கட்டியாகிவிட்டது. பாக்கி இருபதாயிரம்...''

''உனக்குப் பணம் வேணுமா...?''

''நோ...நோ...இதோ இந்த லெதர் பெட்டியில் இருபதாயிரம் ரூபாய் நோட்டாக இருக்கு.''

''பின் ஏன் விசாரப்படுகிறாய்?''

''பணம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமே சார்!''

''பூ... என் பெட்டியிலே ரொக்கம் எவ்வளவு ரூபாய் இருக்கு தெரியுமா? நாற்பதினாயிரத்து ஐந்நூறு. நான் உன்னை மாதிரியா பயப்படுகிறேன்? சும்மா தூங்கு...'' பெரியவர் நீண்ட கொட்டாவியாக உதிர்த்தார். அடுத்த கணம் உட்கார்ந்தபடியே தூங்கலானார்.

சூளூர்ப்பேட்டையை அடைவதற்குமுன் பச்சை விளக்குக்காக ரயில் நின்றது. இளைஞன் எழுந்தான். பாண்டையும் கோட்டையும் கழற்றி எறிந்துவிட்டு, வேஷ்டியும் ஜிப்பாவுமாக மாறினான்; தோல்பையில் நாற்பதாயிரத்து ஐந்நூறை அள்ளிப் போட்டுக்கொண்டு அழுக்குத்துண்டால் மறைத்தான். இரண்டாயிரம், மூவாயிரத்துக்குமேல் எதிர்பார்க்காத அவனுக்கு நாற்பதா யிரத்து ஐந்நூறைப் பார்த்தபோது மூச்சுத் திணறியது. விளக்குகளை அணைக்குமுன் ஒரு தடவை திவான் பகதூரைப் பார்த்தான். பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலைப்

பிடித்து வாழும் வாழ்க்கை விஜயவாடா போவதற்கு முன்னால் தீர்ந்துவிடும். அவர் குடித்த பால் வேலையைச் சரியாகச் செய்துவிடும்! விளக்குகளை அணைத்துவிட்டான்.

ரயில் நகர ஆரம்பித்தது.

இளைஞன் தயாராக வைத்திருந்த சாவியால் கம்பார்ட் மெண்டைப் பூட்டினான்; சாவி அடுத்த கணம் சவுக்குக் காட்டில் விழுந்தது.

ரயில் வேகம் எடுத்தது.

இளைஞனும் குதித்தான்.

இருண்ட வானில் அங்குமிங்குமாக நட்சத்திரங்கள் சிரித்துக் கொண்டிருந்தன. இளைஞன் சூளூர்ப்பேட்டையிலிருந்து நடக்கலானான்.

நடுநிசி, இருட்டு. இளைஞன் நடந்தான். பார வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஊர்ந்து கொண்டிருந்தன. வண்டிக்காரர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அரும்பாக்கத்தை அடைந்தபோது மணி மூன்று. இளைஞன் ஒரு டீக்கடை முன்னால் இறங்கினான்.

டீ குடித்தான்; எதிரே ஒரு லாரி டிரைவரும் கிளீனரும் பீடியில் லயித்துக்கொண்டிருந்தார்கள்.

''ஏம்ப்பா டிரைவர் லாரி எந்தப் பக்கமாப் போவுது?'' இளைஞன் அலட்சியமாகக் கேட்டான்.

''டைரக்ஷனைப் பார்த்தால் தெரியலே. பட்டணம் போவுது'' கிளீனர் பதில் சொன்னான்.

''இளைஞன் ஓகோ!'' என்றான்.

''நீ எங்கே போறே?''

''பட்டணம்தான்.''

''ஒரு ரூபாய்!''

இளைஞன் சிரித்தான்.

''ஏம்ப்பா சிரிக்கிறே?'' க்ளீனருக்குக் கோபம் வந்தது.

''என் கார் இப்போ வந்துவிடும்.''

''மன்னிச்சுடுங்க சார்.''

''பரவாயில்லை...பிளிமத்...ரேடியேட்டர் வீக். ரிப்பேர் பண்ணிட்டிருக்காங்க... இங்கேதான் இரண்டு பர்லாங் தூரத்திலே...கார்பரேட்டர் வேறே சரியில்லை.''

''நான் வேணும்னா உதவி பண்றேன்'' என்றான் டிரைவர்.

''வேணாம்ப்பா... என் டிரைவர் இருக்கான்... ஆனா 'ஸோல்டர்' பண்றவன் எலவூர்லே இருக்கானோ இல்லையோ!'' இளைஞன் அலட்சியமாகச் சொன்னான்; பிறகு ''ஸோல்டர் பண்ண ஆள் கிடைக்கலேன்னா, கார்த்தலே வரையில் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்'' என்றான்

''அப்போ பட்டணம் போயிடலாம்...ஒரு மணி நேரம் தான்.''

''டிரைவர்கிட்டே சொல்லலியே? என் டிரைவர் என்னைத் தேடுவானே! நான் காலாற நடந்து வந்தேன். திரும்பி வருவேன்னு நினைச்சுக்கிட்டிருப்பானே!''

''போய்ச் சொல்லிவிட்டுத் திரும்புவோம்...எவ்வளவு நேரம்தான் நீங்க காத்துக்கிட்டிருப்பீங்க...''

இளைஞன் கண்முன் திவான்பகதூர் தோன்றினார்; கனவுகூடக் காணமுடியாத நிலையில் அவர் இப்போது ஒங்கோல், பித்ரகுண்டா என்று போய்க்கொண்டிருப்பார்.

''வேணாம்...இன்னொண்ணு செய்வோம்...தம்பீ...''

டீக்கடையிலே வேலை செய்யும் 'தம்பி' வந்தான்.

''இந்தா உனக்கு ஒரு ரூபாய்... இதே திசையில் ஓடிப்போ... அஞ்சாவது பர்லாங் கல்லுகிட்டே ஒரு பிளிமத் கார் நிற்கும். டிரைவர் இருந்தால் அவன்கிட்டே முதலாளி

லாரியிலே போயிட்டார்னு சொல்லு. பணம் எதனாச்சும் தேவையிருந்தால் இந்த டீக்கடையிலே கொடுத்து வைச்சிருக்கேன்னு சொல்லு...சொல்றியா?''

இளைஞன் பதிலுக்குக் காத்திராமல் டீக்கடைக்காரர் பக்கம் திரும்பினான். ''இந்தாங்க ஐம்பது ரூபாய். என் டிரைவர் பிளிமத்திலே வருவான். அவன்கிட்டே தயவு செய்து கொடுத்துவிடுங்கள்.''

லாரி பட்டணத்தை நோக்கிப் பறந்தது.

இளைஞனுடைய வாழ்க்கையும் பறக்கலாயிற்று: பாண்டிச்சேரி, கொழும்பு, ஏடன், பீருட் என்று ஓடி ஓய்ந்த பிறகு—ஹிட்லர் தம் துப்பாக்கிக்கே இரையான பிறகு—முஸோலினியை மக்கள் மரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்ட பிறகு—சர்ச்சில் இரண்டு விரல்களால் உலகமெங்கும் 'வி' காட்டின பிறகு—மகாத்மா காந்தியின் நவகாளி யாத்திரை முடிந்த பிறகு—

திவான்பகதூரை அவருடைய மனைவி மக்களே மறந்து போன பிறகு—

ஒரு நாள்—

எம் தேவன் பெண்டாட்டி பிள்ளையுடன் இந்தியா வுக்கு வந்தார். அப்போது வருடம் 1948. அவருடைய வயது முப்பது.

நாற்பதாயிரத்து ஐந்நூறு வெளிநாடுகளுக்குச் சென்று ஏழெட்டு லட்சமாகத் திரும்பி வந்தது. ஏடனில் அவர் ராணுவ கண்டிராக்டர். பீருட்டில் செல்வாக்கு. ஸ்விட்ஸர் லாந்து பாங்கியில் பணம்.

பிள்ளை சென்னையில் படிக்க, குடும்பம் கல்கத்தாவில் வாழ்ந்தது.

இப்போது எம். தேவனை யாரும் பழைய மகாதேவ னாக அடையாளம் கண்டுகொள்ள முடியாது: அந்தத் திவான்பகதூரே கல்கத்தா மெயில் முதல்வகுப்புப் பெட்டியி

லிருந்து திரும்பி வந்தாலும் அன்று இரவு பிளாஸ்கிலிருந்து பாலைத் தம்ளரில் ஊற்றிக் கொடுத்து, தம்ளரையும் கழுவி வைத்தவன் இந்தப் 'பெரிய' மனிதன்தான் என்று சாட்சி சொல்ல முடியாது.

* * *

எம். தேவன் மங்களாவிடம் பேசிவிட்டு ஹிக்கின் பாதம்ஸ் ஸ்டாலுக்கு வந்தார். பல புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு ஏழெட்டுப் புத்தகங்களை வாங்கினார். எல்லாம் கொலை சம்பந்தமான அமெரிக்க நாவல்கள். மணியைப் பார்த்தார். பன்னிரண்டு அடிக்கப் பத்து நிமிடங்கள். அன்றே கணபதியைப் பார்த்துவிட வேண்டும் என்ற அவா தோன்றியும் அதை அடக்கிக் கொண்டார்.

திடீரென்று ஒரு மாணவர் கூட்டம் ஹிக்கின்பாதம்ஸை நோக்கி வந்தது. எம். தேவன் புத்தகங்களுக்கான பணத் தைக் கொடுத்துவிட்டு பர்ஸைப் பாண்ட் பாக்கெட்டில் போடுவதற்குள் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு வந்தது.

அவர் புன்னகையை வீசிக்கொண்டே கூட்டத்தைச் சமாளித்துக்கொண்டு வெளியே வர முயன்றார். ஒரு புத்தகம் கீழே விழுந்தது. அதை யாரோ செருப்புக் காலால் மிதித்தார்கள். அதை எடுக்க அவர் குனிந்தார், இன்னொரு புத்தகம் விழுந்தது. மாணவர்கள் அவரையோ விழுந்த புத்தகங்களையோ இலட்சியம் செய்யவில்லை.

எம். தேவன் விழுந்த புத்தகங்களை எடுத்துக்கொண் டார். டெரிலின் ஷர்ட்டில் யாரோ தொட்டதால் உண்டான அழுக்கு கண்ணை உறுத்தியது. 'டை'யைச் சரி செய்துகொண்டு கூட்டத்தை விட்டு வெளியே வந்து, தம் கார் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தார்.

அதே சமயம் விரல்களால் விளையாடும் மணி எதிர்த் திசையில் இடுப்புக்கும் பனியனுக்கும் நடுவே விழுந்த ஒரு சிறிய சுமையுடன் மூன்றாம் நெம்பர் பிளாட்பாரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். 12-55க்குப் புறப்பட வேண்டிய பெங்களூர் எக்ஸ்பிரஸ் நின்றுகொண்டிருந்தது; இன்னும் என்ஜினை இணைத்தாகவில்லை. ரயில் பெட்டி களையெல்லாம் தாண்டி நடந்த அவன் மார்பில் கையை விட்டு வயிற்றுவரை துழாவினான்.

பர்ஸ். அதில் மூன்று நூறு ரூபாய் நோட்டுகள். இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள். நான்கு ஒரு ரூபாய். எழுபத்திரண்டு பைசா சில்லறை.

பணத்தைத் தனியாக எடுத்து வைத்த அவன், பர்ஸை எங்கே போடுவது என்று ஒருகணம், யோசித்தான். அடுத்த கணம் சற்றுத் தொலைவில் இரு தண்டவாளங்களுக் கிடையே, நிலக்கரி சாம்பலை என்ஜினிலிருந்து கொட்டு வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நீண்ட சதுரப்பள்ளம் கண்ணில் பட்டது. அவன் விரைந்து சென்றான். சுற்று முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. ஒரு சிறு கல்லைப் பர்ஸினுள் போட்டுவிட்டு, சக்தியுடன் குறிபார்த்து எறிந் தான். பர்ஸ் சாம்பலில் புதைந்தது. அடுத்தகணம் மூன்றாவது பிளாட்பாரத்திலிருந்து குதித்து, தண்ட வாளங்களைத் தாண்டி, நான்கு, ஐந்து, ஆறு என்று மனத் தால் எண்ணிக்கொண்டே ஏழாவது பிளாட்பாரத்தின் கோடிக்கு வந்து நின்றான்.

அவன் வந்து நிற்கவும் டாடா எக்ஸ்பிரஸ் கம்பீரமாகக் குரல் கொடுத்துப் புறப்படவும் சரியாக இருந்தது. அடுத்த நிமிடம் வழி அனுப்ப வந்தவர்களின் கூட்டத்தில் அவன் கலந்துவிட்டான்.

கூட்டத்தோடு கூட்டமாக நடக்கும்போதும், திடீ ரென்று சித்தப்பாவின் நினைவு வந்தது. ஆர்.எம்.எஸ். அருகே கிடந்த தோல் மூட்டைகளின் நடுவே நின்ற ஒரு

வெற்று டிராலியின் மேல், பையைத் தலையணையாக வைத்துக்கொண்டு சித்தப்பா படுத்துக்கொண்டிருந்தார்; அருகே வெற்றிலை உரலும் உலக்கையும் இருந்தன; பிளாட்பாரத்தின் ஜன நெரிசலோ, இரைச்சலோ அவரைப் பாதித்ததாகத் தெரியவில்லை. அவர் அரை மயக்கத்தில் கிடந்தார்.

"சித்தப்பா!"

குரல் கேட்டவுடன் சித்தப்பா கண் திறந்து பார்த்தார், "யாருடா, மணியா?... வாடாப்பா வா...!"

"சாப்பிட்டாச்சா?"

"ஊஹும்..."

"ஏன் இன்னுமா சாப்பிடவில்லை?" மணி மலைபோல் கிடந்த காக்கி மூட்டைகளைத் தாண்டி அருகே வந்தான்.

"ஆமாம்."

"டிபன் பலமோ?"

"ஊஹும்"

"பின் ஏன் சாப்பிடலை?"

"காசு இல்லை."

"காசு இல்லியா... முந்தா நாள் கார்த்தாலே இருபது ரூபாய் தந்தேன்?"

"நேத்து ராத்திரியோடே தீர்ந்துடுத்து; கார்த்தாலே பதினைந்து பைசா இருந்தது. வெத்திலை பாக்கு புகையிலை வாங்கினேன்."

"பணத்தை என்ன செய்தீர்கள்?"

"ஒண்ணும் கேட்காதேடா, மணி...! எனக்குப் போதாத காலம் ரொம்ப இருக்கு... மீன ராசி... கோசாரத் திலே சனி இரண்டிலே இருக்கான்... ரொம்ப விரயம்..."

"பணம் தொலைஞ்சு போயிடுத்தா?"

"தொலைஞ்சு போனா, தேவலையே! தொலைச் சுட்டேன்."

''என்ன?''

''போன வாரம் யாருக்குமே ஜாக்பாட் கிடைக்கலை. மூணேகால் லட்சத்தை இந்த ஞாயிற்றுக்கிழமை ரேசோடு சேர்த்தா... பேப்பர்லே பார்த்திருப்பியே... ஏழெட்டு லட்சத்துக்கு குறையாமே ஜாக்பாட் பணம் குவியும். ரெண்டு டிக்கெட் வாங்கினேன். ஒரு டிக்கெட்டிலே நாலு லெக் பாஸாச்சு... கடைசி ரேஸிலே இரண்டாவதாக வந்தது. இன்னொரு டிக்கெட்டிலே ஒரு லெக்கூட பாஸாகலை... போதாத காலம். இரண்டிலே சனி... விரயம்... உம்... விட்டுத் தள்ளு!''

மணிக்குக் கோபித்துக் கொள்ளுவதா, அழுவதா ஏன்று தெரியவில்லை.''

''சித்தப்பா...! கோசாரத்திலே சனி இரண்டில் இருக்கான் என்கிற ஞானோதயம் எப்போ உதிச்சுது? ரேசுக்கு முன்னாடியா, பின்னாடியா...?''

''நீ ஏண்டா பிராணனை வாங்கறே... நான் பட்டினி கிடந்து செத்துக்கிறேன். நீ போ.....''

''சித்தப்பா!''

''சரித்தாண்டா... ஏதோ ஆசையிலே பணத்தைக் கட்டிட்டேன். அது போயிடுத்து. போகட்டும். பட்டினி தானே கிடக்கணும்?''

''இனிமேல் உங்ககிட்டே மொத்தமா பணமே தரக் கூடாது.''

''நீ பணமே தர வேண்டாம். திருப்திதானே?''

''இந்தாருங்கள், மூன்று ரூபாய். நாளைக்குக் காலை காப்பி வரைக்கும். சாப்பாட்டுக்கு நான் வந்து தரேன்.''

''எனக்கு வேண்டாம்டா...'' சொல்லிக்கொண்டே கையை நீட்டினார்.

''இதிலே ஒரு ரூபாய்க்கு லாட்டரி டிக்கெட் வாங்காதீர்கள்... விழாது... இரண்டிலே சனி...'' மணி சிரித்தான்.

''லாட்டரி குருட்டு அதிர்ஷ்டம்டா—குதிரை அப்படியில்லை. கணக்கு வெறும் கணக்கு. சாமர்த்தியம்.''

''உங்க சாமர்த்தியத்தைத்தான் இப்போ பார்த்தேனே!''

''ஜாக்கி குதிரை ஜயிக்கக்கூடாதுன்னு இழுத்தால் நான் என்னடா பண்ணுவது?'' என்றார் சித்தப்பா.

''நீங்க ஜாக்கியாப் போக வேண்டியதுதான்.''

மணி அடுத்த விநாடி புறப்பட்டான்.

கணபதி வீட்டு விருந்தில் மங்களா கலந்துகொண்டிருக்கிறாளா இல்லையா என்ற கேள்வி திடீரென்று எழுந்தது. அதை அறிய அவன் நேரே 'என்கொயரி' கவுண்டரை நோக்கி விரைந்தான்.

ரொஸாரியோவுக்கு இருநூறு ரூபாய் கொடுத்த அவனுக்கு இப்போது தெய்வம் முந்நூறுக்கும் மேலாகக் கொடுத்துவிட்டது. மறுநாளே, மார்வாடியிடமிருந்து சைக்கிளை மீட்டுவிடலாம்!

ஹிக்கின்பாதாம்ஸில் புத்தகங்களைக் கீழே போட்டுவிட்டு தவித்த, அந்தத் தங்க பிரேம் மூக்குக் கண்ணாடிக் காரரை அவனுடைய மனம் வாழ்த்தியது.

என்கொயரி கவுண்டருக்குப் போகும் வழியில் திடீரென்று அவன் ஒரு கண் இமைக்கும் நேரம் நின்றான்.

தங்க பிரேம் மூக்குக்கண்ணாடி புன்முறுவலுடன் நின்று கொண்டிருக்க, ஓரிரண்டு பையன்கள் புத்தகசாலையின் மர அமைப்பின் அடியில் எதையோ தேடுவதில் ஈடுபட்டிருந்தார்கள்

'எதை' என்று மணி யோசிக்கவில்லை. மூன்றாம் பிளாட்பாரக் கோடியில், இரு தண்டவாளங்களுக்கிடையில்,... நிலக்கரிச் சாம்பலில் புதைந்து கிடப்பதை இங்கே தேடிப் பார்ப்பதில் என்ன லாபம்? ஆனால் தேடுவது என்றால் என்ன? இல்லாத இடத்தில் பார்க்க முயலுவதானே?

18

சிவலோகம், வைகுண்டம், பிரும்ம லோகம் போன்ற ஸ்டேஷன்களுக்கு ரயில் விட்டால் நன்றாக இருக்கும்.

—உபந்நியாசத்தில் ஒரு குரல்.

மேரி சென்றதும் மங்களா தனக்குள்ளேயே லயித்துப் போனாள். அவளுக்கு எல்லாமே விசித்திரமாக இருந்தது. அவளுடைய வாழ்க்கையில் காதலா? மேரி சொல்லி அவள் புரிந்துகொள்ளுகிறாள்! காதல் என்றால் என்ன?

இலக்கிய இலக்கண விவகாரத்தில் அவளுடைய மனம் செல்லவில்லை. கேதாரம் அவளுடைய உள்ளத்தை ஈர்த்து விட்டிருக்கிறான். வெளியே அவள் இதை ஒத்துக்கொள்ள மறுத்த போதிலும், அவளுடைய இதய அந்தரங்கம் அதை நினைத்து வெட்கத்திலும் மகிழ்ச்சியிலும் திளைத்தது. அதே சமயத்தில் வேதனையும் பிறந்தது. ஆனால் அவளுடைய மனத்தில் கேதாரம் குடிபுகுந்து விட்டால் மட்டும் போதுமா? அவளுடைய கனவுகள் அவளுள் மட்டும் தோன்றினால் போதுமா? கேதாரம் கல்யாணம் செய்துகொள்ளுவதற்காகவே பம்பாயிலிருந்து வந்திருக்கிறான். ஜம்புநாதன் அவனுக்காகப் பெரிய பெரிய இடங்களில் பெண் பார்த்து வைத்திருக்கிறார். 'பெண் பார்க்கும் வாரமாக'வே இந்த வாரத்தை அவர் விழாவாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார். மணி சொல்லுவதுபோல், ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிற என்ஜினீயர் மருமகனை வைத்துக்கொண்டு, மாமா வியாபாரமே செய்கிறார். திங்கட்கிழமை அபீதத்தைப் பார்த்தாகிவிட்டது. திட்டப்படி கேதாரம்

புதன்கிழமையன்று கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணைப் பார்க்கச் செல்ல வேண்டும். ஆனால் அதற்குள், இன்று செவ்வாய்க்கிழமை காலையிலேயே நேற்று பார்த்த பெண் அபீதம் கேதாரத்தைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள். அவள் எதற்காக வந்திருப்பாள்? கேதாரம் தன் சம்மதத்தைத் தெரிவித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அபீதத்துக்கு அவனுடைய அறையில் என்ன வேலை?

கண்டிப்பாக அபீதத்தின் கழுத்தில் கேதாரம் தாலி கட்டப் போகிறான்!

மங்களாவுக்கு அழுகை வந்தது! சற்றுமுன்தான் மேரி அவளுடைய மனத்தின் ரகசியத்தை அவளுக்கே உணர்த்தி விட்டுப் போனாள். அந்த ரகசியத்துக்குக் காதல் என்று பெயர் வைத்தாள். மங்களா அந்த உணர்ச்சியில் மெய்ம் மறந்து போனாள். மத்தியானம் மூன்று மணிக்குக் கேதாரத்தை எட்மண்ட் வேலை விஷயமாகச் சந்திக்கலாம் என்றும் சொன்னாள்.

ஆனால் எப்படிப் போவது? எவ்வாறு கேதாரத்தை அணுகிப் பேசுவது? அவன் அபீதத்தைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவன்! அவனுக்கும் அவளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இதுவரையில் ஏற்பட்டதில்லை. தற்செயலாக நேர்ந்த அறிமுகம். அதிலிருந்து பிறந்த ஒருவிதப் பழக்கம். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அவளால் எட்மண்டுக்காக அவனிடம் சிபாரிசுக்குச் செல்ல முடியுமா?

கடிகாரத்தைப் பார்த்தாள். ஒன்று அடிக்க ஐந்து நிமிடங்கள். அவளுக்கு 'டியூட்டி' முடியப் போகிறது. அவளுக்குப் பிறகு தாமோதரன் என்கொயரி கவுண்டரில் பணி ஏற்க வேண்டும். அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். டில்லி கவுண்டரில் இருக்கும் சுசீலாவுடன் அவன் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தான். என்றும் அணையாத சிகரெட் விரலில் விளையாடிக் கொண்டிருந்தது.

சுசீலா—தாமோதரனைப் பார்த்தபோது அவளுக்கு ஒருவித பொறாமையும், அதே சமயத்தில் ஆறுதலும் உண்டாயின.

மூன்று வருடங்களுக்குமுன் சுசீலா ரயில்வேயில் சேர்ந்த புதிதில் தாமோதரன் தன் உடல் பொருள், ஆவி அனைத்தையும் அவளுடைய காலடியில் கொட்டினான். சுசீலா என்கிற காதல் தேவதைக்குத் தன்னையே பலி கொடுக்கத் தயாராக இருந்தான். சீஃப் புக்கிங் கிளார்க் ரங்காச்சாரி அவனுடைய மன நிலையை அறிந்து சுசீலாவை அவனிடமே பயிற்சிக்கு ஒப்படைத்தார். வைரக்கடுக்கன் ரங்காச்சாரி நல்ல மனிதர்; தாம் கல்யாணம் செய்து கொள்ளாமற் போனாலும், பிறர் திருமணம் செய்து கொள்ளுவதை, அதுவும் காதல் விவாகம் செய்து கொள்ளுவதை வரவேற்கிறவர். அதற்காக உதவியும் செய்கிறவர். தாமோதரனையும் சுசீலாவையும் தனித்தனியே அழைத்து, அவரவர்களுடைய மனத்தை விசாரித்து அறிந்துகொண்டார் ரங்காச்சாரி.

மூன்று மாதங்களில் சுசீலாவுக்கு, வேலையில் தேர்ச்சி உண்டாயிற்றோ என்னவோ, காதல் பரீட்சையில் முதல் மார்க் வாங்கினாள்.

தாமோதரன் புடவைகளாகவும், மோதிரங்களாகவும் கடிகாரங்களும் பரிசுகளை அள்ளிக் கொட்டினான்; சுசீலா எதையும் வேண்டாம் என்று சொல்லவில்லை. பரிசுகள் மூலமாகத்தான் காதலைத் தெரிவிக்க வேண்டும் என்று தாமோதரன் நினைத்ததுபோல அவள் நினைக்கவில்லை; வெறும் புன்னகையாலும் பேச்சாலுமே தன் காதலைக் காட்டிவிடலாம் என்று அதை ஒரு கொள்கையாகக் கடைப்பிடித்து வந்தாள்.

ஒரு சித்திரையில் ஆரம்பித்த பழக்கம் காதலாக மலர்ந்தது ஆடியில். ஆவணியில் கல்யாணம் நடக்கும் என்று எல்லாரும் எதிர்பார்த்தார்கள்; நடக்கவில்லை;

புரட்டாசி மாதத்தில் தாமோதரனுடைய தாத்தா, பேரனின் காதலையும் கல்யாணத் திட்டத்தையும் அறிந்து கொள்ளாமல் சிவலோகப் பிராப்தி அடைந்தார். அவர் சிவலோகத்துக்கு டிக்கட் வாங்கும்போது பேசாமல் இருந்திருக்கலாம். அவருடைய பிரயாணத்துக்கு வழி அனுப்புவதற்காக ஆக்ராவிலிருந்து வந்த ஒரே பெண்ணையும் கிழத்தின் பிரயாணத்தைத் தினம் தினம் தூங்கி எழுந்திருக்கும்போதெல்லாம் எதிர்பார்த்திருந்த ஒரே பிள்ளையையும், தம் இரு பக்கங்களிலும் வைத்துக் கொண்டு அவர்களிடம் தம் கடைசி அதிகாரத்தைக் காட்டினார். பெண்ணின் ஒரே பெண்ணை, பிள்ளையின் ஒரே பிள்ளை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கடைசி ஆசை.

தாமோதரனுடைய தாத்தா இந்த உலகத்திலிருந்து புறப்பட்டுச் சிவலோகம் ஸ்டேஷனை அடைவதற்குள், அவனுடைய காதல் ரயில் தடம் புரண்டு பாலத்திலிருந்து இறங்கி நதியில் விழுந்து சமுத்திரத்தை நோக்கிச் சென்றது.

தங்கை புருஷன் பணக்காரர் என்பதையோ அவருக்குப் பிறகு அவருடைய சொத்தெல்லாம் மருமகள் மூலமாகத் தம் பிள்ளை தாமோதரனுக்குத்தான் வரும் என்பதையோ அவனுடைய அப்பா மறக்கவில்லை. ஏற்கனவே தாயாரை இழந்த தாமோதரனுக்குத் தன் பெண் வாழ்க்கைப் பட்டால் மாப்பிள்ளையைத் தன் வீட்டோடு வைத்துக் கொள்ளலாம். பெண் தன்னைவிட்டு என்றென்றும் போக மாட்டாள் என்ற சௌகரியங்களை அலசிப் பார்க்கப் பெண்ணின் தாயார் தவறவில்லை; ஆக்ராவில் அவளுடைய கணவர் ரிடையரான பிறகு, சென்னைக்குத் திரும்பி வந்த பிறகு கல்யாணத்தை நடத்திவிடலாம் என்று அவர்கள் தந்தையின் பால்சடங்கு முடிவதற்குள்ளேயே தீர்மானம் செய்தார்கள்.

தாமோதரன் என்ன பாடுபட்டானோ எப்படிப் புழு வாய்த் துடித்தானோ தெரியாது. அத்தை பெண் கழுத்தில் தாலியைக் கட்டினான். அப்போது அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. சுசீலா அவனுடைய மனக் கண் முன் தோன்றினாள்! அவளுக்காக அவன் கிட்டத் தட்ட ஆயிரம் ரூபாய்க்குப் பரிசுகளாகவும், பீச்மெல் பாடுட்டி ப்ரூட்டிக்களாகவும் கொட்டியிருக்கிறானே! எல்லாம் தண்டமாகப் போயிற்றே! அந்த ஆயிரம் ரூபாயை நினைத்து அவன் கண்ணீர் சுரந்தான். அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் ஓம குண்டத்தின் புகையில் மாப்பிள்ளை அவதிப்படுகிறான் என்று நினைத்தார்கள்.

கல்யாணத்துக்குச் சுசீலா, அமிர்தம், மேரி, மங்களா முதலானவர்களுடன் போனாள். அமிர்தத்துக்கு எப்போதுமே கொஞ்சம் வாய்த்துடுக்கு. ''ஏன் சுசீலா பரிசு ஏதும் வாங்கி வரவில்லையா?'' என்று கேட்டாள். ''ஊஹூம்!'' என்று அவள் உதட்டாலேயே பதிலளித்தாள். அமிர்தம் விடவில்லை. ''அவன் நிறையத் தந்தானே பாவம்!'' என்றாள். அதற்குச் சுசீலா சிரித்துக் கொண்டே பதில் சொன்னாள். ''தாமோதரன் ஒரு பைத்தியம்டீ! பித்துக்குள்ளி. அவன் தந்ததையெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டேன். என்னை நானே ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டேன்.''

அமிர்தம் மேலே ஏதும் பேசவில்லை. ஆனால் உடன் இருந்த வைரக் கடுக்கன் ரங்காச்சாரி சொன்னார்: ''சுசீலா சொல்றது சரிதான். என்கிட்டேயே சொன்னாள். வேலை செய்து பிழைத்த தான் கல்யாணம் செய்துகொண்டால் தாயாரும், தங்கை தம்பிகளும் தெருவில் நிற்கவேண்டியிருக்கும் என்று. ஆனால் தாமோதரனுக்கு ஸ்க்ரூ லூஸாப் போயிருந்தது. சுசீலாகிட்டே நான்தான் சொன்னேன். விளையாட்டு முடியற மட்டும் நடக்கட்டும், நீ ஜாக்கிரதையாகவே இருன்னு. ஆனால் தாமோதரனை நினைச்சு

யாரும் பயப்படவே வேண்டாம். இதோ இந்தக் கட்டின பெண்டாட்டியைக்கூட அவன் நாளைக்குத் தொடவும் பயப்படுவான்! அவனுக்குப் பரிசுகள் வாங்கிக் கொடுக்கத் தான் தெரியும்.''

கல்யாணத்துக்குப் பிறகும் சுசீலாவுடன் அவன் தினமும் பேசிக்கொண்டிருப்பான். ஆனால் பேச்செல்லாம் இல்லறத்தைப் பற்றி. அவனைக் கிண்டல் செய்து எல்லாரையும் சிரிக்க வைப்பாள் சுசீலா. பெண்டாட்டி புடவைக்கு அவன் இஸ்திரிபோட்ட கதையை அவனுடைய வாயிலிருந்தே கொக்கி போட்டு இழுப்பாள் சுசீலா. அவனும் ஒன்றையும் விடாமல் சொல்லுவான்.

மங்களா மணியைப் பார்த்தாள். மணி ஒன்று. தாமோதரன் இன்னும் பேசிக்கொண்டிருந்தான். சுசீலாவிடம் ஒருவேளை தனக்குப் பிறந்திருக்கும் குழந்தையைப்பற்றி விவரிக்கிறானோ;

''மிஸ்டர் தாமோதரன்!'' மங்களா கத்தினாள்.

''யெஸ், மிஸ் மங்களா! இதோ வந்துட்டேன்!''

''சுசீலா நீ இங்கே வந்து வேணுமானால் பேசு!''

மங்களாவுக்குப் பசிக்கவில்லை. காலையில் ஏழு மணிக்கு ஒரு தோசை ஒரு கப் காப்பி சாப்பிட்டது. சாதாரணமாகப் பதினொரு மணிக்கே வயிற்றைக் கிள்ள ஆரம்பிக்கும். இன்று ஏன் பசிக்கவில்லை? யார் காரணம்?

கேதாரமா? அபீதமா?

அவளேதானா?

வீட்டுக்குப் போனால் கண்டிப்பாக அப்பா கத்துவார். சொல்லி அனுப்பியும் அவள் விருந்துக்கு வரவில்லை என்று கோபிப்பார். ஆனால் அவர் எப்படியும் ஒரு கத்தல் கத்தத் தான் போகிறார். அதை இப்போதே போய்க் கேட்டுக் கொள்ளுவானேன்!

திடீரென்று வைரக் கடுக்கன் ரங்காச்சாரியின் நினைவு வந்தது. அடுத்தகணம் நேரே அவரைத் தேடிக்கொண்டு சென்றாள்.

சீஃப் புக்கிங் கிளார்க் ரங்காச்சாரி டெரிலின் ஃபுல் கை ஷர்ட்டின் கஃப் லிங்க்ஸ் பளபளக்க, கடுக்கன்களின் வைரங்கள் ஜொலிக்க சிரித்த முகத்துடன் உட்கார்ந்திருந்தார். மற்ற குமாஸ்தாக்கள் ரயில்வே தலைமையகக் கான்டீனுக்குச் சென்றிருந்தார்கள்.

''குட் ஆஃப்டர் நூன் ஸார்!''

''வா மங்களா, வா உட்கார்...இப்பத்தான் இதையெல்லாம் எடுத்து மேஜையின் மேலே வைத்தேன்...வா, நீயும் சாப்பிடு!''

ரங்காச்சாரியின் அமிர்தமாகக் கொட்டிய அன்பில் மங்களா நெகிழ்ந்துபோனாள். கண் மேஜையின்மேல் இருந்ததைப் பார்த்தது. ரங்காச்சாரி பொட்டணங்களைப் பிரித்துக் கொண்டிருந்தார். அவள் அவற்றைப் பார்க்கிறாள் என்பதை உணர்ந்ததும், ரங்காச்சாரி ''வா அம்மா உட்கார்...பார்த்தசாரதி கோயில் சர்க்கரைப் பொங்கல்... திவ்வியமாக இருக்கும். டி.பி. கோயில் தெரு தெரியுமா உனக்கு? அங்கே ஒரு பாட்டி இருக்கிறாள். காஞ்சீபுரம் இட்லி பண்றதில் தங்கப் பதக்கம் கொடுத்தால் அவளுக்குத் தான் கொடுக்கணும். தொட்டுக்க மிளகாய்ப் பொடி... உட்கார், உட்காரேன்...''

மங்களா அருகே ஒரு ஸ்டூலில் அமர்ந்தாள்.

''எனக்குப் பசிக்கவேயில்லை, ஸார்! நீங்கள் சாப்பிடுங்கள்.—''

''இதோ பார், மங்களா! இப்போ நீயே இங்கே வந்து விட்டாய். அதனாலே நான் இப்போ சொல்றதுகூட வெறும் வாய் வார்த்தையா, சமாளிக்கிற வார்த்தையா உனக்குத் தெரியும். பொய்ன்னுகூட நினைப்பே! உனக்கு நானே சொல்லியனுப்பணும்னு நினைச்சிண்டிருந்தேன்;

என்னதான் சொல்லு, இந்தச் சர்க்கரைப் பொங்கல் புளியோதரை நாங்க அய்யங்கார்கள் பண்ற மாதிரி, உங்க ஸ்மார்த்தர்கள் பண்றதில்லை. என்ன சொல்றதே நீ?''

''வாஸ்தவம்தான்! ஆனால் அதுக்குக் காரணம், எங்களுக்குச் செய்ய வராது என்று இல்லை, ஸார்.''

''பின்னே?''

''சாப்பாட்டு விஷயத்தில் அநாவசியமாக எங்க மூளையைச் செலவு செய்யறதில்லை''.....

''அப்போ... அய்யங்கார்களெல்லாம்...''

''நோ... நோ... நான் ஏதும் குறையாகச் சொல்லவில்லை... தப்பா நினைத்துக்கொள்ளாதீர்கள்... ஒரே ஒரு வாய் கொடுங்கள். பாதி இட்டிலிக்கு மேலே வேண்டாம்... நான் இன்னும் சாப்பாடே சாப்பிடவில்லை,''

டிபன்பாக்ஸிலிருந்து, டிபன்பாக்ஸ் மூடிக்கு ஸ்பூனால் பொங்கலைத் தள்ளின ரங்காச்சாரி, ஸ்பூனையும் மூடியில் வைத்து மங்களாவின் பக்கம் வைத்தார்.

''ரொம்ப அதிகம் ஸார்!''

''சும்மா சாப்பிடு.....''

ரங்காச்சாரியின் சிரித்த முகத்தைப் பார்த்தபோது மங்களாவின் மனத்தில் திடீரென்று ஒரு வேதனை பிறந்தது. எவ்வளவு துயரங்களையும் துக்கங்களையும் மனத்தில் ஒளித்து வைத்துக்கொண்டு இப்படியே சிரிப்பில் வாழ்கிறார் இவர்.

''ஸார்! எனக்கு மனசே சரியில்லை.....''

அவளையும் அறியாமல் வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வந்தன.

''உன் மனசு சரியில்லேன்னு அதுக்கு நீயேதான் காரணமாக இருக்க முடியும். என்ன காரணம் சொல்லு'' என்று கேட்டார் ரங்காச்சாரி.''

''எனக்கே புரியவில்லை.''

''பிடிக்காத இடத்தில் கல்யாணம் நிச்சயம் செய்துவிட்டாரா, எஸ் எஸ்?''

''அதெல்லாம் இல்லை ஸார்.''

''பிடிக்கிற இடத்தில் பண்ணக்கூடாது என்கிறாளா, மிஸர்ஸ், எஸ்.எஸ்?''

''அம்மா எதுவும் சொல்லவில்லை!''

''பின்?''

''.....''

மனசிலே ஒருவித சலனம் பிறந்திருக்கா... நீயே யாரையாவது நினைச்சுக் கனவு கண்டுகொண்டிருக்கிறாயா...?'' அந்த ஆள் வேறு ஒருத்திக்குத் தாலிகட்டுவான் போலிருக்கா...?''

''காஞ்சிபுரம் இட்லி உண்மையாகவே நன்னாயிருக்கு, ஸார்.''

''நான் கேட்ட கேள்வி?''

''இன்னும் கொஞ்சம் இட்டிலி எடுத்துக் கொள்றேன்.''

''எடுத்துக்கோ...என்ன பதில் சொல்லாமல் இருக்கே?'' மங்களா மௌனத்தில் உறைந்தாள்.

''எனக்கு எல்லாம் புரிகிறது.''

''ஸார்!''

''என்ன?''

''நீங்க ஏன் ஸார், எப்போதும் புல்ஃஹாண்ட் ஷர்ட்டே போட்டுக்கொள்ளுகிறீர்கள்?''

''கதை கேட்கிறாயா?''

''சொல்லுங்கள், ஸார்.''

''மணையிலே உட்கார்ந்து தாலிகட்டப் போனேன். திடீரென்று முழங்கையிலே ஒரு கத்தி விழுந்தது. தில்லானா மோகனாம்பாளிலே, சிவாஜி கணேசன் கையிலே ஒரு

ரௌடி எறிந்தானே அது மாதிரி. என் மேலே எறிஞ்சவன் ரௌடிகளுக்கெல்லாம் ரௌடி. கல்யாணப் பெண்ணைப் பெற்றவன். என் ஒன்றுவிட்ட மாமா. குடிகாரன்... கேப் மாரி... விட்டுத் தள்ளு. அந்தக் காயம் காரணமாக இரண்டு அங்குல அகலத்துக்கு நாலு அங்குல நீளத்துக்கு ஒரு அசிங்கமான வடு... அதை மறைக்க ஃபுல் ஹாண்ட் ஷர்ட்.''

''கல்யாணம்?''

''நடந்திருந்தால் நான் எப்படி இன்னும் பிரும்மச்சாரியா இருந்திருக்க முடியும்?''

ரங்காச்சாரி சர்க்கரைப் பொங்கலை மறந்தார். கை விரல்கள் வறண்டன.

''அந்தப் பெண்?''

''அவளுடைய தலையில் காவேரி வெள்ளம் எழுதியிருந்தது. அவமானம் தாங்க முடியாமல் ஸ்ரீரங்கம் பாலத்திலிருந்து ஆடிப் பெருக்கில் குதித்தாள்''

''எப்படி ஸார், உங்களால் அவளைக் கைவிட முடிந்தது?''

''நானா கைவிட்டேன்? அவளைக் காப்பாத்தணும். அவளுடைய அம்மாவின் கண்ணீரைத் துடைக்கணும். ஒரு வீட்டையும், நகைகளையும் ரௌடி அப்பனிடமிருந்து காப்பாற்றணும்னு பதினெட்டு வயசிலேயே வைராக்கியமா தீர்மானம் செய்தேன் காவிரிப் பாசனத்திலே எனக்குப் பத்து வேலிக்கு இருந்தது. பெரிய பெரிய இடங்களிலிருந்து, என் தகப்பனாரின் பதவியையும், பணத்தையும் நினைச்சுப் பெண்தர வந்தார்கள்... ஆனால் நான்? தேசியக் கல்லூரியிலே பி.ஏ. படிக்கிறவன் படிப்பில்தானே நினைவாக இருக்க வேண்டும்? மாமியையும் அவள் பெண்ணையும் உய்விக்கிறதை லட்சியமாகக் கொண்டேன். அம்மா, அப்பா என் பேச்சைக் கேட்டதும் சீறி விழுந்தார்கள். ஆனால் என் குணம் ரொம்ப மோசமான குணம். நினைத்ததைச் சாதிக்கிற வரையில் தூங்காதவன். ஒரு சின்ன

ஊரில், ஒரு சத்திரத்தில் கல்யாணத்துக்கு நானே ஏற்பாடு செய்தேன். அம்மா இல்லை, அப்பா இல்லை. சொந்தக் காரக் கூட்டமே இல்லை தாலி கட்ட வேண்டியதுதான் பாக்கி... அதையும் கட்டியிருப்பேன், ஆனால் எதிர்பாராத விதமாக ரௌடி மாமனார் வந்தான். பெண்ணை வேறு யாருக்கோ, ஒரு பணக்காரப் பிள்ளைக்கு அவன் ஏற்கனவே முடிவு பண்ணியாகி விட்டதாம். இது ஏற்கனவே தெரிந் ததுதான். ஆனால் அந்தப் பணக்காரப் பிள்ளை, இவனுடன் சேர்ந்து, எல்லாச் சகவாசங்களிலும் ஈடுபட் டிருக்கிறவன். கல்யாணம் செய்துகொண்டால் ரங்கனை கல்யாணம் செய்துகொள்ளுவது என்று மூர்க்கத்தமனாக இருந்தாள் என் மாமா பெண்...

''கல்யாணம் இப்படித் தடைப்பட்ட பிறகு, நான் திருச்சியை விட்டு வெளியேறினேன். பெண்ணை இழுத்துக் கொண்டு அப்பன் போனதுதான் தெரியும். அதன்பின் ஆடிப் பதினெட்டில் அவளும் காவேரியோடு போனாள்.''

ரங்காச்சாரியின் கண்களிலிருந்து ஒரு பொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை. முகமே களங்கமற்ற வானமாகத் தோன்றியது.

''பேச்சுச் சுவராசியத்தில் நான் டிபனை மறந்து விட்டேன்'' என்றார் அவர் திடீரென்று.

''ஆனால் எப்படி இதையெல்லாம் தாங்கிக்கொண்டு, சிரிச்ச முகமாக இருக்கிறீர்கள் ஸார்?'' என்று கேட்டாள் மங்களா.

''அழறதுன்னு ஆரம்பிச்சா, அதுக்கு ஆரம்பம் இருக்கும். ஆனால் முடிவே இருக்காது. பகவான் மனுஷ னுக்கு அவன் கேட்காமலேயே கொடுத்திருக்கிற வரம் சிரிப்பு ஒன்றுதான். சூரியன் உதிக்கிறப்போ தாமரை சிரிக்

கிறது. நந்தவனத்தில் கிளி சிரிக்கிறது. ஜூலக்ரீடையில் யானை சிரிக்கிறது... ஆனால் மனுஷன்? எங்கே வேண்டு மானாலும், எப்போது வேண்டுமானாலும், சிரிக்கலாம்... புண்ணுக்கு மருந்து சிரிப்புதான் மங்களா. எத்தனையோ கோயிலுக்குப் போயிருப்பியே. எந்தக் கோயிலிலாவது விக்கிரகம் கோபமாகவோ, விசனமாகவோ இருந்து பார்த் திருக்கிறாயா? புன்முறுவலும் சிரிப்பும்தான் தெய்வத்திடம் காண முடியும்...''

''உங்கள் சிரிப்பு போலி. பொய்... துக்கத்தை மறைக்க நீங்கள் போர்த்திக்கொள்கிற போர்வை.''

''இருக்கலாம், ஆரம்பத்தில் அப்படி இருக்கலாம். ஆனால் நினைவுகள் மறைய மறைய போலியே உண்மை யாகி விடுகிறது! எதுவும் நம் கையில் இல்லை. எதையும் நாம் செய்யவில்லை என்று நினைக்க ஆரம்பி... எல்லாப் பாரத்தையும் அவன்பேரில் போடு; அவனே உன் உதட்டில் சிரிப்பை வரவழைப்பான்...அது சரி, இந்தச் சிரிப்பு வேதாந் தத்தை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளுவோம்... உன் மனசு ஏன் சரியில்லை?''

மங்களா எழுந்தாள்.

சிரித்தாள்.

''அப்புறமா சொல்றேன் சார்... என் மனசு இப்போ சரியாயில்லை.''

அடுத்தகணம், அவள் அந்த அறையை விட்டு வெளி யேறினாள்.

கடிகாரத்தைப் பார்த்தாள் ஒன்று ஐம்பது.

ஆறாவது பிளாட்பாரத்திலிருந்து, பம்பாய் ஜனதா பெருமூச்சுடன் நகர்ந்துகொண்டிருந்தது.

19

ரயில்வே ஊழியர்கள் பலர் தினம் தினம் ரயிலில் செல்லுகின்றனர். விளைவு? அவர்களில் சிலரது குடும்பங்கள் தலைவரற்ற கப்பலைப்போல் நினைத்த திசையில் செல்லுகின்றன.

ஒரு கை சர்க்கரைப் பொங்கலும் ஒரே ஒரு காஞ்சிபுரம் இட்லியும்தான் சாப்பிட்டாள். அதிலேயே வயிறு நிரம்பி விட்டாற்போலத் தோன்றிற்று மங்களாவுக்கு ரங்காச் சாரியின் அறையை விட்டு வெளியே வந்ததும், வீட்டுக்குப் போகவேண்டும் என்றுதான் முதல் எண்ணமாக எழுந்தது. ஆனால் அடுத்தகணமே எண்ணத்தை மாற்றினாள். அவள் வீட்டுக்குப் போய் என்ன செய்யப் போகிறாள்? வயிறு நிறைந்துவிட்டது. சாப்பிட வேறு பிடிக்கவில்லை. அம்மா தொணதொண என்று அவள் கழுத்தை அறுத்துத் தட்டின் முன் உட்கார வைப்பாள். அப்பா அவளைச் சாப்பாட்டுக்குத் தாம் சொல்லியனுப்பியபடி ஏன் வரவில்லை என்று துருவித் துருவிக் கேட்பார். தங்கைகளும் தம்பிகளும் கேதாரத்தைப்பற்றி அளக்க ஆரம்பிப்பார்கள். கல்யாணம் அவன் நடப்பதுபோல் நடந்து பேசுவதுபோலப் பேசி நையாண்டி செய்வான்.

அவளுக்கு இப்போது வீட்டில் என்ன வேலை?

மணி இரண்டு அடிக்க ஐந்து நிமிடம் இருந்தது. மூன்று மணிக்கு மேரியும் அவளுமாகக் கேதாரத்தைப் பார்க்கப் போகிறார்கள். மேரி இரண்டரை அல்லது இரண்டே முக்காலுக்கு அவளைத் தேடிக்கொண்டு

வருவாள். அதற்கு முன் அவளே மேரி வீட்டுக்குச் சென்றால் என்ன? மேரி இன்றைக்கு லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் இல்லாவிட்டால்தான் என்ன? ரொஸாரியோவிடம் பத்து நிமிடங்கள் பேசிவிட்டு வரலாம். அவரைப் பார்த்துப் பேசி எத்தனை நாட்களாகிவிட்டன?

ரொஸாரியோ வீட்டை அடைந்தபோது மணி இரண்டு பத்து ஆகியது.

அன்று அதிகாலையில் பெங்களூர் மெயிலில் சென்ட்ரலுக்குத் திரும்பிய ரொஸாரியோவின் உடல் தள்ளாடியது. மெதுவாக நடந்தார்

வீட்டை அடைந்தபோது மணி ஆறு. தலைவரைக்கும் போர்த்திக்கொண்டு எட்மண்ட் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தான் ஹாலில் நுழைந்த அவர் பாண்டையும் கோட்டையும் கழற்றிவிட்டுப் பைஜாமா அணிந்துகொண்டார் ஹாலை ஒட்டினாற் போன்ற அறையினுள் ஒரு தடவை எட்டிப் பார்த்துவிட்டு தலையை இழுத்துக்கொண்டார். லூஸி அலங்கோலமாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். முந்தின இரவு எத்தனை மணி வரையில் வேப்பேரியில் யார் யாருடன் நடனம் ஆடிக் களைத்துப் போயிருக்கிறாளோ? யாருக்குத் தெரியும்? யார் அவளிடம் கேட்க முடியும்?

சமையலறையில் சத்தம் கேட்டது. மேரிதான்.

''மேரி!''

''ஹலோ டாடி. குட்மார்னிங்.''

மேரி உடனடியாகத் தேநீருடன் வந்தாள்.

''களைப்பா இருக்கா டாடி?''

''ஆமாம் மேரி!''

''டீ சாப்பிடுங்கோ, டாடி!''

''எப்படி இருக்கே மேரி?''

''ஓ.கே. டாடி,''

''நான் தூங்கணும்!'' தேநீரைக் குடித்த அவர் தமக்கு தாமே சொல்லிக் கொண்டார்.

''ஓ டாடி...ஆனால் மதர் இன்னும் தூங்கிட்டிருக்கா!''

''இது புதுசில்லே! நான் ஈவினிசேரிலே தூங்கறேன்!''

மேரி பதில் சொல்லாமல் காலிக் கோப்பையையும் சாஸரையும் எடுத்துக்கொண்டு போனாள். சித்தி என்று எட்டு மணிக்கு முன்னால் எழுந்தாள்? பாதி நாட்கள் தலை கனமாக இருக்கிறது என்று, பத்து மணி வரை இரவு உடை யுடன் அங்குமிங்குமாக வருவாள். தலைவலி மாத்திரை களைப் போட்டுக் கொள்வாள். தன்னை ஒத்தவர்கள் கேட்டால், ''என்ன செய்வது ஹாங்கோவர்...இன்னும் ஒரு 'பெக்'காவது குடித்தால்தான் விடுவேன் என்று பிடிவாதம் செய்தார்கள்'' என்பாள். இந்தச் சம்பாஷணை யைக் கேட்கும்போதெல்லாம் மேரிக்குக் கோபத்தைவிட வேதனைதான் மேலோங்கி நிற்கும்! பாவம்! அப்பா இவளிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாரே!

பெண் பதில் சொல்லாமல் செல்வதைக் கண்ட ரொஸாரியோ தமக்குள் புலம்பிக்கொண்டார். சாய்வு நாற்காலியில் விழுந்த அவருக்கு நெற்றி நரம்புகள் வலித்தன. இரவு முழுதும் அவருக்கு வேலை!

திடீரென்று பணக் கஷ்டம் வேறு நெஞ்சை அமுக்கியது. ரயில்வே ஊழியர்கள் கோவாபரேட்டிவ் பாங்கியில் இருநூறு ரூபாய் கடன் வாங்க அவர் முந்தாநாள் விண்ணப்பத்தாளை மணி மூலமாகக் கொடுத்தனுப்பியிருக் கிறார். மணி எஸ்.எஸ்.ஸிடம் கொடுத்தானோ இல்லையோ? கொடுத்திருந்தாலும் அதை எஸ்.எஸ். என்ன செய்தாரோ? தம் வேலைத் தொந்தரவில் பாங்கியில் கொடுக்க மறந்து போயிருந்தால்?

லூஸியைக் கல்யாணம் செய்துகொண்ட நாளிலிருந்து இதுவரையில் அவர் பண விஷயத்தில் நிம்மதியாக இருந்தது

கிடையாது. எட்மண்டின் ஊதாரிச் செலவில் அவருடைய நிம்மதி மேலும் குலைந்தது. இவ்வளவுக்கும் மேரி தன் சம்பளப் பணம் முழுவதையும் அவரிடம் ஒப்படைக்கிறாள்: லூஸியும் எட்மண்டும் மேரியைப்போல இருந்தால் வாழ்வே சொர்க்கமாக இருக்குமே? அப்பாவும் பெண்ணும் மாதா மாதம் கொண்டு வருகிற எண்ணூறு ரூபாயில் எவ்வளவு இன்பமாக காழலாம்!

லூஸியின் அலட்சியப் போக்கு எட்மண்டின் அடங்காப் பிடாரித்தனம் இப்போது அவரை ஒரு கடனாளியாக்கியிருக் கிறது. பிராவிடண்டு பண்டுப் பணத்திலிருந்து வாங்கிய இரண்டாயிரத்து நானூறு ரூபாயில் நானூறு ரூபாய்தான் இதுவரையில் சம்பளத்திலிருந்து பிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருபது மாதங்களுக்குத் தலைவலி தொடரப் போகிறது. கூட்டுறவு பாங்கியில் ஆயிரத்து எண்ணூறு ரூபாய்வரை கடன் வாங்கலாம். இந்தத் தேதியில் ஆயிரத்து அறுநூறு ரூபாய் கடன் இருக்கிறது. இதை அவர் இப்போது கடைசி எல்லை வரையில் ஏற்றப் போகிறார்.

இதைத் தவிரச் சில்லறை சில்லறையாகக் கடன். ஒரு கடனை அடைக்க இன்னொரு கடன். அந்தக் கடனை அடைக்க இன்னொன்று. ஒரு கடன் இன்னொன்றை விழுங்கக் கடைசியில் கடன் அவரை விழுங்கிக்கொண்டு வருகிறது

அவர் இதிலிருந்து என்றுதான் தம்மை மீட்டுக் கொள் வார்? யாருக்கும் பதில் சொல்ல வேண்டாத நிலைமையை என்றுதான் அடைவார்?

இத்தனை வேதனைக்கிடையிலும் அவர் மனத்தில் மேரி தோன்றினாள் எத்தனையோ துர்ப்பாக்கியங்களுக்கு நடுவில் ஒரு பாக்கியம். அதிருஷ்டம். வாலிபப் பருவத்தில் கிளாராவைக் காதல் மணம் செய்துகொண்டபோது, வாழ்க்கையே வசந்தமாகப் பரிணமித்தபோது அவள்

தாமரை போலப் பிறந்தாள். தாயின் நல்ல குணங்களெல் லாம் அவளிடம் ஊறியிருந்தன. இந்தப் பெண் மேரி, இப்போது தன்னை விட்டால் அப்பாவுக்கு யாரும் கிடையாது என்ற ஒரே எண்ணத்தில் வாழ்ந்து வருகிறாள்!

அவளுடைய எண்ணமும் சரிதான். இன்றைக்கு வந்த தும் வராததுமாய் அவர் குடித்த தேநீர் மேரி போட்ட அன்பு தேநீர்.மேரி இல்லாவிட்டால் அவருக்கு குடிக்கவேண் டும் என்றிருந்தால் அவரேதான் ஸ்டவ்வைப் பற்றவைத்துத் தண்ணீர் வைக்கவேண்டும்! ஏன் லூஸிக்கும் எட்மண்டுக்கும் அவர்தான் தேநீர் போட்டுப் பரிமாற வேண்டும்.

வாழ்க்கையின் ருசியை அனுபவிக்க வேண்டிய வயதில் மேரி தன்னைத்தானே அழித்துக்கொண்டு வருகிறாள். அவளுக்கு ஏற்ற ஒரு புருஷன் எப்போது வருவான்? பலரா மனை மறந்து வாழும் மேரி இன்னொருவனைக் கல்யாணம் செய்துகொள்வாளா?

ரொஸாரியோ தூங்க நினைத்தாரே தவிர அவரால் தூங்க முடியவில்லை.

திடீரென்று படுக்கை அறையிலிருந்து முனகல் சத்தம் கேட்டது. லூஸி சோம்பல் முறிக்கிறாள் என்பதை ரொஸா ரியோ உணர்ந்தார்.

இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பிறகு லூஸி வந்தாள். கலைந்த தலை, யௌவனம் குலையாத உடற்கட்டு, தொள தொளவென்றிருந்த இரவு உடையில் கவர்ச்சி அழகி யாக வந்து நின்றாள்.

"ஹலோ டார்லிங், குட்மார்னிங்!" லூஸி கொட்டாவி விட்டாள்.

அவளுடைய உடற்கட்டையும் மார்பகத்தையும் பார்த்தபோது ரொஸாரியோவின் உள்ளத்தில் அசுர இச்சை மின்னலாக எழுந்தது. ஆனால் அடுத்த கணமே தம்மை அடக்கிக் கொண்டார்.

"குட்மார்னிங்"

"எப்போ வந்தீங்க?"

"ஆறு மணிக்கு."

"எனக்கு நேற்று பார்ட்டி இருந்தது!"

ரொஸாரியோ பதில் சொல்லவில்லை. அவள் காலைக் கடன்களை முடித்துவிட்டு வருவதற்குள் ரொஸாரியோ கட்டிலில் படுத்து ஒரு சிறு தூக்கம் தூங்கிவிட்டார்.

"டார்லிங்!"

"என்ன வேணும் லூஸி? தொந்தரவு பண்ணாதே!"

"இன்னிக்கு எழுபது ரூபாய் வேணும்."

"எங்கிட்டே இல்லே."

"வேணுமே!"

"ப்ளீஸ் லூஸி..."

"பெக், பாரோ, ஆர் ஸ்டூல்..."

"எட்மண்ட்கிட்டே சொல்லு அவன் உதவி பண்ணு வான்."

லூஸி விடவில்லை. அவள் பேசிக்கொண்டே போனாள்.

ஆனால் ரொஸாரியோ காதிலேயே போட்டுக்கொள்ள வில்லை. வாங்கப்போகிற இருநூறு ரூபாய்க் கடனில் பைசா மிஞ்சப்போகிறதில்லை. இரண்டு மாதங்களாக வாங்கிய இறைச்சிக்குத் தொண்ணூறு ரூபாய் கொடுத்தா கணும். மூன்று மாதங்களாக வண்ணானுக்குப் பாக்கி. அது ஒரு முப்பது ரூபாய். போன மாதம் டிக்கட் கலெக்டர் ஐயராமனிடம் கைமாற்றாக வாங்கிய ஐம்பது ரூபாயை உடனடியாகக் கொடுத்தாக வேண்டும். மணிக்குப் பத்து ரூபாய். கறிகாய்க்கும் முட்டைக்கும் மேரி கையில் பத்து ரூபாயாவது கொடுக்க வேண்டும். இதைத் தவிர ஏழு, ஒன்பது என்று சில்லறையாகக் கடன்! எழுபது ரூபாயை லூஸி கையில் கொடுத்துவிட்டால் அவர் என்ன செய்வார்?

லூஸி பேச்சை நிறுத்திவிட்டுத் திட்ட ஆரம்பித்தாள்: தன் தாம்பத்திய வாழ்க்கையே அவரால் நசித்துவிட்டது என்றாள். (இதைக் கேட்டபோது ரொஸாரியோவின் மனத்தில் வெறுப்புக் கலந்த சிரிப்பு வந்தது. யாருடைய வாழ்க்கையை யார் நசித்திருக்கிறார்கள்?) அவருடன் வாழ்வதைவிட யார் வீட்டிலாவது வேலை செய்து பிழைக் கலாம் என்று இரைந்தாள். (இருக்கிற சொந்தக் குடும்பத் தில் ஒரு தம்ளரையே எடுத்து வைக்காத இவள் இன்னொரு வீட்டில் போய் வேலையா செய்வாள்?)

கால் மணி நேரம் திட்டின பிறகு திடீரென்று மேரியின் குரல் ஹாலிலிருந்து கேட்டது.

''மதர்!''

''என்ன?''

''அப்பாவைத் தூங்க விடு.''

''அப்போ நீ எழுபது ரூபாய் குடு.''

''கத்தாதே மதர்''

''நீ வாயை மூடு!''

''நீ ஒரு மூளையில்லாத கழுதை!'' என்று கத்தினாள் மேரி. பிறகு ''இப்போதுதான் ராத்திரி முழுதும் டியூட்டி பார்த்துவிட்டு வந்திருக்கிறார். அவரைத் தூங்க விடாமல் கத்துகிறாயே, நீ ஒரு மூளையில்லாத கழுதை!'' என்றாள்.

''ஷட் அப்!''

மேரி திருப்பிக் கத்தவில்லை.

மெதுவான குரலில், ''நீ ஒரு சோம்பேறி மனுஷி.'' என்றாள் மேரி. பிறகு மேரியின் குரலே கேட்கவில்லை.

எட்மண்ட் எப்போது எழுந்தானோ ரொஸாரியோவுக் குத் தெரியாது. லூஸியின் குரலும் அவருடைய காதில் விழ வில்லை. அவர் உண்மையாகவே தூங்கிப் போய்விட்டார்.

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு மணி வந்தான். அப் போது ரொஸாரியோ குளித்துவிட்டுத் தினப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

''குட் மார்னிங்!'' மணி சொல்லிக்கொண்டே பணத்தை நீட்டினான்.

அதை எண்ணிப் பார்க்காமலே ''ஓ நீயே வாங்கிக் கொண்டு வந்துவிட்டாயா! தாங்க்யூ...தாங்க்யூ'' என்றார் ரொஸாரியோ.

அவர் பணத்தை மேஜைக்குள் வைத்த பிறகு மணி ஓர் இளநீல நிறக் காகிதத்தை அவர் முன்னால் நீட்டினான்.

''என்ன, லோன் அப்ளிகேஷன்!...யாருடையது? எஸ். எஸ். 'லோன்' போட்டிருக்கிறாரா?''

''இல்லே!''

ரொஸாரியோ பார்த்தார். அவர் ரயிலேறு முன்னால் எஸ்.எஸ்.ஸிடம் சேர்ப்பிக்கச் சொல்லிக் கொடுத்த அப்ளி கேஷன்.

''இது என்ன?''

''இதைக் கிழித்து அடுப்பில் போடுங்கள்'' என்றான் மணி.

''இது ஏது பணம்?''

''சொந்தப் பணம்.''

''இது என்ன மணி! நீ ஏன் எனக்காகக் கஷ்டப்படு கிறாய்?''

''கஷ்டமே இல்லை ஸார்! இன்னும் ஐம்பது ரூபாய் இருக்கு வேணுமா?''

''வேண்டாம். என் தலையில் ஏற்கெனவே கடன் நிறைய இருக்கு.''

''இந்த இருநூறு ரூபாயை எப்போ நீங்க திருப்பித் தருவீர்கள்?'' என்று மணி சிரித்தான்.

''இதோ பார் மணி. பாங்கிலே வாங்கினால் மாதம் பத்துப் பத்தாகக் கொடுத்தால் போதும். நீ உதவி செய் கிறே தாங்க்ஸ். ஆனால் இரண்டு மாசம் மூணு மாசம்னு தவணை கொடுத்தால் நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்?''

''ரெண்டு ரெண்டு ரூபாயாகக் கொடுங்கள். நூறு தவணையிலே!''

மணி பதிலுக்குக் காத்திருக்கவில்லை. ஓடோடிச் சென்றான்.

ரொஸாரியோ பிரமை பிடித்தவர்போல் உட்கார்ந் திருந்தார்.

''மேரி!''

''மேரி இங்கே இல்லே!'' உள்ளேயிருந்து லூஸியின் குரல் கேட்டது.

''மிஸ்டர் ரொஸாரியோ!'' என்று அழைத்தாள் மங்களா.

''அவரும் இல்லே!''

மங்களா அலுத்துக்கொண்டே திரும்பி நடந்தாள்.

ரொஸாரியோ, தமக்கே உரித்தான கம்பீரத்தோடு நடந்து வந்துகொண்டிருப்பதைத் தெரு முனைக்கு வந்த போது கண்டாள்.

''குட் டே டு யூ! மங்களா.''

''குட்டே ஸார். சௌக்கியமா?''

''ஓ! சௌக்கியம்தான் அம்மா.''

''மேரியைப் பார்க்க வந்தேன்.''

''அவள் உன்னைப் பார்க்கப் போவதாகச் சொன் னாளே. வா, வீட்டுக்குப் போகலாம், ஒரு கப் டீ சாப்பிட லாம்!''

''தாங்க்ஸ் மிஸ்டர் ரொஸாரியோ. எனக்கு நோமா கிறது. நான் மேரியை உடனடியாகச் சந்தித்தாக வேண்டும். அவள் என் வீட்டில்தான் இருப்பாள்.''

''எட்மண்டுக்கு நீங்க ரெண்டுபேருமாச் சேர்ந்து வேலை வாங்கித் தரப்போகிறீர்கள்! இல்லையா?''

''முயற்சி செய்கிறோம்.''

''உனக்குக் கடவுள் ஆசி பூரணமாகக் கிடைக்கட்டும். மங்களா...எட்மண்ட் என் கண்ணிலே குத்தின ஊசி. அவன் எப்படியாவது ஒரு வேலையில் சேர்ந்து ஓர் ஆளாக வந்தால் போதும். எனக்குப் பைசா தர வேண்டாம்''

''அவன் எல்லாம் சரியாகப் போய்விடுவான், ரொஸாரியோ.''

''பார்க்கலாம்...பார்க்கலாம் ஆண்டவன் இருக்கார்!''

''ஸார், ரொஸாரியோ! என் தங்கைக்கு வியாழக் கிழமை பிறந்த நாள்...''

''அப்படியா? நல்லது...உன் தங்கைக்கு எனது பூரண ஆசிகள்.''

''நீங்க சாயங்காலம் பார்ட்டிக்கு வரணும் சார். சிறிய தேநீர் விருந்து!''

''நாளன்றைக்கா? வியாழக்கிழமைதானே?''

''ஆமாம்.''

''மன்னிக்கணும் மங்களா! கேரளா எக்ஸ்பிரஸில் ட்யூட்டி!''

''ரயில்வே உத்தியோகம் என்றாலே இப்படித்தான். என்ன பண்றது?''

''மேரி அவசியம் வருவாள்.''

''நான் வரேன் சார்!''

''வீட்டிலே லூஸியைப் பார்த்தாயா? என்ன சொன் னாள்!''

''பார்த்தேன் சார்...பத்து நிமிஷம் பேசிக்கொண்டிருந் தேன்...உங்களுக்கு அழகான மனைவி! நீங்க பாக்கியசாலி!''

ரொஸாரியோ சிரித்தார்.

''அவள் ஒரு மிருகம் மங்களா! எனக்கு மன நிம்மதியே இல்லை... ஐ ஆம் ஸாரி... மனைவியைப்பற்றி இழிவாகப் பேசக்கூடாதுதான்! என்ன பண்ணறது...!''

மங்களா துக்கம் தோய்ந்த அவருடைய முகத்தை ஒரு நடவை பார்த்துவிட்டுப் பதில் ஏதும் சொல்லாமல் நடந் தாள்.

அவள் கேதாரத்தைச் சந்திக்கப் போகிறாள். இது தான் கடைசிச் சந்திப்பாக இருக்கப்போகிறது. ஆசை தீர அபீதத்தைப் பற்றியும் இரண்டு வார்த்தைகள், எட்மண்ட் வேலை விஷயமாகப் பேசிய பிறகு கேட்க வேண்டும்.

மங்களா நடந்தாள்.

சென்ட்ரலின் சிவப்பு வெளித் தோற்றம் கம்பீரமாகக் காட்சி அளித்தது. டாக்ஸிகளும் வண்டிகளும் அடைத்துக் கிடந்தன. பிச்சைக்காரர்களும், ஊர் சுற்றிகளும் பாதை யின் ஓரத்தில் குழுமியிருந்தார்கள்.

டாக்ஸியைப் பிடிக்க வேகம். தலைதெறிக்கும் வேகம். நீலச் சொக்காய்க்காரர்களின் இரைச்சல். பொழுது போவ தற்காக வந்தவர்களின் சோம்பேறித்தனமான நடை.

வழியெல்லாம் அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் பிரயாணிகள்.

அப்பா...அம்மா... பதினொரு குழந்தைகள்...மேரி... ரொஸாரியோ... லூஸி...ரங்காச்சாரி...மணி...அபீதம் ஜம்பு நாதன்...ஆதிசேஷன்...எல்லாரும் பிரயாணிகள். எல்லாரும் பிரயாணிகள்.

அவளும் ஒரு பிரயாணி. கேதாரம் ஒரு பிரயாணி. அவள் எங்கோ போய்க்கொண்டிருக்கிறாள். அவன் எங்கே போகிறான்!

அவள் தன் பிரயாணத்தின் திசையை மாற்றி, அவனு டன் பிரயாணம் செய்ய மனம் விழைகிறாள்...

பிரயாண அலுப்பு மாறிப் பிரயாணம் சுகமாகத் தோன்றுகிறது.

சுகத்துக்குக் காரணம்?

காரணம்?

அவளுக்கு மூண்டுவிட்ட ஆசைகள்...கனவுகள்...

சே! என்ன பிரயாணம்!

மங்களா நடந்தாள்.

20

ரயிலில் பணம் கொடுக்காமல் செல்ல வேண்டுமானால் பாஸ் கிடைக்க வேண்டும். நாடகம், சினிமாவில் இருப்பதுபோல் ரயிலில் பிரயாணம் செய்ய காம்ப்ளிமெண்டரி டிக்கட் கிடையாது. இது இருந்தால் பலருக்கு எவ் வளவோ சௌகரியங்கள் உண்டு.

புதன்கிழமை.

காலை நாலரை.

முத்து திடீரென்று விழித்துக்கொண்டான். உடல் வியர்வையில் குளித்தது. நரசிம்மாச்சாரி சகோதரியின் பெண் குமுதாவை ஒரு கையில் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு அவன்மீது பாய்ந்து வருகிறார். இன் னொரு கையில் நீண்ட கைத்தடி. முத்து சிருங்கராச்சாரித் தெருவில், மூன்றாவது மாடியில் ஆறடி நீளம்—நான்கு அடி அகல அறையில் ஒடி ஒளிந்துகொள்கிறான்.

இந்தக் கனவுதான் அவனை எழுப்பிவிட்டது.

கனவுக்குக் காரணம் முந்தின நாள் அவன் சினிமா வுக்குப் போனதுதான். அம்மாவுக்கு ஆபத்து இல்லை என்று அவனுக்குத் தெரிந்ததும் மறுநாளே—கோயமுத்தூரி லிருந்து புறப்பட்டுச் சென்னைக்குத் திரும்பினான். செவ்வாய்க்கிழமை உதவி மானேஜர் அவனுக்கு ஒரு காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுத்தார். பணம் கொடுத்துச் சினிமாப் பார்த்துப் பழக்கமில்லாத முத்து அதை இரண்டு கைகளாலும் பெற்றுக்கொண்டான்.

மவுண்ட்ரோட்டில், 'சாந்தி' தியேட்டரில் 'எங்கிருந்தோ வந்தாள்' சிவாஜிகணேசன் சித்தப்பிரமை பிடித்தவனாக நடிக்கும் படம். என்னதான் விளம்பரங்களையும் விமரிசனங்களையும் பார்த்துப் படம் பார்க்க வேண்டும் என்ற சபலம் அவனுள் இருந்தபோதிலும், காசு கொடுத்துச் சினிமாப் பார்ப்பதில்லை என்ற வைராக்கியம் அவனுடைய சபலத்தைப் பூர்த்தி செய்யாமல் இருந்தது.

அவனுடைய அதிர்ஷ்டமோ அல்லது துரதிருஷ்டமோ டிக்கட் காசு கொடுக்காமல் கிடைத்தது. டிபனைச் சாப்பிட்டுவிட்டு ஐந்தே முக்காலுக்கே தியேட்டர் முன்னால் நின்றான்.

ஆறு பத்துக்கு 'கோல்கேட்' பற்பசை விளம்பரத்தின் போது, அவனுக்கு மூன்றாவது ஸீட்டில் அவன் எப்போதோ கேட்ட ஒரு குரல் அவனை ஈர்த்தது. விளம்பரங்களின்போது எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டிருக்கவில்லை. குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான். அதேசமயம் குரலும் திரும்பிப் பார்த்தது

தேள் கொட்டினாற்போல் முத்து துள்ளினான். குமுதா! அவனைப் புரிந்துகொண்டாள். கூடவந்த பன்னிரண்டு வயதுப் பையனையும் இழுத்துக்கொண்டு முத்துவுக்குப் பக்கத்தில் வந்து அவள் உட்கார்ந்தாள்.

''முத்து.''

''உம்.''

''சௌக்கியமா?''

''சௌக்கியந்தான். நீ உன் பழைய இடத்துக்கே போ...''

''நீ எங்கே போயிட்டியோன்னு ரொம்ப நாளுக்கு ஒரே விசாரமாயிருந்தது. பட்டணத்திலேயேதான் இருக்கியா?''

''ஆமாம்... நீ தள்ளி உட்காரு.''

''நீ ஏன் பயந்துண்டு போனே?''

''அதோ பார்! டாக்குமெண்டரி ஆரம்பிச்சுடுத்து..... நான் இரண்டு ஸீட் தள்ளி உட்காருகிறேன்...''

''நான் தொடர்ந்து வருவேன்... என்னை உனக்குப் பிடிக்கலையா?''

''பிடிச்சிருக்கு... இப்போ சினிமாப் பாரு.''

''மாமா நரசிம்மாச்சாரி நாக்பூருக்குப் பிள்ளைகிட்டே போயிட்டார். இப்போ நானும் பாட்டியும்தான். பாட்டிக்கு இப்போ கண்ணே தெரியறதில்லை.''

டாக்டர்கிட்டே காட்டு...''

''என்னைப் பிடிச்சால் நீ இப்படி விரட்டுவியா?''

''நீ அய்யங்கார்... நான் ஐயர்...''

''இது 1971ம் வருஷம்; ரொம்பக் கர்னாடகமா இருக்கியே... உனக்கு வியர்தி பிடிச்ச அம்மா... எனக்குச் சாகப் போற பாட்டி... நான் ஆசைப்படறதில் தப்பு இருக்கா?''

''குமுதா! எனக்கு அழுகை வர்றது.''

''நீ இல்லாமல் எனக்கு எல்லாமே வெறிச்சுன்னு இருக்கு. பீச்மெல்பா எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் தின்னதேயில்லை. வாங்கித் தரேன்னு அன்னிக்குச் சொன்னியே... இன்னிக்கு வாங்கித் தர்றியா...?''

''காசு கொண்டு வரலை...''

''எங்கிட்டே அஞ்சு ரூபாய் இருக்கு. மூணு வாங்கு. இவன் பக்கத்து வீட்டுப் பையன். துணைக்கு வந்திருக்கான்.''

''இண்டர்வல்லே, வெளியே போக முடிஞ்சால் போய் வாங்கித் தரேன்.''

''தாங்க்ஸ்... இனிமேல் சினிமா பார்க்கறேன்... நீ என் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறது எனக்கு எவ்வளவு

பெருமையா, சந்தோஷமா இருக்கு தெரியுமா...? உன் கிராப்பு முன்னைவிட இப்போ அழகா இருக்கு.''

சினிமா ஓடிக்கொண்டிருந்தது.

சிவாஜிகணேசனுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டது. 'ஆ ஹா! ஹா...?' என்று ஒரே கத்தல்.

பயத்தில் குமுதா முத்துவின் கையைப் பற்றினாள்; அந்தக் காட்சி முடிந்ததும் கையை எடுத்துக்கொண்டாள். முத்து பெருமூச்செறிந்தான் பயத்தினால்தான் அவள் தன கையைப் பிடித்துக்கொண்டாள் என்ற திருப்தி உண்டா யிற்று. ஆனால் அதேசமயத்தில், அந்தக் கையின் ஸ்பரிசம் அவன் இதுவரையில் உணர்ந்து அறியாத உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டது. சிவாஜி மீண்டும் கத்தக்கூடாதா என்று வேண்டிக் கொண்டான்.

ஆனால் சிவாஜி கத்தும் வரையில் குமுதா காத்திருக்க வில்லை. ஒரு சிரிப்புக் காட்சி வந்தது. குமுதா குலுங்கி குலுங்கிச் சிரித்தாள். கை தானாக முத்துவின் பக்கம் போக யத்தனிப்பதுபோல் இருந்தது: முத்து தன்னையும் மீறி, தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கும் இடது கையை வலது கையால் வரவேற்றான். கோத்துக்கொண்ட கைகள் வெகு நேரம் விடுபடவேயில்லை. விடுபட்டபோது, தனது விரல்கள் அவளுடைய முழங்கையையும் இடுப்பை யும் வருடுவதை உணர்ந்தான்.

இடைவேளையின்போது குமுதா பீச்மெல்பாவை மறந் தாள். முத்து தன்னையே மறந்த நிலையில் இருந்தான். ஆனால் அதேசமயத்தில் அவனுடைய இயல்பான கோழைத்தனமும் பயமும் தலைதூக்கின. நரசிம்மாச்சாரி யின் கண்டிப்பும் கறாருமான முகத்தோற்றம் பயமுறுத் தியது. எழுந்திருந்து போய்விடலாமா என்று யோசித் தான்.

முழு வெளிச்சத்தில் அவளுடன் சேர்ந்து உட்காரப் பிடிக்கவில்லை. 'இதோ வருகிறேன்' என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

இடைவேளைக்குப் பிறகு அவன் தியேட்டருக்குள் நுழையவில்லை. சென்ட்ரலை நோக்கி நடந்தான்.

இரவெல்லாம் குமுதாவை நினைத்து நினைத்துத் தூக்கம் பிடிக்காமல். வெயிட்டிங் ரூம் சோபாவில் முத்து புரண்டான். அவளை ஏமாற்றிவிட்டதான எண்ணம் உண்டாயிற்று. உண்மையில் அவனுக்குக் குமுதாவின்மீது அன்பு தோன்றிவிட்டதாகத் தோன்றியது குமுதா அவன் மீது எல்லை கடந்து அன்பு கொண்டிருக்கிறாள் என்று தெரிந்துவிட்டது. ஆனால் முத்து என்ன செய்வான்? அவன் ஒரு கோழை. பயந்தாங்கொள்ளி. குமுதாவை, திருட்டுத்தனமாக சினிமா இருட்டில் தொடுவதற்கு அவனுக்குத் தைரியம் இருக்கிறது. ஆனால் அவளைக் கல்யாணம் செய்துகொண்டு, உலகத்தில் தலைநிமிர்ந்து நடக்கத் தென்பு இல்லை. ஐயர்—ஐயங்கார் என்று சால் ஜாப்பு சொல்லி அவளை ஏமாற்றி, தன்னையும் ஏமாற்றிக் கொள்ளுகிறான்.

அவன் ஒரு கோழை.

பெரிய கோழை. பெரிய பெரிய கோழை.

குமுதாவின் ஆசையை மேலும் மூட்டிவிட்டு, தன் செய் கையால் அவளுடைய மனத்தில் நம்பிக்கையையும் உண் டாக்கிவிட்டு, பின்வாங்குகிறான். அவன் ரயில்வேயை ஏமாற்றி வெயிட்டிங் ரூமில் தங்கிக்கொண்டிருப்பதுபோல, குமுதாவின் உள்ளத்தில் தன்னைத்தானே ஏற்றி உட்கார வைத்துவிட்டு, ஓடி ஒளிகிறான். குமுதாவைக் கல்யாணம் செய்துகொண்டால் நாலு சொந்தக்காரர்கள் நாலு நாட் களுக்கு ஏதாவது பேசுவார்கள். ஆனால் அவளை மனம் அறிய ஏமாற்றினால்? தெய்வமே அவனைத் தண்டிக்கும்.

இரவு சோபாவில் புரளுகையில் திடீரென்று ஞானோ தயம் பிறந்தது.

மறுநாள் அவளைச் சந்தித்து, தான் கலியாணத்துக்குத் தயார் என்று சொல்லிவிட வேண்டும். மணியின் தயவால் ஏதாவது ஒரு கோயிலிலோ ரிஜிஸ்டிரார் ஆபீஸிலோ அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்

ஞானோதயம் பிறந்தும் சிந்தனை நிற்கவில்லை. என்னென்னமோ எண்ணங்கள் தோன்றி அவனை வதைத்தன; பற்பல விதமான விபரீதங்கள் அவனுடைய கற்பனையில் உதித்தன.

எப்படியோ தூங்கினான்.

சொப்பனங்கள் வந்தன. கல்யாணம் நடந்தது. மணி சாட்சிக் கையெழுத்துப் போட்டான் குமுதாவுக்குப் பீச்மெல்பா வாங்கிக் கொடுத்தான். கடைசியாக நரசிம்மாச்சாரி கைத்தடியுடன் அவனை அடிக்கப் பாய்ந்து வந்தார்.

அவனும் எழுந்தான்.

* * *

பல்லைத் தேய்த்து முகத்தைக் கழுவின முத்துவுக்குப் பொழுது போகவில்லை சூடாகக் காப்பி சாப்பிட வேண்டும் போல இருந்தது. வால்டாக்ஸ் ரோட்டில், ஒரு சின்னஞ்சிறு ஹோட்டலில் ஐந்து மணிக்கே காப்பி கிடைக்கும். அங்கே சென்றான். போனதும் காப்பி கிடைத்தது. குடித்தான். மீண்டும் சென்ட்ரலுக்குத் திரும்பினான், சரியாக ஐந்தேகால்,

பம்பாய் மெயில் மூன்றாவது பிளாட்பாரத்தில் சில நிமிடங்களில் வந்து சேரும் என்று ஒலிபெருக்கி அலறியது.

முத்து என்னென்னவோ எண்ணங்களில் நடந்தான்; குமுதாவை ஒரேயடியாக மறந்துவிடலாமா என்று தன்னையே கேட்டுக் கொண்டான். அடுத்த கணம் எப்படி மறப்பது என்று யோசனை செய்ய ஆரம்பித்தான். ரயில்

களைப் பற்றி நினைக்கலானான். பிருந்தாவனுக்கு அடுத்த படியாக வேகமாகப் போவது வெஸ்ட்கோஸ்ட் எக்ஸ்பிரஸா கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸா? அல்லது ஹௌரா மெயிலா? டீஸல் என்ஜினுக்குத் தண்ணீர் வேண்டாம். அது நீராவியில் போவதில்லை. டீஸல் ஆயிலில்தான் போகிறது. நாளைக்கு மண்ணெண்ணெயில்கூடப் போக ஆரம்பிக்குமோ? அப்படிப் போக ஆரம்பித்தால் மண்ணெண்ணெய்க்கு ரேஷன் வரும். பாதிப் பேர் கரி அடுப்பில் சமைப்பார்கள். அதனால் கரி விலை அதிகமாகும். அதனால் சமையல் நிற்காது. விறகு இருக்கிறது. என்ன இருந்தாலும் அடுப்பில் விறகைக் காட்டி, பற்ற வைத்து, ஊதி ஊதிச் சமைப்பது நல்லதுதான். அம்மா முன்னெல்லாம் விறகு அடுப்பில்தான் சமைப்பாள். அவன்கூடச் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொடுத்திருக்கிறான். ஒரு தடவை பொறுக்கிக் கொண்டிருக்கையில் ஒரு பைத்தியம் சிரித்துக்கொண்டே அவன் அருகில் வந்து, ஒரு கம்பால் திடீரென்று அவன் முதுகில் அடித்தது.

பைத்தியம்... சிவாஜி பைத்தியமாகப் பிரமாதமாக நடித்திருக்கிறார். இடைவேளைக்கு அப்புறம் அவன் பார்த்திருந்தால், பைத்தியம் எப்போது, எப்படி, யாரால் தெளிந்தது என்று தெரிந்திருக்கும். அவன் கோமை அதனால்தான் ஓடி வந்துவிட்டான். ஆனால் இப்போது தென்பு இருக்கிறது. குமுதாவை மறக்க முடியாது. எப்படி மறக்க முடியும்? எதற்காக மறக்கணும்? செக்கச் சிவக்க எத்தனையோ அய்யங்கார் பெண்களைப்போல் கொழு கொழுவென்றிருக்கிறாள். அவனுக்கும் ஒரு குறைச்சல் இல்லை. நல்ல ஜோடி என்று ரிஜிஸ்திராரே சொல்லி வாழ்த்துவார்

ஆனால் ஒரு சங்கடம் இருக்கிறது. குடும்பத்தை வெயிட்டிங் ரூமில் நடத்த முடியாது. ஏகப்பட்ட பேர் வந்து போவார்கள்; மணியைக் கொண்டே ஒரு சிறு வீட்டைப் பார்க்கச் சொல்ல வேண்டியதுதான்.

மணி நல்லவன், சமயத்துக்கு உபகாரம் செய்கிறான், அவனிடம் எப்படித் திடீர் திடீர் என்று பணம் புரளுகிறது? இதுவரையில் அவன், தான் எந்தக் கம்பெனியில் என்ன வேலை செய்கிறான் என்பதைச் சொன்னதில்லை. என்ன சம்பளம் இருக்கும்? முந்நூறா, நானூறா? இல்லை, ஐந்நூறு அறுநூறு கூட இருக்குமோ? எவ்வளவு இருந்தால் என்ன? அவன் நல்லவன்.

திடீரென்று சத்தம் கேட்டது. இதுவரையில் எதையுமே கவனியாமல், தன் சிந்தனையிலேயே லயித்துப்போன முத்து திடுக்கிட்டுப் பார்த்தான். பம்பாய் மெயில் வந்து சேர்ந்துவிட்டது. வரவேற்க வந்தவர்களும் போர்ட்டர் களும் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்தார்கள். டிராலி களின் 'க்ரீச்' 'க்ரீச்' என்ற சத்தம் நாராசமாக எழுந்தது. 'மெயில் வந்துவிட்டது' என்று மூன்று பாஷைகளில் ஒலி பெருக்கி ஓலமிட்டது.

முத்து நின்றான்.

அவன் நின்ற இடத்தில் முதல் வகுப்புப் பெட்டி நின்றது. யார் யாரோ இறங்கினார்கள்.

திடீரென்று முத்து ஆச்சரியத்துடன் கூர்ந்து பார்த் தான். ஒரு பெண் கைப்பெட்டியுடன் இறங்கினாள்.

ரேணுகா!

சுவாமிமலையில் அவனுடைய அப்பாவின் மாமா பேத்தி. கோடை விடுமுறைக்கு அப்பாவுடன் வருவாள்... அவனுடைய சொந்தக்காரி. இந்த ரேணுகாவைப் பார்த் துப் பத்து வருடங்களாகிவிட்டன. அந்தக் காலத்தில் கொஞ்சம் பூசினாற்போலிருந்த ரேணுகா எப்படி இப்படி ஒல்லியாகப் போய்விட்டாள்! உயரத்தில் பருமன் தெரிய வில்லையோ? எவ்வளவு அழகாக, நாகரிகமாக இருக்கிறாள்?

சுால் தானாக அவளை நோக்கிச் சென்றது.

அவள் அருகே இன்னொரு பெண் இருந்தாள். அவளை அவன் என்கொயரி கவுண்டரில் ஓரிரு தடவைகள் பார்த் திருக்கிறான்.

''அந்தப் பெட்டியை என்கிட்டே கொடு, ரேணு...'' முத்து பத்து வருடங்களுக்கு முன்னால் அப்படித்தான் அழைத்தான்.

ரேணுகாவின் சிரித்த முகம் திடீரென்று மாறியது. தன்னை யார் 'ரேணு' என்று அழைக்கிறார்கள் என்று பார்த்தாள்.

''நான்தான் ரேணு. என்னை மறந்துவிட்டாயா?''

கூட இருந்த மங்களாவும் சற்று விலகி நின்ற கேதாரமும் வியப்புடன் பார்த்தார்கள்.

''நீ... நீ... ஸ்வாமிமலை முத்துதானே?'' ரேணுகா மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள். பெட்டியைக் கொடுத் தாள்.

''ரொம்பக் காலமாச்சு உன்னைப் பார்த்து... எப்படி இருக்கே? அம்மா சௌக்கியமா?''

''அம்மா செத்துப் போயாச்சு.''

''அடப் பாவமே!''

''டைப்பிஸ்டா இருக்கேன்.''

''ச்சூ! ச்சூ!'' ரேணுகா இன்னும் அம்மாவின் மரணத் தில் இருக்கிறாள் என்று முத்து நினைத்துக்கொண்டான்.

''மங்களா! இவர் என் ஒன்றுவிட்ட சகோதரன்: ஸ்வாமிமலையில் கோடை விடுமுறையிலே இவன் வீட்டில் கும்மாளம் அடிப்போம்... மாமரத்தில் ஏறுவதில் இவன் நிபுணன்!''

''அப்பா சௌக்கியமா?''

''ஓ! சௌக்கியமா இருக்கார்.''

''எங்கே தங்கப் போறே?''

''இவள் என் வகுப்புத் தோழி, ஆருயிர்த் தோழி: மங்களா... இவள் வீட்டிலே தங்குவேன்... இவள் அப்பா தான் இந்த ஸ்டேஷனுக்கு எஸ்.எஸ். இங்கேயே குவார்ட் டர்ஸ் இருக்கு... நீயும் வா...''

தான் எங்கே தங்கியிருக்கிறோம் என்பதை மங்களா இருக்கும்போது சொல்லக்கூடாது என்று முத்து தீர்மானம் செய்துகொண்டான். அவள் அப்பாவிடம் சொல்லுவாள். அப்பா எஸ்.எஸ். வெயிட்டிங் ரூமை விட்டு அவனை 'எவிக்ட்' பண்ணிவிடுவார்.

எல்லோரும் நடந்தார்கள். மாடிப் படியண்டை வந்ததும், ''ரொம்பத் தாங்க்ஸ் மிஸ்டர் கேதாரம்; மறு படியும் நாம் சந்திப்போம்!'' என்றாள் ரேணுகா.

''அவரும் என் வீட்டுக்கு வருகிறார்'' என்றாள் மங்களா.

''ஓ!... அப்போ இரட்டிப்பு மகிழ்ச்சி'' என்றாள் ரேணுகா.

''மன்னிக்கணும் மிஸ் மங்களா...! நான் அப்புறமா வருகிறேன்'' என்றான் கேதாரம்.

மங்களா கேதாரத்தைப் பார்த்தாள். முந்தின நாள் மேரியுடன் சந்தித்த பிறகு அவளுடைய மனத்தில் அபிதம் வெறும் நினைவாக மாறிவிட்டாள். அதிலிருந்து அவளுடைய ஆர்வமும் நம்பிக்கையும் அபரிமிதமாக வளர்ந்து விட்டன. அவனைப்பற்றி அவள் நினைத்துக்கொண்டிருப்பதுபோல், அவளைப்பற்றி அவனும் நினைத்துக்கொண்டு தான் இருக்கிறான் என்பதை அவள் தானாகவும், அப்பா மூலமும் புரிந்துகொண்டாள். அதற்காக அவள் மனமார, தெய்வத்தை வாழ்த்தினாள்.

இப்போது மங்களா சிந்தனையினூடே கேதாரத்தைப் பார்த்தபோது, அவன் தன் கண்களாலேயே பதில் சொன்னான்.

கேதாரம் ரிடயரிங் ரூமை நோக்கிச் செல்ல, மற்ற மூவரும் எஸ்.எஸ்.வின் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

''முத்து! உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?''

''ஆயிடும்போல இருக்கு... உனக்கு?''

''இப்போதைக்கு ஆகாது... பெண் பார்த்தாச்சா?

''நானே பார்த்துக்கொண்டு விட்டேன்... ஆனால் என்ன செய்யறதுன்னு புரியலை. கொஞ்சம் பயமா இருக்கு.''

''காதல் கல்யாணமா?''

''கல்யாணம். ஆனால் காதல் இருக்கான்னு எனக்கே புரியவில்லை. பெண் என்னமோ என்னைக் காதல் பண்ணற மாதிரித்தான் தெரியறது.''

மங்களா கலகலவென்று சிரித்தாள்.

முத்துவுக்கு அவள்மீது கோபம் வந்தது.

''முத்து ரொம்ப வெகுளி, மங்களா... அவன் மனசிலே எதுவும் நிற்காது. வெளிப்படையாக எதையும் சொல்லி விடுவான். முத்து, உன் மனசிலே ஏன் சந்தேகம்?''

''எனக்கு அவளைப் பிடிச்சு இருக்கு. பிடிச்சிருக்கு என்ற எண்ணமே நேற்று ராத்திரிதான் பிறந்தது... சினிமாவிலே நட்ட நடுவிலே அவளை ஏமாத்திவிட்டு ஓடி வந்து விட்டேன்... ஆனால் ராத்திரி நிதானமாக யோசிச்சபோது நான் பண்ணினது தப்புன்னு தெரிஞ்சது...''

''ஏன் அப்படி ஓடி வந்தே?''

'பயம்... நாலுபேர் ஏதாவது பேசுவார்களோ என்று கலக்கம்.''

''உனக்குப் பிடிச்சா, உன்னை அவளுக்குப் பிடிச்சா ஜாம் ஜாம்னு பண்ணிக்கொள்ள வேண்டியதுதான். யோசனையே பண்ணாதே...''

''குமுதா அய்யங்கார்ப் பெண்.''

''பேரே அழகா இருக்கு!'' என்றாள் மங்களா.

''அய்யங்காராவது, ராவ்ஜியாவது? ஜாதி மதம் எல்லாம் பார்த்துத்தான் கல்யாணம் பண்ண வேணுமா?''

நீ இந்தக் காலத்துப் பிள்ளை. அய்யர்— அய்யங்காரெல்லாம் பார்க்கலாமா?'' ரேணுகா பேசிக்கொண்டே போனாள்.

''உன் பேச்சே எனக்குப் பெரிய பலமாப் போயிடுத்து. கொஞ்சநாள் இருப்பாய் இல்லையா?''

''சனிக்கிழமை ராத்திரி கல்கத்தாவுக்குப் போறேன். ஏன்? அதற்குள் தாலியைக் கட்டிவிடுகிறேன் என்கிறாயா?''

''அதற்குள் எப்படி முடியும்? அவளை அழைத்து வந்து உனக்குக் காட்டுகிறேன்'' என்றான் முத்து.

''மிஸ்டர் முத்து?'' என்று ஆரம்பித்த மங்களா ''நீங்கள் ரேணுவின் சகோதரர்... எங்களோடே ரொம்ப நெருங்கி வந்துவிட்டீர்கள்... நாளைக்கு என் தங்கையின் பிறந்த நாள். சாயங்காலம் தேநீர் விருந்து... நீங்கள் அவசியம் வரவேண்டும்... என்ன...? தனியாக வரப்படாது. குமுதாவையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும். நானே நேரிடையாக அழைக்கிறேன்.''

''பார்க்கிறேன்.''

''சரின்னு சொல்லு முத்து. மங்களாவுக்குக் காதல் கல்யாணம் என்றால் ரொம்பப் பிடிக்கும்...''

ரேணுகா சிரித்தாள்.

''உனக்கு எப்படியடி தெரியும்?'' தாழ்ந்த குரலில் கேட்டாள் மங்களா.

ரேணுகா முத்துவை வீட்டினுள் அனுப்பிவிட்டு, ''உன்னையும், மிஸ்டர் கேதாரத்தையும் ஓரிரு தடவைகள் கவனித்தேன், உடனே புரிந்துகொண்டேன். அவர் ரொம்பச் சூடிக்கையான நல்ல அதிகாரி. நீயும் அவரைக் காதலிக்கிறாயா?'' என்று ரகசியமாகக் கேட்டாள்.

மங்களா சிரித்தாள். பிறகு திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவள் போல, ''எனக்குப் பயமாயிருக்கிறது. ரேணு... பல குளறுபடிகள் இருக்கின்றன!'' என்றாள்.

''நான் தீர்த்து வைக்கிறேன். கவலைப்படாதே!'' என்றாள் ரேணுகா; பிறகு ''ஏண்டி என் மனசிலே காதலே பிறக்கமாட்டேன் என்கிறது?'' என்று கேட்டாள்.

''உன் மனசைக் கவ்விப் பிடிக்கிற ஆள் இன்னும் உன் கண் முன்னால் வரவில்லை.''

''போன ஞாயிற்றுக்கிழமை கார்த்தாலே இந்தக் கேதாரம் வந்து உன் மனசைக் கவ்வினானாக்கும்!''

''உஸ்...'' என்றாள் மங்களா.

21

உலகில் எப்போதாவது ரயில்வே ஸ்டேஷனில் கல்யாணம் நடந்திருக்கிறதா? நடக்க முடியுமா?

—இருகேள்விகள் ஆராய்ச்சியாளர்களுக்காக.

விஷ்ணு சகஸ்ரநாமத்தை முடித்து, சங்கரி வார்த்துப் போட்ட இட்டிலி மாவு தோசையையும் வேண்டா வெறுப்புடன் சாப்பிட்டுவிட்டு ரேணுகா மங்களாவிடம் ஒரு பத்து நிமிஷங்கள் பேசிவிட்டுத் தொழிலுக்குப் புறப்படலாம் என்றிருந்த கணபதியை ஒரு புதுக் குரல் அழைத்தது.

கணபதி ஏறிட்டுப் பார்த்தார். முன்பின் பார்த்திராத ஐம்பது வயதுக்கும் கீழாகவே மதிக்கத் தகுந்த வயதில் முகமே மந்தகாசப் புன்னகையில் பிரகாசிக்க ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

''நான் உள்ளே வரலாமா?''

''ஓ, பேஷா!''

அவர் உள்ளே வந்ததும் கணபதி, சொல்லும் முன்பே ஒரு நாற்காலியில் அமர்ந்தார். இன்னும் நின்றுகொண்டிருந்த கணபதிக்கு ஒன்றும் புரியவில்லை. வந்திருக்கிறவர் யார், எதற்காக வந்திருக்கிறார்? இன்ஷூரன்ஸ் ஏஜெண்டா? குடும்பக் கட்டுப்பாடு அதிகாரியா? பத்திரிகை நிருபரா? அவர் வினாடி நேரத்தில் தம்முள் கேள்விகளைக் குலுக்கிப் போட்டுப் பார்த்தார். புரியவில்லை; விளங்கவில்லை.

''என் பேரு எம். தேவன்...நான் நம்ப சமூகத்தில் இருக்கிற வழக்கத்தைப் பொருட்படுத்தாமல் உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேன்...''

''சொல்லுங்கள்.''

''நான் எம். தேவன்...வந்து.....''

''நான் எஸ். கணபதி!''

''என் பையன் டாக்டர். எம்.டி. பாஸ் செய்து சொந்த கிளினிக் வைத்து 'ஓகோ' என்று பிராக்டிஸ் செய்கிறான். இதே சென்னையில்...''

எம். தேவன் நிறுத்தி நிதானமாக புன்னகையை ஓர் அலங்காரமாக வைத்து கணபதியின் பொறுமையைச் சோதித்துக்கொண்டே பேசினார்.

''நான் என் வாழ்க்கையில் முக்கியமான காலத்தை அயல் நாடுகளில் கழித்துவிட்டேன். கல்கத்தாவிலே எனக்கு ஒரு தொழிற்சாலை இருக்கிறது. கடுகு எண்ணெயிலிருந்து ஒரு புதுவிதமான மருந்து தயாராகிறது. இதைத் தவிர தொழில் இலாகா எனக்கு ஒரு யூனிட் சமீப காலத்தில் கொடுத்திருக்கிறது, ரேடியோ தயாரிப்புக்காக.''

கணபதியின் உள்ளத்தில் வெறுப்பின் விதை முளைவிடலாயிற்று.

''நான் 'போர்' அடிக்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். பரவாயில்லை. நீங்கள் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்...என்ன சொன்னேன்...ஆமாம்

தொழில் யூனிட்...இரண்டுமாகச் சேர்ந்து ஆறு லட்சம் பெறும்...இதைத் தவிர, பணம், நகை தங்கக் கட்டிகள்... ஒரே மனைவி...ஒரே பையன். அவன் ஒரு டாக்டர். எம்.டி. படிச்சிருக்கான். சொந்தக் கிளினிக்... இந்தப் பிள்ளை எதைக் கேட்டாலும் நான் வாங்கிக் கொடுக்கத் தயங்கவே மாட்டேன். அவன் சந்தோஷம்தான் என் சந்தோஷம், மனைவியின் மகிழ்ச்சியும்கூட. என்ன சொல்கிறீர்கள்?''

''ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.''

''அப்படியானால் சரி. என் பிள்ளைக்கு வயது இருபத்தேழு. டாக்டர். எம்.டி. படித்தவன் பத்து நாட்களுக்கு முன்னாலே பெங்களூர் போனான். ஏதோ மாநாடு. டயாபெடிஸ்பத்தி விவாதம். அப்போ முதல் வகுப்பு புக்கிங் ரூமுக்குப் போயிருந்தான். என்கொயரில் ஒரு பெண் சாந்தமான முகத்தோடு பழைமை தோய்ந்த பெண்மையோடு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகமும், அவளுடைய பேச்சிலே இருந்த பண்பும் அடக்கமும் அவனை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. பெங்களூருக்கு ரயில் ஏறுவதற்கு முன்னாலேயே இந்த சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே ஒரு தந்தி கொடுத்தான். என்னால் உடனே விமானம் ஏறி வர முடியவில்லை. முந்தாநாள் போயிங்கில் வந்தேன்...''

''அந்தப் பெண் பெயர் மங்களா. என்னுடைய பெண்' இதைச் சொல்லுவதற்குத்தானே இத்தனை நேரம் பேசினீர்கள்?''

கணபதியின் வார்த்தைகளில் வெடித்த வெறுப்பை ஒரு சிரிப்பால் ஒதுக்கிய எம். தேவன், ''ஆமாம்...பிள்ளை வீட்டுக்காரன் பெண் கேட்டு வர்றது சம்பிரதாயம் இல்லைதான்...இப்போதே சொல்லிவிடறேன். எல்லாம் என் செலவு ஆபட்ஸ்பரியில் நடக்கும். ஒரு வைர நெக்லஸ், வைர வளையல்கள், வைரத் தோடு...'' என்றார்.

''மன்னிக்கணும் மிஸ்டர் தேவன்! நான் ஒரு சாதாரண ரயில்வே அதிகாரிதான். ஆனாலும் கொஞ்சம் தன்மானம்

உள்ளவன். நான் பிறத்தியாருடைய பணத்திலோ, ஆடம்பரத்திலோ மூளையைப் பறிகொடுக்கிறவன் இல்லை.''

''அப்போ எளிமையா நீங்கள் கல்யாணத்தை நடத்துங்கள். நான் ரிஸப்ஷனைப் பெரிசா நடத்துகிறேன்.''

கணபதி சிரித்தார்.

''உங்களுடைய தீர்மானத்துக்கு நான் சம்மதம் கொடுத்த மாதிரியே பேசிவிட்டீர்களே? மிஸ்டர் எம். தேவன் மன்னிக்கணும். என் பெண்ணுக்கும் உங்கள் பிள்ளைக்கும் கல்யாணம் நடக்காது...''

''ஏன் ஸார்...ஏன்?''

''எனக்கு இந்தச் சம்பந்தம் கட்டோடு பிடிக்கல்லே!''

''ஸார்! நீங்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுகிறீர்கள்.''

''அது என் சுபாவம்...எனக்கு ஆபீஸுக்கு நாழியாகிறது.''

''என் பையனுக்கு உங்க பெண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு!''

''ஆனால் உங்க பையனை எனக்குப் பிடிக்கலையே!''

''மங்களாவிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிடுங்கள். என் பிள்ளை கேட்டு நான் எதையும் கொடுக்காமல் இருந்தது இல்லை...''

''ஸார்! மிஸ்டர் எம். தேவன், உங்களுக்கு நிறையத் தொழிற்சாலைகளும் பணமும், தங்கக் கட்டிகளும் இருக்கலாம். ஆனால் இன்னும் விவேகம் வரவில்லை...பக்குவம் வரவில்லை...நீங்கள் போகலாம். மன்னிச்சுடுங்கோ!''

எம். தேவன் எழுந்தார்.

புன்முறுவல் பூக்க நின்றார்.

''மிஸ்டர் கணபதி! உங்களுக்கு இதனால் ஏற்படுகிற நஷ்டத்தை இன்னும் நீங்க தெரிஞ்சுக்கல்லே!''

அடுத்த வினாடி அவர் வெளியேறினார்.

* * *

''அப்பா அவர் போய்விட்டாரா?'' என்று கேட்டுக் கொண்டே மங்களா பிரவேசித்தாள். ரேணுகா பின் தொடர்ந்தாள்.

''ஒரு வழியா அனுப்பினேன். பெரிய சவடால் பேர் வழி!''

''எம். தேவன், என் பையன் டாக்டர், எம். டி., கிளினிக்...என்று நூறு தரம் ஒப்பிச்சிருக்குமே!'' என்றாள் மங்களா.

''உனக்குத் தெரியுமா?''

''நேத்து வந்தது, என்கொயரியில் என் பிராணனை வாங்கியது.''

''ஏன் முன்னாலேயே சொல்லலை?''

''என்னத்தைச் சொல்றது! கிறுக்கு?''

ரேணுகா இடைமறித்தாள்.

''உண்மையாகவே அந்த டாக்டர் நல்லவனாயிருக்கலாம். உன்னைப் பிடித்திருக்கலாம். அப்பா மூலமாக உன் அப்பாவைச் சந்தித்து, தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதுதான் நியாயமான, தர்மமான முறை என்று எண்ணியிருக்கலாம்... ஏன் அவசரப்பட்டு அனுப்பிவிட்டீர்கள்?''

''என் அப்பாவுக்கே எடுத்த எடுப்பில் பிடிக்கவில்லை.''

''யார் வந்திருந்தா? எது பிடிக்கவில்லை...? யாருக்குப் பிடிக்கவில்லை?''

சங்கரி கேட்டுக்கொண்டே வந்தாள். ரேணுகா விவரமாகச் சொன்னாள்.

''எவ்வளவு பெரிய பணக்காரனாக இருந்தால் என்ன? மங்களாவுக்குத்தான் ஏற்கனவே ஒருத்தன் பிறந்தாச்சே!'' என்றாள் அவள்.

''யார் மாமி அது...? ஏண்டீ மங்களா என்னிடம் சொல்லவேயில்லை?'' என்று கேட்டாள் ரேணுகா.

''இப்போ அம்மாவே சொல்லுவாள். கேட்டுக்கொள்.''

''என் அண்ணா பிள்ளை.''

''ஆனால் அவனைப் பார்த்து ஒரு மாமாங்கத்துக்கு மேலே ஆயிடுத்து. வீட்டை விட்டு ஓடிப்போனவன். பகவானுக்குக்கூட அவனுடைய விலாசம் தெரியாது'' என்றார் கணபதி.

''ஏண்டீ அட்ரெஸ் தெரியாதவனா?'' என்று ரேணுகா கேட்டாள்.

''என் அம்மாவுக்கு நான் கன்னியாகுமரி மாதிரி இருக்கணும்னு ஆசை. ஏம்மா ஏதாவது தெய்வத்திடம் வேறு வேண்டிக் கொண்டிருக்காயா?''

''ஏண்டீ, கிண்டலாவா பேசுகிறீர்கள், நீயும் உன் அப்பாவும்? என் அண்ணா பிள்ளைக்கு என்ன குறைச்சல்?''

''உன் அண்ணாவுக்குப் பிள்ளையா அவதாரம் செய்தானே, அதுதான் குறைச்சல்!'' என்றார் கணபதி.

''மாமி உங்களுக்கு மாப்பிள்ளையை நானே தேர்ந்தெடுத்துவிட்டேன். ரயில்வேயில் பெரிய அதிகாரி ஆயிரத்துக்கும் மேலே சம்பளம். இந்த சென்ட்ரல் ஸ்டேஷனில் தான் இருக்கிறான்'' என்றாள் ரேணுகா.

''கேதாரம் நன்னாத்தான் இருக்கான். நல்ல பிள்ளை மாதிரிதான் தோணறது. ஆனாலும் நான் என் அண்ணாவுக்கு, அவன் சாகறப்போ கொடுத்த வாக்கை மீற மாட்டேன்'' என்றாள் சங்கரி.

கணபதிக்கு ஒன்றும் புரியவில்லை: ரேணுகா என்ன சொல்கிறாள்? கேதாரம் மாப்பிள்ளையா?

''என்ன மங்களா? ரேணுகா என்ன சொல்கிறாள்...?'' மங்களா மென்று விழுங்கினாள்:

''வாடி போகலாம், உன் அப்பாவுக்கு ஆபீஸ் போக நேரமாயிடுத்து...மாமா! அதிக செலவு இல்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்... மாமி, மங்களா கன்னியாகுமரியா யிருக்கிறதைவிட அவளுடைய மாமா பிள்ளை, பிள்ளை யாரா இருக்கிறது நல்லதுன்னு எனக்குத் தோன்றது. ரொம்பர் பேர் சாகிறதுக்கு முன்னாலே இப்படி ஏதாவது பேத்துவார்கள். நிதான புத்தியோடே பேசினார் உங்க அண்ணா என்று நீங்க நினைச்சு அங்க லாய்க்காதீர்கள்...வாடி, நேரமாயிடுத்து.''

''அட ஈசுவரா! இந்தக் காலத்துப் பெண்களை எப்படிச் சமாளிக்கிறது?''

சங்கரி நொந்துகொண்டாள்.

கணபதிக்குத் தலைசுற்றியது. ரேணுகா அப்படி வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுகிறாள் என்றால் என்ன அர்த்தம்? கேதாரமும் மங்களாவும் ஒருவரையொருவர் விரும்புகிறார்கள் என்று அர்த்தமா? இந்தக் காரணத்தினால்தான் விருந்துக்கு மங்களா வரவில்லையா? டிவிஷனல் என்ஜினீயர் அவருக்கு மாப்பிள்ளையா? இது எப்படிச் சாத்தியமாகும்? எம். தேவனுடைய பிள்ளையைப் போலத்தானா கேதாரமும்? ஆனால் மங்களா பேசமுடியாமல் தவித்தாளே? பிடிக்கவில்லை என்றால் நாத்தெறிக்கப் பேசுகிற மங்களா ஏன் மௌனமாக இருந்தாள்?

கணபதி குழம்பிப் போனார்.

''ஏன் பரப்பிரம்மம் மாதிரி நிற்கிறீர்கள்? என் அண்ணா பிள்ளையைத் தேடறதில் இப்போதிருந்தே ஜரூராக இருங்கள்... அவனைக் கண்டுபிடிச்சாகணும்!'' என்றாள் சங்கரி.

கணபதி மௌனமாக வெளியேறினார்.

"மாமா! இனிமேல் என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!" என்று கேதாரம் இரைந்தான்.

"என்னடா தொந்தரவு என்கிறே...? அபீதத்தைத் தான் வேண்டாம்னு சொல்லி, என் மானத்தை வாங்கிட்டே. சரி, ஒழிந்து போறது. இன்னிக்கு ஏன் அந்தக் கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணை வேண்டாம்னு சொல்கிறாய்? என்று ஜம்புநாதன் சீறினார்.

"எனக்கு இஷ்டம் இல்லை."

"பின் என்னதான் உன் இஷ்டம்?"

"என் கல்யாணத்தைப்பற்றி நானே ஒரு முடிவுசெய்து கொள்ளுகிறேன்."

"நீயே முடிவு செய்துகொள்கிறாயா? அல்லது முடிவு செய்தாகிவிட்டதா?"

"எப்படி வேணுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்."

"டேய்! உன் படிப்புக்கு நான் எத்தனை செலவு செய்தேன் தெரியுமா?...பதினாலாயிரம் ரூபாய்டா, பதினாலாயிரம். நான் ரெண்டு பெண்களைப் பெத்து வச்சிருக்கேன். ரெண்டு பெண்களடா, ரெண்டு பெண்கள்! மலை மலையா நிக்கறது."

"அவர்களுக்கு நான் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன் மாமா!"

"செய்வேடா, செய்வே. நீ உனக்குத்தான் பார்த்துப்பே. என் பெண்களைச் செலவில்லாமல் கல்யாணம் செய்துக்க வருவான்கள்னு உன் நினைப்பா? மாங்கல்யத்துக்குக்கூட என்கிட்டே பணம் கிடையாது..."

"அப்போ, நான் ஒரு பெரிய இடத்தில் நீங்கள் சொல்கிற இடத்தில் கல்யாணம் செய்துகொண்டால், நீங்க அதிலே கிடைக்கிற வரதட்சிணை பணத்தில் உங்க பெண்கள் கல்யாணத்தை நடத்திவிடலாம்னு திட்டம் போட்டிருக்கிறீர்கள்! இல்லையா?"

"ஏண்டா, இதை நான் அப்பட்டமா சொல்லியா நீ தெரிஞ்சுக்கணும்? உன் படிப்புக்கு நான் செலவழிக்கலேன்னா, அந்தப் பதினாலாயிரம் வட்டியும் குட்டியுமாகப் போட்டு இருபத்தையாயிரமா ஆகியிருக்குமே...? இதை யோசனை பண்ணிப் பார்த்தாயா?"

"இப்போ என்கிட்டே அவ்வளவு பணம் இல்லை, மாமா. ஆனால் ஏதாவது கடன் கிடன் வாங்கி, ஒரு பெண் கல்யாணத்தை நடத்திவிடலாம்."

"நோ... நோ...!"

ஜம்புநாதன் கத்தினார்.

அதே சமயத்தில் அவசரம் அவசரமாக மணி நுழைந்தான்.

"என்ன ஸார்! பெண் பார்க்க மருமானைக் கூட்டிக் கொண்டு போக வந்திருக்கிறீர்களா? சொல்லேண்டா கேதாரம், சொல்லேன்."

"என்னடா சொல்லப் போறே?"

"அவன் சொல்லமாட்டான்...ஸார் நான் சொல்றேன். மங்களா, மங்களான்னு ஒரு பெண் இருக்கா—எஸ்.எஸ். கணபதியின் பெண்..... இன்னமே சொல்லேண்டா, கேதாரம்."

"கணபதியாடா? பதினோரு குழந்தைகளைப் பெத்தவன் தன் பெண்ணுக்கு என்னடா செய்வான்? அவன் வாங்குகிற சம்பளம் அரிசி வாங்கறதுக்கே போறாது. பெண் கையிலே கண்ணாடி வளையல்தான் போடுவான்."

"அது போறும்னு கேதாரம் தீர்மானம் பண்ணினால் நீங்க என்ன ஸார் செய்ய முடியும்? ஏண்டா கேதாரம் நான் சொல்றது சரிதானே?"

"நான் இப்போதே அந்த எஸ்.எஸ்.ஸைப் போய்ப் பார்க்கிறேன். அவன் இதற்குத்தானா உன்னைக் கதா காலட்சேபத்துக்கு அழைத்துக்கொண்டு போனான்! தன்

வீட்டிலேயே உனக்கு விருந்து வைத்தான்? சீப்பா ஒரு மாப் பிள்ளையைப் பிடிக்கிறானோ?'' ஜம்புநாதன் கறுவினார்.

''ஸார்! இன்னமே நீங்கள் என்ன கத்தியும் புண்ணிய மில்லை. நீங்கள் பெரியவர், அநுபவஸ்தர்... முடிஞ்சா நீங்களே கணபதியிடம் இதமாகப் பேசி எவ்வளவு கறக்க முடியுமோ அவ்வளவும் கறந்துவிடுங்கள்'' என்றான் மணி.

ஜம்புநாதன் பற்களை நறநறவென்று கடித்தார். கணபதி கண் முன்னால் தோன்றினான் இந்தக் கணபதி இன்னும் சில வருடங்களில் ரிடையராகி விடுவான். சம்பளத்திலேயே குடும்பத்தை நடத்த முடியாத அவன் இன்னும் சில வருடங்களில் மனைவியுடன் குத்தாலம் ஆசிரமத்துக்கே வந்தாலும் வருவான். இப்போர்ப்பட்ட வனுடைய பெண்ணா அவருடைய தங்கை பிள்ளையின் மனைவி!

கேதாரமும் மணியும் மௌனமாக நின்றுகொண்டிருந் தார்கள். ஜம்புநாதன் தமக்குள்ளேயே முணுமுணுப்பதை யும், கண்களை மூடிக்கொண்டு யோசிப்பதையும் பார்த்து ரசித்தார்கள். திடீரென்று ஜம்புநாதன் கண் திறந்து எழுந்தார். கைப் பையை எடுத்துக்கொண்டார்.

''டேய், கேதாரம்! நீ இன்னிக்குப் பெரிய அதிகாரி யாக இருக்கலாம். பெரிய மரமாக வளர்ந்திருக்கலாம். ஆனால் அடிநாளிலிருந்து அதுக்குத் தண்ணீர் ஊற்றினவன் நான். இதை நீ மறக்கக்கூடாதுடா, மறக்கக்கூடாது. இனிமேல் நீ எந்தச் சனியன் கழுத்திலே தாலி கட்டினாலும் நான் ஏன்னு கேட்கப் போறதில்லை... ஆனால், ஒண்ணு. நீ மணையிலே உட்கார்றதுக்கு முன்னாடி என்னோட ரெண்டு பெண் கல்யாணத்துக்குப் பதினைஞ்சாயிரத்தை நோட்டா என் காலடியிலே வைக்கணும். உனக்கு நான் செலவு செய்த பணம். நீ பட்டிருக்கிற கடன். அதைத் தீர்க்காமல் நீ எப்படி அந்தப் பெண்ணின் கழுத்திலே தாலி கட்டறேன்னு நான் பார்த்துடறேன்.''

ஆத்திரத்தோடும் ஆங்காரத்தோடும் வெளிவந்த வார்த்தைகளைக் கேட்டுக் கேதாரம் ஒருகணம் பயந்தான்.

ஆனால் மணி தனக்கே உரித்தான துடுக்குடன், ''கேதாரம்! கவலைப்படாதே... நீ மணையில் உட்கார வேண்டாம்... ரிஜிஸ்டிரார் ஆபீஸில் நாற்காலியில் உட்காரு.....'' என்றான்.

''ஏண்டா, கேலியா பண்ணறே நீ... கேலி! நீதாண்டா இதுக்கெல்லாம் காரணம்..... நீதான் காரணம்...''

''எப்படி சார் தெரிந்தது உங்களுக்கு?''

ஜம்புநாதன் அடுத்த விநாடி விர்ரென்று வெளியேறி னார்.

''இருடா வர்றேன்.''

மணி பின்னாலேயே பின்தொடர்ந்தான். ஸார்! கொஞ்சம் பதற்றப்படாமல் இருக்கிறீர்களா?''

''வழியை விடுடா, பிரம்மஹத்தி!''

''நான் ஒரு வழி சொல்றேன்.''

''உன்னை நான் அறைஞ்சுடுவேன்.''

''உங்க கைதான் வலிக்கும், நீங்க கேட்டது எவ்வளவு? பதினைந்தாயிரம். உங்களுக்குக் கிடைக்கும்...''

''பெரிய வள்ளல்! போடா உன் வழியைப் பார்த்துக் கொண்டு!''

''இப்போ எங்கே போகிறீர்கள் சார்? கணபதியிடமா? கிராம்ப்டன் என்ஜினீயரிடமா? நீங்கள் என்ன வியாபாரம் சார் பண்ணுகிறீர்கள்?... கேதாரம் படிச்சது முழுக்க முழுக்க ஸ்காலர்ஷிப்பில். நீங்க பைசா செலவழிக்கவில்லை. உங்க வீட்டு மாமி சுடற தோசையை அவன் கண்ணிலே காட்டினதேயில்லை விவகாரம்னு வந்தால் நான் உங் களுக்கு மேலே பேசுவேன்... உங்க குத்தாலம் ஆசிரமத்திலே என்ன நடக்கிறது? கிடைக்கிற நன்கொடையெல்லாம் எப்படிக் கணக்கிலே வராமல் தனியா ஒதுங்கி ஒளிஞ்சு

நிக்கிறதுன்னு எனக்கு எல்லாம் தெரியும். ஆசிரமம்னு வந்தால் அது பிரைவேட் இன்ஸ்டிடியூஷனாயிருந்தாலும் கேள்வி கேட்க நாலுபேர் வருவா. நானே நாலுபேரைக் கூட்டிக்கொண்டு வந்து நிற்பேன்... இப்ப சொல்லுங்கோ... எத்தனை வேணும்? பதினைந்தாயிரம்... சரி...''

''டேய் மணி!''

''நான் இன்னும் உரக்கக் கத்துவேன். கத்தட்டுமா?''

''வழியை விடுடா.''

''அவன் தாலியைக் கட்டறபோது குறுக்கே நிற்பீர்களா?'' மணி சிரித்தான்.

ஜம்புநாதன் மேலே நடந்தார். இந்தப் பயல் மிரட்டுகிறானா, அல்லது உண்மையிலே குத்தாலம் ஆசிரமத்தைப் பற்றி எல்லா உண்மைகளும் தெரியுமா? அடுத்த வினாடியே புதுத் தெம்பு பிறந்தது: பணத்தை அள்ளிக் கொடுத்தவர்களே இதுவரை வாய் திறந்து எதையும் கேட்கவில்லை. இந்தப் பொடிப்பயலால் என்ன செய்ய முடியும்?

மணி நேரே என்கொயரிக்குச் சென்றான்: ''உன் சிநேகிதி எங்கே?''

''உனக்கு எப்படித் தெரியும் ரேணுகாவைப்பற்றி?''

''இன்னிக்குக் கார்த்தாலே பம்பாய் மெயிலில் வந்தாள். நீயும் கேதாரமும் காத்துக்கொண்டிருந்தீர்கள்: முத்து பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடந்தான்.''

''முத்து அவளுக்குக் கனின்.''

''பாவம்.''

''யார் பாவம்?''

''உன் சிநேகிதி... என்ன பேர் சொன்னே? ரேணுகா! அவள் எங்கே?''

''மாம்பலம் போயிருக்கிறாள்.''

''நல்லது. எட்மண்டுக்கு வேலை கிடைக்குமா?''

''நீ முந்திக்கொண்டு விட்டாய். என்னிடம் சொல்லியிருக்கலாம்.''

''சொல்லியிருந்தால் உனக்கு ஒரு சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்கும்!''

''என்ன உளர்றே?''

''எட்மண்டை முகாந்திரமாக வைத்துக்கொண்டு...''

''நான்சென்ஸ்...''

''இப்போ எல்லாம் 'சென்ஸா' ஆயிடுத்து... இன்னிக்குக் கேதாரம் கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணைப் பார்க்கப் போகவில்லை...''

''எனக்கு அக்கறையில்லே!''

''மிஸ் மங்களா! இனி நீ வேஷத்தைக் கலைக்கலாம்... உனக்கு தெரிஞ்சதைவிட எனக்கு அதிகம் தெரியும்.''

''தெரிஞ்சா நீ உனக்குள்ளேயே வைத்துக்கொள்... நாளைக்கு விருந்து இருக்கு... வராமலிருந்து விடாதே...''

''வரத்தான் போறேன். ஆனால் அப்பாகிட்டே சொல்லி எப்படியாவது ஒரு பதினைந்தாயிரம் ரூபாய் ஏற்பாடு செய்யச் சொல்லு. இல்லாவிட்டால் கேதாரத்தின் மாமா ஜம்புநாதன் அவனை இலேசில் விடமாட்டார்! அவனுடைய கல்யாணம்... மேலே எனக்குச் சொல்லப் பிடிக்கவில்லை.''

ஒன்றும் புரியாமல் மங்களா விழிக்க, மணி விடை பெற்றுக்கொள்ளாமலே திரும்பி நடந்தான்.

22

''யுத்தம் முடிஞ்சுபோச்சு தம்பி: வீட்டுக்கு வாங்க'' கவிதையில் ஒரு பகுதி இருபத்தாறு ஆண்டுகள் தாமதமாகத் திரும்பி வந்தால் என்ன விபரீதங்களோ?

போர்ட்டர் சீனனை இரண்டு நாட்களாகக் காணோம். காலையில் கொத்தமல்லி, பச்சை மிளகாய் வாங்கிக் கொடுத்துவிட்டு, ஒன்பது மணிக்கு சுஜா, ரவி, கல்யாணத்தைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய்விட்டு, மத்தியானம் சீயக்காயோ அரிசியோ, மிளகாயோ மில்லில் அரைத்து வந்தபின், சங்கரி கொடுக்கும் காப்பியையோ தேநீரையோ குடித்துவிட்டுச் செல்லும் சீனனை இரண்டு நாட்களாகக் காணோம். நெற்றி நிறைய விபூதி துலங்க அதன் நடுவே எட்டணா வட்டத்துக்குக் குங்குமம் பளிச்சிட, கொண்டைமீசையைத் தடவிக்கொண்டே தான் தன் வாலிப வயதில் கொள்ளிடத்தில் குதித்துக் கும்மாளம் அடித்த கதையைக் குழந்தைகளுக்குச் சொல்லி அவர்களுடைய வியப்பை ரசித்து, பாராட்டுதல்களைப் பெற்று சிரித்து மகிழும் போர்ட்டர் சீனனை இரண்டு நாட்களாகக் காணோம்.

சங்கரிக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. சீனனுக்கு உடம்புக்கு ஏதும் சமீப காலத்தில் வந்ததில்லை. போன வருஷம் இரண்டு நாட்கள் ஜுரத்தில் விழுந்தபோது அவனுடைய இல்லத்தரசி மரகதம் அவனுக்குப் பதிலாக வந்து அவன் செய்ய வேண்டியதையெல்லாம் (கொள்ளிடம் கும்மாளக் கதை மட்டுமில்லை) செய்துவிட்டுப் போனாள், அந்த மரகதத்தையும் இப்போது காணோம்.

செவ்வாய்க்கிழமை ஆறே முக்கால் மணிக்கு வந்து போன சீனன் இன்று புதன்கிழமை ராத்திரி எட்டு மணி வரையில் காணாமல் போயிருக்கிறானே? ஏன் எங்கே போனான்? சங்கரிக்குப் பச்சைமிளகாய் கொத்தமல்லி பிரச்னையும் மாவுமில் பிரச்னையும் பெரிய பிரச்னையாகப் போயின. ஒரு பைசாகூடத் திருடாமல், ஒரு பிடி மாவுகூட எடுத்துக்கொள்ளாமல் கர்ம சிரத்தையுடன் யார் சீனனைப் போலச் செய்ய இருக்கிறார்கள்? கணவரிடம் சொன்னால், 'வீட்டில் இருக்கிற ஒன்பது குழந்தைகளில் யாரையாவது ஒருவரை கடைக்கு அனுப்பு' என்பார்.

ஐந்து மணியிலிருந்து ஏழரை மணிவரை, ரவி, பாபு, கல்யாணம் எல்லாரும் பதினொரு பிளாட்பாரங்களையும் சல்லடை போட்டுச் சலித்தார்கள். எத்தனையோ போர்ட்டர்களிடம் விசாரித்தார்கள், ஊஹூம் யாருக்கும் தெரியவில்லை. அவனையும் காணவில்லை.

இரவு எட்டு மணிக்குக் கணவர் சாப்பிட உட்கார்ந்த போது சங்கரி, சீனன் பிரச்னையை அவரிடம் சொன்னாள்.

''எங்கேயாவது எதையாவது குடிச்சுட்டு வீட்டிலே குப்புறப் படுத்துக்கொண்டிருப்பான் எல்லாம் வருவான். நீ வாங்குகிற பதினெட்டுப் பைசா சாமானுக்கு ஓர் ஆள் வேறே வேணுமாக்கும்!'' என்றார் கணபதி.

''அவனைக் காணோமே!''

''உன் அண்ணா பிள்ளையையும்தான் காணோம்... அது சரி, மங்களா என்ன சொல்றாள்...? உன்கிட்டே ஏதாவது, அம்மாவிடம் சொல்லக்கூடிய விஷயமாகச் சொன்னாளா?''

''எதைப்பத்தி? அம்மாவிடம் என்னிக்கு அவள் மதிப்பைக் கொடுத்து எதைச் சொன்னாள்?''

''கேதாரம் புதுசா வந்து முளைச்சிருக்கானே!''

''முளையிலேயே கிள்ளிவிடுங்கள்!''

''அவனுக்கு என்ன குறைச்சல்?''

''ஒரு குறைச்சலும் இல்லே. ஆனால் அவன் என் அண்ணா பிள்ளையில்லை!''

''சங்கரி!''

''என்ன?''

''உனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்காததுதான் பாக்கி... சினிமாவிலேதான் ஓடிப்போன கதாநாயகன், தக்க சமயத்திலே வந்து கதாநாயகியின் கழுத்திலே தாலியைக் கட்டுவான். இது சினிமா இல்லை. உன்னுடைய அண்ணா பிள்ளை கதாநாயகனும் இல்லை.''

''கதாநாயகனாக ஆக்கணும்னு நான் சொல்றேன்.''

''நீ சொல்லிண்டிரு... உன் பெண் பம்பாய்க்குக் குடித்தனம் வைக்கப் போய்விடுவாள்.''

''அவள் போறதை நான் பார்த்துவிடறேன்...''

அவள் பேசி முடிக்கவும் பெண் ராதா அங்கே வரவும் சரியாக இருந்தது.

''என்னடீ, வேணும்?''

''உன்கிட்டே ஒண்ணும் வேண்டாம், அம்மா!... அப்பா, காக்கிப் பையைக் கையிலே மாட்டிண்டு ஒரு மாமா வந்திருக்கார். அவர் குண்டா இருக்கார்.''

''ஜம்புநாதனாக இருக்கும்'' என்றார் கணபதி, மோருஞ் சாதத்தின் கடைசி வாயைப் போட்டுக்கொண்டு.

''இந்த வேளையிலே என்ன வேலை?'' என்று முணுமுணுத்தாள் சங்கரி.

''நான் போய்க் கேட்கட்டுமா?''

''நீ பேசாமல் இருடீ...'' என்று பெண்ணை அடக்கின சங்கரி, ''நாளைக்குக் கார்த்தாலே எப்படியாவது சீனைக் கண்டுபிடிச்சு அனுப்புங்கோ'' என்றாள்.

''சரி... அதற்கப்புறம் உன் அண்ணா பிள்ளையைத் தேடப்போறேன்.''

கணபதி துவாலையால் கையைத் துடைத்துக் கொண்டே வெளி அறைக்கு வந்தார். ஜம்புநாதனை நினைக்கவே அலுப்பாக இருந்தது. ஆனால் அவர் கேதாரத்தின் மாமா. இப்போது அவருக்கு ஒரு முக்கியத்துவம் பிறந்திருக்கிறது. அலட்சியம் செய்யமுடியாத நிலை.

''வாருங்கள் ஜம்புநாதன்.''

''நான் அப்போதே வந்தாச்சு!''— பிரம்பு நாற்காலியில் விறைப்பாக உட்கார்ந்திருந்த ஜம்புநாதன் அலட்சியமாகப் பேசினார்.

''அப்படியா? இப்பத்தான் பெண் ராதா வந்து சொன்னாள்... நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.''

''திருப்தியாகச் சாப்பிட்டீர்களா கணபதி?''

கணபதிக்கு அவருடைய பேச்சின் போக்கும், அலட்சியத் தோரணையும் ஆத்திரத்தைவிட வியப்பை அளித்தன.

''என்ன ஜம்புநாதன், ஒருமாதிரியா இருக்கிறீர்கள்...? ஏன், என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''ஒண்ணும் தெரியாதவர்போல் என்னிடமே கேட்கிறீர்களே?''

''ஆமாம். உங்களிடம்தான் கேட்கிறேன்—ஒண்ணும் தெரியாததால்தான் கேட்கிறேன்... இதே சமயத்தில் இன்னொரு விஷயத்தையும் சொல்லிவிடறேன். என் வீட்டுக்குள்ளே வந்து, என் முன்னாடி கால்மேல் கால் போட்டு உட்கார்ந்து, என்னிடமே அலட்சியமாகப் பேசுகிற அளவுக்கு நீங்கள் பெரிய மனுஷர் இல்லை! இதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இனிமேல் பேச ஆரம்பியுங்கள்.''

''என் மருமான் கேதாரம் உங்க பெண் மங்களாவைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறானா?''

''யார் சொன்னா?''

''யார் சொன்னால் என்ன?''

''அது ரொம்ப முக்கியம்; நீங்க ஒண்ணாம் நம்பர் பிளாட்பாரத்தில் மத்தியானம் பையைத் தலைக்கு வைச்சுண்டு படுத்துக் கொண்டிருக்கும்போது உங்க காதிலே விழுந்ததா? யார் சொன்னா?''

''யாரோ சொன்னா!''

''உங்க மருமகனே சொன்னானா?'' கணபதிக்கு ஆத்திரம் பிறக்க ஆரம்பித்தது. காலையில் எம். தேவன்... இரவில் இவரா...?''

''அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்...''

''இதெல்லாம் வைத்துக்கொள்கிற விஷயம் இல்லை, ஜம்புநாதன்! வெட்டு ஒன்று துண்டு ரெண்டா எனக்குத் தெரியணும்;''

''அவனுக்கு அப்படி ஓர் ஆசை!''

''பூ! வெறும் ஆசையை ஆதாரமா வைச்சுண்டா இவ்வளவு தூரம் வந்தீர்கள்! உங்களுக்கு வயசு என்னாகிறது? இரண்டுங்கெட்டானா இருக்கிறீர்களே?''

''அவன் ஆதிசேஷன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதுன்னான்... இன்னிக்கு கிராம்ப்டன் என்ஜினீயர் பெண்ணையும் அவன் பார்க்க வரலை...''

''எனக்கு உங்க வீட்டு விவகாரம் கேட்க என் தலையில் எழுதலை. போய், ஒண்ணாம் நம்பர் பிளாட்பாரத்தில் துண்டை விரிச்சுப் படுத்துக்கொள்ளும்... கூட யாராவது துணைக்கு அழைத்துக்கொண்டால் அவர்களிடம் உங்கள் கதையைச் சொல்லி அழும்;''

''கணபதி!''

''இதோ பாரும். கத்தாதீர்கள், நான்தான் சொல்லியாச்சே. ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கிறீர்கள்?''

''என் மருமகன் போன ஞாயிற்றுக்கிழமை பம்பாயிலிருந்து வந்தபோது களங்கமில்லாமல்தான் வந்தான். நான் எதைச் செய்தாலும் சரி என்கிற பாவனையில், பெண் பார்ப்பதற்கு என்று வந்தான். பார்த்த ஒரு பெண்ணை வேண்டாம் என்றான் இன்னிக்குப் பெண்ணையே பார்க்க வரலை, இதுக்கு யார் காரணம்? ஏன் கேதாரம் இப்படி மாறினான்? யோசனை செய்யுங்கள்!''

''உங்கள் மருமகனுடைய மூளையை ஆராய்ச்சி செய்யறதைவிட எத்தனையோ முக்கிய வேலைகள் எனக்கு இருக்கு.''

''உங்க பெண்... சாட்சாத் உங்களுடைய பெண்... அவளைக் கல்யாணம் செய்துகொள்ளணும்னு அவன் தீர்மானம் செய்திருக்கிறான். அவனைப் படிக்கவைச்ச கடன் பத்தாயிரத்தை என் காலடியிலே கரன்ஸி நோட்டாகக் கொட்டினப்புறம் தாலியைக் கையில் எடுன்னு சவால் விட்டிருக்கேன்—''

''நீங்கள் என்ன சவால் விட்டால் எனக்கென்ன? உன் மருமகன் ஆசைப்பட்டால் மட்டும் போதுமா? பெண்ணைப் பெற்றவன் நான்!''

''அப்பாடி! அது போதும். எனக்கு இத்தனை நேரம் நான் பேசினதில் முறை தவறியிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். ஆத்திரத்திலே பேசியிருப்பேன்...நீங்கள் உங்கள் பெண்ணை என் மருமகனுக்குக் கொடுக்க முடியாதுன்னு சொன்னாலே போதும்!''

''என் பெண் ஆசைப்பட்டால் நீங்களோ, உங்க மூப்பாட்டனோ யார் வந்தாலும் நான் அவளை அவள் விருப்பம்போல அவள் ஆசைப்படற பிள்ளைக்குக் கொடுக்கிறதைத் தடுக்க முடியாது!''

''இதுதான் உங்களுடைய கடைசி வார்த்தையா?''

''முதல் வார்த்தையும் இதுதான். நீங்கள் போகலாம்.''

''கல்யாணம் எப்படி நடக்கிறது என்கிறதைப் பார்க்கிறேன்—''

''கெட் அவுட்.''

மங்களாவும் ரேணுகாவும் பக்கத்து அறையிலிருந்து அவர்கள் பேசினதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ரேணுகா அடிக்கடி புன்முறுவல் செய்தாள், மங்களாவைப் பார்த்து. ஆனால் மங்களாவின் முகம் வெளிறியது. கண்டிப்பாக அப்பா அவளைக் கூப்பிட்டு விசாரிப்பார். அவள் தன் மனத்தின் ரகசியத்தை அவரிடம் விண்டு சொல்லிவிட வேண்டும்.

ஜம்புநாதன் போனதும் ரேணுகா ''டீ உன் கலியாணம் பதினைந்தாயிரம் ரூபாயிலே நிற்கும்போலிருக்கு'' என்றாள்.

மங்களா தலை அசைத்தாள்.

''ஆனால் அது கேதாரத்தின் தலைவலி!''

மங்களா தலையையும் அசைக்கவில்லை. அம்மா முன் அறைக்கு வந்துவிட்டாள். பேச ஆரம்பித்துவிட்டாள். ''என்னவாம்?'' என்று சங்கரி கேட்டாள்.

''ஒன்றுமில்லை.''

''ஒன்றுமில்லாததையா ரெண்டுபேரும் அரை மணி நேரமா பேசிக்கொண்டிருந்தீர்கள்?''

''ஆமாம்.''

''என்ன விஷயம்? சொல்லுங்களேன்...''

எல்லாம் உன் பெண் சொல்லுவாள். அவளைப் போய்க் கேளு...''

''நாளைக்கு...'' சங்கரி இழுத்தாள்.

''சீனன் பற்றித்தானே?''

''நான் அதைச் சொல்ல வரவில்லை. அதைத்தான் அப்பவே சொல்லிவிட்டேனே? நாளைக்குச் சுஜாவுக்குப் பிறந்த நாள்...''

''தெரியும்.''

''ரொம்பத் தெரிஞ்சவங்களை நீங்கள் கூப்பிடுங்கள்.''

''ம்...ம்...''

''மணி விசேஷமா கேக்குக்கு ஆர்டர் பண்ணியிருக்கானாம். அதனாலே நாம் கேக் வாங்க வேண்டாம்.''

''சரி! சரி!...''

''என்ஜினும் ரயில் பெட்டிகளும் மாதிரி பெரிய கேக்''

''எத்தனை பெட்டிகள்? பதினோரு பெட்டிகளா... சங்கரி, உனக்கு இவ்வளவு வயசாகியும் சமய சந்தர்ப்பமே தெரியறதில்லை...''

''இன்னமே கத்துக்கிறேன். நீங்களே டியூஷன் சொல்லிக் கொடுங்கோ...''

சங்கரி 'விர்'ரென்று வேகமாக உள்ளே போனாள்.

அறையில் ரேணுகா, கணபதி—சங்கரி தம்பதியின் பேச்சை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தாள்.

சீனனுடைய கதை முடிந்தது.

செவ்வாய்க்கிழமை காலையில் எஸ்.எஸ்.ஸின் வீட்டுக்குச் சென்று, கொத்தமல்லி கருவேப்பிலை, பச்சை மிளகாய் வாங்கிக் கொடுத்துவிட்டுச் சென்ற அவனை ஏழாவது பிளாட்பாரத்தில் போர்ட்டர் மாணிக்கம் சந்தித்தான். சந்தித்ததோடு நிற்காமல், மரகதத்துடன் யாரோ ஒருவன் பேசிக்கொண்டிருப்பதாகவும், வீடு நிறைய பெட்டி படுக்கை, கூடைகளாக இருப்பதாகவும் கூறினான்.

சீனன் யோசித்துப் பார்த்தான். மரகதத்துக்கு உற்றாரோ, உறவினரோ யாரும் வெளியூரில் இல்லை. எல்லாம்

சிந்தாதிரிப்பேட்டை காக்ஸ்சேரி வாசிகள்தான். ஒருவேளை சீர்காழியிலிருந்து தன் பிள்ளையோ, மருமகனோ வந்திருக்கிறார்களோ?

வால்டாக்ஸ் ரோடு வழியாக விரைந்த சீனனுக்கு ஒன்றும் புரியவில்லை. வந்திருக்கிறவன் கண்டிப்பாக விருந்தாளிதான். மரகதம் பேசிக்கொண்டே யிருப்பாளே தவிர உபசரிக்கமாட்டாள். எதற்கும் ஏதாவது வாங்கிக்கொண்டு போகலாம் என்று நினைத்து அரை டஜன் வாழைப் பழமும் முப்பது பைசாவுக்கு இரண்டு 'பன்'களும் வாங்கினான்.

வீட்டை அடைந்தான்.

அந்த ஒரே அறை வீட்டினுள் நுழைந்ததும் அவனுக்கு மூச்சே நின்றுவிடும்போல இருந்தது. மாணிக்கம் சொன்னதுபோல் ஏகப்பட்ட சாமான்கள்; மூன்று பெட்டி, ஒரு ஹோல்டால், ஒரு டில்லி மோடா, ஒரு காஷ்மீர்க் கூடை, ஓர் ஆக்ரா மண் கூஜா இவை தவிர ஒரு ஹார்லிக்ஸ் அட்டைப் பெட்டி. இவ்வளவு சாமான்களுடன் யாராவது சென்ட்ரலில் ஏறினாலோ, இறங்கினாலோ, குறைந்தது நான்கு ரூபாயாவது கறந்துவிடலாம் என்று சீனன் திடீர்க் கணக்குப் போட்டு, அது தன் கைக்குக் கிடைத்துவிட்டாற்போல் சந்தோஷமும் அடைந்தான். ஆனால் கணநேரக் கற்பனை இன்பம் உடனேயே மறைந்து ஒரு புதிரைக் கிளப்பியது.

''யார் இவர்?''

அவன் தன்னுள் கேட்டுக்கொண்டே முழங்காலைப் பிடித்து உட்கார்ந்திருந்த மரகதத்தையும் அவள் எதிரே வழுக்கைத் தலையும், கண்ணாடியுமாக ஹோல்டாலின் மேல் சாய்ந்து அமர்ந்திருந்தவரையும் மாறி மாறிப் பார்த்தான். விருந்தாளியும் சீனனை ஒரு தடவை பார்த்துவிட்டு, கரப்பைப் பார்த்தவர்போல் முகத்தைச் சுளித்துக்கொண்டு மரகதம் பக்கம் திரும்பினார்.

சீனன் மௌனத்தைக் கலைப்பதா வேண்டாமா என்று தன்னுள் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே மரகதம், ''இவரு யாரு தெரியுமா உனக்கு?'' என்று கேட்டாள்.

வந்திருக்கிறவர் தன் பிள்ளையுமில்லை, மருமானுமில்லை என்ற ஏமாற்றத்தில் ''தெரியாது'' என்றான் வெறுப்புடன்.

''இவருதான் அவரு!'' என்றாள் மரகதம்.

''இவருதான் அவருன்னா எவரு?''

''அதுதான் அவரு...''

கண்ணாடிக்காரர் வாய் திறக்கவில்லை. இவளும் அவனுமாகப் பேசித் தெளியவைத்துத் தெரிந்துகொள்ளட்டும் என்று உட்கார்ந்திருந்தார், ஒரு சுருட்டையும் எடுத்து நாகரிகமாகக் கடித்துவிட்டு உதட்டில் வைத்துக் கொண்டார்.

''வத்திப் பொட்டி வேணுமா?''

மரகதத்தின் வத்திப் பெட்டியை லட்சியம் செய்யாமல் கண்ணாடிக்காரர் 'பளீர்' என்று 'டால்' அடித்த ஒரு வெள்ளி சிகரெட் லைட்டரைப் பாக்கெட்டிலிருந்து எடுத்தார்.

''யாரும்மே இது?'' என்று பொறுமை இழந்தான் சீனன்.

''அதுதான் சொன்னேன், ஒம் மூளைக்குத் தெரியலை? அவர்தான்...''

'அவர்' என்று அவள் குழைந்தபோது வார்த்தையில் அவன் கேட்டே அறியாத வெட்கத்தின் பாவத்தை உணர்ந்தபோது சீனனுக்குப் பகீர்என்றது. சொப்பனத்திலும் மரகதத்தின் கழுத்தில் தாலியைக் கட்டினவன் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் திரும்பி வருவான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

சீனனுடைய மீசை துடித்தது கண்கள் மின்னின.

''என்னாம்மே சொல்றே நீ? இந்த ஆளு ஒன் புருஷனா?''

''யோவ், ஆளு கீளுன்னு இளுக்காதே...இவர் யாருன்னு நெனைச்சே...ஒலகமெல்லாம் பார்த்தவரு இம்மாம் காலம்

வேலைமேலே ஊர் ஊராச் சுத்தி இப்பத்தான் இங்கே வர முடிஞ்சிருக்கு. ஒன்னை மாதிரி சும்மா கையை வீசிக்கிணு வந்தார்னு நெனைச்சியா? மாசா மாசம் எறநூறு ரூபா பிஞ்சன்... கையிலே ரொக்கம் இருபதாயிரம்... என்னா நெனைச்சே நீ...''

சீனன் மரகதத்தைப் பார்வையால் ஒரு வெட்டு வெட்டி விட்டு, கண்ணாடி பக்கம் திரும்பினான்:

''என்னா ஐயா, இந்தப் பொம்பிளை சொல்றது நெசமா?''

''யெஸ்...''

''யோவ் உன் இங்கிலீஷை அம்பட்டன் வாராவதியிலே போடு. நெசமா?''

''ஆமாம்.''

''நீதான் இவள் கழுத்திலே தாலியைக் கட்டினியா?''

''ஆமாம்''

''யாரு சாட்சி?''

''காக்ஸ் சேரி பூரா சாட்சி.''

சீனனுடைய மனம் ஒடிந்தது.

திடீரென்று கோபமும் பிறந்தது.

''யோவ் நான் இந்தப் பொம்பளைகூட முப்பது வருசங்களா வாழ்ந்துட்டிருக்கேன்—தெரியுமா?''

''இவளே சொன்னா!''

''அடி சிறுக்கி...''

''யோவ், சிறுக்கி, கிறுக்கின்னா பல்லு பூடும்... நீங்க சும்மா இருங்க...இவன் ஸல்பேட்டா கிராக்கி; ஸ்டேஷன்லே பொதி சுமக்கிற கழுதை...

கண்ணாடி எழுந்து நின்றார்:

''என் பெயரு கண்ணாயிரம்.''

''நீ செத்துட்டேன்னுதானே ஐயா இந்தப் பொம்பிளை நினைச்சுட்டிருந்தா ஏன் சாவலை?''

சீனனுக்கு மீண்டும் அழுகை வந்தது.

''நான் இனிமேத்தான் சாகணும்.''

''ஐயோ ராசா... அப்படியெல்லாம் சொல்லாதீங்க, ராசா!'' மரகதத்தின் கற்பு ஷட்ஜமத்தை எட்டிப் பிடித்தது.

''ரோமல் தெரியுமா? உங்களுக்கு, ரோமல்... அவன் ஜெர்மனிக்காரன். அவன் போர்வீரர்களுக்கும் எங்க போர் வீரர்களுக்கும் பெரிய சண்டை... அது நடந்து இருபத் தெட்டு வருஷங்கள் ஆகிறது. கடைசியிலே நாங்கதான் ஜயித்தோம். ஆனால் அதுக்குள்ளே நானும் இன்னும் ரொம்பப் பேரும் அந்த ராணுவக்காரர்கள் கையிலே சிக்கிக் கிட்டோம். யுத்தம் முடியறவரைக்கும் அவுங்க எங்களை விடலை. எங்களை விட்டப்போ யுத்தம் முடிஞ்சிருந்தது; அப்புறம் பார்த்தேன்... நான் கண்டிப்பா செத்துப் போயாச்சுன்னுதான் எங்க ராணுவத்தார் நினைச்சுண் டிருந்தாங்க; லண்டனுக்குப் போக வேண்டிய நானு, கெய்ரோவுக்கு வந்து சேர்ந்தேன். செத்துப்போனாரே நாஸர் அவர் ஊரு. ராணுவப் பணத்திலே சின்ன வியாபாரமா ஆரம்பிச்சேன். என்ன வியாபாரம்னு கேக் காதே... மானக்கேடு. சேமியா பாயசம்கூடப் பண்ணி வித்தேன். ('இதிலே என்னாங்க அவமானம்?' என்றாள் மரகதம்.) இப்படி ரெண்டு வருஷங்கள் ஓடித்து; அப்புறம் கெய்ரோவிலிருந்து தங்கனிகா போனேன். வேலைக்கு நிறையப் பேர் வேணும்னு சொன்னாங்க. நானும் போனேன்; போலீஸ் கான்ஸ்டபிளாகச் சேர்ந்தேன்; அடிக்கடி தெருச்சண்டை நடக்கும். பாட்டில் சண்டை நடக்கும். நான் கொஞ்சம் கெட்டிக்காரன். ('பின்னே இல்லாமே!' என்று பிரலாபித்தாள் மரகதம்.) பதினைஞ்சு வருஷங்களிலே இன்ஸ்பெக்டர் ஆயிட்டேன். தங்கனிகா ஜான்ஸிபார் ராஜ்யத்தோடே ஒட்டிக்கிச்சு, டான்ஸானி

யான்னு பேரையும் வைச்சாச்சு... இந்தியர்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா அனுப்ப ஆரம்பிச்சாங்க. எப்படியோ நான் தப்பிச்சுக்கிட்டே வந்தேன் ஆனால் அம்பத்தஞ்சு வயசு ஆனதும், முடியலே... ரிடையராயிட்டேன்... திடீர்னு மகாத்மா காந்தி நேரு ஞாபகமெல்லாம் வந்துச்சு... ('இவுங்களெல்லாம் யாரு, ராசா?—மரகதம் கேட்டாள்) அவுங்கதான் போயாச்சு... சுதந்திரம் வாங்கிக் கொடுத்த புண்ணியவான்கள்... அவர்களுக்கு அப்புறம் தேசம் எப்படியிருக்குன்னு பார்க்கணும்னு ஆசை தோணித்து. ('கல்லும் களிமண்ணுமாய் ரூபாய்க்குப் படி கிடைக்குது'—மரகதம்.) ஏழெட்டு நாட்கள் முன்னாலேயே பம்பாய் வந்தேன். முந்தாநாள் பட்டணம் வந்தேன். ('காக்ஸ்சேரியெல்லாம் தேடிவிட்டுப் பாவம் கண்டுபிடிச்சு வந்தாரு.'—மரகதம்.) பொஞ்சாதியை முப்பது வருஷங்களா மறந்தது தப்புன்னு தோணிச்சு. ('அதை நினைச்சுப் பொலம்பாதீங்க. நான் எப்பவும் ஒங்க நினைவாகத்தான் இருந்தேன். இந்த ஆளைக் கேட்டுப் பாருங்க.'— மரகதம் முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு இடது கையால் சீனனைச் சுட்டிக் காட்டினாள்.) நான் இவகிட்டே இப்போ வந்தது தப்புன்னு உங்களுக்குத் தோணித்துன்னா, சொல்லிடுங்க. நான் இப்பவே போயிடறேன்.''

கண்ணாயிரம் தம் கதையைச் சொல்லி முடித்து மரகதத்தைப் பார்த்தார்.

''ஒங்களைப் போக நான் விடுவேனா... யாரு இந்த ஆளு? தனியா இருந்த கல்யாணம் ஆன பொம்பளைக்குத் தொணையா இருந்த ஆளு.....''

சீனன் மெள்ள மெள்ள நிதானத்துக்கு வந்தான். வந்தவன் உரிமை கொண்டாடியதைப் பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை. ஆனால் இந்த மரகதம் எவ்வளவு வேகமாக, முப்பது வருஷத்துச் சொந்தத்தை வெட்டி முறித்துக் குழியில் போட்டுவிட்டாள். இதே கண்ணாயிரம் கந்தல் வேஷ்டியுடன் பீடிக்குக் காசு இல்லாமல் இப்போது வந்து நின்றிருந்தால் இவளுடைய ராகமே வேறுவிதமாக இருந்திருக்குமே?

மரகதம் அவனுடைய கணக்கைத் தீர்த்துவிட்டபின் சீனன் ஒரு கணம்கூட அங்கே தங்கக்கூடாது. அது தப்பு. நாகரிகம் இல்லை.

''நான் போய் வரேனுங்க... இந்தாங்க, இந்தப் 'பன்'னையும் பழத்தையும் சாப்பிடுங்க...''

சீனன் மரகதத்தின் பக்கம் பார்க்கவேயில்லை. அவன் நடந்தான்.

முப்பது வருஷங்கள் வாழ்ந்தவனும் இல்லை. முப்பது வருஷங்கள் கெட்டவனும் இல்லை.

அவன் வாழ்ந்து கெட்டான். கெட்டுக்கொண்டே வாழ்ந்தான்.

அந்த வாழ்க்கை இன்றோடு முடிந்தது.

அவனுக்கு இனிமேல் யார் முகத்திலும் விழிக்க வேண்டாம். பிறந்த மண்ணில் சாகவேண்டாம். அவ்வளவுதான். அவ்வளவேதான்.

மத்தியானமே எழும்பூரில் ரயில் ஏறினான். அது சீர்காழியில் நிற்கும்.

23

பெரும் மழை வரும்முன் கருமேகங்கள்
வானில் அடைத்துக்கொண்டு நிற்கின்றன...
—எல்லோரும் அறிந்த விஷயம்.

வியாழக்கிழமை,
பிற்பகல் மணி 3—30.

ரொஸாரியோ வெள்ளைப் பாண்ட்டை அணிந்தபின் ஷூவுக்கு வந்தார். கறுப்பு ஷூ. மேரி பாலிஷ் போட மறந்திருந்தாள். புழுதியைத் துடைத்தார்; ஓரிரு இடங்களில் தோலின் சுருக்கங்கள் ஷூவின் வயது மிக அதிகம் என்பதைத் தெளிவாக்கின. ஏற்கெனவே ஒருமுறை பாட்டாவில் தோல் மாற்றியாகிவிட்டது. இப்போ உள்ள தோலுக்கு வயது இரண்டுக்கும் மேலாகி, முன்பக்கமெல்லாம் பாழாகியிருந்தது. வலது ஷூவின் அடியில் எட்டணா வட்டத்துக்கு ஓர் ஓட்டை, ஓரங்களில் தையல் நைந்து போய், நூல் அங்குமிங்குமாக அசிங்கமாகத் தலை நீட்டியது.

ரொஸாரியோ அலுத்துக்கொண்டே லேசைக் கட்டினார்; மேரியின்மேல் பிசகு இல்லை. அவள் வேண்டுமென்றுதான் பாலிஷ் போடவில்லை. பாலிஷுக்குக்கூட அருகதையற்ற நிலையில் ஷூ முதிர்ந்துவிட்டது. நான்கு நாட்களுக்கு முன்பே சொன்னாள்: 'இன்னிக்குத்தான் இது கடைசி நாள். நாளைக்குப் பெங்களூரிலிருந்து திரும்பி வந்ததும் புது ஷூ வாங்கியாக வேண்டும்' என்று. அவர் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டினார்.

ஷூ நன்றாகத் தேய்ந்துவிட்டது. இன்று கண்டிப்பாகக் கடைசித் தடவையாக இது அவருடைய பாதங்களை அசிங்கப்படுத்துகிறது.

எழுந்து கோட்டை எடுத்தார். உலோக பட்டன்கள் பளபளத்தன. அதை அவர் கவனிக்கையில், திடீரென்று மேரி பிரவேசித்தாள்.

"என்ன மேரி, இப்போ மூன்று மணிதானே ஆகுது!"

"காஷூவல் லீவ். மங்களாவும், நானும் ரேணுகாவின் கம்பெனிக்குப் போகப் போகிறோம்."

"ஓ, மங்களா தன் தங்கையின் பிறந்த நாளைக்கு நம்மை அழைச்சதை நான் மறந்துட்டேன்!"

"எனக்கு ஞாபகமிருக்கு, டாடி."

"என்ன பரிசு கொடுக்கப் போறே?"

"ரெடிமேட் டெரின் ஃப்ராக்."

"பிரமாதம். அவளுக்கு என் ஆசிகள்."

"டாடி..."

"என்ன டார்லிங்?"

"எட்மண்டுக்குக் கண்டிப்பா வேலை வாங்கித் தரேன்னு மிஸ்டர் கேதாரம் சொன்னார்."

"ஆமாம். எனக்கும் காதில் விழுந்தது; பிறந்த நாளுக்குப் புடவை கட்டிக்கொண்டு போ... கவுன் வேண்டாம்!"

"நைலக்ஸ் புடவைதான் டாடி... மிஸ்டர் கேதாரம் மிஸ் மங்களாவைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போறாரு!"

"ஓ, ரொம்பச் சந்தோஷச் செய்தி. இனிமேல் எட்மண்டைப்பற்றி நான் கவலைப்பட வேண்டாம். அவன் நல்ல பையன்தான்; சகவாச தோஷத்தால் கெட்டுப்போய் விட்டான், இப்போது சரியாகிவிடுவான்"

"டீ வேணுமா டாடி?"

"நான் சாப்பிட்டுவிட்டேன். உன் மதர் எங்கே போனாள் என்று தெரியவில்லையே, மேரி..."

மேரி பதில் சொல்லவில்லை.

"சரி, எனக்கு ரயிலுக்கு நேரமாயிடுச்சு. இப்பவே மூன்றே முக்கால்!"

"என்னிக்குத் திரும்பி வருகிறீர்கள் டாடி?"

"நாளை மத்தியானம் வெஸ்ட்கோஸ்டிலே வரேன்; எனக்கு மத்தியானச் சாப்பாடு வேண்டாம்!"

"ஓ! ஆகட்டும். மதர்கிட்டே சொல்லிடறேன்."

"பிறந்தநாள் கொண்டாடும் குழந்தையிடம் என் அன்பைச் சொல்லு. போயிட்டு வரேன்!"

ரொஸாரியோவின் ஷூ வீட்டை விட்டுக் கடைசித் தடவையாக வெளியேறியது.

* * *

வியாழக்கிழமை:

பிற்பகல் நான்கு மணி.

சங்கரியின் கை வலித்தது. கடலை மாவு பவுன் நிறத்தில் பிரகாசிக்க, அதில் ஊறிக்கொண்டே நெய் கொப்புளிக்க, போட்ட சர்க்கரை போதுமா, போதாதா என்ற கவலையுடன், சட்டுவத்தால் அவள் கிளறிக்கொண்டேயிருந்தாள். முகத்தில் வியர்வை முத்து முத்தாய்க் கட்டி நிற்கக் கவலை அதிகமாகிக்கொண்டே போயிற்று.

நாலே காலுக்குள் இந்தத் தின்பண்டத்தை முடித்தாக வேண்டும். வெந்த உருளைக்கிழங்கு இன்னும் தோல் உரிக்கப்படாமல் சிப்பலிலேயே கிடக்கிறது. தோல் உரித்து, இரண்டும் கெட்டானாக உதிர்த்துப் போண்டாவுக்குத் தயாரிக்கவேண்டும் ஏற்கனவே மிக்ஸசருக்காகத் தயாரித்து வைத்த ஓமப்பொடி, காராபூந்தி, முந்திரிப் பருப்பு எல்லாவற்றையும் கலந்து, சிறு சிறு பைகளில் போட்டு வைக்க வேண்டும்.

ஈசுவரா! அவள் ஒருத்தியால் இவ்வளவையும் செய்ய முடியுமா? எப்படிச் செய்வாள்? இந்த மங்களா இன்றைக்கு ஒருநாளாவது வீட்டில் இருந்து கூடமாடச் செய்து, ஒத்தாசையாக இருக்கக்கூடாதா? இரண்டு பிள்ளைகளுக்குக் கல்யாணமாகியும் அவளுக்கு என்ன பிரயோசனம்? இன்னும் அவள் மருமகள் இல்லாத மாமியார்தான்.

மருமகள் இல்லை, மகள் இல்லை. இந்த நாசமாய்ப் போகிற சீனாவது இருக்கக் கூடாதா? பிளாஸ்டிக் தட்டுக்களையெல்லாம் கழுவித் துடைத்து வைக்கச் சொல்லலாமே! வருகிறவர்கள் சாப்பிடப்போகிற அறைகளைச்

சுத்தமாக்கி, சிதறிக் கிடக்கும் புத்தகங்களையும் காகிதங்களையும் ஒழுங்காக எடுத்துவைக்கச் சொல்லலாமே?

உம்! எல்லாம் அவள் தலையெழுத்து. இந்த மைசூர்ப் பாகை அவள் கிளற ஆரம்பித்ததே முட்டாள்தனம். ஹோட்டலிலிருந்து வாங்கித் தொலைத்திருக்கலாம். இது எப்போது கம்பிப்பாகாக வருமோ, ஈசுவரா! சற்று முருகிப் போனாலும் கல்லுதான். பாறாங்கல்லுதான். 'சங்கரி! எங்க அம்மா மைசூர்ப்பாகு பண்ணணும், சாப்பிடணும். வாயிலே போடறதுக்குள்ளே ஐஸ்கிரீம் மாதிரி கரையும்' என்று அவர் எப்போதோ செத்துப்போன அம்மாவுக்கு இன்னும் சர்டிபிகேட் கொடுக்கிறார் அடிக்கடி. ஆனால் கண்டிப்பாகச் சங்கரி, இந்த ஜன்மத்தில் கட்டின கணவரிடம் சர்டிபிகேட் வாங்கப் போவதில்லை ஏனென்றால், பெண்டாட்டி பண்ணினது நன்றாக இருக்கிறது என்று சொல்லுவதே சுய கௌரவத்துக்குக் குறைச்சல் என்று நினைக்கிறவர் அவர்.

இனிமேல் யாருக்கு இவருடைய சர்டிபிகேட் வேணும்? அவருக்கு அவள் பதினோரு குழந்தைகளைக் கொடுத்து வயிற்றை ஒரு வழியாகச் சுத்தமாகக் கழுவியாகிவிட்டது.

இந்த மைசூர்ப்பாகு ஏன் இப்படி அடம் பிடிக்கிறது? ஜிலேபிக்குக்கூட அரைத்துவிடலாம். மைசூர்ப்பாகு தலைவலி. யாரோ ஒரு மாமி, மைசூர்ப்பாகு பண்ணறது மாதிரி சுலபம் வேறு எதிலும் இல்லை என்றாள். யார் அவள்? உம்...ஆமாம்...கோமதி...திருநெல்வேலிக்காரி... நல்லவள் தான்...வெகுளிதான்? ஆனால் கண்டிப்பாக அவள்தான் பிறந்த பிறவியில் மைசூர்ப்பாகு பண்ணிப் பார்த்திருக்க மாட்டாள். யாரோ அவளிடம் சொன்னதைத் திருப்பிப் படித்திருக்கிறாள். அவ்வளவுதான்! திடீரென்று பாகு திரண்டு உருண்டு வரலாயிற்று. சட்டுவத்தை இடதுகைக்கு மாற்றி, வலது ஆள் காட்டி விரலை இறுகி வரும் பாகில் கண் இமைக்கும் நேரம் வைத்து எடுத்தாள். கட்டை

விரலோடு ஆள்காட்டி விரலைச் சேர்த்துப் பிறகு விரித்தாள். ஒரு நைஸ் கம்பி ஓடுவது கண்ணுக்கு அழகாகத் தெரிந்தது.

அப்பாடா!

மைசூர்ப்பாகு ஒரு மாதிரி முடிந்தது.

முகத்தின் முத்துக்கள் புடவைத் தலைப்பில் மறைந்தன.

* * *

வியாழக்கிழமை:

பிற்பகல் நாலேகால்:

முத்து டைப்ரைட்டரை மூடிவைத்து கான்வாஸ் துணியினால் போர்த்தினான். அரைமணி நேரத்துக்கு முன்னாலேயே அவன் உதவி மானேஜரிடம் ஒரு மணி நேரம் முன்னால் வீட்டுக்குச் செல்ல அனுமதி கோரிப் பெற்றுக் கொண்டாகிவிட்டது. அவனுக்கு இப்போது நல்ல அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொட்டுகிறது! ரேணுகா ரொம்ப நல்ல பெண்.

அவன் அந்தக் காலத்தில் மாமரம் ஏறினதை இன்னும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறாள்! இவ்வளவு லட்சம் சொத்து இருக்கிறவள்; அப்பாவுக்கு ஒரே வாரிசு; பல கம்பெனிகளுக்கு டைரக்டர். எதற்கு இந்த அநாமதேயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்? ஏழைச் சொந்தத்தை மூடி மூடி வைக்கிற இந்தக் காலத்தில், அவனை ரேணுகா இன்னும் நினைவில் வைத்திருக்கிறாள் என்றால், அது அவளுடைய பெருந்தன்மையை மட்டுமா காட்டுகிறது? அவனுடைய அதிர்ஷ்டத்தையும்தான்.

இத்தனை மாதங்களாக அவன் சென்ட்ரலில் இருக்கிறான், யார் அவனை மதித்துப் பேசியிருக்கிறார்கள்? (மணியைத் தவிர, மங்களா அவனை விருந்துக்கு அழைத்திருக்கிறாள். அவளும் நல்ல பெண்.

'எங்கிருந்தோ வந்தாள்!' குமுதாவும் நல்ல பெண்.

எல்லாருமே நல்ல பெண்கள்.

அவன் டீக்காக டிரஸ் செய்துகொண்டு போகவேண்டும். நீலநிற பாண்ட்டையும் கிரீம்கலர் ஷர்ட்டையும் லாண்டரியில் கொடுத்து இஸ்திரி போடவேண்டும். நாற்பது பைசா எதிர்பாராச் செலவுதான். பரவாயில்லை. வருஷத்துக்கு, ஏன் ஒரு மாமாங்கத்துக்கு ஒருநாள்தானே?

இந்த மாதமோ அடுத்த மாதமோ அவன் சென்னையை விட்டுப் போய்விடுவான். ரேணுகாவின் கம்பெனியில் ஸ்டெனோகிராபர். ரேணுகாவிடமே உதவிக் காரியதரிசி. குறைந்தது ஐந்நூறு ரூபாயாவது அவள் சம்பளம் கொடுப்பாள் வாழ்க ரேணுகா!

* * *

வியாழக்கிழமை.

பிற்பகல் மணி 4-25:

மூன்றே முக்காலுக்கு மார்வாடியிடமிருந்து சைக்கிளை மீட்டபோது அதில் புழுதி மண்டிக்கிடந்தது. 'என்ன சேட்: சைக்கிளை அடகு வைத்தா அதைத் துடைத்து வைக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கா?' என்று கேட்டுக்கொண்டே மணி மார்வாடியின் அருகே கசங்கிக் கிடந்த கும்பகோணம் காசித் துண்டை எடுக்கப் போனான்.

''ஐயோவ்...என்னாப்பா, நல்ல துண்டை எடுக்கிறே, ஒன் சைக்கிளைத் தொடைக்க!'' என்று மார்வாடி பதறினார்.

''சரி, வேறே துணி குடு.''

''இங்கே அழுக்குத் துணி வியாபாரம் செய்யறது இல்லே.''

''இந்தக் காசித் துண்டு ரொம்ப லட்சணமா இருக்காக்கும். வட்டி மட்டும் நன்னா வாங்கத் தெரிந்துகொள்.''

கர்ச்சீப்பால் ஸீட்டையும், ஹாண்டில்பாரையும் துடைத்துவிட்டு அவன் சென்ட்ரலை நோக்கி விரைந்தான்.

நான்கு முப்பத்தைந்துக்குச் சென்ட்ரலை அடைந்த பின்தான் ஏன் இப்படி அவசரப்பட்டோம் என்ற கேள்வி அவனுள் எழுந்தது. உண்மையில் இன்னும் ஒரு வாரத்துக்கு அவன் வேலைக்கே போகவேண்டாம். செவ்வாய்க்கிழமை மங்களாவிடம் பேசிவிட்டுக் கும்பலின் நடுவே சிக்கிக் கொண்டு தவித்த தங்க பிரேம் மூக்குக்கண்ணாடி, கை நிறையக் கொடுத்துவிட்டார். மார்வாடியிடம் கொடுத்த பின்பும் கையில் நூறு ரூபாய்க்கு மேல் இருக்கிறது. மெக்ரெனட்டில் முப்பத்தாறு ரூபாய்க்கு 'ரயில் கேக்' வாங்கியும் கையில் பணம் வெள்ளமாக ஓடுகிறது.

மேய்ந்துவிட்டுத் தானாக வீடு திரும்பும் பசுவைப்போல் அவனுடைய கால்கள் சென்ட்ரலை நோக்கியே செல்கின்றன. இதுவரையில் வெற்றியை அளித்துவந்த சென்ட்ரல் என்றைக்காவது ஒருநாள் அவனைக் காட்டிக் கொடுத்துவிடுமோ?

அவனுடைய பயமும் அவநம்பிக்கையும், அடுத்து அடுத்து வந்த வெற்றிகளால்தான் என்று அவனுக்குத் தோன்றியது. ரொம்ப நன்றாகப் படித்தவன், பரீட்சைக்கு முதல் நாள் பயத்தில் நடுங்குவதுபோல அவன் ஏன் நடுங்க வேண்டும்? அவன் ஒருவனை ஏமாற்றினால் பலரை இரக்கத் துடன் நடத்தியிருக்கிறான். தெய்வம் மட்டும் வரவு—செலவு கணக்குப் போட்டுப் பார்த்தால், கண்டிப்பாக மணி மாட்டிக் கொள்ளவே மாட்டான்.

* * *

வியாழக்கிழமை:

பிற்பகல் மணி 4-35:

டியூட்டி ரிஜிஸ்டரில் கையொப்பமிட்டபின் ரொஸாரியோ நாலேகாலிலிருந்து பிளாட்பாரத்திலேயே

நின்றுகொண்டிருந்தார். பார்ஸல் வேனில் சாமான்களை 'லோட்' செய்தாகிவிட்டது. பார்ஸல் கிளார்க் அவரிடம் ஒரு தாளைக் கிழித்துக் கொடுத்துவிட்டு ரிஜிஸ்டரில் கையொப்பத்தை வாங்கிக்கொண்டு சென்றான்.

ஓரிரு நிமிடங்கள் அங்குமிங்குமாகப் பார்த்தார் ரொஸாரியோ. ஓலவக்கோடு டி.எம் ஓ. ஒன்று இந்த ரயிலில் பிரயாணம் செய்கிறார். சிப்பந்திகள் ஏற்கனவே பெட்டி படுக்கையையும், ஆபீஸ் பைல்களையும் கொண்டு போய் வைத்தாகிவிட்டது. ஆனால் அவர் இன்னும் வரவில்லை. வருகிற நேரம்தான்.

எங்கெங்கெல்லாமோ பார்த்த கண் திடீரென்று ஓர் இடத்தில் நின்றது.

இருபது இருபத்திரண்டு வயது மதிக்கக்கூடிய ஒரு பெண் சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்திருக்கிறாள். காலடியில் பெட்டி, படுக்கை, கூடை. அருகே ஓர் உயரமான டின். இடதுபுறம் கூஜா, பழக் கூடை.

மடியில் மூன்று வயதுக் குழந்தை, வாழைப் பழத்தைக் கடித்துக்கொண்டு அதே சமயம் தாயின் மடியிலிருந்து இறங்கத் திமிறிக் கொண்டிருந்தது.

குழந்தையின் கண்கள் ரொஸாரியோவைப் பிரமிக்க வைத்தன. அதில் எவ்வளவு கறுப்பான விழிகள். விழிகளிலிருந்து சிரிப்பு 'டால்' அடித்தது.

குழந்தையை வாரி எடுத்து முத்தமிட ரொஸாரியோவின் மனம் துடித்தது. ஒருகணம் மேரியின் ஞாபகம் வந்தது. அவளுக்கு இவனைப்போல் ஒரு குழந்தை இருந்தால்! ரொஸாரியோ பெருமூச்சு விட்டார். அவர் கொடுத்து வைக்காதவர். இல்லாவிட்டால் பலராமன் மேரியைக் கைவிடுவானா?

இப்போது குழந்தை பழத்தோலை வீசி எறிந்தது. அதைக் கவனிக்காத தாயார் வலது பக்கத்தில் பார்வை

யைத் திருப்பி யாரையோ (கணவராகத்தான் இருக்கும்.) எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

பழத்தோல் ரொஸாரியோவின் கண்ணை உறுத்தியது. பிளாட்பாரத்தில் நடக்கிறவர்களில் யாரேனும் ஒருவர் கால் வைத்தால் வழுக்கி விழுந்துவிடுவார். அதுவும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தால் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள்.

ரொஸாரியோ இரண்டே எட்டில் நடந்து குனிந்து பழத்தோலை எடுத்தார்.

''என்னோட பழம்!''

''தாய் திரும்பிப் பார்த்தாள்.

''ஏண்டா, தோலை அவர்மேலே எறிஞ்சியா, ராஸ்கல்!''

''கீழேதான் அம்மா எறிஞ்சான்...''

''பழம்...பழம்...!'' குழந்தை தாயின் மடியிலேயே எம்பிக் குதித்தது.

''ஏண்டா பிளாட்பாரத்திலேயா எரிகிறது?''

ரொஸாரியோ சிரித்துக்கொண்டே தம் இடத்துக்குத் திரும்பினார். படித்தவர்களும், புத்தி உள்ளவர்களும்கூடத் தான் தின்றுவிட்டுப் பழத்தோலை நடுத்தெருவில் போடுகிறார்கள். இந்தக் குழந்தைக்கு என்ன தெரியும்?

என்ன அழகான முகம்!

என்ன வசீகரமான கண்கள்!

குழந்தை பூர்ண ஆயுளுடன் இருக்க வேண்டும்;

பழத்தோலை ரயிலுக்கு அடியிலே போட்டார்; ரயில் வழுக்கி விழாது!

* * *

வியாழக்கிழமை;

பிற்பகல் 4-40.

எட்மண்ட் ஓடோடியும் ஆறாம் பிளாட்பாரத்துக்கு வந்தான். தகப்பனாரின் உருவம் தெரிந்தது.

''டாடி!''

''எட்மண்ட்டைக் கண்டதும் ரொஸாரியோவுக்குத் திகைப்பாக இருந்தது. ஒருவித கோபமும்கூட வந்தது. மீண்டும் பணம் கேட்க வந்துவிட்டானா?

''எப்போ திரும்பி வருகிறீர்கள்?''

''நாளைக்கு மத்தியானம்... வெஸ்ட்கோஸ்ட் எக்ஸ்பிரஸில்!''.

''கேதாரம் எனக்கு பம்பாயில் வேலை வாங்கித் தரதாச் சொல்லியிருக்கிறாரு!''

''எனக்குத் தெரியும்!''

''அவர் சனிக்கிழமை மெயிலில் திரும்பிப் போகிறார்.''

''அதனால் என்ன?''

''என்னையும் புறப்படச் சொல்கிறார். நானும் அன்னிக்கே புறப்படணும்.''

''அப்போ போ!''

''பணம்?''

''நாளைக்குத் தர்றேன்.'' வயது வந்த பிள்ளையை எத்தனையோபேர், பாஸில் அனுப்பிவிடுகிறார்கள்; அவருக்கு மட்டும் அந்தப் புத்தி வரமாட்டேன் என்கிறது.

''கண்டிப்பா நாளைக்குப் பணம் வேணும் டாடி.''

எப்படி கொடுக்கப் போகிறார்? யாரிடம் கடன் வாங்கி? கோவாபரேடிவ் பாங்கியிலிருந்தா?

ரொஸாரியோவின் காதில் இரண்டாவது மணி கேட்டது. உதவி ஸ்டேஷன் சூப்பிரண்டண்ட் பச்சைக் கொடியைக் காட்டினார்.

ஓலவக்கோடு டி.எம் ஓ, எப்போது அவரைத் தாண்டிக் கொண்டு போனார்? இந்த எட்மண்ட்தான் காரணம்.

டி.எம்.ஓ. ஏதாவது தப்பாக நினைத்துக்கொண்டிருப் பாரோ? அரக்கோணத்தில் சந்தித்து மன்னிப்புக் கேட் பதைத் தவிர வேறு வழியில்லை.

'லாக் புக்'கில் கையொப்பமிட்டாகி விட்டது... 'பார்சல் ஷீட்' பாக்கெட்டில் இருக்கிறது. முதல் வகுப்பு 'சார்ட்' வந்துவிட்டது. பாக்கெட் கடிகாரத்துக்குச் சாவி கொடுத்து நேரத்தைச் சரி செய்தாகி விட்ட.

திடீரென்று ரொஸாரியோ கையை வேகமாக ஆட்டி னார். பச்சைக்கொடியின் துணி அந்தரத்தில் தவித்தது.

டீஸல் என்ஜினின் குரல் அந்தக் கோடியில் இலேசாகக் கேட்டது.

ஓடி, விரைவுபெற்றுக் கொண்டிருக்கும் ரயிலில், தம் முடைய பெட்டிக்குள், ரொஸாரியோ வேகமாகப் பாய்ந்து நுழைந்தார்.

* * *

வியாழக்கிழமை.

மாலை மணி ஐந்து.

யாரும் இல்லாத வீட்டில் வெளிக் கதவைச் சாத்தி விட்டு, லூஸி படுக்கை அறைக்குள் பிரவேசித்தாள். மாலை சூரியனின் கதிர்கள் முகத்தில் அடித்தன. நீல நிறத் திரையால் ஜன்னலை மூடிவிட்டுப் படுக்கையின்மேல் உட்கார்ந்தாள்.

அவள் எதிரே கட்டிலின் உயரத்துக்கு ஒரு டீப்பாய் டீப்பாயின் மேல் ஒரு கண்ணாடித் தம்ளர். பிளாஸ்க் நிறைய ஐஸ். இரண்டு சோடா பாட்டில்கள். மற்றும் ஒரு பாட்டில்.

காலித் தம்ளரில் மது விழுந்தது. அதன்மேல் இரு ஐஸ் துண்டுகள் தம்ளர் நிறைய சோடா.

ஒரு நிமிடம் அதையே உற்றுப் பார்த்த லூஸி திடீரென்று எழுந்தாள். உருளைக்கிழங்கு வறுவலை அவள்

மறந்துவிட்டாள். அவசரம் அவசரமாகச் சமையல் அறைக்கு சென்று டப்பாவுடன் திரும்பினாள்.

அரை மணியில் பாட்டில் பாதிக்குமேல் காலியாகியது.

லூஸி பாட ஆரம்பித்தாள். நடனம் ஆட வேண்டும் என்ற வெறி கிளம்பியது. எழுந்தாள். கால்கள் பின்னின. மீண்டும் உட்கார்ந்தாள். நாலாவது டம்ளர் திரவம்-ஐஸ்-சோடா முடிந்தது.

நடனம் ஆடாவிட்டால் உயிரே நிற்காது என்று லூஸிக்குத் தோன்றியது.

எழுந்தாள். கால்கள் மீண்டும் இரு திசைகளில் இழுத் தன. தன்னை நடனம் ஆடவிடாமல் தடுப்பது அந்த டீப் பாய்தான் என்ற எண்ணம் அவளுள் எழுந்தது. கோபத்தில் உதைத்தாள். டீப்பாயின் காலில் நீட்டிக் கொண்டிருந்த ஆணி கணுக்காலைக் கீறிற்று.

அவளுக்கு வலி தெரியவில்லை. கசிந்த ரத்தம் கண்ணுக்கு தெரியவில்லை.

ரொஸாரியோ எழுபது ரூபாய் கொடுக்காமல் போனது நினைவுக்கு வர, மீண்டும் ஆத்திரத்தோடு டீப்பாயை உதைத்துத் தள்ளினாள்.

சோடா பாட்டில்கள் உருண்டன. தம்ளர் விழுந்தது. மது பாட்டில் மட்டும் அப்படியே இருந்தது. சிரமப்பட்டு அதைக் குனிந்து எடுத்தாள்.

''நீதான் என் பிரிய தேவதை!''

பாட்டிலை அப்படியே வாயில் கவிழ்த்துக்கொண் டாள்.

தொண்டையில் ஆவி பறந்தது, தொண்டைக் குழாயில் ஒரு வெதுவெதுப்பு. வயிற்றில் ஓர் எரிச்சல்.

ஐந்து நிமிடங்களில் லூஸி கீழே கிடந்தாள். தலை டீப் பாயின் அடிப் பாகத்தில் அதன் காலை இடித்துக்கொண்டு கிடந்தது.

லூஸி இந்த உலகத்தையே மறந்திருந்தாள்

அப்போது மணி ஆறரை.

* * *

வியாழக்கிழமை.

மாலை மணி ஐந்தரை:

கேதாரம் ஸ்பென்சரில் பிறந்த நாள் பரிசாக ஒரு விளையாட்டு ரயில் வாங்கினான்.

வட்டவடிவத்தில் தண்டவாளங்கள்: சுற்றிச் சுற்றி வரும் என்ஜின். மூன்று பெட்டிகள். முப்பத்தேழு ரூபாய் கொடுத்தபோது கை கொஞ்சம் வலிக்கத்தான் வலித்தது.

வியாழக்கிழமை:

மாலை 6-30.

கேரளா எக்ஸ்பிரஸ் சென்னையை விட்டு விலகி, எங்கேயோ, எதையோ தாண்டி ஓடிக்கொண்டிருந்தது.

அதில் கார்டாகச் செல்லுகிறவர் ரொஸாரியோ. வயது ஐம்பதைத் தாண்டியாகிவிட்டது. கம்பீரமான உயரம்; பார்வை; நடை.

அந்த ஸ்டேஷனில் கேரளா எக்ஸ்பிரஸ் நிற்கக்கூடாது. ஆனால் ஏதோ கோளாறு நின்றது. இருபது நிமிடங் களுக்குப் பிறகு மீண்டும் புறப்பட்டது.

அப்போது நேரம் 6-41.

24

தீபம் அணைகிறது. இருள் சூழ்கிறது:
உயிர் விளக்கு அணையும்போது?

வியாழக்கிழமை:

மாலை மணி 6-45.

சங்கரி தனக்குள் மகிழ்ந்துகொண்டாள். மைசூர்ப்பாகு வெகு நன்றாக அமைந்துவிட்டது. மூன்று வயதுக் குழந்தை கூட வின்டுவிடும். நல்லவேளையாக மூன்று வயதுக் குழந்தை இப்போது இல்லை.

இதுவரையில் எந்தக் குழந்தைக்குமே பிறந்த நாள் கொண்டாடி அறியாத வீட்டில் (முதல் ஆண்டு நிறைவைத் தவிர) இன்று ஒரே இரைச்சல். கும்மாளம். சங்கர் டைட் பாண்ட் போட்டுக்கொண்டு, டி ஷர்ட்டை ஒரு தடவைக்கு நூறு தடவை கண்ணாடியில் பார்த்துக்கொண்டான். விசு பைஜாமாவும், லக்னோ ஜிப்பாவும் அணிந்து அழகு பார்த்தான். ராதா பட்டுப் பாவாடையில் காட்சி அளித் தாள்: அனு ஆடையில் அக்கறை செலுத்தாமல் உருளைக் கிழங்கு போண்டாவில் கவனத்தைச் செலுத்தினாள்; மிக் ஸரில் முந்திரிப்பருப்பைத் தேடினாள். பாபு, கல்யாணம், ரவி ஆகியோர் ஸ்கூல் யூனிபாரத்தைப் போட்டுக்கொண் டார்கள்.

விழாவின் கதாநாயகி சுஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை: மற்ற குழந்தைகளுக்கு, பள்ளிக்கூடத்தில் 'ஹாப்பி பர்த் டே' பாடிப் பழக்கப்பட்ட அவளுக்கு இன்று மற்றவர் கள் பாடினார்கள். மங்களா வாங்கிக் கொடுத்த பாரீஸ் மிட்டாய்களை அவள் வகுப்பு முழுதும் வழங்கி, பாக்கி யிருந்த இரண்டைத் தன் வாயில் அடக்கிக்கொண்டாள்.

ஆனால் மறுபடியும் எதற்கு இந்தக் கூத்து? மறுபடியும் 'ஹாப்பி பர்த் டே' பாட்டுப் பாடப் போகிறார்களா?

பூப்போட்ட இள நீல 'ப்ராக்' அவளுக்கு எடுப்பாக இருந்தது. ஆனால் அவள் அவஸ்தைப்பட்டாள். தோள் பட்டையில் உறுத்தியது. மைசூர்ப்பாகுத் தூள்கள் வேறு ஃபிராக்கில் சிதறின.

கணபதி வந்தார். இன்னும் ரயில்வே உடுப்பைக் கழற்ற வில்லை.

''மைசூர்ப்பாகு கொஞ்சம் ருசி பார்க்கிறீர்களா? நன்னா வந்திருக்குன்னுதான் நினைக்கிறேன்.''

மைசூர்ப்பாகுடன் சங்கரி அவர் முன்னால் நின்றாள். அவர் கண்டிப்பாகச் சர்டிபிகேட் கொடுக்கமாட்டார் அது அவருடைய பிறவிக் குணம். செத்துப்போன அம்மாவுக்கு இப்போது கொடுக்கிறவர், அவள் உயிரோடு இருந்தபோது கொடுத்துச் சங்கரி கேட்டதில்லை.

''பாதி கொடு.''

மைசூர்ப்பாகுக் கட்டியை விண்டு நீட்டினாள்:

''ஜோர்...நெய் மணம் வீசறதே...''

''வாயிலே போட்டதும் ஐஸ்கிரீம் மாதிரி கரையறதா?'' சங்கரிக்குத் துடித்தது.

''அந்தத் துண்டையும் கொடு.''

''நன்னாயிருக்கா?''

''இல்லைன்னு சொல்லலையே?';

''நெய் மணம் வீசினால் அது நெய்யின் தரம்: என் கையின் தரம் எப்படி?''

''அதுதான் அந்தப் பாதியையும் வாங்கிப் போட்டுக் கொண்டேனே...''

சொன்னவர் உடுப்பைக் கழற்றச் சென்றார்:

சங்கரி ஏக்கத்தில் வாடிப்போனாள். ஒரு வார்த்தை... ஒரு நல்ல வார்த்தை... ஊஹூம்... வராது. இவர் வாயிலி ருந்து வராது... 'சங்கரி, நீ பண்ணின மைசூர்ப்பாகு பிரமாதமாக இருக்கு' இப்படிச் சொன்னால் அவளுக்குச் சொர்க்க பதவியே கிடைத்த மாதிரி அல்லவா? அவளைப் போல் உள்ளவர்கள், கணவரிடமிருந்து என்ன எதிர்பார்க் கிறார்கள்? நகை, நட்டு, புடவை ரவிக்கைகளையா? சினிமா, நாடகம் எக்ஸிபிஷன்களையா? மனசு குளிரும்படி யான வார்த்தைகள். இன்னும் நன்றாகச் செய்து போட வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்படியான வார்த் தைகள் புகழ வேண்டாம். ஆனால் உண்மையையாவது சொல்லலாமே!

ஊஹூம். இவர் சொல்லமாட்டார். அவள் தலை யெழுத்து.

* * *

மணி 6—50:

மங்களா ரேணுகாவுடன் வந்தாள். சங்கரிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. மூத்த பெண் இப்படிப் பொறுப்பு இல் லாமல், விருந்தாளியைப்போல், கையை வீசிக்கொண்டு வருகிறாள்! சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் வீட்டுச் செலவுக்குக் கொடுத்துவிட்டால் பொறுப்பு தீர்ந்துவிடும் என்று அவள் நினைக்கிறாள். பெற்றவள் என்ன. சமைத் துப்போட்டு, சதா சர்வகாலமும் வீட்டுக்குள்ளேயே உழைத்துக்கொண்டிருக்க வேண்டிய மாடா? மங்களாவின் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை அறைந்தால் என்ன? ஆனால் இன்றைக்கு முடியாது. நாளுங் கிழமை யுமா, வயது வந்த பெண்ணைக் கைநீட்டி அடிக்கக் கூடாது. மேலும் சிநேகிதியுடன்— பணக்காரச் சிநேகிதி யுடன் இருக்கிறாள்.

''ஹலோ, மாமி...! ரொம்ப ஸாரி. லேட்டாப் போயிடுத்து...''

மன்னிப்பு கேட்டது அவளுடைய பெண் இல்லை: ரேணுகா சிநேகிதி. அவளுடைய பெண்ணுக்கு மன்னிப்புக் கேட்கக்கூடத் தெரியாது!

''அதனால் என்ன? பரவாயில்லை.''

''சுஜாவுக்கு இதை வாங்கினேன்... நன்றாக இருக்கிறதா என்று பாருங்கள்.''

ரேணுகா நீட்டின பெட்டியைப் பார்த்ததுமே, சங்கரியின் மூச்சு ஒருகணம் நின்றது. நகைப்பெட்டி!

விரல் நடுக்கத்துடன் திறந்தாள்.

புது மோஸ்தரில் மீனாட்சியம்மன் பதக்கத்துடன் ஒரு நெக்லஸ். அத்துடன் விரலுக்கு ஒரு நெளி.

''இருபத்திரண்டு காரட்!'' என்றாள் மங்களா.

''ரேணு, பிறந்த நாளுக்கு ஏதுக்கும்மா இவ்வளவு பணம் கொடுத்து...'' சங்கரியால் மேலே பேச முடியவில்லை. சிலிர்ப்பில் அவள் தன்னையே இழந்துவிட்டாள்:

''ஐந்நூற்று இருபது ரூபாய்'' என்றாள் மங்களா.

''டீ, பரிசின் விலையைச் சொல்லக்கூடாதுடீ, மண்டு!'' ரேணுகா மங்களாவின் கன்னத்தை நிமிண்டினாள்.

மணி 6-55.

சீஃப் புக்கிங் கிளார்க், வைரக் கடுக்கன் ரங்காச்சாரி ஒரு ஜதை வெள்ளிக் கொலுசுடன் வந்து, சோபாவில் உட்கார்ந்தார்.

அவரைத் தொடர்ந்து ஏற்கெனவே ஆர்டர் செய்திருந்த ஐஸ்கிரீமை இரண்டு பெரிய பிளாஸ்கில் போட்டுக்கொண்டு வந்தான் மணி.

முத்து க்ரீம் ஷர்ட்டை அணிந்து, வெறும் கையை வீசிக் கொண்டு வந்து சேர்ந்தான்.

கேதாரம் வந்தான் ரயில் பரிசுடன்.

இன்னும் யார் யாரோ வந்தார்கள். உதவி ஸ்டேஷன் சூப்பிரண்டெண்ட் ஜோசப். ரயில்வே அண்டர்கார்டு ராமாமிர்தம். ரயில்வே காண்டீன் மானேஜர் பஞ்சாபகேசன்.

கடைசியாக மேரி வந்தாள்.

விசுவும் ராதாவும் சிறு சிறு மெழுகுவத்திகளை ரயில் கேக்கின் மேல் நிறுத்தி வைத்தார்கள். என்ஜின் மேல் நான்கு வத்திகள். ஒவ்வொரு பெட்டிக்கும் இரண்டு இரண்டு. சங்கர் ஒவ்வொன்றாகப் பற்ற வைத்தான்.

சுஜா எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்தாள். டைனிங் டேபிளின் மேல் இருக்கும் கேக்கைப் பார்த்தாள். மெழுகு வத்திகளின் எரியும் நாக்குகளைப் பார்த்தாள்.

மணி அவளை டைனிங் டேபிளின் மேல் நிறுத்தி வைத்தான். சுஜா என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்தாள். தீபங்களை அவள் ஒவ்வொன்றாக ஊதி ஊதி அணைக்க வேண்டும். அணைந்தபின் கத்தியால், கையில் அடிபட்டுக் கொள்ளாமல் கேக்கை வெட்டவேண்டும். அப்புறம்—அப்புறம்தான் ஒரு துண்டை அவள் தன் வாயில் போட்டுக்கொள்ள வேண்டும்.

எல்லோரும் குழுமியிருந்தார்கள். சுஜாவின் குறுகுறுப்பான கண்களை ரசித்துக்கொண்டிருந்தாள் ரேணுகா. அவளுடைய நெக்லஸ் மின்னியது.

''ஸ்வீட் ஸ்மைலிங் கேர்ள்...'' என்றாள் ரேணுகா.

''யெஸ்!''—கேதாரம்.

''ஃபானைச் சீக்கிரம் ஆஃப் பண்ணுங்கள்... மெழுகுவத்தி அணைஞ்சுடும்போல இருக்கு.'' கூட்டத்தின் நடுவே இருந்த மணி கத்தினான். ராமாமிர்தம் விசிறியை நிறுத்தினார்.

''ஹாப்பி பர்த் டே டு யூ...''

எல்லாரும் ராகம் இழுத்தார்கள். மேரியின் குரல் மட்டும் தனித்துக் கேட்டது. எவ்வளவு இனிமையான குரல். முத்து வாய் அடைத்து நின்றான். அவனுடைய பார்வையெல்லாம், ரயில் கேக்கின் மேலேயே நிலைத்திருந்தது. நாக்கில் ஜலம் ஊறியது. இவ்வளவு பெரிய கேக்கை அவன் அவனுடைய ஜன்மத்தில் பார்த்ததில்லை.

"சுஜா...! இப்போ நீ இந்த மெழுகுவத்தியையெல்லாம் ஊதி அணைக்கணும்" என்றான் மணி.

"தெரியும்!"—சுஜா.

முதல் மெழுகுவத்தியின் மேல் ஊதினாள்... விளக்கு அணை...

* * *

கேரளா எக்ஸ்பிரஸ் ஓடிக்கொண்டேயிருந்தது.

ரொஸாரியோ ஓரிரண்டு ரிஜிஸ்தர்களில் என்னென்னவோ கிறுக்கினார். திருவள்ளூர் தாண்டியதும் நேரத்தைக் குறித்தார்:

சரியாக ஐந்து நாற்பதுக்கு ரயில். அரக்கோணத்தை அடைந்தது. இறங்கின ரொஸாரியோ டி எம் ஓ.வைப் பார்க்க விரைந்தார்; பார்த்தார். குசலம் விசாரித்து. சென்ட்ரலில் சந்திக்க முடியாமல் போனதுபற்றி மன்னிப்புக கோரினார். டி.எம்.ஓ. புன்னகையால் பதிலளித்து அனுப்பினார்.

திரும்பி வரும்பொழுது காப்பி சாப்பிட வேண்டும் போலத் தோன்றியது. பதினைந்து பைசா கொடுத்து அரை கப் காப்பி வாங்கினார். ஸ்டாலை விட்டு வெளியே வந்தபோது பழ வண்டி எதிரே வந்தது.

சாத்துக்குடி, திராட்சை, ஆப்பிள், மஞ்சள் வாழைப் பழம்.

சென்ட்ரல் ஸ்டேஷன் குழந்தை கண்முன் தோன்றியது. அந்தக் குழந்தை இந்த ரயிலில்தான் வருகிறது. திடீரென்று

அதன் கருகருவென்றிருக்கும் கண்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஒரு வெறியாகக் கிளம்பியது. ஏன் என்று அவருக்கே தெரியவில்லை

ரொஸாரியோ பாக்கெட் கடிகாரத்தைப் பார்த்தார். ஐந்து ஐம்பது. இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருக்கின்றன. பம்பாய் போகியை 'அட்டாச்' செய்துகொண்டிருக்கிறார்கள்.

ரொஸாரியோ நடந்தார். மேரி எஸ்.எஸ் வீட்டுக்குப் போயிருப்பாள். எட்மண்ட் ஊர் சுற்றிக்கொண்டிருப்பான். சனிக்கிழமை தலையைப் பணயம் வைத்தாவது அவனை பம்பாய்க்கு ரயில் ஏற்றி அனுப்பிவிட வேண்டும். லூஸி இன்றைக்கு வேப்பேரி கிளப்புக்குப் போகப் போகிறாளோ என்னவோ? போகாமல் இருக்க அவளால் முடியாது. அவள் எழுபது ரூபாய்க்காக அவருடைய உயிரையே வாங்கினாள். ஆனால் அவரிடம் ஏது பணம்? எதற்கு எழுபது ரூபாய் அவளுக்கு வேண்டும்? கேட்டால் அதைச் சொல்லவும் மறுக்கிறாள்.

ரொஸாரியோ நடந்தார்:

த்ரீ டயர், டூ டயர். லேடீஸ் கம்பார்ட்மெண்ட்...

குழந்தையைக் காணோம்,

முதல் வகுப்புப் பெட்டி.

ஓரிரு பிரயாணிகள் வழியை அடைத்துக்கொண்டு நின்றார்கள்: காரிடார் கம்பார்ட்மெண்ட் பிளாட்பாரத்துக்கு எதிர்ப் பக்கத்தில் அறைகள் இருந்தன, அவருக்கும் அறைகளுக்கும் நடுவே காரிடார் இருந்தது. ஏழு அறைகளில் மூன்றில் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. மற்ற நான்கில் இரண்டு முழுக்கக் காலியாக இருந்தது: மீதி இரண்டு. ஒன்றில் இரண்டு ராணுவ அதிகாரிகள். இன்னொன்றில் இரண்டுபேர்:

'டி' கம்பார்ட்மெண்டில் டி.எம்.ஓ: அது 'கூப்பே' அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்க்காமல் திரும்ப

ரொஸாரியோவுக்கு மனம் வரவில்லை. ஏன் இப்படி ஒரு வெறி அவர் மனத்தில் புயலாக அடிக்கிறது என்றும் அவருக்குப் புரியவில்லை. ரோஜாவின் மனத்தை அனுபவிப்பதில் ஏற்படும் இன்பம். ஒரு நல்ல சங்கீதத்தைக் கேட்பதில் ஏற்படும் மயக்கம். சுழித்து ஓடும் நீரோடையின் கரையிலே உட்கார்ந்து, தண்ணீரை விரலால் ஸ்பரிசிக்கும் ஓர் ஆனந்தம்.

குழந்தையைக் கண்ணால் பார்த்தால் இப்படி ஓர் இன்பம், மயக்கம், ஆனந்தம் உண்டாகிறது; இதற்காகத் தான் ரொஸாரியோ இப்படித் தேடுகிறாரோ!

'சி' கம்பார்மெண்டின் கதவை இலேசாகத் தள்ளினார்.

''எக்ஸ்க்யூஸ் மீ.''

அவருடைய முயற்சி வீணாகவில்லை.

''ரெண்டு அப்பரும் காலிதானே?''

வந்த காரணத்தை மறைத்து, போலிக் காரணத்தைக் கற்பித்தார்.

''ஆமாம்!'' என்றார் குழந்தையின் தகப்பனார்.

கார்டு இடதுபுறமாகப் பார்த்தார். குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. கருகருவென்ற கண்மணிகளை இமைகள் போர்த்தியிருந்தன. ஒருகணம் அதன் உதட்டில் தேனாக வழியும் புன்னகையில் தம்மைப் பறி கொடுத்தார்.

''நீங்க எந்த ஊர் வரை?...''

''திருச்சூர்!''

''உங்களுக்கு ஜோலார்ப்பேட்டையில் சாப்பாடு வேணுமா?'' ரொஸாரியோ இதையெல்லாம் வலியப் போய்க் கேட்க வேண்டிய அவசியமே இல்லை; அதற்கு என்று சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஆனால் அவர் கேட்டார்! ஏன்...ஏன்...இந்தக் குழந்தை...தூங்கும் இந்தக் குழந்தை...

''முன்னமே சொல்லியாச்சு, தாங்க்ஸ்...''

மீண்டும் தூங்கும் குழந்தையைப் பார்த்துவிட்டு அறைக் கதவைச் சாத்தினார். இறங்கித் தம் இடத்தை நோக்கி நடந்தார்.

ரயில் புறப்பட்டது. பத்து நிமிடங்கள் தாமதம். காட்பாடி சேருவதற்குள் சரிக்கட்டிவிடலாம்.

ஆனால் வழியெல்லாம் கோளாறு இருந்தது.

சித்தேரியில் நின்றது.

மழைத் தூறல்.

ஷோலிங்கரில், ஸ்டேஷன் சாவி வளையம் என்ஜினிலிருந்து நீட்டிய கரத்தினுள் சிக்கவில்லை. அசுரகதியில் ஓடிக் கொண்டிருந்த ரயிலில் திடீரென்று வேகம் குறைந்தது; ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நின்றது. ஸ்டேஷனிலிருந்து ஒருவன் சாவியைத் தூக்கிக்கொண்டு ஓடோடி வந்துகொண்டிருந்தான்.

ஒரு வழியாக ரயில் மீண்டும் புறப்பட்டது.

தலங்கை.

மீண்டும் ரயில் நின்றது. ரொஸாரியோ அலுப்புடன் இறங்கினார். என்ன கோளாறு என்று அவருக்குத் தெரியவில்லை. இறங்கி நடந்தார்; ஒவ்வொரு பெட்டியாகத் தாண்டிக்கொண்டே வந்தார்.

த்ரீ டயர் போகிக்கு முன் ஏழெட்டுப் பேர் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். யாரோ அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள் என்பது மட்டும் ரொஸாரியோவுக்குத் தெரியும். யாருக்கு என்ன அபாயம்?

ஸ்டேஷன்மாஸ்டர் ஓரிரு ரயில்வே சிப்பந்திகள் த்ரீ டயர் முன்னால் வந்து நின்றார்கள்.

ரொஸாரியோ அந்த இடத்தை அடைகையில் ஒரு வயது வந்த ஸ்திரீ, ஓர் இள மங்கையுடன் மெதுவாக இறங்கிக்கொண்டிருந்தாள்.

பிரசவம்!

பெண் குழந்தை.

ரயிலில் பிரசவம்.

ரயில் பெட்டியை அவசரம் அவசரமாகச் சுத்தம் செய்தார்கள். தாயையும் சேயையும் ஸ்டேஷன்மாஸ்டர் அறையில் படுக்க வைத்துவிட்டு இருக்கிற பினாயில் டெட்டால் எல்லாம் எடுத்து வந்து, பெண்களுக்கு என்று ஒதுக்கியிருந்த அறையைக் கழுவினார்கள். ஏற்கனவே இருந்த மூன்று ஸ்திரீகளுக்கு வேறு இடம் கொடுக்கப்பட்டது.

அவசரம் அவசரமாய் சுறுசுறுப்புடன் எல்லோரும் இயங்கினார்கள். ரொஸாரியோ பிறந்த குழந்தையைப் பார்த்துவிட்டு, வயது முதிர்ந்த ஸ்திரீயிடம் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் பச்சை விளக்கைக் காட்டினார்.

ரயில் புறப்பட்டது.

ரொஸாரியோ விரைந்தார்.

மழைத் தூறல்.

ரயில் வேகம் எடுத்தது.

ரொஸாரியோ ஓடினார்.

அவர் பெட்டி எங்கோ தொலை தூரத்தில் இருக்கிறது. அது வருவதற்குள் டீஸல் என்ஜின் பொருத்தப்பட்ட எக்ஸ்பிரஸின் வேகம் அவர் சக்திக்கு மீறியதாக வளர்கிறது.

ரொஸாரியோ ஓடினார்.

அப்பாடி! பரவாயில்லை. சமாளித்துவிடலாம். எத்தனையோ தடவைகள் இதே வேகத்தைச் சமாளித்திருக்கிறார்.

கார்டு வான் வந்துவிட்டது. கைப்பிடியையும் பிடித்து விட்டார்.

ஆனால் இடது கால் இழுத்தது. ஒரு மஞ்சள் தோலோடு அது ஓடியது. வலது கால் திண்டாடியது. கைப்பிடியி

லிருந்து கையை எடுக்காமல் உடம்பின் சக்தியையெல்லாம் திரட்டிக் கால்களிரண்டையும் தூக்கப் பார்த்தார். வலது கைப் பச்சை விளக்கு பிளாட்பாரத்தில் விழுந்து உருத்தெரியாமல் போயிற்று.

உடம்பின் சக்தியை ரயிலின் வேகம் துண்டித்தது. கை தளர்ந்தது. தளர்ந்து தளர்ந்து கைக்கும் கைப்பிடிக்கும் இருந்த தொடர்பு ஒரேயடியாய் அற்றுப் போயிற்று.

யாரோ அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்கள்.

ரயில் நின்ற இடத்திலிருந்து பிரயாணிகள் கூட்டம் கூட்டமாய்ப் பின்னோக்கி ஓடி வந்தார்கள்.

அவர்கள் தேடி வந்தது ரயில்வே கார்டு ரொஸாரியோவை. அவருக்கு வயது ஐம்பதைத் தாண்டிவிட்டது. மனைவியின் பெயர் லூஸி. பெண் மேரி. பிள்ளை எட்மண்ட்.

அவர் நல்ல உயரம், கம்பீரமான தோற்றம்; நடை.

ஆனால் இப்போது...?

* * *

சூஜா மெழுகுவத்திகளையெல்லாம் அணைத்தாகி விட்டது.

பலகாரத் தட்டுக்களை ஒவ்வொருவராக எடுத்துக் கையில் வைத்துக் கொண்டார்கள்.

பெரிய எவர்சில்வர் அடுக்கு நிறைய காப்பி நுரை ததும்ப இருந்தது. ஐஸ்கிரீம் கோப்பைகளில் ஸ்பூன்கள் நின்றன. காப்பிக்குப் பிறகு மணியே ஐஸ்கிரீமை வழங்குவான்.

ரேணுகா—மங்களா—கேதாரம்.

மணி—முத்து—ரங்காச்சார்ரி.

ராமாமிர்தம்—ஜோசப்—கணபதி.

சங்கர்—ராதா.

விசு—அனு.

சங்கரி—சுஜா.

மேரி தனியாக நின்றாள். அப்பா இல்லியே என்ற வருத்தம் ஒரு சுமையாக அவளுள் ஏறியது அவர் இருந்திருந்தால் அவளுக்கு எவ்வளவு பெருமையாக இருந்திருக்கும்! கேதாரத்துக்கு அறிமுகம் செய்திருப்பாள்.

''ஏய் மேரி!''

மங்களா கூப்பிடுகிறாள்.

''ஐ ஆம் அட் தி போண்டா.''

''கம் ஹியர்.''

மேரி மெல்ல நடந்து சென்றாள்.

காப்பி இருந்த அடுக்கு காலியாயிற்று. ஐஸ்கிரீம் நாக்கில் கரையலாயிற்று.

எல்லோரும் சிரித்தார்கள்...பேசினார்கள்...பேசினார்கள்...சிரித்தார்கள். மேரி தமிழில் பாட முயன்றாள். ரேணுகா கைகொட்டிச் சிரித்தாள்.

முத்து மௌனமாக எல்லாவற்றையும் ரசித்தான். கொழுகொழு வென்றிருக்கும் குமுதாவின் உருவம் கண் முன் நின்றது. அவளுக்கு ஐஸ்கிரீம் பிடிக்கும். அவளுக்கு எதுவுமே பிடிக்கும். அவளுக்கு அவனைப் பிடிக்கும். இப்போது அவனுக்கு அவளைப் பிடிக்கிறது.

திடீரென்று எட்மண்ட் நுழைந்தான்.

''ஹலோ எட்மண்ட்!'' மணி அவன் அருகே போனான்.

''மாமி இன்னொரு பிளேட்...எட்மண்ட், பர்த்டே பார்ட்டி...எங்களோடு சேர்ந்துகொள்...எஸ். எஸ். சார், எட்மண்ட் யார் தெரியுமா? ரொஸாரியோவின் பிள்ளை.''

மணியின் குரலுக்கு எஸ். எஸ். பதில் கொடுத்தார்.

''எனக்குத் தெரியும்...எட்மண்ட்! நீ வந்தது எனக்கு ரொம்பச் சந்தோஷம். டிபன் சாப்பிடு, வா!''

சங்கரி தட்டு நிறையப் பலகாரங்கள் கொண்டு வந்தாள்.

எட்மண்ட் ஒன்றை எடுத்து ருசி பார்த்தான்: ''தாங்க்ஸ் தாங்க்யூ. குழந்தைக்கு என் நல்வாழ்த்துக்கள்.''

''மேரி, இங்கே கொஞ்சம் வா!''

மேரி எட்மண்ட்டிடம் வந்தாள். இங்கேயும் பணத்துக்கு வந்துவிட்டானா?''

''உடனே புறப்பட வேண்டும்'' என்று பிறர் காதில் விழாவண்ணம் எட்மண்ட் அவள் காதோடு கூறினான்.

''மன்னிக்கணும். நான் கொஞ்சம் அவசரமாகப் போகணும்'' என்றாள் மேரி.

''சீக்கிரம் திரும்பிடு!''—ரேணுகா.

அதே சமயம் போன் அலறியது

எஸ். எஸ் போனை எடுத்தார்.

முகம் ஒருகணம் வெளிறியது. ''நான் வந்துட்டேன்!'' அவர் நாத் தழுதழுத்தது.

''மங்களா... நீ பார்த்துக்கோ. நான் போயிட்டு வந்துடறேன்!''

எஸ். எஸ். ஓடினார்.

வீட்டில் கும்மாளம்.

ஆனால் அவர் மனத்தில்!

ஒரு பெரிய இடி. ரொஸாரியோ...ரொஸாரியோ... ரொஸாரியோ...ரொஸாரியோ!

25

கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படலாம்—ஆனால் பொருளாதாரப் பிரச்னை பூமியில்தான் தீர்த்து வைக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை காலை வரையில் கணபதி செய்தியைச் சங்கரிக்கோ, மங்களாவுக்கோ தெரிவிக்கவில்லை. பிறந்த நாள் விழாபோல் நடந்திருக்கிறது. இந்த மாபெரும் துக்கத்தைச் சொன்னால் விழாவினால் ஏற்பட்டிருக்கும் குதூகலமெல்லாம் பறந்துவிடும்.

வெள்ளிக்கிழமை சாயிந்திரமே ரொஸாரியோவுக்கு ஆக வேண்டியதெல்லாம் முடிந்துவிட்டது. ரேணுகாவும் மங்களாவும் மேரியைத் தேடிச் சென்றனர். தேற்ற முடியாத துக்கத்தில் மேரி அமைதியுடன் காணப்பட்டாள். எட்மண்ட் அழுது தீர்த்தான். லூஸி குனிந்த தலை நிமிராமல் நின்றாள். அவள் கேட்ட எழுபது ரூபாய் அவளுக்குக் கிடைக்கவேயில்லை.

* * *

கேதாரம் சனிக்கிழமை பம்பாய்க்குத் திரும்பிப் போய் விடுவது என்று தீர்மானம் செய்தான். வெள்ளிக்கிழமை மத்தியானம் தன் முடிவை மணியிடம் சொல்ல, அவன் அதை பத்தாவது நிமிடம் மங்களாவிடம் தெரிவித்தான். மங்களா ரேணுகாவிடம் கூறினாள். ரேணுகா ரிடையரிங் அறையை அடைந்தபோது மணி மூன்றரை இருக்கும். வெளி அறையில் அவள் நுழையும்போதே உள்ளே இருந்து

உரத்த குரல் கேட்டது. அவள் திடுக்கிட்டு நின்றாள். நுழைந்த அறையிலே எத்தனை நேரம் நின்றாளோ அவளுக்கே தெரியாது. பேச்சு காரசாரமாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையாகவும் இருந்தது.

"டேய் கேதாரம் கடைசியா எனக்கு என்ன பதிலைச் சொல்லப் போறே...? இன்னிக்கு ரிடையர்ட் சீஃப் செக்ரடரியின் பெண்ணைப் பார்க்க நான் ஏற்பாடு செய்திருந்தேன். நீ அதிலும் மண்ணை வாரிப் போட்டுவிட்டாய்!"

"மாமா! தீர்ந்துபோன விஷயத்துக்கு நீங்கள் உயிர் கொடுக்கப் பார்க்காதீர்கள்."

"எதுடா தீர்ந்துபோன விஷயம்"—ஜம்புநாதன் கத்தினார்.

"நீங்கள் எனக்காகப் பெண் பார்க்கிற வேலை."

"அப்போ?"

"அப்போன்னா அப்போதான்."

"உன் இஷ்டப்படிதான் கல்யாணம் செய்துகொள்வியாக்கும்."

"நான் அப்படிச் சொல்லுகிறவனாக இருந்தால், பம்பாயிலிருந்தே புறப்பட்டிருக்க மாட்டேன்."

"பின் ஏன் திடீர்னு மனசு மாறினே? அந்த எஸ்.எஸ். வின் பெண் மயக்கி விட்டாளா?"

"அநாகரிகமாகப் பேசாதீர்கள் மாமா...நீங்க இழுக்கிற இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்க நான் என்ன கம்பியா?"

"கம்பியில்லையடா, நீ கம்பியில்லை. இரும்புக் குண்டு."

(ரேணுகா தனக்குள் சிரித்துக்கொண்டாள்.)

''சரி சும்மா என்ன வளவளன்னு பேசறேள்? இப்போ எதுக்கு மறுபடியும் வந்திருக்கிறீர்கள்? உங்கள் பல்லவியைப் பாடத்தானே? பாடிவிட்டுப் போங்கள்.''

''ஏண்டா! மூணு வயசிலேயே அப்பாவை முழுங்கினே. ஏழு வயசிலே அம்மாவைத் தோத்தே...உன்னை ஹோட்டலுக்குச் சப்ளையராக அனுப்பாமல் கூடப் பிறந்தவள் பிள்ளைன்னு உன்னைப் படிக்க வைச்சேன்; கல்லூரிக்கு அனுப்பினேன்...அவன் காலையும் இவன் காலையும் பிடித்து என்ஜினீயரிங் காலேஜில் சேர்த்தேன்...

''நீங்க யார் காலையும் பிடிக்கலைன்னு எனக்கும் தெரியும்... என் மார்க்கைப் பார்த்து ஸீட் கொடுத்தார்கள்...''

''ஆமாம்டா... மார்க்கு... பொல்லாத மார்க்கு... உன் மாதிரி மார்க் வாங்கின எத்தனைபேர்களுக்கு ஸீட் கிடைக்கலை... அது தெரியுமாடா, உனக்கு?''

''இப்போ அது தெரிய வேண்டாம், எனக்கு.''

''வாய் கிழியப் பேசறதில் ஒண்ணும் குறைச்சல் இல்லை... இப்போ எனக்குப் பதில் சொல்லு.''

''என்ன பதில்?''

''என் இரண்டு பெண்களின் கல்யாணம் நடந்தாகணும்.''

''நானா குறுக்கே நிக்கறேன்?''

''ஆமாம்! நீயேதான்... நீயேதான்?''

கேதாரம் சிரித்தான்.

''எனக்குப் பதினைந்தாயிரம் உடனடியாக வேணும்... உனக்குக் கல்யாணம் நிச்சயமானால் நான் நினைத்தபடி நடந்தால் என் கையைவிட்டுப் பணம் போகாது... ஆனால் உன் போக்கடாத் தனத்தினால் செலவு என் தலையிலே விழறது.''

''அதென்ன பதினைந்தாயிரம்னு கணக்கா கேட்கிறீர்கள்?''

''சரி, பதினாலாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதாகக் கொடு.''

ரேணுகா! சிரித்துக்கொண்டாள்.

''மாமா! நீங்க என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் என்ன பம்பாயில் பிஸினஸா பண்றேன்...? நீங்க கேட்கறதுக்கும் நான் செக் கிழிச்சுக் கொடுக்கிறதுக்கும்...? என் சம்பளத்திலே பிராவிடண்ட் ஃபண்டு, இன்கம்டாக்ஸ் வாடகை, கார்க் கடன் மாதாந்திரத் தவணை எல்லாம் கழிச்சு எனக்குக் கிடைப்பது எழுநூற்று எட்டு ரூபாய் என்பது பைசா... இன்னிக்கெல்லாம் இருந்தால் என்னாலே உங்க பெண் கல்யாணத்துக்கு உடனடியாக ஒரு ஐயாயிரத்தைப் பெயர்த்துக் கொடுக்க முடியும். அவ்வளவுதான்.''

''சமையற்காரப் பிள்ளைகூட இரண்டாயிரம் வரதட்சிணை கேட்கிற காலம்டா இது... என் பெண்ணின் பாதிக் கல்யாணம்கூட உன் ஐயாயிரத்தில் நடக்காது...''

''அப்போ கொஞ்சம் பொறுங்கள்.''

''அந்த எஸ்.எஸ் ன் பெண்ணைத்தானே கல்யாணம் செய்துகொள்ளப் போறே? அவர்கிட்டே வரதட்சிணையா பத்தாயிரம் வாங்கு.''

''மாமா! நீங்கள் போகாத ஊருக்கு வழி தேடுகிறீர்கள். முதலாவதாக நான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன் என்று நீங்கள் இப்படி அடித்துப் பேசுவதே தப்பு. இரண்டாவது எனக்கு அப்படி ஓர் எண்ணம் இருந்தாலும் கணபதி மனம் இசைவார் என்பது என்ன நிச்சயம்? அப்படியே அவர் சரி என்றாலும், அந்தப் பெண் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாளோ?''

''ஏண்டா, கேதாரம்! நீ என்கிட்டே நாடகமா ஆடறே, நாடகம்? ஆடுடா, நன்னா ஆடு... வந்து அஞ்சு நாள் முழுக்க ஆகலை. அவள் வீட்டுக்கு நீ ரெண்டு தரம் போயாச்சு... அவள் இங்கே ஒரு தரம் வந்தாச்சு. நீ கொடுத்த கோகோ கோலாவைக் குடிச்சாச்சு... என்கொயரியிலே வேறு சந்திச்சுப் பேசியிருக்கே... இதெல்லாம் போறாதுன்னு அந்தச் சவடால் மணியை வேறு தூது விட்டிண்டிருக்கே. நாடகமாடா, ஆடறே நாடகம்.''

''இதெல்லாம் எப்படி மாமா, உங்களுக்குத் தெரிந்தது?''

''நீ வந்ததிலேயிருந்து நான் உன்னைக் கவனிச்சுண்டு தாண்டா இருக்கேன். கவனிச்சுண்டுதான் இருக்கேன்.''

''நீங்க சொல்றபடியே எல்லாம் இருந்தாலும், கல்யாணம் நடக்கப்போறது என்று எப்படி நீங்கள் தீர்மானமாகச் சொல்லலாம்?''

''நடக்கத்தாண்டா போறது... ஆனால் நான் குறுக்கே நிற்பேன். கல்யாண வீட்டு வாசலிலே குறுக்கே படுத்துப் பேன். சும்மாப் படுத்துக்கமாட்டேன், தலைமாட்டிலே உன் மாமியையும், கால்மாட்டிலே ரெண்டு பெண்களையும் நிக்க வைப்பேன்... ஆமாம்டா, நிக்க வைப்பேன்!''

ரேணுகாவின் மனக்கண் முன்னால் ஒரு காட்சி தோன்றியது. கல்யாண வீடு, வாசலில் இரண்டு வாழை மரங்கள்; தோரணங்கள். ஒருவர் ஒரு வாழை மரத்தில் தலையிடிக்க, இன்னொன்றில் கால் இடிக்கக் குறுக்கே படுத்துக்கொண்டிருக்கிறார். இரண்டு பெண்கள் சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் கால்மாட்டில் நிற்கிறார்கள். தலைமாட்டில் கல்யாணக் கூடத்தை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே ஒரு ஸ்திரீ நிற்கிறாள்.

காட்சி அபூர்வமான காட்சி. பணம் கொடுத்தாலும் பார்க்கக் கிடைக்காத காட்சி.

''நீங்க பேசறதே ரொம்ப அநாகரிகமா இருக்கு.''

''அப்போ நீ நாகரிகமாக நடந்துகொள்.''

''சரி, இப்போ போய் வாருங்கள்.''

''நாளைக்கு மறுபடியும் வருவேன். வந்துகொண்டேயிருப்பேன். நாலுபேர் கேட்கக் கத்துவேன்!''

அடுத்தகணம், பேசியவர் புறப்படுவதை உணர்ந்தாள் ரேணுகா; அவசரமாய் வெளி அறையைவிட்டு வராந்தாவுக்கு வந்தாள்.

நெற்றியில் விபூதி துலங்க, கையில் ஒரு பையுடன் அங்க வஸ்திரத்தால் முகத்தைத் துடைத்துக்கொண்டே ஒருவர் வெளியே வந்தார்.

இவர்தான் மாமா, ஜம்புநாதனோ?

''ஸார்!''

தம்மை இப்படி யாரும் அழைக்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் ஜம்புநாதன் சட்டை செய்யாமல் வேகமாக நடந்தார்.

''ஸார்... உங்களைத்தான்!''

அவர் அருகே போய் அழைத்தாள் ரேணுகா.

''என்னையா அம்மா கூப்பிட்டே?''

''ஆமாம், ஸார்...!''

''என்ன வேணும்?''

''பம்பாயிலிருந்து கேதாரம்னு ஒருத்தர் வந்திருக்கிறாரே. அவர் இங்கேதானே இருக்கிறார்?''

ஜம்புநாதன் அவளை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்; எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது.

''ஆமாம் என்ன வேணும்?''

''அவரிடம்தான் சொல்லமுடியும்.''

''நான் அவனுடைய சொந்த மாமா... என்கிட்டே தைரியமாகச் சொல்லலாம்...''

''கல்யாண விஷயமாய்...''

''உனக்கு எந்த ஊரும்மா? யாருடைய கல்யாண விஷயமாய்ப் பேசப் போறே?''

''நான் பம்பாயில் இருக்கிறவள்...''

''பம்பாய்ப் பெண்ணா?''

''பெண் மெட்ராஸ்தான் அவள் என் சிநேகிதி... பெண்ணைப் பெற்றவர் வரதட்சிணையைப் பற்றிப் பயப் படுகிறார்... கேதாரம் பம்பாயில் இருக்கிறவராச்சே, அதைச் சாக்காக வைத்துக்கொண்டு பேசிப் பார்க்கலாம்னு வந்தேன்... தாங்க்ஸ் ஸார்''

ரேணுகா நகர யத்தனித்தாள்.

''இதோ பார் அம்மா— என் மருமகன் படிச்சவன்... பெரிய பதவியிலே இருக்கிறவன். கெட்டிக்காரன். பெரிய பெரிய இடங்களிலெல்லாம் பெண் பார்க்க ஏற்பாடு செய்து வைச்சேன். இவன் முதலிலே ஒரு பெண்ணைப் பார்த் தான். அப்புறம் வேதாளம் முருங்கை மரம் ஏறின கதையா உச்சாணிக் கொம்பிலே நிக்கறான். பார்த்த பெண்ணே இவனை வேண்டாம்னு சொல்லிட்டா''

''இதையெல்லாம் எதற்காக என்கிட்டே சொல்லு கிறீர்கள்?''

''எல்லாவற்றையும் நீ உன் மனசிலே வைச்சின் டிருந்தா நல்லது இல்லியா? அது சரி, யாருடைய பெண்?''

''ரொம்ப அவசியமாகத் தெரியணுமோ?''

''நான் பிள்ளைக்கு மாமா. அவனுக்கு அம்மா அப்பா கிடையாது, எனக்குத்தான் சம்பந்தி ஸ்தானமே!''

''மங்களான்னு பெண்ணோட பேரும் அவளுடைய அப்பா இந்த சென்ட்ரலில் ஸ்டேஷன் சூப்பிரண்டாக இருக் கிறார்.''

ஜம்புநாதனுக்கு மூச்சை அடைத்தது. அவர் சமாளித் துக்கொள்வதற்குள் ரேணுகா, ''நான் போகிறேன் ஸார்! இப்போதைக்கு நீங்கள் அங்கே வராதீர்கள்!'' என்று கூறி விட்டு, தன்னுள் சிரித்தவளாய்க் கேதாரத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

ரேணுகாவைப் பார்த்ததும் கேதாரத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் திகைப்பை அடக்கிக்கொண்டு ''வாருங்கள், மிஸ் ரேணுகா!'' என்று வரவேற்றான்.

''இப்போ யாரோ உங்க அறையிலிருந்து வெளியேறிப் போகிறாரே, யார் அவர்?''

''என் மாமா ஜம்புநாதன் என்று பெயர். என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கியதே அவர்தான்.''

''ஓ, அப்படியா? பார்க்கிறதுக்கு ரொம்ப நல்லவரா, தெய்வபக்தி உள்ளவராத் தெரியறார்.''

''நல்லவர்தான்...''

''ஏன் அதை அசுவாரசியமாகச் சொல்லுகிறீர்கள்?''

''ஒன்றுமில்லை.''

''என்கிட்டேயே மழுப்புகிறீர்களே!''

''அதெல்லாம் இல்லை. எங்களுக்குள் கொஞ்சம் அபிப்பிராய பேதம். அவ்வளவுதான்.''

''ஐ ஆம் ஸாரி... உங்களுடைய சொந்த விஷயத்தில் நான் தலையிடறது தப்பு.''

''சொந்த விஷயம் என்ன? அவருடைய இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு நிற்கிறார்கள். எனக்குப் பெரிய இடத்தில் கல்யாணம் ஆனால் தமக்கு நல்லது என்று நம்புகிறார்.''

''ஏன் நீங்கள் பெரிய இடம் வேண்டாம் என்று தீர்மானம் செய்துவிட்டீர்களாக்கும்.''

''உங்கள் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன், மன்னிக்கணும்!''

''அது போகட்டும்... இந்த வரதட்சிணை முறையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''வரதட்சிணையை எதிர்த்து நூறு பேர் கிளம்பினால் ஆமோதித்து ஆயிரம் பேர் கொடுக்கிறார்கள்...''

''உங்களுடைய தனிப்பட்ட அபிப்ராயம்?''

''கொடுக்கிறதும் தப்பு, வாங்கறதும் தப்பு... ரொம்பக் குடும்பங்களில் கல்யாணமாகாமல் எத்தனையோ பெண்கள் நிற்கிறார்கள். வேலை செய்து உழைக்கும்படியான நிர்ப்பந்தம் உண்டாகிறது. நடுத்தர ஏழைக் குடும்பங்களுக்கு இது ஒரு சாபக்கேடு.'' சில சமயங்களில் வரதட்சிணை ரொம்ப அவசியமாகவும் போகிறது.''

''எப்படி?''

''சாதாரண நடுத்தரக் குடும்பம். பெற்றவருக்கு மாத வரும்படியைத் தவிர வேறு எதுவும் கிடையாது: ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் பணத் தெம்பு இல்லை: ஆனால் பிள்ளைக்குப் பெண் கொடுக்க வருகிறார்கள்.''

''எனக்குப் புரிகிறது, மிஸ் ரேணுகா! பிள்ளைக்கு வாங்கிப் பெண்ணுக்குக் கொடுக்கச் சொல்கிறீர்கள்!''

''ரொம்ப சரி! கொடுத்து வாங்கினால் என்ன, வாங்கிக் கொடுத்தால் என்ன? உங்கள் லட்சியப்படியே இருந்தால் இரண்டுபேருக்கும் கல்யாணம் ஆகாது.''

''பெண்ணை மட்டும் பெற்றவராக இருந்தால்?''

''அதனால்தான் ரொம்பக் குடும்பங்கள் அழிந்து போகின்றன... உங்க மாமா உங்கள் கையை எதிர்பார்த்து நிற்கிறாராக்கும்!''

கேதாரம் தலையை ஆட்டினான்.

ரேணுகா எழுந்தாள்.

''நான் வருகிறேன்.''

''என்ன வந்தீர்கள். என் மாமாவைப்பற்றி விசாரித்தீர்கள்... புறப்பட்டுவிட்டீர்கள்!''

''ஏன் உங்கள் லட்சியத்தைப்பற்றிக் கேட்டேனே!''

கேதாரத்துக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தான்.

''மிஸ்டர் கேதாரம்! மற்றொரு சொந்த விஷயம்... நம் எஸ்.எஸ். இருக்கிறாரே... கணபதி... அவருக்கு... உங்க பேரிலே ஒரு கண் இருக்கு: ஆசை மட்டும் போதுமா? சக்தி இல்லையே என்று அவர் கவலைப்படுகிறார். ஆனால் எனக்கு உங்களுடைய லட்சியமனம் புரிந்துவிட்டது... நான் வருகிறேன்.''

''கொஞ்சம் இருங்கள்... என்னுடைய மாமா...''

''அவருடைய பெண்களுக்கும் கல்யாணம் ஆக வேண்டும்... நீங்க கவலைப்பட வேண்டாம்!''

கேதாரம் தொப்பென்று நாற்காலியில் விழுந்தான்.

* * *

மணி ஆறாவது பிளாட்பாரத்தை அடைந்தபோது மணி நாலரை. கேரளா எக்ஸ்பிரஸைப் பார்த்தபோதே மனம் கசிந்தது. இதே எக்ஸ்பிரஸில்தான் நேற்று ரொஸாரியோவுக்கு வேலை: ரயில் கிளம்புகிற சமயத்தில் அவருடன் பேசி, அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று அவன் நேற்று நினைத்தான். இன்று பேசவே முடியாத நிலையை அவர் எய்திவிட்டார்: ஓர் இருபத்து நாலு மணி நேரத்துக்குள்ளாக இவ்வளவு பெரிய விபரீதமா? ரொஸாரியோ எவ்வளவு நல்ல மனிதர்! நல்ல மனிதர்களையும் ஏன் விதி விடுவதில்லை?

இன்று சிவலிங்கம் கார்டாகச் செல்கிறார். முருக பக்தர். வார்த்தைகளை அளந்து பேசுகிறவர்.

''குட் ஈவினிங் சார்!''

புன்முறுவலால் எதிர் வணக்கம் செய்தார் சிவலிங்கம்.

''யார் சார்! அண்டர்கார்டு புதிசா இருக்கிறார்?''

''குண்டக்கல் டிவிஷனிலிருந்து மாற்றல் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாராம். இன்னிக்கு முதல் தடவையா சார்ஜ் எடுத்துக்கொள்ளப் போகிறார்.''

மணி முன்னோக்கி நடந்தான். அண்டர்கார்டு பார்ப்பதற்கு லட்சணமாக இருந்தான். வாட்டசாட்டமான உடற்கட்டு. நெற்றி புருவங்கள் அடர்ந்து அதன் கருமையே எடுப்பாக இருந்தது.

''என்ன சார், இன்னிக்குத்தான் நீங்கள் சார்ஜ் எடுத்துக் கொள்கிறீர்களாக்கும்?''

''ஆமாம், நீங்கள் யார்?''

''இந்த சென்ட்ரலில் நீங்கள்தான் இந்தக் கேள்வியை முதன் முதலாகக் கேட்டிருக்கிறீர்கள்... பரவாயில்லை... நீங்கள் சென்ட்ரலுக்குப் புதுசுதானே? டெபுடி ஜெனரல் மானேஜர் குடும்பத்தோடு குருவாயூர் போகிறார். தெரியும் இல்லையா!''

''தெரியாதே.''

''ஸீ கம்பார்ட்மெண்ட்... எதுக்கும் இரண்டு மூன்று தடவை விசாரித்து வையுங்கள்...''

''தாங்க்ஸ் ஸார்... நீங்கள்...''

''மணி... உங்க பெயர்...?''

''கோதண்டராமன்.''

''ஆமாம்! சிவலிங்கம் சொன்னார். பூர்விகம் தஞ்சாவூரோ?''

''ஆமாம்.''

''எங்கே தங்குகிறீர்கள்?''

''குவார்ட்டர்ஸ் கிடைக்கவில்லை. ரூம் பார்த்துக் கொள்ளணும். இன்னிக்குக் கார்த்தாலேதான் 'ரிப் போர்ட்' பண்ணினேன்.

''உறவுக்காரர் யாருமில்லையா?''

''நான் அநாதை சார்... ஆனால் ஒரு அத்தை இருக்கிறாள். அவருடைய கணவர்தான் எஸ்.எஸ்.''

''என்ன, அப்படியா?''

''ஆமாம் 'லா'கிலே கையெழுத்துப் போடணும். நான் வரட்டுமா? அப்புறம் சந்திக்கிறேன்...''

மணியின் தலை சுற்றியது.

சங்கரியின் அண்ணா பிள்ளை இவன்தானா?

இரண்டாவது மணி அடித்தது.

அண்டர்கார்டு கோதண்டராமன் ஏறிக்கொண்டான். பின்னால் மணியும் தாவி ஏறினான்.

கோதண்டராமனுக்குக் கோபமும், அதேசமயம் ஒரு வித பயமும் ஏற்பட்டன.

''சார்! நீங்கள் சங்கரியின் அண்ணா பிள்ளையா?''

''ஆமாம்... நீங்கள் ஏன் இந்தப் பெட்டியில் ஏறினீர்கள்? இதில் பிரயாணம் செய்வது தவறல்லவா?''

''எனக்குத் தெரியும். ஆனால் நீங்க கணபதியின் மைத்துனர் பிள்ளை, மங்களாவின் மாமா பிள்ளைன்னு தெரிஞ்சப்புறம் நான் எப்படி சார் ஏறாமல் இருக்க முடியும்?''

''சொந்தம் அற்றுப்போய்ப் பதிமூணு, பதினாலு வருஷங்கள் ஆகிறது.''

''எப்போ வேலை ஆயிற்று?''

''அறுபத்திரண்டில் ஒன்பது வருடங்கள் ஆயிடுத்து ''

''ஏன் அத்தையைப் பார்க்கப் போகவில்லை?''

''நான் யார்னுகூட அவர்களுக்கு நினைவு இருக்காது.''

''நன்னா நினைவு இருக்கு சார்.''

''சொந்தம் நினைவிருக்கலாம். ஆனால் என்னை?... இருக்காது.''

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''எப்பவோ பிரிந்துவிட்டோம்.''

''உறவு பிரியுமா?''

''பிரிந்துவிட்டது.''

''நீங்களே பிரித்துக்கொண்டு விட்டீர்களாக்கும்!''

கோதண்டராமன் பதில் சொல்லவில்லை. ஏதோ ஒரு ரிஜிஸ்டரைப் புரட்டலானான்.

''உங்க அத்தைக்குப் பதினொரு குழந்தைகள். மூத்தவன் பெங்களூரில் பாங்கியில் ஏஜெண்டாக இருக்கிறான். இரண்டாவது பிள்ளை பஞ்சாபிலிருந்து விட்டு அமெரிக்கா போய்விட்டான்... கல்யாணம்கூட அங்கே தான் போலிருக்கு...''

''மூர்த்தியையும் மோகனையும் கொஞ்சம் நினைவு இருக்கிறது.''

''மூன்றாவது பெண் மங்களா. என்கொயரியில் கிளார்க்காக இருக்கிறாள்.''

''அப்படியா?''

''கல்யாணம்கூட ஆகவில்லை..... அடடா, இன்னிக்கு உங்களைச் சந்தித்தேனே... நேத்து காலையில் சந்தித்திருக்கணும்.''

''இன்னிக்குக் கார்த்தாலேதான் நான் மெட்ராஸுக்கே வந்தேன்.''

''நேற்று, கணபதியின் கடைசிப் பெண்ணுக்குப் பிறந்த நாள்... கோலாகலமாக நடந்தது.''

கோதண்டராமன் மீண்டும் ரிஜிஸ்டரில் கவனத்தைச் செலுத்தலானான்.

''சார்... உங்களுடைய குடும்பம்? எத்தனை குழந்தைகள்?''

''மூணு வயசிலே பெண். ஆறுமாசப் பிள்ளை.''

''பின் எதற்காக அறை பார்க்கவேண்டும் என்கிறீர்கள்?''

''என் மனைவி ஒரு டீச்சர். கோடை விடுமுறையில் தான் வரமுடியும். அதுவரையில் இருக்க...''

''எப்போ திரும்புகிறீர்கள்?''

''நாளைக்கு... 28 எக்ஸ்பிரஸ்.''

''நானும் கணபதியுமா உங்களை வரவேற்கப் பிளாட்பாரத்தில் காத்துக்கொண்டிருப்போம்.''

''ப்ளீஸ்! சும்மாயிருங்க. அற்றுப்போன சொந்தம் தழைக்க நான் விரும்பவில்லை.''

''ஆனால் கணபதி விரும்புவார். சங்கரி விரும்புவாள். நீங்கள் கல்யாணமாகிக் குழந்தை குட்டிகளுடன் இருக்கிறீர்கள் என்று தெரிந்தால் கணபதி ரொம்பவும் சந்தோஷப்படுவார்!''

மணி அரக்கோணத்தில் இறங்கினான்.

ஆறு முப்பத்தைந்துக்கு அங்கிருந்து புறப்படும் பெங்களூர் பாஸஞ்சரில் சென்னைக்குத் திரும்பினான். அந்தப் பாசஞ்சர் நகர்ந்து நகர்ந்து ஒருவழியாக இரவு ஒன்பது மணிக்குப் பத்தாவது பிளாட்பாரத்தில் வந்து நின்றது.''

மணி இறங்கி ஓடினான். அவன் பார்க்கவேண்டியது, மங்களாவை, கணபதியை, ரேணுகாவை, கேதாரத்தை!

நடப்பது சினிமாவிலா, நாடகத்திலா, அல்லது நிஜ வாழ்க்கையிலா? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

26

யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்...தி பாம்பே மெயில் வில் பி லீவிங் ஃப்ரம் பிளாட் ஃபார்ம் நம்பர் ஸிக்ஸ் அட் நைன் ஃபார்ட்டி.

—ஒலிபெருக்கி

சனிக்கிழமை.

இரவு ஒன்பது மணிக்கே மங்களாவும் ரேணுகாவும் ஆறாம் பிளாட்பாரத்துக்கு வந்துவிட்டார்கள். சனிக்கிழமை கல்கத்தாவுக்குப் போவதாக இருந்த ரேணுகா ஞாயிற்றுக் கிழமை இரவு போகத் தீர்மானித்தாள்.

பம்பாய் மெயில் ஒன்பது நாற்பதுக்குப் புறப்படுகிறது இன்னும் நாற்பது நிமிடங்கள். அது நாற்பது கண் இமைக்கும் நேரங்களாக ஓடுவதாகத் தோன்றியது மங்களாவுக்கு. இந்த ஏழு நாட்களில் அவளுடைய வாழ்க்கையில் ஒரு சரித்திரமே அல்லவா நடந்துவிட்டது! போன ஞாயிற்றுக் கிழமையிலிருந்து இந்தச் சனிக்கிழமைவரை நடந்ததெல் லாம் சொப்பனங்களாகத் தோன்றின. அவளுடைய வாழ்வில்கூடக் காதல் மலர்ந்திருக்கிறது. ஆனால் இந்த ரேணுகாவும் அந்த மணியும் இல்லாவிட்டால் அவள் இவ்வளவு சந்தோஷமாக இப்போது இந்த ஆறாவது பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருக்க முடியுமா?

''என்னடீ, பரப்பிரும்மம் மாதிரி அசையாமல் நிக்கறே...?'' ரேணுகா சீண்டினாள்.

''ஒன்றுமில்லை, ரேணு!''

''கவலைப்படாதே. இன்னும் ஒரு மாசத்திலே நீயும் இதே ரயிலில் ஏறப்போகிறாய்...''

''மாட்டேன்.''

''என்னடீ உளர்றே?''

''தாதர் எக்ஸ்பிரஸ் காலையிலே புறப்படுகிறது. டீஸல் என்ஜின்...எடுத்த எடுப்பிலேயே வேகமாகப் போகும்...கரித் தூள் விழாது...அதிலேதான்...''

''அதிலே, கூப்பே கம்பார்ட்மென்டில் போவியாக்கும்: உம்...போ...உனக்கென்ன...பாவம் அந்தக் கேதாரம்தான் மாட்டிக்கொள்கிறான்...''

திடீரென்று மங்களாவின் கண்ணிதழ்கள் கனத்தன:

''ரேணு!''

''என்னடீ...''

''எனக்கு என்ன சொல்றது, எப்படிச் சொல்றதுன்னே ஒண்ணும் புரியலையடீ.''

''எதைப் பத்தி?''

''நீ எனக்குச் செய்திருக்கிற உபகாரத்தைப் பத்தி!''

''எனக்கு வர்ற கோபத்தில் உன் கன்னத்தில் பளார்னு அறையணும்போல இருக்கு.''

''என் அப்பாவுக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் கொடுக்கிற மாதிரிக் கொடுத்து, அவர்கிட்டேயிருந்து புரோ நோட்டையும் எழுதி வாங்கி...''

பேசாமல் இருடீ மங்களா!''

''அந்தப் புரோ நோட்டையும் கிழிச்சுப் போட்டாயே...''

''உஸ்...''

''நீ எனக்கு இவ்வளவு தூரம் செய்ய, நான் உனக்கு என்ன செய்துவிட்டேன் ரேணு.''

''நீ என்னைவிடப் புத்திசாலியாக இல்லாமல் இருக்கி றாயே, அது போதாதா? மங்களா, இனிமேல் இந்தப் பணம், புரோ நோட், ஜம்புநாதனுக்கு என் பணத்தை உன்

அப்பா கொடுத்துச் சரிக்கட்டினதை யெல்லாம் இந்த க்ஷணத்திலே நீ மறக்கணும்...என்கிட்டே இருந்தது கொடுத்தேன்...அவ்வளவுதான்...''

''அதுக்கும் மனசு வரணும்.''

''உன் கேதாரத்தை எனக்கு என்னமோ பிடிக்கவில்லை!'' ரேணுகா பேச்சை மாற்றினாள்.

''அது என் அதிருஷ்டம்தான்.''

''என்னடி உளர்றே?''

''உனக்கும் பிடிச்சிருந்தால் என் கதி என்ன ஆகிறது...! கொஞ்சம் யோசித்துப் பார்...பணத்தை நீ வாரி வழங்கித் தியாகம் பண்ணிவிடலாம். ஆனால் அவ்வளவு எளிசா காதலை தியாகம் பண்ணிவிடுவாயா?''

''காதலா? கேதாரத்தையா? எந்த முட்டாளாவது கேதாரத்தின்மீது காதல் கொள்ளுவார்களா? உன்னைத் தவிர...!''

''நீதாண்டி முட்டாள்.''

''எப்படிச் சொல்லறே?''

''நான் அவர்மீது காதல் கொண்டு விட்டேன்னு கணக்குப் போட்டியே!''

''புதன்கிழமையிலிருந்துதான் உன் முகத்தைப் பார்க்கிறேனே!''

''காதல் முகத்தை உனக்கு ரொம்ப அடையாளம் தெரியுமாக்கும்!'' மங்களா சிரித்தாள்.

''சந்தேகமில்லாமல்...''

''நான் நாடகமாடினேன்டி, நாடகமாடினேன்... எத்தனை நாட்கள்தான் என்கொயரி கௌண்டரில் உட்கார்ந்து வாய் கிழியச் சிரித்துப் பதில் சொல்லிக்கொண்டிருப்பது? பலான ரகங்களில் வருகிறார்கள். என்னென்னவோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் கேட்கிறார்கள்... இன்னும் சிலர் என்னைப் பார்த்து இரண்டு வார்த்தை பேசுவதற்கென்றே வருகிறார்கள்...''

''ஆமாம்! நீ பெரிய ரம்பை...உன்னைப் பார்த்ததும் பேச ஓடி வருகிறார்கள்...மங்களா நீ என்னிக்குமே அழகு இல்லை...ஏதோ கண்ணு கொஞ்சம் குறுகுறுப்பா இருக்கு. நிறமே இல்லை. உடம்பைப் பாந்தமா வைச்சுண்டிருக்கே. வீட்டிலே பழைய சாதம் சாப்பிடுகிறாயோ என்னவோ... உன்னை அழகின்னு எவனும் சொல்லமாட்டான்...''

''ரொம்ப நன்றி... என்ன சொன்னேன்... ஆமாம், என்கொயரி வேலையும் அலுத்துவிட்டது. வீடும் அலுத்துவிட்டது. என் அப்பா ஜாதகம் பார்த்தால் ஏதாவது அப்பர் டிவிஷன் கிளார்க், ஸீனியர் ஸ்டெனோகிராப்பர்னு பார்ப்பார். அம்மா தன் அண்ணா பிள்ளையை நினைச்சு நினைச்சுப் புலம்புவாள். ரொம்பச் சாதாரணமாக இதுவரையில் நான் வாழ்ந்தாச்சு...இனி பெரிய அதிகாரி ஒருவருடன் வாழ்க்கையை நடத்தினால் தரித்திர வாழ்க்கை முடியும்னு திட்டம் போட்டுக்கொண்டிருந்தேன். என் அதிருஷ்டம் போன ஞாயிற்றுக்கிழமை நீ பம்பாய் மெயிலில் வரவில்லை. கேதாரத்தைச் சந்திக்கிற வாய்ப்புக் கிடைத்தது. அவரும் என்னைச் சுற்றிச் சுற்றி வருவதாகத் தோன்றியது. கொக்கியைப் போட்டேன். அவர் அதில் மாட்டிக் கொண்டார்!''

''ஓ அப்படியா சங்கதி! மங்களா உன் அப்பா மூலமா ஜம்புநாதன் கையிலிருக்கிற பத்தாயிரம் ரூபாய் செக், பம்பாய் செக்... ஒரு தந்தி அடித்தால் போதும், செக் சுவரிலே எரிஞ்ச பந்து மாதிரி திரும்பி வரும்...என்ன சொன்னாய் நீ? கொக்கி போட்டாயா...இரு இரு. இப்போ கேதாரமே வருவான் சொல்றேன்.''

''நீ அப்படி ஏதும் செய்யமாட்டாய்னு எனக்குத் தெரியும்டீ ரேணு.''

''அப்போ சொல்லு: இத்தனை நேரம் என்கிட்டே சொன்னதெல்லாம்...''

''டூப்தாண்டி!''

''அப்போ...''

''நீ...''

''நான்...''

''கேதாரத்தின் மேலே...''

''போடீ...பேசாமல் இரு...அதோ மணியும் எட்மண்டும் வருகிறார்கள்.''

* * *

ஒன்பதேகால்.

மணி அவர்களை நோக்கி வந்தான்.

''மிஸ் மங்களா! இந்த எட்மண்டுக்கு ஒரு ஸ்லீப்பர் பர்த் வாங்கிக் கொடுப்பதற்குள் என் தாவு தீர்ந்துவிட்டது. எனக்கே இவ்வளவு சிரமம் இருந்ததுன்னா பொது ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்...?''

''என்ன செய்தாய்?''

''எமர்ஜன்ஸி கோட்டாவில் ஒரு வழியாய் வாங்கினேன் இரு. இவனை ஏற்றிவிட்டு வந்துவிடுகிறேன். எங்கே உங்கள் 'அவர்'?''

''இவளுடைய 'அவர்' இன்னும் வரவில்லை...மிஸ்டர் மணி! நீங்கள் மிஸ்டர் எட்மண்டை ஏற்றிவிட்டு உடனே வாருங்கள். எனக்கு ஒன்று உங்களிடம் கேட்க வேண்டும்... ரொம்ப முக்கியம்'' என்றாள் ரேணுகா.

''ஓகே...''

மணி ஓடினான்.

''உண்மையிலேயே ரொம்பக் கெட்டிக்கார ஆசாமி!'' என்றாள் ரேணுகா.

''ஐயய்யோ...''

''என்னடீ மங்களா?''

''உன் முகம்...ஐயய்யே, நீ என் முகத்தைப் பார்த்து அடையாளம் கண்டுகொண்டாயே, அதே அடையாளம் இப்போ உன் முகத்திலே தெரியறதுடீ!''

''இன்னும் கொஞ்ச நாட்கள் மணியுடன் பழகினால் ஒருவேளை அந்த முகம் வரலாம்...ஆனால் இன்னிக்கு இல்லை'' என்றாள் ரேணுகா.

''மணி மாதிரி நல்லவர்களைப் பார்க்க முடியாதுடீ!''

நல்லவர்கள் லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் மங்களா. ஆனால் பிறர் மனசு அறிஞ்சு உபகாரம் செய்யறவர்களோ, துணிஞ்சு எதிலும் இறங்கி வெற்றி காண்பவர்களையோ பார்ப்பது கஷ்டம். பாரேன் உன் மாமா பிள்ளையைத் தற்செயலாகப் பார்த்தான். அரக்கோணம் வரையில் அவனுடன் போய் அவன் பிராணனை எடுத்து, மறுநாள் அவனை உன் அம்மா முன்னாடி கொண்டுவந்து நிறுத்தினானே...இதுக்குத் தனிச் சாமர்த்தியம் வேணும்.''

''ரேணு...!''

''என்னடீ...?''

''சொல்றேன்னு கோபிச்சுக்காதே...கண்டிப்பா உன் முகம் சரியில்லை...''

''அவன் எதிலே வேலையாக இருக்கிறான்?''

தெரியாது...ஏதோ டிராவல் ஏஜன்ஸியில் என்று நினைக்கிறேன்...சரி நீ மணித் தியானம் செய்ய ஆரம்பித்து விட்டாய். அதோ அவனே வருகிறான். நான் போகட்டுமா?''

''போயேன் கேதாரம் வர்றதைப் பார்த்து விட்டாய், அதுதான் போகட்டுமான்னு கேட்கிறாய்!''

மணி வந்தான். அதே சமயத்தில் கேதாரமும் வந்தான்.

''மங்களா! நீ அவருடன் போ...நான் ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்!'' என்ற ரேணுகா ''மிஸ்டர் மணி!'' என்று அழைத்தாள்.

அவளுடைய தயக்கத்தை நொடியில் புரிந்துகொண்டான் மணி.

''யெஸ், மிஸ் ரேணுகா!''

''ரேணு என்றே அழைக்கலாம்.''

''ஏதோ முக்கியமான விஷயம் சொல்லணும் என்றீர்களே!''

''இப்போ நீங்கள் வேலை பார்க்கிற இடத்தில் என்ன சம்பளம் கொடுக்கிறார்கள்?''

மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. விழித்தான்.

''மன்னிக்கணும், இந்த மாதிரிக் கேள்வியை நான் கேட்டிருக்கக் கூடாது.''

''இல்லை...இல்லை...எனக்குச் சம்பளம்னு எதுவும் கிடையாது... அப்பப்போ கிடைக்கிறதை வைச்சுண்டு காலம் தள்ளறேன்...எனக்கு அப்பா, அம்மா பெண்டாட்டி குழந்தை ஏதும் கிடையாது...அதனால் நாளையச் சாப்பாட்டைப் பற்றி இன்றைக்குக் கவலைப் படறதில்லை ஆமாம், இதைக் கேட்கத்தான் கூப்பிட்டீர்களா?''

''நீங்கள் மங்களாவிடம் பேசுவதைப்போல் என்னிடமும் ஏக வசனத்திலேயே பேசலாம்...''

''ரொம்ப நாட்களாக அவளைத் தெரியும்...'' மணி இழுத்தான். திடீரென்று ஒரு புது அநுபவம், இதுவரை உணர்ந்தறியாத இன்ப அநுபவம் அவனுடைய தேகமெல்லாம் வியாபித்தது.

''தெரிந்துகொள்றதுக்கோ, புரிந்துகொள்றதுக்கோ ரெரம்ப நாட்கள் பழக வேண்டும் என்றில்லை... சில மணி நேரங்கள் போதும்... அது சரி, நான் சொல்ல வந்தது...''

''அதைச் சொல்லுங்கள்.''

''பம்பாயில் புதுசா ஒரு யூனிட் தொடங்கவிருக்கிறோம். அந்த யூனிட்டுக்கு நான்தான் சகலவற்றுக்கும் பொறுப்பு... அந்த யூனிட்டுக்கு ஒரு நல்ல, சுறுசுறுப்பு வாய்ந்த கெட்டிக்கார இளைஞன் தேவையாக இருக்கு... மானேஜராக வேலை...''

''கொஞ்சம் டயம் கொடுங்கள். யோசித்து, இரண்டு மூன்று பெயர்களை விலாசத்துடன் தருகிறேன்... நாளைக்குத் தந்தால் போதாது?''

ரேணுகா சிரித்தாள்.

''ஆயிரம் ரூபாய் சம்பளம், குடியிருக்க ஒரு ஃப்ளாட்... ஆபீஸ் கார்.''

''நாளைக்குச் சொல்றேன்... ஜயராமன்னு ஒரு பயல் இருக்கான். எம்.காம். கெட்டிக்காரன்...''

''பம்பாயிலே லட்சம் ஜயராமன்கள் இருக்கிறார்கள்; உங்களால் வேலையை ஒப்புக்கொள்ள முடியுமா?''

மணி அயர்ந்துபோனான். அவனுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலையா? மானேஜர் பதவியா? கார், ஃப்ளாட் வசதியா!

''மன்னிக்கணும், மிஸ் ரேணுகா! இவ்வளவு பெரிய வேலையை ஏற்று, உங்களுக்குத் திருப்தியா உழைக்க எனக்கு அருகதையோ, சாமர்த்தியமோ போதாது. என்னை ரொம்ப உசத்தியா எடை போட்டுவிட்டீர்கள்...''

''நான் எடை போட்டால் அதில் தப்பே இருக்காது... இது மாதிரி, நான் யாருக்குமே எங்கள் கம்பெனியில் வேலை தருவதாக வாக்குக் கொடுத்ததில்லை. இப்போ செய்கிறேன் என்றால்...''

''நீங்கள் நினைக்கிற என் சாமர்த்தியம் மட்டும் காரணமாக இருக்கமுடியும் என்று தோன்றவில்லை...வேறு ஏதோ காரணமும் இருக்கிறது... அதை நீங்கள் சொல்ல மாட்டீர்கள். மங்களாவிடம் நான் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்.''

''நீங்கள் புரிந்துகொண்டு விட்டீர்கள்; இதை மறுத்து விடாதீர்கள்!''

அவள் சொல்லி முடிக்கவும், முத்து வரவும் சரியாக இருந்தது.

''போகலாமா?'' என்றாள் ரேணுகா.

''ஆகட்டும்''— மணி.

''நான் ஆபீசுக்கு ஒரு மாச நோட்டீஸ் கொடுத்தாச்சு'' என்றான் முத்து.

''குமுதா என்னாச்சு...?'' என்று கேட்டான் மணி நடந்துகொண்டே.

''நரசிம்மாச்சாரியை நினைச்சாத்தான் குலை நடுங்குகிறது...'' என்றான் முத்து.

ரேணுகா சிரித்தாள். பிறகு, ''மிஸ்டர் மணி!'' என்று இழுத்தாள்.

''முதலில் 'மிஸ்டரை' 'கட்' பண்ணுங்கள்.''

''கட் பண்ணுன்னு சொன்னாத்தான் 'கட்' பண்ண முடியும்.''

''ஆகட்டும்... கட்... ப... ண்...ணு.''

''மணி, நீங்களே இவன் விஷயத்தில் தலையிட்டு உதவி பண்ணுங்களேன்...''

''திங்கட்கிழமை வரேன், முத்து...''

முதல் வகுப்புப் பெட்டி அருகே சிறு கூட்டமே நின்று கொண்டிருந்தது. கணபதி. ஜம்புநாதன், மணி, முத்து, மங்களா, ரேணுகா, சங்கர், விசு, அனு, பாபு, கலியாணம். ரவி, கடைசியாக சுஜா எல்லோரும் குழுமியிருந்தார்கள். சீஃப் புக்கிங் கிளார்க் வைரக்கடுக்கன் ரங்காச்சாரி, முழுக்கை டெரிலின் ஷர்ட் பளபளக்க வந்தார். கணபதிக்கு வணக்கம் தெரிவித்தார்.

''குட் ஈவினிங் ஸார்!'' என்றாள் மங்களா.

''அங்கே கவனி, மங்களா! என்னை இப்போது சட்டை செய்யாதே!'' என்றார் வைரக்கடுக்கன்.

எல்லோரும் சிரித்தார்கள்.

''எட்மண்ட் ஏறிவிட்டானா?'' என்று கேட்டான் கேதாரம்.

''ஓ!'' என்றாள் மங்களா.

''உன்னைக் கேட்கவில்லை மங்களா, என்னிடம்தான் கேட்டான் கேதாரம். இல்லையாடா? எட்மண்டை ஸிலீப்பரில் ஏற்றிவிட்டேன்... தாதர் வந்ததும், நீபாட்டுக்கு அதிகாரி ஜோரில் இறங்கிப் போயிடாதே... அவனுக்கு பம்பாய் புதுசு... நின்று காத்திருந்து அழைத்துக்கொண்டு போ... இப்போ உனக்குத் தலைகால் புரியாது... ஏன் எனக்கே புரியலை...'' என்றான் மணி.

''உனக்கு என்ன வந்துவிட்டது...''

''என்னவெல்லாமோ...!'' மணி ரேணுகாவின் பார்வையைத் தவிர்த்தான். அடுத்தகணம், ''இருடா, அந்தக் கோதண்டராமன் போகிறான்... அவனை இழுத்து வரேன்...'' என்றான்.

''வேண்டாம்டா, மணி... அவன் எங்கே யாரைப் பார்க்கப் போகிறானோ...?'' கணபதி தடுத்தார்.

கோதண்டராமன் ஒரு பெட்டியினுள் ஏறுவதைக் கவனித்தான் மணி.

''ஸார். அவனும் இந்த ரயிலில்தான் போகிறான்... நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை 'ஆஃப்' போல இருக்கு... குண்டக்கல்லுக்குப் போகிறான்!''

''பெண்டாட்டி ஞாபகம் வந்துவிட்டது'' என்றார் கணபதி.

''கல்யாணம் ஆகிவிட்டால் வேறு யார் ஞாபகமும் வராதோ?'' என்றான் மணி.

முதல் மணி அடித்தது.

திடீரென்று எல்லோரும் திகைப்பில் மூழ்கும் வண்ணம் மேரி மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தாள்.

''நடையிலே என்ன நிதானம், பார்வையிலே என்ன அமைதி! ஒரு பெரிய துக்கச் சுமை அவளுடைய நெஞ்சிலே உறைஞ்சு கிடக்குன்னு யாராலாவது சொல்ல முடியுமா?'' —மங்களா.

''சின்ன வயசிலே, முதிர்ந்த மனப் பக்குவம்!'' என்ற ரங்காச்சாரி, ''தன் துக்கத்தை, பிறர் முன்னிலையில் கொட்டி, அவர்களையும் துயரத்தில் ஆழ்த்தாமல் இருக்கிற

பண்பு சாதாரணமா யாருக்கும் வராது மங்களா—பிறத்தி யாரிடம் துக்கத்தைச் சொல்லி இரக்கம் சம்பாதிக்கிறது தான் மனுஷ குணம்...''

''மன்னிக்கணும். நான் வரத் தாமதமாகி விட்டது!'' என்று சொல்லி மங்களா அருகே நின்றாள் மேரி.

''எட்மண்டைப் பார்த்தாயா?'' என்று மங்களா கேட்டாள்.

''பார்த்தேன்... இனிமேல் அவனைப்பற்றிக் கவலைப் படவேண்டியவன் நான் ஒருத்திதான்... ஆனால் அதற்கும் இடமில்லாமல் நீ வைத்துவிட்டாய்! தாங்க்ஸ்... மங்களா! இனிமேல் அவன் பிழைத்துக்கொள்ளுவான்.''

''எலிஸா போய்விட்டாளா மேரி!''—மணி.

இரண்டாவது மணி அடிக்க இரண்டு நிமிடங்கள் இருந்தன.

''யார் எலிஸா?'' என்று மேரி விழித்தாள்.

''எட்மண்டை வழி அனுப்ப வந்திருந்தாளே...''

''நான் பார்க்கவில்லை. எலிஸா யார்னுகூடத் தெரியாது.''

''பார்த்தால் தெரிந்துகொள்ளுவாய்... நான்கைந்து மாதங்களில் இந்த எலிஸ்வாவும் இந்த மெயிலில் போவாள்... எட்மண்டை மறந்து அவளால் இருக்க முடியாது.''

மேரி சிரித்தாள். சலனமில்லாத மனத்திலிருந்து பளிச் சிடும் சிரிப்பு. ''முத்துகூடப் போகிறாராம்... எட்மண்ட் போகிறான், மங்களா போகப்போகிறாள்... எல்லோருமே இந்த ரயிலில் போகிறார்கள். சென்ட்ரலில் நீயும் நானும் தான் இருக்கப்போகிறோம்...''

''ஸாரி, மேரி... மிஸ்டர் மணியும் போய்விடப் போகிறார்...''

மேரியிடம், ''நீயும் வந்துவிடலாம்!'' என்றாள் ரேணுகா.

''அப்புறம் நான் யாரை வைத்துக்கொண்டு இந்த சென்ட்ரலில் எஸ்.எஸ்.ஸாக இருப்பதாம்!... எல்லாரும் ஒரே நாளைக்குக் கிளம்புங்கள். ஸ்பெஷல் போகி 'அட்டாச்' பண்ணலாம்!'' என்றார் கணபதி.

இரண்டாவது மணி ஒலித்தது.

''மணி அடிச்சுட்டுதடா, கேதாரம்! ஜாக்கிரதையாகப் போ. கண்டபடி அலையாதே... சனிக்கிழமை ஒரு கை எண்ணெயைத் தலையிலே வைச்சுக்கோ. நான் ஏதாவது தப்பா சொல்லியிருந்தால் மனசிலே வைச்சுக்காதே...!'' ஜம்புநாதன் கேதாரத்தின் அருகே வந்து கத்தினார்.

''டாடா!''

''டாடா டாடா... டாடா...'' பல குரல்கள் ஒரே சமயத்தில் கத்தின. கைக்குட்டைகள் உயர எழுந்து ஆடின.

ரயில் நகர்ந்தது.

கேதாரம் வாயிற்படியில் நின்று புன்னகை புரிந்தான். மங்களாவைத் தேடினான். கடைசியில் அவள் கண்களைச் சந்தித்தபோது, அவனுடைய கண்களும் நீர் சுரப்பதை உணர்ந்தது. 'இன்னும் கொஞ்ச நாட்கள்தான்!'' அவன் மனத்தினுள் முணுமுணுத்தான். அந்த முணுமுணுப்பு, இந்தக் கூட்டத்தில், அவளுடைய காதுக்கு மட்டும் கேட் கட்டும். கண்டிப்பாகக் கேட்கும்.

ரயில் வேகம் எடுத்தது. கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு மணி, ரயிலுடன் விரைவாகவே நடந்தான்.

''டேய், கேதாரம்... நானும் மாட்டிக்கொண்டிருக் கிறேன் போலிருக்குடா... ரேணுகா மானேஜர் வேலை கொடுக்கிறா... இது எதுக்குடா?''

''முட்டாள்! இதுகூடத் தெரியவில்லையா? மடையா, பம்பாய் வந்து சேரு.''

இனிமேலும் ஓடமுடியாது என்ற நிலை வந்ததும் மணி நின்றான். கூட்டம் கலைந்துகொண்டிருந்தது. வழி அனுப்ப வந்த எல்லோரும் திரும்பிக்கொண்டிருந்தார்கள். பழ வண்டிகள் திரும்பிக்கொண்டிருந்தன. போர்ட்டர்கள் அடுத்த பிளாட்பாரத்துக்கு விரையலானார்கள். ரயில்வே

சிப்பந்திகள், ஒரு வண்டியை அனுப்பிவிட்டோம் என்ற திருப்தியில் திரும்பினார்கள்.

தூரத்தே கணபதி, ரங்காச்சாரி, மங்களா, முத்து, மேரி போய்க்கொண்டிருப்பது தெரிந்தது.

மணி நடந்தான்.

ரேணுகா மட்டும் தனியாக நின்றுகொண்டிருந்தாள். அவள் கூட்டத்துடன் ஏன் போகவில்லை? ஏன் இன்னும் அங்கேயே நிற்கிறாள்?

அவன் மடையன். அவனுக்கு ஒன்றுமே புரிவதில்லை:

''ஹலோ ரேணு, ஏன் நின்றுவிட்டாய்?''

''நிற்கவில்லையே? காத்துக்கொண்டிருக்கிறேன்...''

''போகலாமா!''

''ஓ, யெஸ்...!''

''நான் முடிவு செய்துவிட்டேன்!''

ரேணுகாவின் நெஞ்சம் படபடத்தது.

''நான் பம்பாய் வரப்போகிறேன்...''

''ஓ, ரொம்ப நல்ல முடிவு. ஆரம்பமே நல்ல முடிவு...''

''இந்த முடிவுக்கும் ஒரு நல்ல ஆரம்பம் இருக்கப் போகிறது! இல்லையா, ரேணு.''

''அதற்காக நான் தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன், மணி.''

''தனியாகப் பிரார்த்தனை செய்தால் போதாது, ரேணு.''

''இரண்டு பேருமாகப் பிரார்த்தனை செய்வோம்...''

''ஆமாம்... இரண்டுபேருமாக... இரண்டுபேருமாக... இரண்டு பேருமாக...''

இரு உருவங்கள் ஓர் உயிராக நடந்தன.